# சமூக அறிவியல்
## வகுப்பு-VI
# SOCIAL STUDIES

Free

CLASS VI (TAMIL MEDIUM)









வெளியீடு
தெலங்கானா மாநில அரசு
ஐதராபாத்

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

சமூக அறிவியல் வகுப்பு - VI

சமூக அறிவியல் வகுப்பு-VI

Government of Telangana

Department of Women Development & Child Welfare - Childline Foundation

When abused in or out of school.

To save the children from dangers and problems.

CHILD LINE 1098 NIGHT & DAY

24 HOUR NATIONAL HELPLINE

When the children are denied school and compelled to work.

When the family members or relatives misbehave.

1098 (Ten...Nine...Eight) dial to free service facility.

IN ANY EMERGENCY
DIAL 100
TELANGANA POLICE
www.tspolice.gov.in
© Telangana State Police

State Council for Educational Research and Training, Telangana, Hyderabad



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

SCERT TELANGANA

## FUNDAMENTAL DUTIES

**Fundamental duties … It shall be the duty of every citizen of India-**

(a) to abide by the Constitution and respect its ideals and institutions, the National Flag and the National Anthem;

(b) to cherish and follow the noble ideals which inspired our national struggle for freedom;

(c) to uphold and protect the sovereignty, unity and integrity of India;

(d) to defend the country and render national service when called upon to do so;

(e) to promote harmony and the spirit of common brotherhood amongst all the people of India transcending religious, linguistic and regional or sectional diversities; to renounce practices derogatory to the dignity of women;

(f) to value and preserve the rich heritage of our composite culture;

(g) to protect and improve the natural environment including forests, lakes, rivers and wild life, and to have compassion for living creatures;

(h) to develop the scientific temper, humanism and the spirit of inquiry and reform;

(i) to safeguard public property and to abjure violence;

(j) to strive towards excellence in all spheres of individual and collective activity so that the nation constantly rises to higher levels of endeavour and achievement.

(k) who is a parent or guardian, to provide opportunities for education to his child or, as the case may be ward between the age of six and fourteen years.

**- Constitution of India,**

Part IV A (Article 51 A)

## கற்றலின் வெளிப்பாடுகள்

**சமூக அறிவியல்**

ஆறாம் வகுப்பு

### மாணவர்கள் இவற்றை கற்றுக்கொள்வர்.....

- நில வரைபடத்தின் அளவுகோல் மற்றும் குறியீடுகளை பயன்படுத்தி செல்ல வேண்டிய இடத்தைச் சென்றடைவர். உண்மையான தூரத்தை திசைகளை கண்டறிவர்.
- பகல் மற்றும் இரவு ஏற்படும் காரணங்களை செயல்கள் மூலம் செய்து காட்டுவர்.
- உலக வரைபடத்தில் கண்டங்கள் மற்றும் பெருங்கடல்களை குறித்து காட்டுவர்.
- பூமி உருண்டை மற்றும் வரைபடத்திலும், துருவங்கள், பூமத்திய ரேகை, கடக-மகர ரேகைகள் போன்றவை அடங்கிய அட்சரேகைகள், தீர்க்க ரேகைகள் அடையாளம் காண்பர்.
- இந்திய வரைபடத்தில், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், அண்டை நாடுகள் குறித்து காட்டுவர்.
- பண்டைக்கால இந்தியாவின் பல்வேறு வகைபட்ட வரலாற்று ஆதாரங்களை எழுத்து பிரதிகள், கல்வெட்டுகள், மத நூல்கள், அகழ்வாராய்ச்சி பொருட்கள் போன்றவை) வர்ணிப்பர், தற்கால வரலாற்று மறுசீரமைப்பு செய்வதில் அவற்றின் பயன்பாட்டை எடுத்துரைப்பர்.
- பண்டைக்கால வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் வளர்ச்சியை அதாவது உணவு சேகரித்தும், வேட்டையாடியும் வாழ்ந்த நிலையில் இருந்து விவசாயம் செய்ய துவங்கிய நிலை வரை நிகழ்ந்தவற்றை விவரிப்பர்.
- கலாச்சாரம், வானவியல், மருத்துவம், கணிதம் மற்றும் உலோகம் பற்றிய அறிவு, முதலியவற்றிற்கு இந்தியாவின் பங்களிப்பை குறித்து வர்ணனை செய்திடுவர்.
- பல்வேறு மதங்களின் அடிப்படை கருத்துக்கள் மற்றும் பண்டைக் காலத்தின் சிந்தனை முறையினை மதித்தறிவர்.
- அவர்களை சுற்றி நிலவும், மனித வேறுபாடுகள், பாரபட்ச முறைகளை விவரித்து கூறுவர்.
- சமத்துவம் மற்றும் சமத்துவமின்மையை வேறுபடுத்தி காண்பர், அவற்றை சமூகமான முறையில் எதிர்கொண்டு சரி செய்வர்.
- அரசாங்கத்தின் பங்கை விவரிப்பர்.
- கல்வி மற்றும் சுகாதார பணிகள் ஆற்றுவதில் கிராமப்புற நகர்புற உள்ளாட்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை மதிப்பறிந்து கூறுவர்.
- கிராமங்கள் மற்றும் நகரங்களில் மக்களுக்கு கிடைக்கும் பல்வேறு தொழில்களை குறித்து விவரிப்பர்.
- பழங்குடி இன கோண்டு பஞ்ச் மற்றும் பாட்லா குறித்து விவரித்து கூறுவர்.
- இந்திய வரைபடத்தில் மகாஜனபதங்கள் மற்றும் முக்கியமான நவீன நகரங்களை குறித்து காட்டுவர்.
- மௌரிய பேரரசர் அசோகரின் சிறப்பு இயல்புகளை குறித்து வர்ணித்து கூறுவர்.
- பல்வேறு மதங்களின் அடிப்படை குணங்களை ஒப்பிட்டு விவரித்து கூறுவர்.

SCERT TELANGANA

# சமூக அறிவியல்

## ஆறாம் வகுப்பு

Social Studies Class-VI (Tamil Medium)


### பதிப்பாசிரியர்கள்

**திரு.C.N.சுப்பிரமணியம்,**
ஏகலவ்யா, MP

**பேராசிரியர்.I.லட்சுமி,**
வரலாற்றுத்துறை, உஸ்மானியாப் பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**Dr.M.V.சீனிவாசன்,**
உதவிபேராசிரியர், DESSH, NCERT புதுடில்லி

**Dr. C.தயாகர் ரெட்டி,**
இணைப்பேராசிரியர், பெண்கள் பல்கலைக்கல்லூரி, கோடி ஐதராபாத்

**திருமதி.K.பாக்யலட்சுமி,**
மஞ்சி புஸ்தகம், ஐதராபாத்

**பேராசிரியர்.G.O.ஓம்கர்நாத்,**
பொருளாதாரத்துறை, ஐதராபாத் பல்கலைக்கழகம், ஐதராபாத்

**பேராசிரியர்.S.பத்மஜா,**
பூகோளத்துறை, உஸ்மானியாப் பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**Dr.K.நாராயணரெட்டி,**
உதவிபேராசிரியர், பூகோளத்துறை, உஸ்மானியாப் பல்கலைக்கழகம், ஐதராபாத்

**திரு.K.சுரேஷ்,**
மஞ்சி புஸ்தகம், ஐதராபாத்

**திரு.ராமமூர்த்தி சர்மா,**
கல்வித்துறை, பங்சாப்அரசு

**திரு.அலெக்ஸ்.M.ஜியார்ஜ்,**
ஏகலவ்யா, M.P.

### தமிழாக்கம்

**ஒருங்கிணைப்பாளர்**

**திரு. கே. சிட்டிபாபு,** முதல்வர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**மேற்பார்வையாளர்**

**திரு. பி.எஸ். தங்கமணி,** விரிவுரையாளர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**தொகுப்பாளர்**

**திரு. டி. ஜான் டல்லஸ்,** SA (Social Studies) ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**மொழிபெயர்ப்பாளர்கள்**

**திருமதி. எம்.மீரா,** SA (Social Studies)ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.
**திரு. இ.ஜி.சதாசிவம்,** SA (ஆங்கிலம்) ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.
**திரு. ஆர்.இ.தர்மலிங்கம்,** SA (Social Studies) ZPHS, சத்திரவாடா, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி
**திரு. D. ராஜசேகரன்,** SA (Social Studies) ZPHS, சிந்தலபட்டடை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி

### பாடநூல் வளர்ச்சிக் குழு

**திருமதி.B.சேஷுகுமாரி**
இயக்குனர்
SCERT ஐதராபாத்

**திரு.B.சுதாகர்**
இயக்குனர், அரசுபாடநூல் அச்சகம், ஆந்திரா, ஐதராபாத்

**Dr. N.உபேந்தர்ரெட்டி**
பேராசிரியர், C&T துறை,
SCERT ஐதராபாத்



**தெலங்கானா மாநில அரசு வெளியீடு, ஐதராபாத்**


சட்டத்தை மதிக்கவும்
உரிமைகளைப் பெறவும்

கல்வியால் உயர்வோம்
மென்மையாய் நடக்கவும்

SCERT TELANGANA

© Government of Telangana, Hyderabad

*First Published 2013*
*New Impressions 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020*

**All rights reserved**

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means without the prior permission in writing of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser.

The copy right holder of this book is the Director of School Education, Hyderabad, Telangana.

This Book has been printed on 70 G.S.M. SS Maplitho
Title Page 220 G.S.M. White Art Card

**தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2020-21**

SCERT TELANGANA

## எழுத்தாளர்கள்

Dr. K. **லட்சுமரெட்டி,** விரிவுரையாளர், DIET கரீம்நகர்

திரு. M. **நரசிம்மரெட்டி,** H.M. ZPHS பெத்தசங்கம்பள்ளி, கடப்பா

திரு. K. **லட்சுமிநாராயணா,** விரிவுரையாளர் DIET கிருஷ்ணா

திரு. K. **சுப்பிரமணியம்,** விரிவுரையாளர் DIET கர்நூல்

திருமதி. T.S. **மல்லேஸ்வரி,** விரிவுரையாளர் SIET ஐதராபாத்

திரு. K. **சீனிவாசராவ்,** S.A., M.P.U.P.S. P.R.பள்ளி, ஸ்ரீகாகுளம்

திரு. U. **ஆனந்த்குமார்,** S.A. ZPHS பாத்தபலவஞ்சா, கம்பம்

திரு. B. **சீனிவாசு,** S.A., ZPHS சாவெல், நிஜாமாபாத்

திரு. S. **இரகமதுல்லா,** SA ZPHS பகாராபேட்டா, கடப்பா

திரு. C. **ராதாகிருஷ்ணா,** SA ZPHS வெங்கடாப்புரம், ஸ்ரீகாகுளம்

திருமதி. B . **சரளா,** SA, ZPHS, இந்துகுருபேட், நெல்லூர்

திரு. B. **சங்கர்ராவ்,** SA, ZPHS தேவுப்பள்ளி, விஜயநகரம்

SCERT TELANGANA

## ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. J. **ராகவுலு,**பேராசிரியர் SCERT ஐதராபாத்

திரு. M. **பாப்பையா,** விரிவுரையாளர் SCERT ஐதராபாத்

திரு. S. **விநாயக்,** பாடநூல் துறை SCERT ஐதராபாத்

திரு. M. **நரசிம்மரெட்டி,** H.M. ZPHS பெத்தசங்கம்பள்ளி, கடப்பா

திரு. K. **சீனிவாசராவ்,** S.A. M.P.U.P.S., P.R. பள்ளி, ஸ்ரீகாகுளம்

## ஓவியர்கள்

திரு. K. **சீனிவாஸ்,** SA, ZPHS போச்சம்பள்ளி, நல்கொண்டா

திரு. B. **கிஷோர்குமார்,** SGT, MPUPS ஆல்வாலா, நல்கொண்டா

# மாணவர்களுக்கு ஓர் கடிதம்

"நாள் முழுவதும் வயலிலும், வீட்டிலும் வேலை செய்த களைப்பில் ஓய்வெடுக்கும் தம் தாயைப் பார்த்து, பெண்களுக்கு ஏன் இவ்வளவு கஷ்டம் என மனம் வருந்தினேன். சமுதாயத்திலும் பல்வேறு இன மக்களைக் கண்டபோது அவர்களிடையே நிகழும் மொழி, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் போன்ற வேறுபாடுகளைக் கண்டு வியந்தேன்."

"நம் நாட்டு விவசாயிகளின் தன்னம்பிக்கையற்ற நிலையை செய்தித்தாளில் படித்தேன். நகர் புறங்களில் பெரிய கட்டிடங்கள், சாலைகள், கோவில்களைக் கண்டு வியந்தேன். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான குடிசைப்பகுதிகளையும் கண்டேன். அழகிய கட்டிடங்கள் இருக்கின்றபோது ஏன் குடிசைகள் அதிகமாக உள்ளன?"

"பெரியோர்கள் வாக்குரிமை, தேர்தல் முறை, நம்மை ஆளும் தலைவர்கள் ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடுவார்கள். இவற்றைக் கேட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். அக்காலத்தில் புனிதர்களும், கடவுள்களும் அரசர்களோடும் மக்களோடும் ஒன்றாக வாழ்ந்தனர் என்பதை கேட்டு ஆச்சரியப்பட்டேன்."

"என்னுடைய மனதில் பல வினாக்கள் எழுகின்றன. என்னுடைய சந்தேகங்களுக்கு யாராவது பதில் கூறுவார்களா? நான் எவ்வாறு என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வது? யார் எனக்கு உதவுவர்?"

அன்பார்ந்த நண்பர்களே,

உன்னுடைய மனதில் எழுந்த வினாக்களைப் போல் அனைவருடைய மனதிலும் பல சந்தேகங்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கும் விடை கூறுவது கடினம். இவ்வினாக்களுக்கு பல்வேறு மனிதர்கள் பல்வேறு விதமாக விடை அளிப்பர். சமூக அறிவியல் பாடத்தைப் புரிந்துகொண்டால் உன்னுடைய வினாக்களுக்கு ஓரளவு விடைக்கிட்டும். கல்லூரிகளில் பெண்கள் குறைவாக இருக்க காரணம் என்ன? எனக் கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு பதிலைக் கூறுவர். குடிசைப்பகுதிகள் ஏன் அசுத்தமாக உள்ளன? எனும் வினாவிற்கும் பல பதில்கள் கிடைக்கும். இவற்றிற்கு சமூக அறிவியல் பாடங்கள் பதிலளிக்கும்.

சமூக அறிவியல் பல்வேறு நிலைகளில் உள்ள வேறுபாடுகளுக்கும் வேற்றுமைகளுக்கும் பதிலளிக்கிறது. இவ்வுலகம் பல மாற்றங்களை கண்டு வருகிறது. இவற்றிற்கேற்ப மக்களும் மாறவேண்டும். கல்லூரிகளில் அக்காலத்தில் குறைவான பெண்கள் இருந்தனர். தற்போது அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் பெண் குழந்தைகளை கல்லூரிகளுக்கு ஏன் அனுப்புவது கிடையாது? சமூக அறிவியல் பல வினாக்களுக்கு பதிலளிக்கும்.

பதிப்பாசிரியர்

SCERT TELANGANA

## இந்நூலைப்பற்றி

சமூக அறிவியல் கலைத்திட்டத்தைப் பற்றியும், நீ வாழும் சமூகத்தைப் பற்றியும் இந்நூல் விவரிக்கின்றது. இந்நூல் பல வினாக்களுக்கு விடையளிக்கிறது. நீயும், உன் நண்பர்களும் உன் பள்ளிக்கு வெளியே உள்ள சந்தை, பஞ்சாயத்து அலுவலகம், நகராட்சி அலுவலகம், வயல்வெளிகள், கோயில்கள் மற்றும் அருங்காட்சியங்கள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். விவசாயிகள் முதலாளிகள், அதிகாரிகள், சாமியார்கள், போன்ற பல்வேறு மக்களுடன் கலந்துரையாடுங்கள்.

உன்னுடைய பல பிரச்சனைகளுக்கு இந்நூல் ஓர் தீர்வாய் அமையும். இந்நூல் முழுமையாய் பதிலளிக்காவிட்டாலும் மறைமுகமாக உதவிபுரியும். உனக்குப் புரியாத பல வினாக்களுக்கு உன்னுடைய நண்பர்கள் அல்லது ஆசிரியர்கள் அல்லது பெரியோர்கள் விடையளிப்பர்.

மக்களின் சமூக வாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொள்ள இந்நூல் உதவுகிறது. மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் தேவைகள். சமத்துவமின்மை வழிபாட்டு முறைகள், கலாசார முறைகள் ஆகியவற்றைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றது.

மலைகள், சமவெளிகள், நதிகள், கடல்கள் ஆகிய பாடக்கருத்துகளை இப்பாடநூல் மூலம் கற்கலாம். இந்நூலில் பல செயல்கள் வழங்கப்பட்டுள்ளன. இச் செயல்கள் மூலம் உன்னுடைய வினாக்களுக்கு நீயே பதில் பெறலாம்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பல செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இச் செயல் திட்டங்களைத் தனியாகவோ, குழுவாகவோ செய்வதால் உன்னுடைய திறன்கள் அதிகரிக்கப்படும். இப்பாடநூலை நீ முழுமையாக புரிந்து கொண்டு உன்னுடைய வாழ்வில் சிறக்க வழிவகுத்துள்ளோம்.

திருமதி. சேஷுகுமாரி
இயக்குனர்
SCERT ஐதராபாத்

## ACKNOWLEDGEMENT

We would like to acknowledge the contributions of Dr. K.N.Anandan, Linguist, Kerala, Sri Jitender, Cover Page Designer, Eklavya, Dr. P. Dakshina Murthy, Retd. Dy. Director, Telugu Academy, Sri A.R.K. Murthy, Retd. Dy.Director, Telugu Academy, Deepa Srinivasan, Krithika Vishwanath and Sri Ramamurthy Sharma who participated in our workshops and contributed in improving the quality of the textbook and who provided the support for layout and design. Our utmost respects to Archaeological Museum Dept. Govt. of Andhra Pradesh. Some of the photographs used in the book are taken from flickr or other internet sources, under creative commons licence. All photographs were accessed before 28 Feb, 2012.

SCERT TELANGANA

## தேசிய கீதம்



ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்த் குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## *உறுதிமொழி*

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன். விலங்குகளிடத்தில் கருணை காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

SCERT TELANGANA

## பொருளடக்கம்


| வ.எண் | | பக்கம் | பிரிவேளை | மாதம் |
|---|---|---|---|---|
| | **கருத்து - I : பூமியில் வேறுபாடுகள்** | | | |
| 1. | வரைபடம் தயாரித்தல் மற்றும் கற்றல் | 1-8 | 6 | ஜுன் |
| 2. | உலக உருண்டை - பூமியின் ஒரு மாதிரி வடிவம் | 9-14 | 5 | ஜுன் |
| 3. | பகுதி-அ) நிலவடிவங்கள் | 15-18 | 10 | ஜுலை |
| | பகுதி-ஆ) பெனமகூரு-கிருஷ்ணா டெல்டாவில் உள்ள ஓர் கிராமம். | 19-26 | 13 | ஜுலை |
| 4. | டோக்கூர் - பீடபூமியின் மீதுள்ள ஓர் கிராமம் | 27-35 | 9 | ஜுலை |
| 5. | பெனுகுலு - மலைகளின் மீதுள்ள ஓர் கிராமம் | 36-43 | 6 | ஜுலை |
| | **கருத்து-II:தயாரிப்பு பரிவர்த்தனை மற்றும் மனித வாழ்வு** | | | |
| 6. | உணவு சேகரிப்பு முதல் விளைவித்தல் வரை - பண்டையகால மனிதர்கள். | 44-56 | 6 | ஆகஸ்ட் |
| 7. | நமது காலத்தில் விவசாயம் | 57-64 | 4 | ஆகஸ்ட் |
| 8. | பகுதி அ) விவசாய உற்பத்தியில் வாணிகம் | 65-72 | 4 | ஆகஸ்ட் |
| | பகுதி ஆ) விவசாய உற்பத்தியில் வாணிகம் | 73-79 | 4 | ஆகஸ்ட் |
| | **கருத்து -III:அரசியல் முறைகள் மற்றும் நிர்வாகம்** | | | |
| 9. | பழங்குடி இனத்தில் சமூக தீர்மானங்கள் இயற்றுதல் | 80-84 | 8 | செப்டம்பர் |
| 10. | சாம்ராஜ்ஜியங்கள் மற்றும் குடியரசுகளின் தோற்றம் | 85-92 | 8 | செப்டம்பர் |
| 11. | முதல் சாம்ராஜ்ஜியங்கள் | 93-102 | 6 | செப்டம்பர் |
| 12. | ஜனநாயக அரசு | 103-111 | 6 | அக்டோபர் |
| 13. | கிராம பஞ்சாயத்துகள் | 112-119 | 5 | நவம்பர் |
| 14. | நகர் புறங்களில் உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் | 120-126 | 5 | நவம்பர் |
| | **கருத்து-IV: சமூக நிறுவனம் மற்றும் அநீதிகள்** | | | |
| 15. | நமது சமூகத்தில் வேற்றுமைகள் | 127-134 | 6 | நவம்பர் |
| 16. | ஆண் பெண் சமத்துவம் | 135-142 | 6 | டிசம்பர் |
| | **கருத்து - V: மதம் மற்றும் சமூகம்** | | | |
| 17. | முந்தைய காலங்களில் மதம் மற்றும் சமுதாயம் | 143-153 | 8 | டிசம்பர் |
| 18. | இறைவன் மீது பக்தி மற்றும் அன்பு | 154-161 | 6 | ஜனவரி |
| | **கருத்து -VI: கலாச்சாரம் மற்றும் தகவல் தொடர்பு** | | | |
| 19. | மொழி மற்றும் சிறந்த நூல்களை எழுதுதல் | 162-168 | 8 | ஜனவரி |
| 20. | சிற்பங்களும் கட்டிடங்களும் | 169-180 | 8 | பிப்ரவரி |
| 21. | தெலங்கானாவில் பசுமை | 181-184 | 8 | பிப்ரவரி |
| | திருப்புதல் மற்றும் ஆண்டுதேர்வுகள் | | | மார்ச் |


SCERT TELANGANA

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## முன்னுரை

**இந்தியாவின் மக்களாகிய நாங்கள், இந்தியாவை முழு உரிமை கொண்ட, சோஷியலிச, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசாக அமைக்க உள்ளார்வமுடன் அனைத்து குடிமக்களுக்கும்;**

**நீதி : சமூக பொருளாதார அரசியல்**

**சுதந்திரம் : எண்ணம், வெளிப்படுத்துதல், நம்பிக்கை வழிபாடு.**

**சமத்துவம் : வாய்ப்பு, நிலை மற்றும் அனைவரிடமும் ஏற்படுத்துதல்.**

**சகோதரத்துவம் : தனிமனிதரிடம் ஏற்படுத்துதல் மற்றும் தேச ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதலுக்காக**

**நம்முடைய அரசியலமைப்பு சட்டத்தின் 1949 நவம்பர், 26-ஆம் நாளாகிய இன்று, இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை ஏற்று, சட்டமியற்றி, எங்களுக்கு நாங்களே அளித்துக் கொள்கின்றோம்.**

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் துணைப்பிரிவு [42வது சட்டத்திருத்தம்] சட்டம், 1976, பிரிவு 2, "முழு உரிமைக் கொண்ட மக்களாட்சி, குடியரசு" (3.1.1977 முதல் நடைமுறைக்கு வந்தது)

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் துணைப்பிரிவு [42வது சட்டத்திருத்தம்] சட்டம், 1976, பிரிவு 2, "நாட்டின் ஒற்றுமைக்காக" (3.1.1977 முதல் நடைமுறைக்கு வந்தது)



SCERT TELANGANA

அத்தியாயம் 1

# வரைபடம் தயாரித்தல் மற்றும் கற்றல்

வரைபடங்கள் பல்வேறு இடங்கள், மாநிலங்கள், நாடுகள் பற்றியும், தெரிவிக்கின்றன. அவை கடல் பகுதியா (அ) மலைப் பகுதியா (அ) பாலைவன பகுதியா என்பதையும், குளிர்பிரதேசமா, மழை பிரதேசமா, வெப்ப பிரதேசமா? என்பதையும் தெரிவிக்கின்றன. வளரும் மரங்கள், தாவரங்கள் பற்றியும் தெரிவிக்கின்றன. மக்களின் இனம், பேசுகின்ற மொழி, செய்யக்கூடிய தொழில்கள் பற்றியும், கட்டிடங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள வரைபடங்கள் பயன்படுகின்றன. ஒரே வரைபடத்தில் எல்லாவற்றையும் காட்ட முடியாது. பல வரைபடங்களை பயன்படுத்தினால் (இயற்கை வரைபடம், அரசியல் வரைபடம் வரலாற்று வரைபடம் முதலியன) நாம் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

நாம் வரைபடத்தை எவ்வாறு உருவாக்குதல், எவ்வாறு கற்றல் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

## மாவட்ட வரைபடம் (அரசியல்)

நீங்கள் வகுப்பறையில் இந்தியா மற்றும் தெலங்கானா மாநிலம் வரைபடங்களை பார்த்திருப்பீர்கள். இன்று நாம் நம்முடைய மாவட்டத்தைப் பற்றிய வரைபடத்தை கற்கப் போகின்றோம்.

- இரண்டு (அ) மூன்று மாவட்ட வரை படங்களை வகுப்பறைக்கு கொண்டு வரவும்.
- உன்னுடைய கிராமம் / நகரம், அண்டை கிராமம் / நகரம், நதிகள், ஓடைகள், நீர் நிலைகள் முதலியவற்றை குறிக்கவும்.
- சாலைகள், ரயில் நிலையங்கள் பற்றிய தகவல்களை பார்க்கலாம்.
- வரைபடத்தில் பல்வேறு இடங்களின் தூரத்தை குறிப்பிட முடியுமா?

## விளையாட்டு

இரு குழுக்களை தேர்ந்தெடுக்கவும்: ஒரு மாணவர் குழு, வரைபடத்தின் ஒரு இடத்தை குறிப்பிட்டு ஒரு துண்டு பேப்பரில் எழுதி அதை ரகசியமாக ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும்.

அடுத்த குழு, அவ்விடத்தை அறிய வினாக்கள் எழுப்ப வேண்டும். முதல் குழு மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சம்மந்தப்பட்ட விடையை இடத்தை கண்டு பிடித்து ஆமாம் (அ) இல்லை என்று பதிலளிக்க வேண்டும். இரண்டாம் குழு, அது மகபூப் நகர் மாவட்டத்தில் உள்ளதா? இது கடற்கரையோரப்பகுதியா? இது மாவட்ட தலைமையகமா? என கேட்பர். பிறகு முதல் குழு ஓரிடம் குறித்து வினவ இரண்டாம் குழு அவ்விடத்தை குறிப்பிடுதல்.

சரியான விடையை கண்டு பிடித்து விட்டால் குழுவை மாற்றி விளையாடலாம்.

எந்த குழு வரைபடத்தில் இடங்களின் பெயர்களை அதிகப்படியாக கண்டு பிடிக்கிறார்களோ அவர்கள் வெற்றி பெற்றவர்களாக குறிப்பிடலாம்.

## மல்லிகாவின் வீட்டிற்கு செல்லும் வழி - வரைபடம்

லைலாவும், மல்லிகாவும் நிஜாம்பாத் செஞ்சிலுவைச் சங்கம் இடத்தில் சந்தித்தனர். அங்கு அவர்கள் நல்ல நண்பர்களானார்கள். மல்லிகா வெங்கடாபுரம் என்ற கிராமத்தில் வசித்து வந்தாள். லைலா அதிலாபாத்தில் வசித்து வந்தாள்.

வருகின்ற விடுமுறையில் லைலா மல்லிகாவின் வீட்டிற்கு செல்ல திட்டமிட்டாள். லைலா மல்லிகாவிற்கு எழுதிய கடிதத்தில் மல்லிகாவின் வீட்டிற்கு பேருந்து நிலையத்திலிருந்து எப்படி வர வேண்டும் என கேட்டாள். லைலா வருவது மல்லிகாவிற்கு மிகவும் மகிழ்ச்சியை கொடுத்தது. தன் வீட்டின் இருப்பிடத்தைப் பற்றிய வரைபடத்தை மல்லிகா லைலாவிற்கு அனுப்பி வைத்தாள்.

SCERT TELANGANA




*படம் 1.1 மல்லிகாவின் வீட்டிற்கு செல்லும் வழியை காட்டும் வரைபடம்.*

- உன்னுடைய பள்ளியிலிருந்து வீட்டிற்கு செல்லும் வழியை வரைபடத்தின் மூலம் வரைந்து காட்ட முடியுமா?
- வரைபடத்தின் உதவியால் பேருந்து நிலையத்திலிருந்து மல்லிகா வீட்டிற்கு செல்லும் வழியை உன்னால் கண்டு பிடிக்க முடியும் என்று நினைக்கிறாயா?
- லைலா மல்லிகாவின் வீட்டிற்கு செல்ல எத்தனை திருப்பங்களை கடக்க வேண்டும்? திருப்பங்களில் ஏதாவது நில அடையாளங்கள் உள்ளதா?
- வரைபடத்தில் கட்டிடங்கள் ஒரே அளவில் வரையப்பட்டுள்ளதா?
- லைலா எந்த திசை நோக்கி நடந்து செல்கிறாள் என்று சொல்ல முடியுமா? (வடக்கா (அ) தெற்கா)?
- பேருந்து நிலையத்திலிருந்து மல்லிகாவின் வீட்டிற்கு எவ்வளவு தொலைவு என்று சொல்ல முடியுமா?

பேருந்து நிலையத்திலிருந்து மல்லிகா வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என தெரியாது. லைலா மல்லிகாவின் வீட்டிற்கு சென்ற பிறகு "ஓ மல்லிகா நான் மிகவும் களைத்துவிட்டேன். நீ அனுப்பிய வரைபடத்தில் தூரத்தை குறிக்கவில்லை. இவ்வளவு தூரம் என்று தெரிந்தால் நான் ஆட்டோவில் வந்திருப்பேன்", என்று லைலா சொன்னாள்.

"வருந்துகிறேன், லைலா! நான் தூரத்தை குறிப்பிட மறந்து விட்டேன்", என்று மல்லிகா கூறினாள் "இனிமேல் வருங்காலத்தில் ஆட்டோவில் வரும் போது தெற்கு வெங்கடாபுரம் செல்ல வேண்டும் என்று சொன்னால் அங்கு தான் என் வீடு உள்ளது." என்று மல்லிகா கூறினாள்.

"வெங்கடாபுரம் கிராமம் வடக்கா, தெற்கா என்பதை எவ்வாறு தெரிந்து கொள்வது?" என்று லைலா கேட்டாள்

"சூரியனைக்கண்டு புதிய ஊரின் திசையை அறிவது மிகவும் சுலபம். நீ இப்போது கிராமத்தின் தெற்கில் அமைந்துள்ள என் வீட்டிற்கு வந்தாய். இதற்கு எதிர்திசையில்தான் வடக்கு உள்ளது இந்த இடத்தின் திசையை எவ்வாறு கண்டு பிடிப்பது என தெரிந்து கொள்ளவில்லையா?" என்று கேட்டாள் மல்லிகா.

SCERT TELANGANA

## திசைகள் :

படத்தை கவனமாக பாருங்கள்.



*படம் 1.2 திசைகளை அறிதல்*

நடுவில் இருக்கும் இந்த பெண் சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நிற்கிறாள். இப்போது இந்த அட்டவணையை நிரப்புக.

| **வ.எண்.** | **திசை** | **பொருள்கள்** |
|---|---|---|
| 1. | கிழக்கு | சூரியன், மலைகள் |
| 2. | தெற்கு | |
| 3 | வடக்கு | |
| 4 | மேற்கு | |

உன் முகம் கிழக்கு திசையை நோக்கி இருந்தால், உன் வலக் கைப்பக்கத்தில் இருக்கும் பொருள்கள் அனைத்தும் தெற்கு நோக்கி இருக்கும். இடக்கைப் பக்கத்தில் இருக்கும் பொருள்கள் அனைத்தும் வடக்கு நோக்கி இருக்கும். உன் பின்புறம் இருக்கும் பொருள்கள் அனைத்தும் மேற்கு நோக்கி இருக்கும்.

மல்-கா திசைகளை அறிய ஒரு விளையாட்டை முன்மொழிகிறாள்.

படத்தின் வலதுப்புறத்தை கவனி. இப்போது ஒவ்வொருவரும் ஒரு கேள்வியை கேட்க வேண்டும்.




*படம் 1.3. ஒப்பு திசைகள்*

SCERT TELANGANA

- ஜானிற்கு...................திசையில் லலிதா இருக்கிறாள்.
- ஆனால் உத்தராவிற்கு.............திசையில் லலிதா இருக்கிறாள்.
- சேகரின்...................திசையில் நாசர் இருக்கிறான்.
- அக்பரின் .............திசையில் நாசர் உள்ளான்.
- சோமுவுக்கு எந்த திசையில் லட்சுமணன் இருக்கிறான்.
- சேகருக்கு..............திசையில் லட்சுமணன் இருக்கிறான்
- ஜானிற்கு............திசையில் தாரா இருக்கிறாள்.

இந்த பயிற்சிக்குப் பின் லைலா, நான் திசைகளைப் பற்றி நன்கு தெரிந்துக் கொண்டேன். ஒரு திசை மற்றொரு திசையுடன் தொடர்புடையதென்றும், ஒரு இடம் கிழக்கு (அ) தெற்கு (அ) வடக்கு (அ) மேற்கு என்பது நாம் பார்க்கும் இடத்தைப் பொருத்தது என்றும் கூறினாள்.

- உன்னுடைய வகுப்பறையில் திசைகளை குறிப்பிட்டு கேள்விகளைக் கேள்.

**வரைபடத்தின் திசைகள் :**

வரைபடத்தை வரையும்போது மேல் பகுதியை வடக்கு திசையாகவும், கீழ் பகுதியை தெற்கு திசையாகவும் குறிக்கலாம். வலது பக்கம் கிழக்கு திசையாகவும், இடது பக்கம் மேற்கு திசையாகும். சில வரைபடங்களில் தெற்கு மேல் பகுதியிலும் (அ) கிழக்கு பகுதியிலும் இருக்கும். அப்படி இருக்குமேயானால் வடக்கு திசையை நோக்கி அம்புகுறி கொடுக்கப்பட்டிருக்கும்.

தெலங்கானா மாநில அரசின் வரைபடத்தினை தொங்க விடவும். வரைபடத்தைப் பார்த்து கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

- விகாராபாத்திற்கு எத்திசையில் மஹபூப் நகர் அமைந்துள்ளது?
- ஐதரபாத்திற்கு எத்திசையில் யாதாதிரி உள்ளது?
- சூர்யாபேட்டைக்கு எத்திசையில் கம்மம் உள்ளது?
- கொமரம்பீம் அதிலாபாத்திற்கு கிழக்கில் உள்ளதா?
- நீ மஞ்சீர்ய-லிருந்து பெத்தபல்- செல்ல எத்திசையில் பயணம் செய்வாய்?

**அளவுகோல் (அ) வரைபடத்தின் தொலைவு :**

இனிமையான மாலை நேரத்தில் மல்லிகாவும் லைலாவும் கிராமத்தில் இருக்கும் நீரோடையை பார்க்க பாலத்தின் மீது நடந்து சென்றனர். அந்த பாலத்தின் இரு பக்கங்களிலும் ஆறு மின்சார விளக்குக் கம்பங்கள் சமமான தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கம்பத்திற்கும் 100மீ இடைவெளி உள்ளது. பாலத்தின் மொத்த நீளம் 500மீ. இந்த படத்தை பார்க்கலாம்.



*படம் 1.4 லைலாவும் மல்லிகாவும் பாலத்தின் மீது நடக்கின்றனர்.*

SCERT TELANGANA

லைலா திரும்பி வந்த பிறகு பாலத்தின் படத்தையும் மின்விளக்கு கம்பங்களின் படத்தையும் காகிதத்தின் மேல் வரைந்து உடன்வைத்துக்கொண்டாள். மின்விளக்கு கம்பங்களை வரையும் போது ஒரே இடைவெளியில் இருக்கும்படி வரையப்பட்டது. முதல் மின்விளக்கு கம்பத்திற்கும் கடைசி கம்பத்திற்கும் இடைவெளி 5 செமீ இருந்தது. அவளுடைய படம் உண்மையான பாலத்தை விட மிகச் சிறியதாக வரையப்பட்டது.



*படம் 1.5 லைலாவின் பாலத்தின் வரைபடம்*

லைலாவின் முதல் விளக்கு கம்பத்திலிருந்து 6வது கம்பம் வரை உள்ள தூரத்தை அளக்க வேண்டும். இரண்டு கம்பங்களுக்கு இடையே உள்ள தூரம் எவ்வளவு?

வரைபடத்தின் பாலத்தில் உள்ள இரண்டு கம்பங்களுக்கிடையே உள்ள உண்மையான தூரம்.......... செ.மீட்டர். ஒன்றிலிருந்து 6வது கம்பம் வரை மொத்த தூரம் ............ செ.மீட்டர். ஆனால் வரையப்பட்ட வரைபடத்தில் இரண்டு கம்பங்களின் இடையே உள்ள தூரம்................செ.மீ. மொத்த தூரம்..........செ.மீ. உண்மையான பாலத்தின் மற்றும் வரையப்பட்ட பாலத்தின் தூரத்திற்கும் உள்ள ஒற்றுமையை காட்டும் முறையை கவனி.

5 செ.மீ. வரையப்பட்ட வரைபடம்................ மீ பாலத்தின் தூரம்

1 செ.மீ. வரையப்பட்ட வரைபடம்................ மீ பாலத்தின் தூரம்.

இதையே வரைபடத்தின் அளவுகோல் என்கிறோம்.

நாம் அளவுகோலை காட்டும் போது நிலத்தின் உண்மையான தூரத்தை வரைபடத்தில் குறைத்து குறிப்பிட வேண்டும்.

நீங்கள் வரைபடத்தில் அளவுகோல் எனும் சொல்லை கவனித்திருப்பீர்கள். அளவுகோல் என்பது இரு புள்ளிகளிடையே உள்ள தூரமாகும். அவை பல வகையில் காட்டப்படும்.

அளவுகோல் அளவுகள் 1 செ.மீ.க்கு 1 கி.மீ. என சாதாரண அளவைக்காட்டும். அதாவது வரைபடத்தில் 1 செ.மீ என்பது உண்மையாக பூமி அளவில் 1 கி.மீ. எனப்பொருள்படும்.

எப்போதும் அளவுகள் குறிக்கும் போது இடங்களின் உண்மையான தூரத்தை கண்டுபிடித்து அளவுகளை பயன்படுத்த வேண்டும்.




இந்த படத்தில் வனபர்த்தி மற்றும் மகபூப்நகர் இடையே உள்ள தூரத்தை ஒரு கோடாக காட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு இடங்களுக்கு இடையேயான உண்மையான தூரம் 50 கி.மீ.

வரைபடத்தில் இரண்டு இடங்களையும் இணைக்கும் கோட்டினை அளந்துக்கொள்.

வனபர்த்தி மற்றும் மகபூப்நகர் இடையேயான உண்மையான தூரம் .............,வனபர்த்தி மற்றும் மகபூப்நகர் இடையேயான வரைபடத்தின் தூரம்............. படத்தின் அளவுகோலை கண்டுபிடிக்க முடியுமா?

வரைபடத்தில் 1 செ.மீ. இருந்தால் நிலத்தின் உண்மையான தூரம் எவ்வளவு?

1. செ.மீ = .................... கி.மீ.

இப்பொழுது மாவட்ட வரைபடத்தின் அளவுகோலை கண்டுபிடி. பிறகு உன்னுடைய கிராமம் / நகரங்களின் இடையேயான தூரத்தை அளந்து பார்க்கலாம்.

இப்பொழுது ஒரு கயிற்றினால் இந்திய கடலோரப் பகுதியை அளந்து அளவுகோல் துணையுடன் சரியான தூரத்தை கணக்கிடுதல்.

SCERT TELANGANA

## குறியீடுகள் :

வரைபடங்களில் மிகவும் சிறியதாக படங்களை வரைய வேண்டும். பள்ளி (அ) பேருந்து நிலையம் (அ) மல்லிகாவின் வீடு, ஆகியவற்றின் உண்மையான அளவை வரைபடத்தில் வரைய இடம் தேவைப்படும். ஆகவே, நாம் முக்கிய இடங்களை வரைபடத்தில் காட்ட, குறியீடுகளை பயன்படுத்த வேண்டும்.

மாவட்ட வரைபடத்தில் கிராமம் மற்றும் நகரங்களை குறிக்கும் போது புள்ளிகள் மற்றும் வட்டங்களை முறையே குறிக்க வேண்டும். வரைபடம் தயாரிப்பவர்கள் தேவையான குறியீடுகளை பார்த்து தயாரிக்க வேண்டும். ஆனால் சில பொது குறியீடுகள் அதாவது மரபுக் குறியீடுகளை பயன்படுத்துவீர். கீழ்கண்ட வரைபடம் அளவுகோல் மற்றும் குறியீடுகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.




*படம் 1 வரைபடத்தை பார்த்து குறியீடுகளின் பயன்களை கண்டுபிடித்தல்*




SCERT TELANGANA

முன்பக்கத்தில் இருக்கும் வரைபடத்தை ஆதாரமாகக் கொண்டு கேள்விகளுக்கு விடையளி.

- ஓடும் நதியின் எத்திசையில் மாதா கோயில் அமைந்துள்ளது?
- ஸ்ரீபுரம் கிராமத்தின் தெற்கு திசையில் எந்த விதமான சாலை அமைந்துள்ளது?
- ஸ்ரீபுரம் அருகில் எந்த வகை ரயில் மார்க்கம் அமைந்துள்ளது?
- ரயில் நிலையத்திற்கு எத்திசையில் காவல் நிலையம் உள்ளது?
- ரயில் தண்டவாளத்தின் வடக்கு திசையில் இருக்கும் கிராமத்தின் பெயர் என்ன?
- நீ பள்ளியில் உள்ளவாறு கற்பனை செய்துக்கொள்.

பள்ளியிலிருந்து வெளியேறும் போது உன் முகம் எந்த திசை நோக்கி உள்ளது?

**செயல் :**

**நீ கிழக்கை நோக்கி நின்றுகொண்டு உன் கைகளை நீட்டியபடி திசைகளின் பெயர்களை கூறு (உதாரணமாக வடக்கு, தெற்கு). அடுத்தமுறை நீ நிற்கும் திசையை மாற்றி அமைத்து இதேபோன்று திசைகளின் பெயர்களை கூறு.**

**முக்கியச் சொற்கள்**

படம்
வரைபடம்
அளவுகோல்
திசை

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பலவகையான வரைபடங்களை சேகரித்து படித்துப்பார். உனக்கு சந்தேகம் ஏதேனும் இருப்பின் உன் ஆசிரியரிடம் கேட்டு தெரிந்துகொள்.(AS5)
2. உன்னுடைய மண்டல தலைமையகம் மற்றும் மாவட்டத் தலைமையகத்திற்கு இடையே உள்ள தூரத்தை, வரைபடத்தின் தூரத்தை உண்மையான தூரமாக மாற்றி உண்மை அளவை கூறுக.(AS5)
3. உண்மையான நில அளவை வரைபடத்தில் ஏன் குறைத்துக் கொள்ள வேண்டும்?(AS1)
4. வரைபடத்தை தயாரிக்கும் போது ஏன் குறியீடுகளை பயன்படுத்த வேண்டும்?(AS1)
5. குறியீடுகளின் உதவியால் பல்வேறு நீர்நிலைகள், கோவில்கள், மற்றும் பொது இடங்களை வரைபடத்தில் வரையலாம்.(AS5)
6. உன்னுடைய வீட்டை படமாக வரைந்து, அதை வரைபடமாக மாற்றுக.(AS5)
7. நீ கவனித்ததில் வரைபடத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?(AS1)
8. பக்கம் 6ல் உள்ள குறியீடுகள் அம்சத்தை படித்து விவாதிக்கவும்.(AS2)
9. அட்லஸ் புத்தகத்தில் உள்ள பலவண்ண வரைபடங்களை கவனித்து விவரங்களை பதிவு செய்.(AS3)

| வரிசை எண் | வரைபடத்தின் பெயர் | பயன்படுத்திய குறியீடுகள் | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|---|
| | | | |

SCERT TELANGANA

**செயல்திட்டம் :**

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி உன் வகுப்பறையை வரைபடமாக தயார் செய்க.

a) நான்கு திசைகளை கண்டுபிடித்து வடக்கு திசையை நோக்கி நில்.

b) சுவர், கதவுகள், கரும்பலகை, அலமாரி ஆகியவற்றை பட்டியலிடுக. எதையெல்லாம் நீ வரைபடத்தில் காட்டப் போகிறாயோ, அவற்றை பட்டியலிடுக. அவற்றிற்கெல்லாம் உன்னுடைய புத்தகத்தில் குறியீடுகளை தயார் செய்யவும்.

c) வகுப்பறையை வரைபடமாக வரையும்போது, சுவருடன் இருப்பது போல், அந்தந்த பொருட்கள் இருக்கும் இடத்தை கவனமாக வரையவும், வடக்கு திசையிலுள்ள மேல் பகுதியின் சுவற்றை வரையும் போது கவனம் தேவை.

d) சிறு குழுக்களாகப் பிரிந்து, எல்லா சுவர்களையும் அளவு கோலால் அளவு எடுத்து கொள்ளவும். பின்பு வரைபடத்தில் தூரத்தை எழுதவும்.

e) தகுந்த அளவுடன் வகுப்பறையின் வரைபடத்தை வரையவும். 1 மீட்டருக்கு 1 செ.மீ. இருக்க வேண்டும். சுவரின் அளவு 7 மீட்டராக இருந்தால் 7 செ.மீ என தாளில் கோடு போடவும்.

f) வெளிச்சுவர்களை தயாரித்த பிறகு, கதவு, ஜன்னல்களுக்கு வலது புறத்தில் குறியீடுகள் வரையவும், அலமாரி, கரும்பலகை நாற்காலி போன்றவற்றிற்கு குறியீடுகள் வரையவும்.

g) வகுப்பறையின் வரைபடத்தில் பயன்படுத்திய குறியீடுகளை குறிப்பு எடுக்கவும், பின்பு எவ்வளவு என்பதையும் குறிப்பிடவும்.

h) உன் நண்பர்களுடன் நீ தயாரித்த வரைபடத்தில் ஏதேனும் தவறுகள் இருப்பின் சரிசெய்து கொள்ளவும்.

SCERT TELANGANA

அத்தியாயம் 2

# உலக உருண்டை
# பூமியின் ஒரு மாதிரி வடிவம்

ஒரு நாள் மாலை வேளையில் சுந்தரும், கல்பனாவும் நிலவை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது சுந்தர் கேட்டான், நான் நிலவிற்குச் சென்று பூமியைப் பார்த்தால் எப்படி தோற்றமலிக்கும்? அங்கிருந்து நான் என்ன பார்க்க முடியும்? உடனே கல்பனா அவனிடம் "நாம் இணையதளத்தில் பார்த்தால் இது பற்றிய விவரம் கிடைக்கும்", என்றாள். பிறகு அவள் நிலவில் இருந்து பூமியை பற்றி எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சிலவற்றை அவனிடம் காட்டினாள். அது கீழ்கண்டவாறு இருந்தது.



படம் 2.1. நிலவிலிருந்து பூமியின் படம்

மேலே படத்தில் பூமியின் பெரும்பாலான பகுதிகள் நீல நிறத்தில் காட்சியளிக்கின்றன. பூமியின் நிறம் நீல நிறமாக இருக்க பூமியில் பெரும்பாலான பகுதிகள் கடல் நீரால் சூழப்பட்டுள்ளதாலேயே. மேற்காணும் படத்தில் நாம் சூரிய ஒளிபடும் பகுதிணை மட்டுமே காண்கிறோம்.

- இப்படத்தில் பூமியின் அடிப்பாகம் ஏன் காணப்படவில்லை என்பதை உங்களால் விவரிக்க முடியுமா?

**பூமி ஒரு பந்தை போன்றது :**

மேலே கொடுக்கப்பட்ட படத்தில் பூமி நிலவு போல காட்சியளிப்பதை நீங்கள் பார்க்கலாம்.

உலக உருண்டை சிலவற்றை வகுப்பறைக்கு எடுத்து வாருங்கள். ஒவ்வொரு 5 மாணவ குழுக்களும் ஒரு உலக உருண்டை வைத்திருப்பதை உறுதி செய்யுங்கள்.



உலக உருண்டைதான் பூமியின் தோற்றம். இது பூமியின் தோற்றத்தையும், நீர் பகுதிகளையும், நிலப்பகுதியையும், கண்டங்களையும், கடல்களையும், உலகில் உள்ள நாடுகளையும் காட்டும்.

SCERT TELANGANA

- ஒவ்வொரு மாணவனும் உலக உருண்டையை கையில் எடுத்துக்கொண்டு எப்படி பூமி சுழல்கிறது என்பதை கவனமாக பார்க்கவும்.
- உங்கள் ஆசிரியரின் உதவியோடு வட துருவம், தென் துருவம், பூமத்திய ரேகை ஆகியவற்றை தெரிந்து குறிப்பிடவும்.

பூமி பந்து போன்று உருண்டை வடிவில் காட்சியளிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மக்கள் பூமியின் மேல் கீழே விழாமல் எவ்வாறு நிற்கின்றனர்?

பூமியில் இருந்து எந்த பொருளையும் மேல் நோக்கி வீசினாலும் திரும்பவும் பூமியிலேயே வந்து விழும். ஏனென்றால் பூமியின் பலமான புவி ஈர்ப்பு சக்தி எந்த பொருளையும் ஈர்த்துக்கொள்ளும் தன்மை உடையது.

**கோள வடிவம்**

உண்மையில் பூமிப்பந்து மிகவும் சரியான உருண்டை வடிவில் இருக்காது. அதன் வட, தென் துருவங்கள் சற்று அழுத்தியவாறும், பூமத்திய ரேகைப்பகுதி சற்று பெருத்தும் காட்சியளிக்கும். ஆனால், நாம் காணும் பூமி உருண்டை பந்தில் அவற்றை காண முடியாது.

பூமி பந்தில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், பூமியின் எந்த இடத்தில் இருந்தாவது ஒரு திசையில் ஒரே நேர் கோட்டில் பயணம் செய்தால் துவங்கிய இடத்திற்கே மீண்டும் வந்து சேருவீர்கள்.

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பூமி தட்டை வடிவிலானது என்றும், ஏதாவது ஒரு திசையில் பயணித்து கொண்டிருந்தால் பூமியின் இறுதி எல்லைக்கு வந்து, அங்கிருந்து ஆகாயத்திற்கு சென்றுவிடலாம் என எண்ணினார்கள்.

பின்னர் கி.பி. 1400களில் தான் விஞ்ஞானிகள் பூமி உருண்டையாகத்தான் இருக்கும் என கணித்தனர். இதை நிரூபிக்க கி.பி. 1492 ஆண்டில் "கொலம்பஸ்" என்ற இத்தாலிய மாலுமி ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடைய மேற்கு நோக்கி பயணித்தார். அவர் கரிபியன் தீவுகளை அடைந்தார். அவர் மேலும் பயணித்திருந்தால் இந்தியாவை அடைந்திருக்க முடியும்.

- உலக உருண்டையை பாருங்கள் கொலம்பஸ் எப்படி அமெரிக்கா வந்திருப்பார் என்றும், அவர் இந்தியாவை சென்றடைய எப்பாதையில் பயணித்திருக்க வேண்டும் என்றும் கவனி.

**கடல்கள் மற்றும் கண்டங்கள் :**

பூமிப்பந்தை பார்க்கும்போது பெரும்பாலான பூமிப்பகுதிகள் நீரால் சூழப்பட்டிருப்பதைக் காணலாம். நீங்கள் கடலோர மாவட்டங்களில் வசிப்பவராக இருந்தால் நீங்கள் வங்கக்கடலை பார்த்திருப்பீர்கள்.

- சில வரிகளில் கடலைப் பற்றி விவரிக்க முடியுமா? அல்லது கடலை வரைய முடியுமா?
- கடல் நீருக்கும், நாம் குடிக்கும் நீருக்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகள் என்ன?

கடல் பரப்பு பல ஆயிரம் கி.மீ. விரிந்து கிடக்கிறது. ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு செல்ல கப்பலின் உதவியோடு செல்ல முடியும். கப்பல் பயணம் நாள் அல்லது மாத கணக்கில் ஆகும்.

- ஒரு கடல் பகுதி பனிக்கட்டிகளில் உறைந்து கிடக்கும் - அதன் பெயரை கண்டுபிடி.
- பூமி உருண்டைய பார்த்து ஐந்து பெருங் கடல்களின் பெயர்களை எழுதுக

1. ...............
2. ...............
3. ...............
4. ...............
5. ...............

SCERT TELANGANA

- மேலே குறிப்பிட்ட ஐந்தில் எது மிகப் பெரிய பெருங்கடல் - கோடிட்டுக் காட்டுக.

இயற்கையாகவே மனிதர்களால் கடலில் வாழ முடியாது. நிலப்பரப்பில் தான் உயிர்வாழ முடியும். பூமியில் பெரிய நிலப்பகுதிகளை காணலாம். அவைகளை கண்டங்கள் என்று கூறுவர். பூமியில் மொத்தம் ஏழு கண்டங்கள் உள்ளன.

- கண்டங்களின் பெயர்களை கண்டுபிடித்து, அவற்றை கிழே எழுதுங்கள்.

1. ...............
2. ...............
3. ...............
4. ...............
5. ...............
6. ...............
7. ...............

- இதில் ஒரு கண்டம் மட்டும் பனிக்கட்டி களால் ஆனது. அது எந்த இடத்தில் உள்ளது என்பதை கண்டறிக.

பூமியின் வட துருவம் மற்றும் தென் துருவம் பனி கட்டிகளால் ஆனது. ஒரு முனை பனிக் கடலாலும் மறுமுனை நிறைய பனிக்கட்டிகளாலும் நிரம்பி இருக்கிறது. அதுதான் அண்டார்க்டிக் பனிப்படலம்.

- இந்தியா எந்த கண்டத்தில் இருக்கிறது என்பதை குறிப்பிடுங்கள்.
- அதேபோல் உங்களுக்குத் தெரிந்த நாடுகள் எந்த கண்டத்தில் உள்ளன என்பதை பாருங்கள்.

கிராமம், நகரம் மற்றும் மாநகரங்கள் எல்லாம் கண்டத்திற்குள் அமைந்துள்ளன. நிலப்பரப்பில் மலைப்பகுதிகள், பள்ளத்தாக்குகள், விவசாய நிலங்கள், தொழிற்சாலைகள் முதலியவை உள்ளன.

## பூமியின் திசைகள் :

நீ நான்கு திசைகள் பற்றி முன் பாடத்தில் படித்திருப்பாய். பூமியின் வடதிசை தென்திசையை உன்னால் காட்ட முடியும். வட திசை நோக்கி நின்றால் வலது புறமாக கிழக்கு திசையும், இடது புறமாக மேற்கு திசையும் இருக்கும். பூமி மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கி சுழலும். இப்பொழுது நீங்கள் பூமி பந்தை சுழற்றி, இந்த சுழற்சி எப்படி நடக்கிறது என்பதை பாருங்கள்.

துருவ முனைகளைப் பாருங்கள். துருவம் என்றால் என்ன? துருவம் என்பது நேர் எதிரான இரண்டு புள்ளிகளைக் கொண்டது. நீங்கள் இரண்டு துருவப்புள்ளிகளையும் பூமிக்குள்ளே செல்லுமாறு கோடிட்டு சேர்த்தால் அச்சு உருவாகும். அச்சுக்கு இணையாக பூமி சுழல்கின்றது.




இதை இன்னும் தெளிவாக புரிந்துக் கொள்ள வேண்டும் என்றால், மூன்று அல்லது நான்கு புள்ளிகளை உலக உருண்டையின் மேல் பல வண்ணங்களில் இட்டு உலக உருண்டையை சுழற்றி, பின் கவனிக்கவும்.

SCERT TELANGANA

பூமத்திய ரேகையிலிருந்து துருவப்பகுதி வரை புள்ளிகளை வைத்து பூமி உருண்டையை சுழற்றி கவனியுங்கள்.

துருவத்தின் மேலே வைக்கப்பட்ட புள்ளி மட்டும் நகராமல் ஒரே இடத்தில் இருக்கும். பூமத்திய ரேகை மேலே வைக்கப்பட்ட புள்ளி என்ன ஆகும்?

## உலக உருண்டையின் மீது உள்ள ரேகைகள் :

பூமியின் மேல் நிறைய ரேகைகள் உள்ளதை பார்த்திருப்பீர்கள். சில ரேகைகள் வட துருவத்தில் இருந்து தென் துருவம் நோக்கி செல்லும் போது, சில ரேகைகள் கிழக்கலிருந்து மேற்காக பூமியை சுற்றி இருக்கும். இந்த கோடுகளை கற்பனைக் கோடுகள் என்பர். இது வரைபடத்தை வரைபவர்களால் வரையப் படுவதாகும். இது பூமியில் உள்ள ஒரு இடத்தை சுட்டிக்காட்டப் பயன்படுகிறது. இது எப்படி வரையப்படுகிறது என்பதை பின்வரும் பாடங்களில் பார்க்கலாம். தற்போது முக்கியமான ரேகைகளைப் பற்றி பார்ப்போம்.

பூமி உருண்டையின் மீதுள்ள கோடுகளை அட்சரேகைகள், தீர்க்க ரேகைகள் என்று அழைப்பர். துருவங்களைப்பற்றியும் நம் முன்னோர்கள்ளான ஆரியபட்டா போன்றோர் நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் இடங்களைப்பற்றி விளக்கும்போது இச்சொற்களை பன்படுத்தினர்.

## அட்ச ரேகைகள் :

இந்த ரேகைகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரையப்படுகின்றன. இந்த ரேகைகளை கீழ்கண்ட படத்தில் காணலாம். இந்த ரேகைகளின் நீளத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்? எல்லாம் சம அளவில் இருக்கிறதா?




*படம் 2.4. அட்ச ரேகைகள்.*

அட்சரேகைகளில் மிகவும் நீளமான ரேகை பூமத்திய ரேகை ஆகும். இது பூமிபந்தை இரண்டு சம அளவாக பிரிக்கிறது. இந்த இரண்டு பாதிகள்தான் அரைகோளம் எனப்படுகிறது. மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் பூமத்திய ரேகையை கண்டுபிடித்து, அது எந்தெந்த கண்டங்களின் மேலே செல்கிறது என்பதை குறிப்பிடுங்கள்.

இந்தியா எந்த அரைகோளத்தில் அமைந்துள்ளது? எந்த அரைகோளத்தில் நிலப்பகுதியை விட நீர்பகுதி அதிகமாக உள்ளது?

## தீர்க்க ரேகைகள் :

இந்த ரேகைகள் ஒரு துருவ முனையில் இருந்து மற்றொரு துருவ முனைக்கு செல்லும். இதில் அனைத்து ரேகைகளும் சம அளவு நீளம் கொண்டது. இரண்டு முக்கிய தீர்க்க ரேகைகள் உள்ளன.

அவை : கிரின்வீச் தீர்க்க ரேகை மற்றும் பன்னாட்டு திட்ட நேர ரேகை. இதைப்பற்றி பின்வரும் வகுப்புகளில் கற்கலாம்.

ஒரு இடத்தின் அட்சரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகள் உங்களுக்கு தெரிந்திருந்தால் நீங்கள் மிக எளிதில் அந்த இடத்தை வரைபடத்திலோ அல்லது பூமி பந்திலோ அடையாளம் காணலாம்.

அட்சரேகைகளும் தீர்க்க ரேகைகளும் கற்பனைக் கோடுகளாகும்.




படம் 2.5 தீர்க்க ரேகைகள்

அட்ச ரேகைகளும், தீர்க்க ரேகைகளும் சேர்ந்து வலைபோல் வரைபடத்தில் காட்சியளிக்கும். ஒரு இடத்தை கண்டுபிடிக்கவும், குறிப்பிடவும் இவைகள் பயன்படுகின்றன. இதை சட்டம் (Grid) என்பர்.

SCERT TELANGANA

## முக்கியச் சொற்கள்

**அட்ச ரேகை, தீர்க்க ரேகை, இணையதளம், திட்ட நேர தீர்க ரேகை, அச்சுகள்**

## உனது கற்றலை மேம்படுத்துக

1. அடுத்த பக்கத்தில் உள்ள உலக வரைபடத்தில் கண்டங்கள், மற்றும் பெருங்கடல்களை குறிப்பிடுக. தேவையான வண்ணம் பூசி வேறுபடுத்தி காட்டுக. முக்கிய அட்ச ரேகைகளின் பெயர்களை எழுதுக.(AS5)
2. ரமேஷ் உலகம் தட்டையென்று சொல்கிறான். நீ என்ன சொல்கிறாய்?(AS1)
3. ரோசி வளையலைச் சுற்றி கோடிட்டாள். - என்ன வடிவம் தெரிந்தது?(AS1)
4. கொலம்பஸ் போன்றவர்களின், கண்டுபிடிப்புகள் பற்றிய செய்திகளை சேகரி.(AS3)
5. ஒரு பந்தின் மேல் அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகைகளை வரைக.(AS5)
6. சூரியன் எப்பொழுதும் கிழக்கில் உதிக்கிறது. காரணம் என்ன?(AS1)
7. பூமி உருண்டை / வரைபடத்தின் மேல் ஏன் கற்பனை ரேகைகளை வரைகிறோம்?(AS1)
8. பூமியைப் பற்றி தெரிந்துகொள்வதில் அறிவியலாளர்களும், மாலுமிகளும் செய்த முயற்சிகள் யாவை?(AS6)
9. பக்கம் 14ல் உள்ள உலக வரைபடத்தில் கண்டங்களையும் பெருங்கடல்களையும் குறிக்கவும்.(AS5)









SCERT TELANGANA



படம் 2.6 உலகம் புறவரிப்படம்

SCERT TELANGANA

அத்தியாயம் 3

# நில வடிவங்கள்

பகுதி - அ

**நாம் வாழும் நிலமானது தட்டையாக அல்லது ஒரே சீரானதாக இல்லை. ஆனால் பல்வேறு வடிவங்களையும், விவரங்களையும் பெற்றுத் திகழ்கிறது. சில இடங்களில் அது மிகவும் உயர்ந்து குன்றுகளாகவும், மலைகளாகவும் மிகவும் செங்குத்தான சரிவுகளைக் கொண்டுள்ளது; மேலும் பிற இடங்களில் தாழ்ந்தும் தட்டையாகவும் நீண்ட பரப்பாகவும் இருக்கும். நீங்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணம் செய்தால் நீங்கள் இடங்களின் உயரங்களில் மாற்றங்கள் இருப்பதைக் காணலாம். இதுவே ஒரு பகுதியின் வளையம் எனப்படுகிறது.**

நிலவடிவங்கள் முக்கியமாக மூன்று வகைப்படும் - மலை, பீடபூமி மற்றும் சமவெளி நீங்கள் பலவகையான குன்றுகளைக் கண்டிருக்கலாம் அல்லது சில மலைத் தொடர்களுக்குச் சென்றிருக்கலாம். மலைகள் மிகவும் உயரமானவை. அவை செங்குத்தான சாய்வுகளைக் கொண்டிருக்கும். அவற்றின் மேல் குறைந்த அளவில் தட்டையான நிலப்பகுதி இருக்கும். நம் மாநிலத்தில் அதிலாத், நிர்மல், ஜகிதாலா, விகாராபாத், பெத்தபள்ளி மற்றும் பத்ராத்ரி மாவட்டங்கள் சிதறுண்ட குன்றுறைகளைக் கொண்ட மலைப் பாங்கான இயற்கைச் சூழ்நிலைக் கொண்டு விளங்குகின்றன. அவை அதிலாபாத். நிர்ம-ல் சாத்மலா தொடர், மகபூப்நகர், நாகர்கர்நூ-ல் பாலகாட், விகாராபாத்தில் அனந்தகிரி, பெத்தபள்ளியில் கண்டிகல், ஜெயசங்கர் மற்றும் இராக்கி என ஜகிதாலா மாவட்டத்தில் உள்ளன. இக்குன்றுகளின் இடையே பாயும் நதிகளான கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகள் அவற்றால் உருவாக்கப்பட்ட பள்ளத்தாக்குகளின் வழியாக பாய்கின்றன. பீடபூமிகளும் உயர்ந்த மேட்டு நிலங்களாகும் ஆனால் அவை அளவில் தட்டையான நிலப்பரப்பினைத் கொண்டும் அவற்றிடையே சில குன்றுகளை கொண்டும் விளங்கும். தக்காண பீடபூமி இந்தியாவின் மிக நீளமான பீடபூமியாகும். இதன் நிலப்பரப்பு சமமற்று மேடுபள்ளங் களாக இருக்கும். ஆனால் மலைகளைப் போன்று செங்குத்தான சாய்வுகளைக் கொண்டிருக்காது. தெலுங்கானா பெரும்பகுதிகள் தக்காண பீடபூமியின் ஒருபகுதியாகும். ஐதராபாத்தும், சிகிந்திராபாத்தும் இந்த பீடபூமிப் பகுதியிலேயே அமைந்துள்ளன.



படம் 3.1 மலைகள்

SCERT TELANGANA



**படம் 3a.2 சமவெளி**

சமவெளிகள் சமமான பரப்புகளையும் மென்மையான சரிவுகளையும் கொண்டுள்ளன. இவை பெரும் நதிகளின் வண்டல் படிவுகளால் உருவானவை. சிந்து மற்றும் அதன் கிளை நதிகளால் சிந்து சமவெளியும், கங்கை நதி மற்றும் அதன் கிளை நதிகளால் கங்கை சமவெளியும் உருவாயின. அவற்றை சிந்து-கங்கை சமவெளி என்பர். தெலங்கானாவில் பல்வேறு மாவட்டங்கள் சமவெளிப்பகுதிகளில் அமைந்துள்ளன. இச்சமவெளிகள் கிழக்குக் கடலோரச் சமவெளிகள் என அழைக்கப்படுகின்றன. அவை இந்தியாவின் கிழக்குப் பகுதியிலும் வங்காள விரிகுடாவின் கடலோரத்திலும் அமைந்துள்ளன.

தெலங்கானா மாநிலம் பல்வேறுபட்ட நிலவியல் கூறுகளைக்கொண்டு விளங்குகிறது. அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ள தெலங்கானா மாநில புறவரிப்படத்தைப் பார்.



படம் 3a.3 பீடபூமி நிலஅமைப்பு

நம் மாநிலத்தின் மேற்கில் தக்காணப் பீடபூமியும் மத்திய கிழக்குப் பகுதியில், கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்கில் கிழக்கு கடலோர சமவெளிகளும் வங்காள விரிகுடாவை நோக்கி தாழ்ந்து அமைந்துள்ளன. இச்சமவெளிகள் பொதுவாகவே வளமுள்ளவை யாகவும் மக்கள் வாழ்வதற்கு ஏற்றவையாகவும் உள்ளன. வரங்கல், கரீம்நகர் போன்ற நகரங்கள் இச்சமவெளிப் பகுதிகளில் அமைந்துள்ளன.

கிருஷ்ணா, கோதாவரி போன்ற நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தோன்றி தக்காணப் பீடபூமியின் வழியாக பாய்ந்து அகன்ற பள்ளத்தாக்குகளை உருவாக்கி சமவெளிகளில் திறக்கப்பட்டு வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

நாம் இந்த நிலவடிவங்களைப் பற்றியும் மக்கள் அங்கு எவ்விதமான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்பது பற்றியும் பின்வரும் பாடங்களில் படிக்கலாம்.

- மலைகள், சமவெளிகள் மற்றும் பீடபூமிகளின் படங்களைப் பார். உங்கள் பகுதி இவற்றில் எதைப்போன்று உள்ளது என்பதை கவனி.

SCERT TELANGANA




வரைபடம் – தெலங்கானா மாநில புறவரிப்படம்.

- பல்வேறு நிலவடிவங்களைக்காட்டும் புறவரிப் படத்தைப்பார். பீடபூமிப் பகுதியில் அமைந்துள்ள மாவட்டங்களான போன்கிரி, பத்ராச்சலம், சித்திபேட், மந்தானி, மன்சிர்யாலா, ஷாட்நகர், சிரிசில்லா, சென்னூர், காமரெட்டி, விகாராபாத் ஆகியவற்றை கண்டுபிடி
- அனந்தகிரி, தேவரகொண்டா மலைகள், நிர்மல் மலைகள், சிர்னாபள்ளி மலைகள் எந்த மாவட்டங்களில் உள்ளன?

## டெல்டா

நம்மாநிலத்தின் இரண்டு முக்கிய நதிகளான கிருஷ்ணாவும், கோதாவரியும் மேற்குத் தொடர்ச்சிமலைகளில் தோன்றி வங்கக்கடலை அடையும் முன் மிகப்பெரிய டெல்டாக்களை உருவாக்குகின்றன. கடலோரச் சமவெளிகளில் இவ்விரண்டு நதிகளும் இரண்டு முக்கோண வடிவ நிலங்களை உருவாக்கியிருப்பதை கவனித்தீர்களா?

கடலை அடைவதற்கு முன் நதிகள் பல சிற்றோடைகளாக பிரிகின்றன. அவை அதிக அளவில் மணலையும், வண்டலையும் அங்கே சேர்ப்பதால் டெல்டா பகுதி உருவாகிறது இது சாதாரணமாக முக்கோண வடிவில் இருக்கும். வெள்ளநீரால் இப்பகுதி ஆண்டு முழுவதும் செழிப்பாக வைக்கப்படுகிறது.

- டெல்டா மண்களை நதிகளின் குறுக்கே கட்டப்படும் அணைகள் எவ்வாறு பாதிக்கின்றன?
- கிருஷ்ணா, கோதாவரி நதிகளில் கலக்கும் இரு நதிகளை கண்டுபிடிக்கவும்.
- நம் நாட்டில் உள்ள வேறு சில டெல்டாக்களின் பெயர்களை குறிப்பிடு..

SCERT TELANGANA

கிருஷ்ணா நதியானது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ள மஹாபலேஸ்வர் என்னும் இடத்திலிருந்து தோன்றுகிறது. அது வங்காள விரிகுடாவில் கலப்பதற்கு முன் எண்ணற்ற சிறிய நதிகளுடன் இணைந்து விடுகிறது.

- மெதக் மாவட்டத்தில் பெரும் அணையை கட்ட முடியாததற்கு காரணம் என்ன?
- கோதாவரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரும் அணையை கண்டறிந்து அதனை புறவரிப்படத்தில் கவனிக்கவும்.




படம். 3.4 கிருஷ்ணா, கோதாவரி டெல்டாக்கள்




இந்தியாவின் தெற்கு பீடபூமி பகுதி

SCERT TELANGANA

பாடம் 3

பகுதி - ஆ

# பெனமகூரு-கிருஷ்ணா டெல்டாவில் உள்ள ஓர் கிராமம்.

**ஒரு டெல்டா கிராமத்தில் மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை நாங்கள் அறிய விரும்பினோம். நாங்கள் விஜயவாடாவிலிருந்து புறப்பட்டு உய்யூரு பட்டிணத்தை அடைந்தோம். அப்பகுதி முழுவதும் சமவெளியாக இருந்தது. எந்த சரிவும் அங்கு காணப்படவில்லை. நாங்கள் பல கால்வாய்களையும், மரங்களடர்ந்த செயற்கை நீர் ஓடைகளையும் கடந்துச் சென்றோம்.**

## பந்தர் கால்வாய்

உய்யூரிலிருந்து சுமார் 3கி.மீ. பயணம் செய்தபின் பந்தர் கால்வாயை தாண்டி பெனமகூரு கிராமத்தை அடைந்தோம். பந்தர் கால்வாய் விஜயவாடாவில் கிருஷ்ணா நதியின் பிரகாசம் அணையிலிருந்து தொடங்குகிறது. இது அக்கிராமத்தின் வடமேற்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசையை நோக்கிப் பாய்கிறது. இக்கால்வாயின் நீர், சிறுசிறு கால்வாய்கள் மூலம் வயல்களுக்கு கொண்டுச் செல்லப்படுகிறது. பெனமகூரு கிராமம் சில கி.மீ. தூரத்தில் மேற்கில் பாயும் கிருஷ்ணா நதிக்கும் பந்தர் கால்வாய்க்கும் இடையில் அமைந்துள்ளது.



படம் 3.5 பெனமகூரு சமவெளிப்பகுதி



படம் 3.6. பந்தர் கால்வாயின் கரையில் அமைந்துள்ள குடிசைகள்

### பிரகாசம் அணைத்திட்டம்

கிருஷ்ணா டெல்டாவின் வடக்குக்கரையில் டெல்டாவின் தலைமைப் பகுதியில் விஜயவாடா நகரம் அமைந்துள்ளது. கிருஷ்ணாநதியின் குறுக்கே ஆங்கிலேயே ஆட்சியாளர்களால் 1853ல் விஜயவாடாவில் ஒரு அணைக்கட்டப் பட்டது. இது பிரகாசம் அணைத்திட்டம் எனப்படுகிறது. இங்கிருந்து பல கால்வாய்கள் மூலம் 12 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனத்திற்காக இந்நீர் பகிர்ந்தளிக்கப் படுகிறது.

SCERT TELANGANA

### மண்கள் :

**பெனமகூருவில் மண்கள் பெரும்பாலும் வ**ளமான வண்டல் கருப்பு மண்கள். நதியால் கொண்டுவரப்படும் மண்களை வண்டல் மண்கள் என்பர். வண்டல் மண்கள் பளுவானது. நீரைத்தாங்கும் திறன் கொண்டவையாகும். அவை மிகுந்த வளமிக்கவையாகும். அவ்வாறான நிலங்களில் பயிர் நன்றாக வளரும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

நாம் 15 அடி ஆழத்திற்கு இங்கு நுண்மையான களிமண் போன்ற கருப்பு மண்களை (கரிசல் நிலம்) காண முடிகிறது. அவை மழையினால் பிசு பிசுப்பாகவும் ஈரத்தை நீண்டகாலம் தன்னுள் வைத்திருப்பவையாகவும் உள்ளன. அவை வறண்ட பிறகு வெடிப்புகள் ஏற்படுகின்றன. இவ்வெடிப்புக்களால் மேல் மண்கள் எழுகின்றன. இதை சுயமாக உழுதல் என்பர். இங்கு மண் வளமும் அதிகம், மேற்கிலும் தெற்கிலும் நதியின் அருகே உள்ள கிராமத்தின் சில பகுதிகள் மணற்பாங்கான மண்களை கொண்டுள்ளன.

பெரும்பாலும் இப்பகுதியிலுள்ள மண்கள் மிகவும் வளமானவை. நீர் கிடைக்கப்பெற்றால் ஓராண்டில் இரண்டு முதல் மூன்று பயிர்களை பயிரிட முடியும்.

- மண்ணின் ஈரப்பதத்திற்கும் பயிர் உற்பத்திக்கும் உள்ள தொடர்பு என்ன?
- புறவரிப்படத்தில் இக்கிராமத்தில் உள்ள கால்வாய், சாலை, கிராமத்தின்மையப்பகுதி மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வசிப்பிடங்களைக் குறிப்பிடு.
- இக்கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனம் பெறும் பகுதிகளை வண்ணமிட்டுக் காட்டுக.
- புறவரிப்படத்தில் பந்தர் கால்வாயி–ருந்து வயல்களுக்கு பாயும் கால்வாய்களை அடையாளம் காண். அவை எத்திசையில் பாய்கின்றன?

### மழைப்பொழிவும் நீர்ப்பாசனமும்

இப்பகுதி தென்மேற்கு பருவக்காற்றுகளால் ஜுன் மாதம் முதல் அக்டோபர் வரை மழை பெறுகின்றது. நவம்பரிலிருந்து மே மாதம் வரை குறைவான மழையைப் பெறுகின்றது. நல்ல சூரிய ஒளியாலும் மிதமான வெப்பத்தாலும் ஆண்டு முழுவதும் இங்கு பயிர் செய்ய ஏற்றதாக உள்ளது. எனினும் அக்டோபருக்குப்பின் மழை இல்லாததால் கால்வாய்கள் அல்லது கிணறுகள் அல்லது நீர்த்தேக்கங்கள் மூலம் நீர்ப்பாசனம் செய்வது அவசியமாகிறது.

தாழ்ந்த மற்றும் கால்வாய்க்கு அருகில் உள்ள கிழக்குப் பகுதியில் உள்ள நிலங்கள் எளிதில் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் பெறுகின்றன. மேற்கிலும் வடக்கிலும் உள்ள நிலங்கள் உயர்ந்து காணப்படுவதால் அவை எளிதில் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் பெறமுடிவதில்லை. அதுபோன்ற பகுதிகளில் விவசாயிகள் ஆழ்துளை கிணறுகளை பயன்படுத்துகின்றனர்.




வரைபடம் – பெனமகூரு கிராம வரைபடம்

SCERT TELANGANA

பெனமகூரு கிருஷ்ணா நதிக்கு மிக அருகில் இருப்பதால் நிலத்தடி நீர் 15 முதல் 25 அடி வரை தோண்டினால் கூட கிடைத்து விடும். எனவே ஆழ்துளை கிணறுகள் தோண்ட ஆகும் செலவு மிகவும் குறைவு. முழு பகுதியும் மின்மயமாக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான ஆழ்துளை பம்புகள் மின்சாரத்தின் உதவியால் இயங்கக்கூடிய நீர்மூழ்கி பம்புகளாக உள்ளன.



*படம் 3.7 நெல் மற்றும் கரும்பு வயல்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கும் ஆழ்துளை கிணறு*

இவ்வாறு கடலோரச் சமவெளிகள் அதிக அளவு நீரைக் கொண்டுள்ளது. ஐந்து மாதங்களுக்கு நன்றாக மழைப்பெய்தால் நதியிலிருந்து செயற்கைக் கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனம் பெறுவது எளிது. ஏனெனில் பெருமளவில் நிலத்தடி நீர் குறைந்த ஆழத்திலிருந்தே கிடைக்கிறது. அண்மைக் காலத்தில் ஆழ்துளை கிணறுகள் மூலம் மேட்டு நிலங்களுக்கு நிலத்தடி நீர் பயன்படுத்துவது அதிகரித்து உள்ளது. ஏனெனில் கால்வாய் நீர் மூலம் எளிதில் நீர்ப்பாசனம் செய்ய முடிவதில்லை.

- உங்கள் பகுதியில் ஜூன் முதல் அக்டோபர் வரை மழை பெய்கிறதா?
- உங்கள் பகுதியில் பெய்யும் மழை விவசாயம் செய்ய போதுமானதாக உள்ளதா?
- உங்கள் பகுதியில் கிடைக்கும் நீரை, கிருஷ்ணா டெல்டா சமவெளிப் பகுதியில் கிடைக்கும் நீருடன் ஒப்பிடுக.

## சூறாவளியும் வெள்ளங்களும் :

கிருஷ்ணா மாவட்டம் நம் மாநிலத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுள் ஒன்று. இப்பகுதிகளில் மழை அதிகமாக பெய்யும்போது சில ஆண்டுகளுக்குஒருமுறை பெரிய அணைகளிலிருந்து நீர் திறந்துவிடப் படுகிறது. பிறகு வெள்ள நீரானது நதிக்கருகே உள்ள தாழ்ந்த நிலங்களில் நுழைகிறது. இது அழிவினை தருவதாகவும் ஆக்கத்தினை தருவதாகவும் உள்ளது. சூறாவளிக்காற்றால் பலத்த மழை பெய்கிறது. வீசும் பலத்த காற்றுகளால் மரங்களும் குடிசைகளும் அடியோடு சாய்கின்றன. பெனமகூரு மேட்டுப் பகுதியில் உள்ளதால் 1997, 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் மிக மோசமான வெள்ளங்கள் ஏற்பட்டபோது எந்த பாதிப்புமின்றி தப்பியது.

- வெள்ளங்கள் ஏன் அழிவு தருவதாக உள்ளது என நினைக்கிறாய்?
- உங்கள் மூத்தவர்களிடம் கடந்த காலங்களில் ஏற்பட்ட பெரும் வெள்ளங்கள் பற்றியும் அப்பொழுது என்ன நிகழ்ந்தது என்பதையும் கண்டறி.
- வெள்ளங்களாலும் சூறாவளிகளாலும் ஏற்படும் அழிவுகளை எவ்வாறு நாம் குறைக்க முடியும்?

## பயிர்கள்

கடலோர சமவெளிகளில் முக்கியமாக கிருஷ்ணா மாவட்டம் முழுவதும் நெல் பெரிய அளவில் பயிரிடப்படுகிறது. பெரும்பாலான நிலங்களில் முக்கியமாக பள்ளமான அல்லது தாழ்வான பகுதிகளில் நெல் விதைக்கப்படுகிறது. பருவகாற்று பயிரான 'சால்வா' எனும் நெல் பயிர் ஜுன்/ஜுலை மாதங்களில் நடவு செய்யப் படுகிறது. இங்குள்ள மக்கள் சாதாரணமாக அதிக விளைச்சல் தரும் நெல் வகைகளான MTU 2716, சுவர்ணா மற்றும் BPTஐ பயிரிடுகின்றனர். இவை அக்டோபர் – நவம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றன. ஏர் உழுதல், தூற்றுதல், போக்குவரத்து ஆகிய விவசாயப் பணிகள் டிராக்டர்கள் மூலம் நடைபெறுகின்றன.

SCERT TELANGANA



படம் 3.8 மஞ்சள், கரும்பு மற்றும் வாழைத் தோட்டங்கள்

**நடவு நடுதல் முக்கியமாக பெண்களாலும்** அறுவடை செய்தல் ஆண்-பெண் இருவராலும் செய்யப்படுகின்றன. டிசம்பர் மாதத்திலிருந்து குளிர்காலப் பயிரான தால்வா எனும் பயிரை விதைப்பர். இது நெல் பயிர் அல்லது பருப்பு வகைப்பயிராகும்.

கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகள் நெல்லுக்குப் பதிலாக கரும்பினை பயிர்செய்கிறார்கள். கரும்பு பயிர் ஓராண்டில் 9 மாதங்கள் வயலில் இருக்கும், பிப்ரவரி–மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. பிறகு அது அடுத்தாண்டில் இரண்டாவது முறையாக மீண்டும் பயிராகிறது. இந்த வயல்கள் ஆண்டு முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டும். இது முக்கியமாக ஆண்களால் செய்யப்படுகின்றது.

கிராமவாசிகள் மஞ்சள், சேனை, வாழை ஆகியவற்றை மேட்டு நிலங்களில் பயிரிடுகின்றனர். இவற்றை மழை வரும்போது விதைத்து பிப்ரவரி–மார்ச் மாதங்களில் அறுவடை செய்வர். கரும்பு, மஞ்சள், சேனை மற்றும் வாழை சந்தைகளில் விற்பதற்காகவே வளர்க்கப்படுவதால், கிராமத்தில் அவற்றை பயன்படுத்துவதில்லை.

பண்டைய காலத்தில் பெனமகூருவின் விவசாயிகள் துவரை, பயிறு மற்றும் கம்பு வகைகளை மேட்டு நிலங்களில் பயிரிடுவர். இவற்றிற்கு நீர்ப்பாசன வசதி மிகவும் அவசியமாகும்.

### காய்கறிகள் :

மேட்டு நிலங்கள் காய்கறிகள் வளர்க்க ஏற்றவை. தாழ்வான பகுதிகள் இரண்டாவது முறை நெற்பயிருக்கு நீர் போதுமான அளவிற்கு இல்லாவிட்டால் விவசாயிகள் காய்கறிகளைப் பயிரிடுகின்றனர். பொதுவாக அவர்கள், கத்தரி, வெண்டை, கோவை, புடலை மற்றும் கோஸ் போன்ற காய்கறிகளை பயிரிடுகின்றனர். இவற்றை உய்யூரு உழவர் சந்தையில் விற்பர். கோடைக்காலத்தின் போது சில இலைகள் கொண்ட பச்சைபயிறு விவசாயிகள் ஜீலுகா அல்லது பச்சைப் பயிறு பருப்பு பயிரிடுகின்றனர். இதனால் அவர்களுடைய வயலின் வளம் அதிகரிக்கின்றது. இவை பசுமை உரப்பயிர்கள். இவை மண்ணில் நைட்ரஜன் நிலைநாட்டலுக்கு துணைபுரிகின்றன. 30 முதல் 40 நாட்களுக்குப் பிறகு இப்பயிர்களை மண்ணோடு உழுதுவிடுவர்.

### பழத்தோட்டங்கள் :

கிருஷ்ணா நதிக்கரையின் மீதும் பெனம கூருவின் மேட்டுப் பகுதிகளிலும் பல கனிதரும் மரங்களைக் காணலாம். கொய்யா, சப்போட்டா பப்பாளி பழத்தோட்டங்களையும் காணலாம். நதிக்கு அருகில் உள்ள மண்ணில் அதிக அளவில் மணல் இருப்பதாக விவசாயிகள் எங்களிடம் கூறினர். இந்த மண்களின் ஈரத்தைத் தாங்கும் ஆற்றல் மிகவும் குறைவு, பழமரங்களின் வேர்கள் மிக ஆழமாக மண்ணில் ஊன்றுவதால் மிகவும் உயரமாக வளர்ந்து நீரை உறிஞ்சுகின்றன. எனவே நதிக்கு அருகில் உள்ள நிலங்கள் கனிதரும் மரங்கள் வளர ஏற்றவையாக உள்ளன.

#### நீர்ப்பாசனம், சந்தை மற்றும் மாறும் பயிர்கள்

நாம் முன்பே அறிந்தது போல், உணவு தானியங்களான கம்பு, நெல் மற்றும் பருப்பு வகைகளைப் பயிரிடுவதற்குப் பதில் பணப் பயிர்களான கரும்பு, காய்கறிகள், கனிகள் மற்றும் மஞ்சள் ஆகியவற்றை பயிர்செய்யும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

SCERT TELANGANA

இப்பயிர்களுக்குத் தேவையான அதிக அளவு நீர், நீர்ப்பாசன வசதி அதிகரித்ததாலும் பிற உள்ளீடுகளான விதைகள், உரங்கள் ஆகியவற்றை வாங்க கடன் வசதிகள் கிடைப்பதாலும் சாத்தியமாகிறது.

- இம்மாற்றங்கள் ஏற்படக்காரணம் என்னவென்று நீ நினைக்கிறாய்?
- விவசாயிகளுக்கு இது எந்த அளவிற்கு பயன்மிக்கதாய் விளங்குகிறது?
- இது சில சிக்கல்களையும் உருவாக்குகின்றதா?

### நில உரிமையும் குத்தகையும்

பெனமகூரில் 750 குடும்பங்கள் உள்ளன. இவற்றில் 10 குடும்பங்கள் 10 அல்லது அதை விட அதிகமான ஏக்கர் நிலத்தைப் பெற்றுள்ளனர். சுமார் 150 குடும்பங்கள் 5 ஏக்கருக்கும் குறைவான நிலத்தைப் பெற்றுள்ளனர். சுமார் எஞ்சிய குடும்பங்களுக்கு எவ்விதமான நிலங்களும் இல்லை. அவர்கள் நில உரிமை பெற்ற விவசாயிகளிடம் குத்தகை எடுத்துக்கொண்டு கூலியாட்களாக அவர்களின் பண்ணைகளில் பணிபுரிகின்றனர்.

- பெனமகூரின் மண் வகைகள் (சரியான விடையை குறியிட்டு காட்டவும்
  (அ) மணற்பாங்கானது / பாறை போன்றது
  (ஆ) மணற்பாங்கானது / களிமண் போன்றது
  (இ) மணற்பாங்கானது / கருப்பானது.
- கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
  (அ) மணற்பாங்கான மண் ஈரத்தை தாங்கும்.
  (ஆ) கருப்பு மண் ஈரத்தை அதிகமாக தாங்கும்
  (இ) கருப்பு - மணற்பாங்கான மண் ஈரத்தை தாங்கும்.
- பெனமகூரின் விவசாயிகள்---------
  மண்ணில் நெல்லை பயிரிடுகின்றனர்.
- கிருஷ்ணா நதிக்கரையோரங்களில் பழத் தோட்டங்கள் இருப்பதன் காரணம்
- நீங்கள் கிராமத்தில் வாழ்பவராக இருந்தால் 1. ஒரு ஆழ்துளை கிணற்றின் ஆழம் என்ன? 2. நீரைப் பெற நீங்கள் எவ்வளவு ஆழம் தோண்டுகிறீர்கள்? 3. உங்கள் பகுதியில் நிலத்திற்கு நீர்ப்பாசனம் எவ்வாறு கிடைக்கிறது?

### வீடுகள்

பல்வேறு தொழில்களையும், குலங்களை சேர்ந்த மக்கள் இக்கிராமத்தில் வாழ்கின்றனர். தலைமை கிராமத்தில் நில உரிமை பெற்றுள்ள சாதியினர் மட்டும் வாழ்கின்றனர். தலித்துகளும் பிற சாதியினரும் கால்வாயின் கரையோரங்களிலும் கிராமத்தின் தெற்குப் பகுதியிலும் உள்ள குடியிருப்புகளில் வாழ்கின்றனர். கிராமத்தின் மையப் பகுதியில் மளிகைக் கடைகளும், வங்கி மருத்துவர்கள், மருந்துகடைகள், இரும்பு வெல்டிங் கடைகள், முடி திருத்தகம், சிற்றுண்டி கடைகள் போன்றவற்றை நாம் காணலாம்.



படம் 3.9. சேனைக்கிழங்கினை அறுவடை செய்யும் விவசாயிகள்

SCERT TELANGANA

கிராமத்தின் வீடுகள் மற்றும் பிற கட்டிடங்களின் புகைப்படங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள படங்களைப் பார்த்து அவற்றை விவரி. கூரைகள், சுவர்கள், மதில் சுவர்கள் ஆகியவற்றில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை குறிப்பிடு.



படம் 3.10 விவசாயிகளின் வீடுகள்



பாடம் 3.11 தாழ்த்தப்பட்டோர் வீடுகள்



படம் 3.12 விவசாயிகளின் வீடுகள்



படம் 3.13 சாலைகளும் வீடுகள்

## கால்நடை வளர்ப்பு :

கிராமத்திலுள்ள அனைத்து நிலங்களும் பயிரிடப்படுவதால் கால்நடை வளர்க்க நிலங்கள் அதிகமாக இருப்பதில்லை. எனவே ஒரு சில எருதுகள், பசுக்கள், எருமைகள் மற்றும் செம்மறிகள் மட்டுமே வயல்களில் வேலை செய்யவும் பிற நோக்கங்களுக்காகவும் வளர்க்கப்படுகின்றன. அவர்கள் அந்த விலங்குகளுக்கு எந்த உணவை வழங்குவர் என நீ நினைக்கிறாய்?

## கூடை முடைதல், பன்றி வளர்த்தல் மற்றும் மீன் பிடித்தல்

பந்தர் கால்வாயின் கரைகளில் 15 முதல் 20 எருகுலா குரவர் இன குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்கள் வேலையை தேடி இக்கிராமத்தில் குடியேறினர். அவர்களின் முக்கிய தொழில்கள் கூடை செய்தல், எலிகளைப் பிடித்தல் அல்லது பன்றிகளை வளர்த்தல் ஆகும். ஜகன்னாத நான்சாரய்யா என்பவர் 30 ஆண்டுகளுக்கு முன் இங்கு குடியேறினார். அவர்கள் கால்வாயின் கரைகளிலிருந்து பேரீச்ச மர மட்டைகளை கூடைகளை பின்னுவதற்காக சேகரிக்கின்றனர். அவரும் அவருடைய மனைவியும் ஒரு நாளைக்கு 5 முதல் 6 கூடைகள் வரை முடைகின்றனர். அவருடைய அண்டை வீட்டுக்காரரான கட்டாசிவய்யா கூடைப்பொறிகள் உதவியால் மீன்களைப் பிடித்து அருகிலுள்ள கிராமங்களில் விற்கிறார்.

## கோழிப்பண்ணை

கிராமத்தில் முழுவதும் இயந்திர மயமாக்கப்பட்ட கோழிப்பண்ணை உள்ளது. கோழிகளுக்கு நீரை குழாய்கள் மூலமாகவும் உணவை நகரும் வார்பட்டை போன்றவை மூலமாகவும் கோழிகளுக்கு வழங்குகின்றனர். இப்பண்ணையில் மொத்தம் 80000 கோழிகள் உள்ளன. இவை ஒரு நாளைக்கு சுமார் 50000 முட்டைகள் இடுகின்றன. இந்த முட்டைகள் விஜயவாடாவிற்கும் பிற மாநிலங்களான அஸ்ஸாம், மற்றும் பீகாருக்கும் ஏஜெண்டுகள் மூலமாக அனுப்பப்படுகின்றன. கோழிகளின் எச்சங்களை அருகிலுள்ள பகுதி விவசாயிகள், மீன்களுக்கு உணவாக விற்கின்றனர்.



படம் 3.14 கோழிப்பண்ணை

## அரிசி ஆலை

இக்கிராமத்தில் அரிசி ஆலை ஒன்று உள்ளது. அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி அதை குத்தி அரிசி ஆக்கி மற்ற இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்புகின்றனர்.



படம் 3.15 அரிசி ஆலை

கோழிப்பண்ணைகளும், அரிசி ஆலைகளும் விவசாயத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளன. எனவே இவற்றை விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் என்பர். இது சமவெளிகளில் காணப்படும் பொதுவான ஒரு அம்சமாகும். அவர்களுக்கு தேவையான கச்சாப்பொருட்கள் எளிதில் கிடைப்பதாலும், விளைச்சலுக்குத் தேவையான சந்தை இருப்பதாலும் அவர்களுக்கு எளிதாக பணிகள் நிறைவடைகின்றன. அவற்றை தூரத்திலுள்ள சந்தைகளுக்கு அனுப்பும் போக்குவரத்துவசதியும் எளிதாக உள்ளது.



படம் 3.16 கூடை தயாரித்தல்

SCERT TELANGANA

### சாலைப்போக்குவரத்தும் சந்தைகளும்

சாலை வசதிகள் இந்தப் பகுதியில் முன்னேற்றம் அடைந்துள்ளது. சாலைகள் நகரங்களையும் மாநகரங்களையும் இணைக்கிறது. இதனால் இங்கு விளையும் விளைபொருட்கள் சந்தைகளுக்கு எடுத்து செல்ல உதவியாக உள்ளது.

இங்குள்ள விவசாயிகள் தங்கள் கரும்புகளை உய்யூரில் உள்ள KCP கரும்பு ஆலைக்கு விற்கின்றனர். உய்யூரு மற்றும் விஜயவாடாவில் உள்ள உழவர் சந்தைக்கு இங்கு விளையும் காய்கறிகளும் வாழைப்பழங்களும் அனுப்பப் படுகின்றன. இங்கு விளையும் நெல் தரகர்கள் மூலம் வயல்களிலேயே விற்கப்படுகிறது.



படம் 3.17 உழவர் சந்தைக்கு ஏற்றிச் செல்லப்படும் காய்கறிகளும் பழங்களும்

### விவசாயக் கூலிகள்

இக்கிராமத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் இங்கேயே பணிபுரிகின்றனர். சில விவசாயக் கூலிகள் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வருகின்றனர். பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த இளைஞர்கள் மின் ஊழியர்களாகவும், ஆட்டோ ஓட்டுநராகவும் அல்லது பழுதுபார்ப்பவர்களாகவும் பணி செய்கின்றனர்.

### முக்கியச் சொற்கள்

மலை
பீடபூமி
சமவெளி
கடற்கரை
சூறாவளி
வெள்ளப்பெருக்கு

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பெனமகூரு கிராமத்தில் எத்தகையை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?(AS1)
2. சமவெளிகளில் ஏழைகளும் நிலமற்ற குடும்பத்தினரும் எவ்வாறு தங்கள் வாழ்வை நடத்துகின்றனர்?(AS1)
3. பெனமகூரு போன்ற சமவெளிகளில் உள்ள கிராமங்கள் விவசாயம் செய்வதில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் யாவை?(AS1)
4. இக்கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கரும்பு அல்லது மஞ்சளை மட்டும் பயிரிடுவது நல்லது என நீ நினைக்கிறாயா? உன்னுடைய காரணங்களைக் கூறு(AS4)
5. கிருஷ்ணா டெல்டா போன்ற சமவெளிகளில் அடர்த்தியான குடியேற்றங்கள் கொண்டு மக்கள் அவற்றில் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். ஏன்? (AS1)
6. ஆந்திரப்பிரதேச வரைபடத்தில் பல்வேறு நில வடிவங்களைக் கண்டறிந்து அவற்றிற்கு கீழ்கண்ட வண்ணங்களை இடுக. (அ) சம வெளி-பச்சை (ஆ) பீடபூமி - மஞ்சள் (இ) மலைகள் - ஊதா(AS5)
7. கைவினைத் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்விதமான உதவிகள் கிடைக்கின்றன?(AS6)
8. தெலங்கானாவின் இயற்கை அமைப்பை குறித்து விவரி.(AS1)



SCERT TELANGANA

அத்தியாயம் 4

# டோகூர் - பீடபூமியின் மீதுள்ள ஓர் கிராமம்

**முன் பாடத்தில் அதிக அளவு நீரும் வளமான மண்ணும் கொண்ட கடலோர சமவெளிகளில் உள்ள ஒரு கிராமத்தைப் பற்றி கண்டோம். மிகக்குறைவான மழையும் சத்து இல்லாத மண்களையும் உடைய மிகவும் வேறுப்பட்ட இடத்தில் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதை கற்பனை செய்.**

## தக்காணப் பீடபூமி

பாடம்-3ல் தெலங்கானா வரைபடத்தின் மூலம் அதிக நிலப்பகுதிகள் உள்ளதை அறிந்தோம். தெலங்கானா மாநிலம் அதிகப்படியாக ஒரு பீடபூமி. வரைபடம்-2 உடன் ஒப்பிடுகையில் தெலங்கானா பீடபூமி பகுதிகள் அகன்ற தக்காண பீடபூமிக்குட்பட்டது. தக்காண பீடபூமி ஒருபுறம் மேற்கு தொடர்ச்சி மலைகளாலும், மறுபுறம் கிழக்கு தொடர்ச்சி மலைகளாலும் சூழப்பட்டுள்ளது. கிழக்கு கடலோர சமவெளிகளுடன் ஒப்பிடுகையில் தக்காண பீடபூமி சற்று உயர்ந்துள்ளது. பீடபூமியும் மேற்கி-ருந்து கிழக்காக சரிந்துள்ளது என்பதை அறிய கோதாவரி மற்றும் அதன் இருப்பிடத்தை கொண்டு கண்டறியலாம்.

தட்டையான பகுதிகளால் பிண்ட குன்றுகள் ஆகியவற்றால் சூழ்ந்துள்ளன. எனவே விவசாயம் செய்தல், குடியிருப்புகள் போன்றவை குறைந்த அளவிலேயே காணப்படும். அவை மண்ணின் மெல்லிய அடுக்குகளைக் கொண்ட பாறைப் போன்று அமைந்துள்ளன.

இப்பகுதி குறைந்த மழையை பெறுகின்றது. இப்படிப்பட்ட கடினமான இயற்கைச் சூழலில் மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை அறிய நாங்கள் விரும்பினோம். எனவே மகபூப்நகர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு நாங்கள் புறப்பட்டோம்.

### டோகூர்

டோகூர் கிராமம் தேவரகத்ரா மண்டலத்தில் மகபூப்நகரி-ருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் பழைய பெயர் தாகூர் என்பது 'தாகு' எனும் சொல்--ருந்து வந்தது. பல வருடங்களுக்கு முன் திருடர்கள் அதிகமாக இக்கிராமங்களை சுற்றியுள்ள பெரும் புதர்களில் மறைந்து இருந்தனர். அதுவே இன்று டோகூர் என அழைக்கப்படுகிறது.



படம் 4.1 டோகூர் கிராமத்தின் நுழைவுவாயில்

SCERT TELANGANA



வரைபடம் 1. டோகூர் கிராம வரைபடம்

- கீழுள்ள டோகூர் கிராம வரைபடத்தை பார்த்து அங்குள்ள வெவ்வேறு விதமான போக்குவரத்து மற்றும் வீடுகளை கூறு. அதை உன் கிராமத்துடன் ஒப்பிடு.
- படத்தத்திலுள்ள நீர்த்தேக்கம் நாம் பார்க்கும் போது வற்றி இருந்தது இருப்பினும் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ளது. அதன் காரணம் என்ன?




## வானிலையும் மழைபொழிவும் :

இப்பகுதியின் வானிலை கோடையின்போது பிப்ரவரி முதல் ஜுன் மாதங்களில் 40°c வரை உயர்கிறது. எனினும் குளிர்காலத்தின்போது நவம்பர் முதல் ஜனவரி மாதங்களில் சாதாரணமாக 20°c முதல் 30°c வரை இருக்கும்.

இங்கு மழைக்காலம் ஜுன் முதல் நவம்பர் வரை உள்ளது. இருப்பினும் இங்கு குறைந்த அளவிலேயே மழை பெய்கிறது. மழை ஓராண்டில் பெய்வதும், பெய்யாமலிருப்பதுமாக உள்ளதால் அதைச் சார்ந்திருப்பது கடினம். வறட்சி அடிக்கடி ஏற்படுகிறது. இதனால் எந்த பயிரை வளர்ப்பதற்கும், குடிப்பதற்கும் கூட போதிய அளவு நீர் கிடைப்பதில்லை. இவ்வாறு விவசாயிகள் ஒரு பயிரை செய்யும்போது மழை பெய்யலாம் அல்லது மழையின்றி அது உலர்ந்தும் விடும். மழை அளவு மிகக்குறைவாகவும் அல்லது மழை தவறுவதாலும் நம் மாநிலத்தின் இப்பகுதியை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என அழைக்கின்றனர்.

SCERT TELANGANA

- கடலோர சமவெளி கிராமத்தின் மழை பொழிவினை பீடபூமி கிராமத்தின் மழைபொழிவுடன் ஒப்பிடு.
- உங்கள் மூத்தவர்களிடம் உங்கள் பகுதியிலும் மழைபொழிவு நம்பமுடியாத தாகவும், தவறுவதாகவும் உள்ளதா எனக்கேட்டறிந்து கொள்.

## மண்கள் :

பாதியளவு விவசாய நிலங்களில் மண்கள் செம் மண்களாகவும் இரண்டு முதல் மூன்று அடி ஆழம் வரை உள்ளன. இ ந் த மண்ணில் குறைந்த அளவிலே 'ஹ்யூமஸ்' எனும் சத்து உள்ளது. நீரை தாங்கும் சக்தி குறைவு. வேர்கள் வளரவும், பரவவும் இம்மண் போதிய அளவு ஆழம் வரை செல்வது இல்லை. இதனால் பெரும்பாலான வயல்கள் ஒரு பயிருக்குப்பின் சில ஆண்டுகளுக்கு பயிரிடாமல் விடப்படுகின்றன.

தெளிந்த கருமண்கள் 60 செ.மீ ஆழம் வரை உள்ளன. அவை இப்பகுதியில் சில விளைநிலங்களில் பரவியுள்ளன. இவை பயிரிட உகந்தவை. இருப்பினும் இப்பீடபூமியின் மற்ற பகுதிகளில் இருக்கும் மண்களை போன்று வளமானதல்ல. இம்மண் மிக வளமானது மற்றும் இவை நீண்ட காலம் ஈரத்தன்மை கொண்டுள்ளதால் பயிர்களும் நீண்ட காலம் வளரும். இவை உலர்ந்த பின் கடினமாகவும், ஈரமணல் பிசுபிசுப்புடனும் இருக்கும். இக்கருமண்கள் உற்பத்தி தரக்கூடிய வகையை சார்ந்த மண்ணாகும்.

சௌடு மண் சுண்ணாம்பு மற்றும் உப்பை அதிக அளவில் கொண்டுள்ளதால் அவை நீரை உறிஞ்சுவதில்லை. இந்த மண்கள் அனைத்து வகையான பயிர்களுக்கும் ஏற்றதல்ல மற்றும் நிலங்களில் கற்கள் நிறைந்திருக்கும்.

- பீடபூமியிலுள்ள கிராமத்தின் மண்களை சமவெளிகளிலுள்ள கிராமத்தின் மண்களோடு ஒப்பிடு. இவற்றில் விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமானவை எவை என்று விளக்கு.

## நீர் நிலைகள் : நீர்தேக்கங்கள் மற்றும் ஏரிகள்

பெரிய ஏரி டோகூர் கிராமத்தின் முக்கிய நீர் தேக்கமாகும். இந்த ஏரி தேவரகத்ரா நீர்தேக்கம் நிரம்பும்போது நீர்பெறும். பெரிய ஏரி நிரம்பியதும் இதர நீர்தேக்கங்களான சாக- கோயிகுண்டா, வாணி வம்பு மற்றும் பாடி வம்பு போன்ற சிறு நீர்தேக்கங்கள் நீர்பெறும். இந்நீர்தேக்கங்கள் முத்தாலான கழுத்து அணிகலன் போன்று தெரியும்.

இந்நீர்தேக்கங்கள் நீண்ட காலங்களுக்கு முன் தோண்டப்பட்டு நீர் தேக்கி வைத்து பருவ காலங்களுக்கு பிறகு பயன்படுத்தப்படும். சிறு மழைப்பொழிவால் மக்கள் நீர்த்தேக்க சங்கி-களில் முடிந்தளவு நீர் ஏற்றுவர்.



படம் 4.2. மலைப் பகுதிகளில் கற்களுடன் கூடிய செம்மண்கள்.

SCERT TELANGANA



*படம் 4.3. போசூருக்கு செல்லும் சாலை ஓரத்தில் நீர் தொட்டி*

நீர்த்தேக்கங்களில் உள்ள நீரினை சுற்றுப்புற கிணறுகளில் நிரப்புவர்.

வெங்கடராமி ரெட்டி எனும் முதிய விவசாயி நினைவு கூறினார். முற்காலத்தில் கிராம மக்கள் அனைவரும் திரண்டு இந்த ஏரியை பழுது பார்க்க கவனம் செலுத்தினர். நீர் வரும் பகுதியை தூய்மையாகவும், நன்றாக வைத்திருப்பதும் ஏரி நீரை பயன்படுத்துவதை சீரமைப்பதும் அவர்களுடைய பணிகளாக இருந்தன. அவர்கள் ஒன்றுகூடி மீன் பிடித்து கிராமத்தின் மையப்பகுதியில் வைப்பர். அவை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

### ஆ. கிணறுகளும் ஆழ்துளை கிணறுகளும்

ஏரிகள் நிலப்பரப்பில் பாயும் மழை நீரை சேமிக்கின்றன. அதே சமயம் கிணறுகள் மண்ணுக்கு அடியில் தங்கும் நீரை பயன்படுத்த உதவுகின்றன.

பீடபூமிகளில் கிணறுகள் தோண்டுவது மிகவும் கடினம். ஏனெனில் இங்கு பாறைகள் பூமிக்கடியில் அதிகளவில் உள்ளன. பாறைகளை உடைத்து கிணறு தோண்டிவிட்டாலும் நீர் மிகக் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கும். இங்கு மழை பொழிவு மிகவும் குறைவு ஆகையால் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் ஆழத்தில் உள்ளது. கிணற்றில் உள்ள நீரை வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்து விட்டால் கிணற்றில் மீண்டும் நீர் தேங்க இரண்டு நாட்கள் பிடிக்கும். தற்போது திறந்த கிணறுகளுக்குப் பதில் ஆழ்துளை கிணறுகளை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். நீங்கள் அதுபோன்ற கிணறுகளைக் குறித்து சமவெளி கிராமங்களில் படித்து இருப்பீர்கள். இருப்பினும் பீடபூமிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பது மிகவும் செலவு ஆகும் பணியாக உள்ளது.

மோகிலண்ணா எனும் சிறுவிவசாயி கூறியதாவது, 250அடிக்கு கீழ் நீர் உள்ளது. விவசாயிகள் நன்கு நீர்பெற அதிக அளவு பணத்தை செலவழிக்கின்றனர். அவர்கள் ஏறக்குறை 1000 அடிகளுக்கும் மேல் ஆழமாக தோண்டுகின்றனர். தங்களில் யார் அதிர்ஷ்டசாலிகள் எனக்கண்டறிய அவர்கள் அதிக அளவில் ஆழ்துளை கிணறுகள் தோண்டுகின்றனர். ஆனால் சில விவசாயிகள் மட்டும் அதிக அளவில் பணத்தை முதலீடு செய்கின்றனர்.

- முன்னதாக ஏரிகளின் சங்கி-த் தொடர் எவ்வாறு பணியாற்றியது?
- ஏரிகள் மண்வளத்தை மேம்படுத்துகிறது. மழைநீரை சேமிக்க பயன்டுகிறது. நதிகளிலிருந்து பாயும் வெள்ளத்தைத் தடுத்தல் நிலத்தடி நீரை புதுப்பிக்கிறது போன்ற கருத்துகளை வகுப்பில் விவாதி.
- அருகிலுள்ள ஏரிக்குச்சென்று அது நீர்ப்பாசனத்திற்கு பயன்படுகிறதா என்றும் அதன்கீழ் எவ்விதமான பயிர்கள் வளர்க்கப்படுகின்றன எனவும் கண்டறி.



*படம் 4.4. ஆழ்துளை கிணறுகள் மூலம் நீர்பாசனம்.*

SCERT TELANGANA

அதிக நிலத்தை பெற்றுள்ள 5-10 விவசாயிகள் மட்டும் அதிக அளவு ஆழ்துளை கிணறுகளைப் பெற்றுள்ளனர். மற்ற விவசாயிகள் மழைபொழிவின் மீது ஆதாரப்பட்டுள்ளனர். ஆழ்துளை கிணறுகள் அதிகரித்து விட்டதால் ஏரிகளையும், குளங்களையும் பராமரிப்பது அலட்சியமாகிவிட்டது. குளங்கள் கிராமத்தின் அனைத்து மக்களாலும், விலங்குகளாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஆழ்துளை கிணறுகள் ஓராண்டு விவசாயிளால் மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

- இக்கிராமத்தில் நீர்பாசனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விவாதி.
- சமவெளி கிராமத்திற்கும் பீடபூமி கிராமத்திற்கும் நீர்பாசன முறைகளை ஒப்பிடு.
- இக்கிராமத்தில் உள்ள நீர்பாசன வசதிகளை உன் கிராமத்துடன் ஒப்பிடு.

## விவசாயமும் பயிர்களும்

டோகூரின் விவசாயிகள் பருத்தி வேர்க்கடலை, ஆமணக்க, நெல், கம்பு காராமணி மற்றும் துவரம்பருப்பு ஆகியவற்றை பயிரிடுகின்றனர். முன்னர், தினைகளை முக்கிய உணவுப்பயிர்களாக மக்கள் பயிரிட்டனர். கருப்பு மண் நிலங்களில் பருத்தியானது பயிரிடப்பட்டது. வேர்க்கடலையும் ஆமணக்கும் செம்மண்களில் பயிரிடப்பட்டன.

**நிலத்தடி நீர்மட்டங்களின் வீழ்ச்சி ஒரு பரவலான பிரச்சினை**

பீடபூமியின் அனைத்து பகுதிகளிலுள்ள விவசாயிகள் பணப்பயிர்களைப் பயிரிடுவதற்காக அதிக அளவில் குழாய்க்கிணறுகளைத் தோண்டி வருகின்றனர். அதன் விளைவால் மழையினால் மறுசுழற்சி செய்யப்படுவதை விட அதிக நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஒவ்வவோராண்டும் கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து வருகின்றது. குழாய்க்கிணறுகள் சிறிது கால பயன்பாட்டிற்குப் பின் உலர்ந்து / வறண்டுவிடுகின்றன. இதற்கான காரணங் களையும் தீர்வுகளையும் கண்டறிந்து கலந்துரையாடவும்.

காட்டுப்பன்றிகளின் அச்சுறத்தலால் வேர்க்கடலைப் பயிரிடப்படும் நிலத்தின் அளவு தற்காலத்தில் குறைந்து வருகின்றது. விவசாயிகள் அதற்குப் பதிலாக ஆமணக்கைப் பயிரிடத் தொடங்கியுள்ளனர். வெண்மையான சுண்ணாம்பு கலந்த சவுட்டு நிலங்களில் வெள்ளைக் கம்புகள் பயிரிடப்படுகினறன. துவரையும் காராமணியும் பிற பயிர்களுக்கிடையே ஊடு பயிர்களாக பயிரிடப்படுகின்றன.

பெத்த செருவு மற்றும் சம்பங்கி நீரோடைகளின் நீரைக் கொண்டு நெல் பயிரிடப்படுகிறது. நீரோடைகளில் குழிகள் தோண்டப்பட்டு மோட்டார் பம்பு மூலம் நீர் எடுக்கப்படுகிறது. நீரோடை வண்டு விட்டால் நெல் பயிரும் அழிந்துவிடும். அக்டோபர் முதல் ஜனவரி வரையிலான ரபி பருவத்தில் குழாய்க் கிணறுகளைப் பயன்படுத்தி நெல்லும் வேர்க்கடலையும் பயிரிடப்படுகினறன. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் நெல்பயிர் 20 முதல் 30 குவிண்டால் மகசூலைத் தருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். பத்தாண்டுகளில் வேதிஉரங்கள் மற்றும் பூச்சிக்கொல்- மருந்துகளின் விலை உயர்வாலும் அறு வடை இயந்திரங்களின் பயன்பாட்டாலும் விவசாயச் செலவும் அதிகரித்துவிட்டது. பாரம்பரிய உரப்பயன்பாடு பெருமளவில் குறைந்து விட்டது.

- இந்த கிராமத்தில் பயிரிடப்படும் கரீஃப் அல்லது பருவகாலப் பயிர்கள் மற்றும் ரபி பயிர்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.
- வேர்க்கடலைப் பயிர் செய்வதில் தொடர்புள்ள சிக்கல்கள் யாவை? வகுப்பில் கலந்துரையாடவும்.

### பழத்தோட்டங்கள் :

நீர் பற்றாக்குறையைக் கண்டு சில விவசாயிகள் சப்போட்டா பழத்தோட்டங்களை வளர்த்து வருகின்றனர். இத்தோட்டங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலங்களில் மட்டும் நீர் தேவைப்படுகிறது. ஒவ்வோராண்டும் நல்ல விளைச்சலைத் தருகிறது.

SCERT TELANGANA



படம் 4.5. சப்போட்டா மற்றும் சீனிப் பழத்தோட்டங்கள்.

### நிலப்பயன்பாடு நிலையானதாக உள்ளதா?

சுற்றுக்சூழல் வல்லுநர்கள் நாம் நிலத்தை எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் உற்பத்தி தரவல்லதாக இருக்கும்படி பயன்படுத்த திட்டம் தீட்டுவது அவசியம் என நம்புகின்றனர், இதற்காக நாம் நீடித்த நில பயன்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதில் மண்வளம் காத்தல், நிலத்தடி நீரை புதுப்பித்தல், காடுகள், மேய்ப்புநிலங்கள் விவசாய நிலங்கள் ஆகியவற்றிடையே தகுந்த சமநிலை இருத்தல் போன்றவை தேவைப்படுகின்றன.

> நிலப்பயன்பாடு நிலையானதாக உள்ளதா? அவற்றை, நீடித்த ஒன்றாக மாற்ற என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்?

### அன்றாட வாழ்க்கைக்கான பிற மூலங்கள் :

நாம் மேலே கண்டதைப்போல், இக்கிராமத்தில் விவசாயத்தை நாம் ஊகிக்க இயலாது. சில நேரங்களில் சிறு விவசாயிகளும் விவசாயக் கூலிகளும் வேலையைத்தேடி நகரங்களுக்குச் சென்று விடுகின்றனர். அவர்கள் ஐதராபாத் மட்டுமின்றி புனே மற்றும் கோவா செல்கின்றனர். ஜூனில் திரும்புவர். விவசாயிகளும் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு இதர வழிமுறைகளைக் கையாளத்தொடங்கி விடுகின்றனர்.

## கால்நடை வளர்ப்பு

டோகூர் கிராமத்தில் சில மக்கள் பாலுக்காக எருமைகளையும், பசுக்களையும் வளர்க்கின்றனர். அரசு கூட்டுறவு சங்கங்களில் பால் விற்கப்படுகின்றன. பா-ன் விலையை புரதச்சத்தின் அளவை கொண்டு நிர்ணயிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 5 அல்லது 6 குடும்பங்கள் தங்கள் வாழ்க்கைக்கு செம்மறி ஆடுகளின் மீது ஆதாரப்பட்டுள்ளனர். நாராயணசாமிக்கு 70 செம்மறி ஆடுகள் உள்ளன. செம்மறிகள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை குட்டிகள் போடும். இக்குட்டிகளை சில மாதங்களுக்குப் பிறகு விற்று விடுவர். செம்மறிகளை மன்யம் கொண்டா மலைப்பகுதிகளுக்கு மேய்க்க

### விவசாயத்தின் ஒரு வேறுபட்ட வகை

நாம் இப்பகுதியின் மண் வளமற்றதாகவும் மழை பொழிவு குறைவாகவும் நிச்சயமின்றியும் உள்ளதை நாம் கண்டோம். அதாவது விவசாயிகள் ஒவ்வோராண்டும் வேர்க்கடலையை பயிரிட ரசாயன உரங்களையும், ஆழ்துளை கிணறுகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. மூன்றாவது சிக்கலும் ஒன்று உள்ளது - நோய்கள் மற்றும் பூச்சிகளை சமாளிக்க விவசாயிகள் விலையுயர்ந்த பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துகின்றனர். தற்போது சில விவசாயிகள் இந்த நடைமுறைகளை மாற்றவேண்டும் என்று சிந்தித்து வருகின்றனர். அவர்கள் மண்வளத்தை தடுப்பு திட்டுகள் Cantour Bunding அமைப்பதும், அங்கக என இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதும், மேம்படுத்துவதும் அவசியம் என்று உணர்ந்து வருகின்றனர். அவர்கள் ஒரே ஒரு வேர்க்கடலைப் பயிருக்குப் பதில் பல்வேறு உணவுப் பயிர்களை பயிரிடுகின்றனர். அவர்கள் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய பழைய குளங்களையும் ஊற்றுக் கால்வாய்களையும் பழுது செய்ய முயற்சித்து வருகின்றனர். அவர்கள் அங்கக களைக்கட்டுப்பாட்டு முறைகளான வேப்ப இலை தீர்வு போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். நீயும் உங்கள் பெற்றோர்களும் இத்தீர்வுகளைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? வீட்டிலும் வகுப்பிலும் இதைப்பற்றி விவாதி.

SCERT TELANGANA



படம் 4.6 செம்மறி ஆட்டு மந்தை

அழைத்துச் செல்வர். செம்மறிகள் சாலை ஓரங்களில் வளரும் புளிய மரத்து இலைகளை மேயும். கோடைக்காலங்களில் இவற்றை நல்கொண்டா மற்றும் கர்னூல் மாவட்டங்களில் மேய்க்க பயணம் மேற்கொள்வர்.

## மற்ற வேலைகள்

மரவேலை, உலோக வேலை மற்றும் அரிசி ஆலை போன்றவை விவசாயம் அல்லாத மற்ற வேலைகள். இக்கிராமத்தில் இரு குடும்பங்கள் மரத்தினாலான கதவுகள், சன்னல்கள் மற்றும் கூரை வேலைகளை செய்து வீடு கட்டுமான வேலைகளை இயந்திரங்கள் கொண்டு வடிக்கின்றனர். இதன் மூலம் மாதம் ரூ.3000 ஈட்டுவதாக ஒருவர் கூறுகிறார். மற்றுமொரு குடும்பம் விவசாய கருவிகள் சம்பந்த இரும்பு வேலைகள், பற்று வேலைகள் செய்கின்றனர். இவற்றுடன் அங்கு அரிசி ஆலையும் உள்ளது. அதே வேளையில் சில குடும்பங்கள் அரசு வேலையிலும், வேலைவாய்ப்பு சேவை பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## சந்தை மற்றும் போக்குவரத்து

விவசாயிகள் தங்கள் உற்பத்தியை தேவரகதரா சந்தையிலும், பருத்திகளை ஜட்சர்லா மற்றும் மதனாபுரம் சந்தையில் விற்கின்றனர். முழு சந்தையும், வாங்குபவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறினர். பொதுவாக தரகர்கள் வயல்களுக்கு வந்து விவசாயிகளிடமிருந்து உற்பத்திப்பொருட்களை வாங்கிச் செல்வர். பயிர்கள் வயல்களில் இருக்கும்போதே தரகர்கள் அவற்றின் விலையை நிர்ணயித்துவிடுவர். அவர்கள் விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்- மருந்துகள் வாங்க பெரும்பாலான விவசாயிகள் கடன்கள் மீதே ஆதாரப்படுவர். ஆகவேதான் தரகர்கள் விலையை நிர்ணயிக்கின்றனர். பயிர்கள் பொய்த்துப்போனால் இவர்கள் வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியாமல் தங்களது நிலங்களை இழக்க நேரிடுகிறது.

- தரகர்களின் மீது விவசாயிகள் ஆதாரப்பட காரணம் என்ன? எவ்வகை சந்தை முறை விவசாயிகளுக்கு உகந்தது? விவரி.
- எவ்வழிகளில் விவசாயமற்ற வேலைப்பாடுகள் இக்கிராமத்தில் வளர்ந்தது?
- உங்கள் கிராமத்தில் அரசாங்க வேலைவாய்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா? அதனால் பயன்பெறுவோர் யார்?







படம் 4.7, 4.8, 4.9 வீட்டில் செய்யும் வேலைகள்



மலையடிவாரத்தில் கிராம குடியிருப்பு

பழைய வீடுகளில் கட்டைகளை பயன்படுத்தினர் ஆனால் தற்போத புதிய வீடுகளில் எஃகு, செங்கல், கான்கிரீட் ஆகியவற்றை பயன்படுத்துகின்றனர் பெரும்பாலான வீடுகள் கற்கள் மற்றும் சேற்றினைக் கொண்டு கட்டப்படுகின்றன. உள்ளூர் குவாரிகளிலிருந்து கற்கள் எளிதில் கிடைப்பதே இதற்குக் காரணம். ஏழைகளின் வீடுகள் கூரை போடப்பட்டு அல்லது தகரத்தாள் கூரைகள் அமைக்கப்பட்டிருக்கும். கிராமம் மின்மயமாக்கப் பட்டள்ளது.

## கிராம குடியிருப்பு

சிறு குன்றுகளுக்குக் கீழே இந்த ஊர் அமைந்துள்ளது. இரு குடியிருப்புகள் ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைந்துள்ளன. ஊரின் கிழக்குப்பகுதியில் தலித் காலனியும் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் காலனியும் இவ்விரு குடியிருப்புகளாகும். இவ்வூரில் சுமார் 300 குடும்பங்களில் 1200 மக்கள் வாழ்கின்றனர். இதில் 200 குடும்பங்கள் இவ்வூரின் பெரும்பாலான நிலத்தின் உரிமையாளர்களான பின்தங்கிய வகுப்பினர்களுடையது. இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் 20 ஏக்கர்கள் நிலத்தைப் பெற்றுள்ளன. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் அரை முதல் 5 ஏக்கர்கள் வரை மட்டுமே பெற்றுள்ளனர்.

இங்கு சுமார் 100 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் உள்ளன. அவர்கள் அவ்வூர் மற்றும் அருகிலுள்ள பிற ஊர்களிலும் கூலிப்பணியின் மீது முழுமையாக ஆதாரப்பட்டுள்ளனர்.

பழைய காலத்தில் டோகூர் கிராம மக்கள் குடிநீருக்கு கிணறுகளின் மீது ஆதாரப்பட்டிருந்தனர். தற்போது நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு நீர் ஆழ்துளை குழாய் மூலம் வழங்கப்படுகிறது. நீர் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குழாய்கள் மூலம் வழங்கப்படுகிறது.

## சாலைகளும், சந்தைகளும்

இங்கு ஒரு சிறு கிராமச்சந்தை உள்ளது. அதில் உள்ளூரின் காய்கறிகள், பொதுவான பொருட்கள் போன்றவை விற்கப்படுகின்றன. கிராமத்திற்கு மண்சாலை ஒன்று உள்ளது. இது தேவரகத்ராவிலிருந்து வனபத்தி நெடுஞ்சாலையில் இணைகிறது. மக்கள் இந்த நகரங்களுக்குச்சென்று தேவையான பொருட்களை வாங்கி வருவர். கிராமத்தின் வடபகுதியில் ரயில் நிலையம் உள்ளது. இங்கு மூன்று ரயில்கள் நிற்கின்றன.



படம் 4.10, 4.11 மற்றும் 4.12. சந்தையி-ருந்து சில புகைப்படங்கள்

SCERT TELANGANA






*படம் 4.13 மற்றும் 4.14. கிராமத்திலுள்ள வாகனங்கள்*

**முக்கியச் சொற்கள்**

பீடபூமி ஏரி நிலத்தடி நீர் தரிசு நிலங்கள்
செம்மறி ஆடு வளர்த்தல்

## உனது கற்றலை மேம்படுத்துக

1) டெல்டாவிலும் பீடபூமிகளிலும் ஆழ்துளை கிணறுகளில் நீர் கிடைப்பதை ஒப்பிடுக.
2) டோகூர் மற்றும் பெனமகூருவின் பயிரிடு முறைகளிலுள்ள மாற்றங்களை ஒப்பிடு.
3) டோகூர் போன்ற இடங்களில் விவசாயம் லாபகரமான தொழிலாக உள்ளதா?
4) இக்கிராமத்தில் மழை அதிகமாக பெய்தால் என்னென்ன வேறுபாடுகள் நிகழும்?
5) உங்கள் கிராமத்தில் உள்ள விவசாயம் சாராத தொழில்கள் யாவை? அதுபோன்ற ஏதேனும் ஒரு தொழிலைக் குறித்து விரிவாகக் குறிப்பிடுக.
6) கீழ்காணும் அம்சங்களுக்கு ஒரு வரியில் விளக்கம் எழுது.

| வ.எண் | அம்சம் | டோகூர் |
|---|---|---|
| 1 | மண் | |
| 2 | நீர் | |
| 3 | பயிர்கள் | |
| 4 | சந்தைகள் | |
| 5 | தொழில்கள் | |

7) பக்கம் 32ல் உள்ள முதல் பத்தியைப் படித்து உன் கருத்தை எழுதவும்.

### செயல்திட்டம் :

**இரண்டு வகையான நிலங்கள் உள்ளன. அவை மேடு மற்றும் சமவெளி. மேட்டுப்பகுதிகளில் பருப்பு வகைகள் நீர்பாசனம் செய்யாமல் வளருகின்றன. மேலும் சமவெளி பகுதிகளில் நீர்பாசனம் செய்து நெல் விளைவிக்கப்படுகிறது. உங்கள் ஊரில் உள்ள மண்ணின் வகையை கண்டறி. அம்மண்ணை எவ்வாறு வகைப்படுத்துவாய்? மண் எவ்வாறு உள்ளது? அம்மண்ணின் ஈரத்தை தக்கவைக்கும் திறன், நீரை உறிஞ்சுதல், மண-ன் அளவு நிறம் போன்ற விவரங்களை தெரிவிக்கும் அட்டவணையை தயாரிக்கவும்.**

SCERT TELANGANA

அத்தியாயம் 5

# பெனுகுலு மலைகளில் உள்ள கிராமம்

**கடந்த இரண்டு பாடங்களில் கடலோரா சமவெளிகளிலும் வறண்ட பீடபூமிப்பகுதிகள் உள்ள கிராமப்புற வாழ்க்கையைப் பற்றி நாம்படித்தோம். இப்பாடத்தில் நாம் மிகவும் வேறுபட்ட பகுதியான மலைகளில் உள்ள கிராம வாழ்க்கையைப்பற்றி படிப்போம். நீங்கள் சில மலைப்பகுதிகளுக்கு சென்றிருக்கலாம் அல்லது அப்பகுதிகளில் வாழ்பவராகவும் இருக்கலாம். மலை என்றால் என்ன? நீங்கள் அங்கு காண்பது என்ன? மக்கள் அங்கு என்ன வேலைகள் செய்கின்றனர்? என்று உங்களால் கூற முடியுமா?**

TELANGANA



படம் 5.1 பெனுகுலு கிராமத்தை சுற்றியுள்ள மலைகள்

## கிழக்கு தொடர்ச்சி மலைகள்

தெலங்கானா பீடபூமி கிழக்கு மலைத்தொடர்களை கொண்ட தக்காண பீடபூமியின் ஒரு பாகமாகும். கிழக்கு மலைத்தொடர்கள் ஜெயசங்கர் மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளன. தெலங்கானா மலைத்தொடர்கள் மேற்கு மலைத்தொடர்களில் ஒரு பாகமாகும். இம்மலைகள் சத்தீஷ்கர், ஆந்திரம் மற்றும் ஒடிசா வரை பரவியுள்ளது.

கீழே தரப்பட்டுள்ள புறவரிப்படத்தில் இம்மலைகைளைக் குறிப்பிடலாம்.

இம்மலைப் பகுதியில் பல பழங்குடி இனமக்கள் வாழ்கின்றனர். இங்கு கொண்டா ரெட்டிகள், சாவரா, கபடா, கொண்ட டோரா, கோண்டு, மன்னெ டோரா, முக டோரா மற்றும் கோய என்னும் தங்களுக்கே உரிய சிறந்த வாழ்க்கை முறையைக் கொண்ட சமூகத்தினர் வாழ்கின்றனர். (அவர்கள் பல




*வரைபடம் 1. பெனுகுலு கிராமத்தை காட்டும் புறவரிப்படம்*

பள்ளத்தாக்குகளில் சிதறியுள்ளனர். இச்சமூகத்தினர் காட்டுவளங்கள் மற்றும் வேட்டையாடுதலால் தங்களது வாழ்க்கை முறை நடத்துகின்றனர்.

பெனுகுலு கிராமம் கோதாவரி நதிக்கரையில் வாசீத் மண்டல மலைகளில் உள்ளது. இங்கு கோயா எனும் சமூகத்தினர் கோயா எனும் மொழியை பேசுகின்றனர். அவர்கள் இனங்கள் ஒடிசா, சத்தீஷ்கர் மற்றும் ஆந்திர பகுதிகளில் வாழ்கின்றனர். அதேசமயம் கோயா இனத்தினர் அதிலாபாத், கரீம்நகர், வரங்கல் மற்றும் கிழக்கு கோதாவரி பகுதிகளில் வாழ்கின்றனர். அவர்கள் கோயா மொழிக்கு பதிலாக தெலுங்கு மொழியை பேசுகின்றனர்.

இக்கிராமம் மலைகளால் சூழப்பட்டுள்ளது. வடக்கில் நல்லகுட்டாவையும், தெற்கில் வங்கமாமிடிகுட்டாவையும், கிழக்கில் கல்லுகுண்டாகுட்டாவையும் மற்றும் மேற்கில் சிறு, பெரிய கும்மரிலங்காவையும் எல்லைகளாக அமைந்துள்ளது.

வாசீத் வடக்கிலிருந்து பாயும் ஓடை நல்லந்தேவி வாகு கோதாவரி நதியில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. வாசீத்திலிருந்து மலைகளின் அடிவாரத்தில் அமைந்துள்ள கும்மடி தொட்டி என்னும் கிராமத்தை அடைந்தோம். இந்த கிராமத்தில் உள்ள நடைபாதை எங்களை மலைகளுக்கு வழி நடத்தியது. நடைபாதை மிகவும் செங்குத்தாகவும் குறுகலாகவும் வழுக்கும்படியாகவும் உள்ளது. செல்லும் வழியில் சீக்குபள்ளியில் உள்ள புகழ்பெற்ற போகாதா நீர்வீழ்ச்சியை கண்டோம்.

மலைகளின் மீது நாங்கள் ஏறும்போது அடர்ந்த காடுகளுக்கிடையே சீராக்கப்பட்ட பெரிய பரப்பினைக் கண்டோம். இச்சீராக்கப்பட்ட பகுதிகள் வயல்களாக மலைகளில் சிதறிக் கிடக்கின்றன. நிலப்பரப்பு இங்கே சமமாக இல்லாததை நீங்கள் காணலாம். ஆனால் அவை மிகவும் சாய்ந்து உள்ளன. இது அதிக பாறைகளால் ஆனது. இங்குள்ள மண்ணில்



*படம் 5.2 போகாதா நீர்வீழ்ச்சி*

SCERT TELANGANA



படம் 5.3 காடுகளில் இடையில் பயிர்கள்

பெருமளவில் பாறைகளும், கற்களும் உள்ளன. மண்களின் நிறம் சிவப்பாக உள்ளது. இக்கிராமம் வாசீத் மண்டல தலைமையகத்தி-ருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது.

## பொடு

பயிர்களை வளர்க்க பொடு என்னும் சிறந்த முறையைக் கையாளுகின்றனர். பொடு என்பது மலைப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் பழைய விவசாய முறையாகும். இதையே நாம் 'மாற்று விவசாயம்' அல்லது 'ஜூமிங் விவசாயம்' என்கிறோம். இம்முறை சத்தீஸ்கர் மற்றும் அருணாச்சலப்பிரதேசத்தின் வட கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ளது. இம்முறையில் மக்கள் காட்டின் ஒரு பகுதியை சீராக்கி அதை எரிக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு அவ் விடத்தில் பயிரிடுகின்றனர்.

பிறகு அவ்விடத்தை விட்டு விடுகின்றனர். பிறகு மற்றொரு புதிய இடத்தை சீராக்க அங்கே சில காலம் பயிர் செய்கின்றனர். இவ்வாறு மலைவாசிகள் சீராக்கியும், பயிர் செய்தும் வாழ்கின்றனர். சில ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அவ்வடம் சேர்வர். மலை குன்றுகளில் நவம்பர் மாத காலத்தில் மழை பெய்வது நின்றுவிடுகிறது. எனவே கோயா இனத்தவர் தங்கள் கோடரிகளைக் கொண்டு டிசம்பர் மாதத்தில் புதிய இடங்களை சீராக்குகின்றனர். அங்கு சில மாதங்கள் கட்டைகளைப் போட்டு உலர விடுகின்றனர். அந்தக் கட்டைகளை ஏப்ரல் அல்லது மே மாதங்களில் மழை பெய்வதற்கு முன் எரித்து விடுகின்றனர். மழை வரும்போது நிலம் சாம்பலால் மூடப்படுகிறது. ஜூனில் மழை வரும்போது குழிதோண்டும் குச்சிகளின் உதவியால் விதைகளை இடுகின்றனர் அல்லது ஒரே நேரத்தில் பல பயிர்களின் விதைகளை பரவலாக தூவுதல் முறையில் தூவுகின்றனர். அவர்கள் ஒரு கலப்பையையோ, மண் கொத்திகளையோ அல்லது உரங்களையோ பயன்படுத்துவதில்லை.

மலைச்சரிவுகளில் கலப்பைகளை பயன் படுத்தாமல் இருப்பதன் காரணம் என்னவென்றால் மலைகளின் மேற்பரப்பிலுள்ள மண் மிக எளிதில் உருண்டோடி நிலம் வளமற்றதாக அல்லது சாரமற்றதாக மாறிவிடும். வயல்கள் சாரமற்றதாக மாறி, மழைக்காலங்களில் மண் கீழ்நோக்கி செல்வதும் ஒரு காரணமாக உள்ளது.

வயல்களில் பரண்களை அமைத்து காட்டு விலங்குகளிடமிருந்தும், பறவைகளிடமிருந்தும் வயல்களை டிசம்பரில் அறுவடை முடியும் வரை



படம் 5.4 தோண்டும் குச்சியின் உதவியால் விதைகளை நிலத்தில் அழுத்துதல்.

SCERT TELANGANA

பாதுகாக்கின்றனர். விவசாயிகள் சாம்பல் மற்றும் அழுகிய இலைகள் நிலத்தில் அடித்து செல்லாம-ருக்க வேண்டுமென நினைக்கின்றனர். இப்பகுதியின் பிற முக்கியப் பயிர்களான மக்காச்சோளம், கிழங்குகள், தினை வகைகள் பருப்பு வகைகளான துவரை, பைத்தம்பருப்பு காய்கறிகளான கத்தரிக்காய், கடுகு, மிளகாய் போன்றவை அவர்கள் கலப்புப்பயிர்களை நீர்ப்பாசன வசதியின்றி மழையினை நம்பி பயிரிடுகின்றனர், இது அவர்களுக்கு 6 மாத காலத்திற்குப் போதுமான உணவை அளிக்கிறது.

அவர்கள் பொடு நிலத்தை 3 அல்லது 4 ஆண்டுகள் வரை பயிரிட்ட பிறகு அதை 3 அல்லது 5 ஆண்டுகள் தரிசாக விட்டு விட்டு மற்றொரு நிலப்பகுதியை பயிரிடப் பயன்படுத்துகின்றனர். பிறகு பழைய நிலத்தில் காடுகள் வளரும். இதே முறையில் அதை சில காலத்திற்குப் பிறகு சீராக்கிப் பயிரிடுவர்.

பண்டைய காலத்தில் சராசரியாக ஒரு ரெட்டி குடும்பமானது 2 முதல் 2.5 ஏக்கர் காட்டுப்பகுதியை சீரமைக்கும், பொடுவயலில் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 250 கிலோ கிராம் சோளம் விளையும். அதாவது ஒவ்வொரு குடும்பமும் 600 கிலோகிராம் சோளமும் 150 முதல் 250 கி.கி. திணைகளையும் அறுவடை செய்யும். இருப்பினும் தற்போது இந்த நிலத்தின் அளவு 1 முதல் 1½ ஏக்கர் வரை குறைக்கப்பட்டு உணவு தானியங்கள் கிடைக்கும் அளவும் குறைந்துள்ளது. ஆனால் தற்போது அவர்கள் காடுகளின் பரப்பு குறைந்துள்ளதால் பொடு செத்த இடத்திலேயே மீண்டும் திரும்ப வரவேண்டிய நிலை உள்ளது. மறுசுழற்சி காலம் குறைவாக உள்ளதால் மண் தன் வளத்தை மீட்டுக் கொணர முடியவில்லை.

- அண்மையில் பொடு நிலத்தின் பரப்பு குறைந்ததன் காரணம் என்ன என்று நீ நினைக்கிறாய்?
- மலைச் சரிவுகளில் பயிரிடப்படும் ஏதாவது வேறு பயிரிடுதல் முறை உனக்குத் தெரியுமா?
- பயிர் வளர்ப்பதில் சாம்பல் எவ்வாறு துணைபுரிகிறது?
- உங்கள் பகுதியிலும் பண்ணைகளை வனவிலங்குகள் நாசமாக்குகின்றனவா? எனில் அங்குள்ள மக்கள் அதைத் தடுக்க என்ன செய்கின்றனர்?

## வீட்டின் பின்புறம் காய்கறித் தோட்டம்

தொலைவி-ருந்து பார்க்கையில் மூங்கில் வே-களும், வீடுகளும் விசாலமான பரப்பில் அமைந்துள்ளன. அவர்கள் நிலங்களை சமன்படுத்தி அதில் ஆங்காங்கே விளைப்பொருட்களை இட்டு வளமாக்குகின்றனர். இதுவே அவர்களின் வீட்டுத்தோட்டம். அவர்களின் உணவிற்கு பெருமளவு இதுவே ஆதாரமாகும். வீட்டுத் தோட்டத்தில் மக்காச்சோளம், பீன்ஸ், பூசணிக்காய், மிளகாய் போன்ற காய்கறிகளையும் பயிர் செய்கின்றனர். இது மலைகளிலும் பாறை மண்களிலும் செய்யும் விவசாயத்திற்கு மாறுபட்டது. சில நேரங்களில் இவற்றுடன் சேர்ந்து கோழிப்பண்ணைகளையும் வைத்து நடத்தினர். சிலர் ஆடுகளையும், செம்மறி ஆடுகளையும், கால்நடைகளையும், நாய்களையும் வளர்த்தனர்.



*படம் 5.5 வீடுகளில் வளர்க்கப்படும் காய்கறிகள்*

SCERT TELANGANA



படம் 5.6. கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லுதல்

நுங்கு ரசம் கொண்டா ரெட்டிகளின் மற்றொரு முக்கிய உணவு வகை ஆகும். இது ஒரு கோடை கால உணவு ஆகும். அவர்கள் வெள்ளாடுகள், செம்மறியாடுகள், பன்றிகள், நாய்கள் மற்றும் கோழிகளையும் வளர்க்கின்றனர். பெண்களும், சிறு பிள்ளைகளும் காடுகளில் உணவுப் பொருட்களையும், கூடை அள்ள தேவையான மூங்கில்களையும் சேகரிக்கின்றனர்.

## சிறிய அளவிலான காட்டு உற்பத்திப் பொருட்கள்

நாம் முன்பு கண்டதைப்போல பொது நிலத்திலிருந்தும் வீட்டுத் தோட்டங்களில் இருந்தும் கிடைக்கும் விளைபொருள்கள் ஆண்டு முழுதுவம் போதுமானதாக இருப்பதில்லை. எனவே காட்டு விளைபொருள்களை சேகரித்தல், வேட்டையாடுதல் இம்மக்களின் வாழ்வில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. காடுகள் அவர்களுக்கு மிகச்சிறந்த உணவு சேமிப்புக்கிடங்காக உள்ளது. அவர்கள் ஆண்டு முழுவதும் காட்டு உற்பத்தியின் மீது ஆதாரப்பட்டுள்ளனர்.

பல்வேறு பருவங்களை குறிப்பிடும் மலையின் நாள்காட்டி, பலவித சாரமுள்ள பழங்கள், கிழங்குகள், கொட்டைகள், பச்சை கீரைகள் மற்றும் சிறு சிறு விலங்குகளை வேட்டையாடுதல் போன்றவற்றை குறிப்பிடுகின்றது. மனிதர்களோ, விலங்குகளோ உடல்நலம் பாதிப்புற்றால் அவர்கள் காட்டு மருத்துவ செடிகளை கொண்டு தீர்வு காண்கின்றனர்.

அறுவடைக்காலத்திலோ அல்லது அதன் பிறகோ சில மாதங்களைத் தவிர கொண்டா ரெட்டி பெண்கள் மற்றும் சிறுவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான காட்டு உற்பத்திப் பொருட்களை சேகரிப்பதில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தேன் மற்றும் மூங்கில் கொம்புகள் ஆகிய இரண்டு காட்டு விளைபொருள்களை முக்கியமாக சேகரிக்கின்றனர். அவர்கள் மூங்கில் ஏணிகளின் உதவியால் பெரிய பெரிய மரங்களில் ஏறி தேனை சேகரிக்கின்றனர். "இளமூங்கில் தண்டுகள்" என்னும் கரிக்கட்டைகளை மூங்கில் புதர்களின் நுனிகளிலிருந்து சேகரிக்கின்றனர். தண்டுகளின் மேலுறையை நீக்கியபின் அவற்றை சமைப்பர். இது மிகவும் சுவையுள்ளதாகக் கருதப்படுகிறது.

சில காட்டு பொருட்களை வாராந்திர சந்தைகளில் விற்று பணம் ஈட்டுகின்றனர். 'மாவுவா' விதைகள் அவற்றில் முக்கிய பங்குவகிக்கின்றது. இதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அவர்களின் அன்றாட தேவையான துணிமணிகள் மற்றும் இதர தேவைகளை வாங்குகின்றனர்.

- நீங்கள் உண்ணும் காட்டு உற்பத்தி பொருட்களின் அட்டவணையை தயார் செய்.
- நீங்கள் காடுகளிலிருந்து ஏதேனும் உணவுப் பொருளை சேகரித்தீர்களா? அப்படியானால் உங்கள் அனுபவங்களை கூறுங்கள்.

## குடிநீர் :

இவ்வூரின் குடிமக்களுக்கு பல இயற்கை ஊற்றுகள் நீரை வழங்குகின்றன. மலைகளின் வழியே பல நீரோடைகள் பாய்கின்றன. அவை பின்னர் சபரி அல்லது கோதாவரி நதிகளில் இணைகின்றன. பாறைகள் அதிகளவில் இருப்பதால் மலைகளில் கிணறுகள் தோண்டுவது மிகக் கடினமாக உள்ளது. ஊற்றுகளில் நீர் ஆண்டு முழுவதும் நீடிக்கிறது. ஆனால் சில ஊற்றுகள் மட்டும் கோடையில் வறண்டு காணப்படுகின்றன. நீரோடைகள் பருவத்திற்குரியதாக உள்ளது. அவை மழைக்குப் பின் ஒரு சில மாதங்கள் மட்டுமே நீடிக்கின்றன. இக்கிராம மக்களுக்கு ஊற்றுகள் சுமார் 30 நிமிட நடத்தல் தொலைவில் உள்ளன.

SCERT TELANGANA

**மூங்கில் :**

மூங்கில் காடுகளில் பெருமளவில் கிடைக்கின்றன. அவை கொண்டா ரெட்டிகளின் வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றன. மூங்கிலை தங்கள் சுயதேவைக்கு பயன்படுத்துவதோடு கூடைகள் முடைவதற்கும், விசிறிகள் செய்யவும், கோழிகளை கவிழ்க்கும் கூடைகளை செய்யவும் பயன்படுத்தி அதை சந்தைகளில் விற்க எடுத்துச் செல்வர்.

பல பகுதிகளில் ரெட்டிகள் காகிதத் தொழிற்சாலை உரிமையாளர்களை அணுகி அவ்வாலைகளுக்கு மூங்கில்களை வெட்டி அனுப்பிவைக்கின்றனர். இது அவர்களுக்கு ஒரு முக்கிய துணை வேலை வாய்ப்பாக உள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு பணவருவாயும் கிடைக்கிறது. தொடக்கத்தில் வருவாய் மிகக்குறைவாக இருந்தாலும் தற்போது இது அதிகரித்துள்ளது. இக்கூ-யாட்கள் அறுடை காலத்திற்கு பிறகு மூங்கில்களை சேகரிக்கின்றனர். அதனால் அவர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.150 ஈட்டுகின்றனர்.



படம் 5.7 கூடைகளை விற்க சந்தைக்கு எடுத்துச் செல்லுதல்

இக்குடியிருப்புகள் நிலையானவை அல்ல. ஏதாவது பெரும்பஞ்சமோ, கொள்ளை நோய்களோ அல்லது ஏதேனும் சில காரணங்களால் அவர்கள் தங்கள் குடியிருப்புகளை காலி செய்துவிட்டு வேறு எங்காவது தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வர்.

- மூங்கில் மலைவாழ் மக்களின் பயன்பாட்டில் இருந்து காகித தொழிற்சாலையினரின் பயன்பாட்டிற்கு உள்ள வேறுபாடு என்ன?

- பீடபூமிகள் மற்றும் குன்றுகளின் மீதுள்ள குடியிருப்புகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை எழுது.

## வீடுகளும் வசிப்பிடமும்

கீழே தரப்பட்டுள்ள படத்தில் பெனுகுலுவில் உள்ள வீடுகள் மண், மூங்கில் மற்றும் ஓலைகளால் அமைந்திருப்பதைக் காணலாம். வீட்டின் அனைத்து பக்கங்களிலும் பரந்த இடைவெளி இருப்பதைக் காணலாம். முன்பக்கங்களையும் இருபுறங்களையும் மூங்கில் பணிக்காகவும் விலங்குகளைக் கட்டவும் பயன்படுத்துகின்றனர். வீட்டின் பின்புறம் சமையல் தோட்டத்தைக்காணலாம். ஒவ்வொரு வீடுகளும் சற்று இடைவெளியுடன் கட்டப்பட்டுள்ளன.

பெனுகுலுவில் உள்ள வீடுகள் மலை உச்சியில் உள்ளன. குடிசைகள் ஒவ்வொன்றும் மிக அருகில் அமைந்து உள்ளன. மொத்தத்தில் 32 குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன. மொத்த மக்கள் தொகை 124

## வழக்கங்கள்

பெனுகுலுவில் வாழும் மலைவாழ் மக்கள் இயற்கையை வழிபடுகின்றனர். அவர்கள் கற்சிலைகளை வழிபடுகின்றனர். அவர்கள் புளி மரத்திற்கு கயிறுகள் சுற்றியும், உலர்ந்த சுரைக்காயை தொங்கவிட்டும் வழிபடுவர். அவர்கள் அதை 'முத்தியாலம்மா' என அழைக்கின்றனர். அவர்கள் எல்லநம் பாதம் (பூமி பூசை), பெரியோர் பண்டிகை (கொடதல பண்டிகை), பீமினி பண்டிகை (வேப்பம்பூ



படம் 5.8 மூங்கிலால் தயாரிக்கப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள். மற்றும் இசைக்கருவிகள்

திருவிழா போன்ற விழாக்களை கொண்டாடுகின்றனர். பருவகால மாற்றங்களில் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அம்மக்களின் கொண்டாட்டங்களில் பெரியோர் பண்டிகை (கொடதலா பண்டிகை) மிகவும் முக்கியமான ஒன்று. அவர்கள் செப்டம்பரில் இத்திருவிழாவை கொண்டாடி தேவதைகளுக்கு காய்கறிகளை படைத்து அவற்றை பிரசாதமாக உண்கின்றனர்.) அடுத்தது வேப்பம்பூ திருவிழா மிக முக்கியமான பண்டிகையாகும். இத்திருவிழாவிற்குப் பின்னரே அனைத்துவித முக்கிய நடவடிக்கைகளான விவசாயம், அறுவடை காடுளிலிருந்து பழங்களை சேகரித்தல் ஆகியவை நடைபெறுகின்றன. இத்திருவிழா காலங்களில் அனைத்து பழங்குடியினரும் அவர்கள் தனிப்பட்ட குடியிருப்புகளில் வாழ்பவராக இருப்பினும் ஒன்று திரள்கின்றனர்.

**கோயாக்களின் எதிர்காலம் :**

இந்த மலைவாழின மக்கள் சிறிய எண்ணிக்கையிலேயே இருப்பினும் அவர்கள் பண்டைய காலம் முதல் ஒருமுறையான வாழ்க்கையைப் பின்பற்றி வருகின்றனர். அவர்களுடைய வாழ்கை முறையை வாழ அவர்களுக்கு உரிமை உண்டு. நவீன விவசாயத்துடன் ஒப்பிடும்போது அவர்கள் சுற்றுப்புறத்தை பாதிக்கச் செய்வதில்லை. விவசாயத்திற்காக காடுகளை அழித்தாலும் அவற்றை பராமரிப்பதால் அதை சில ஆண்டுகளில் மீண்டும் புத்தாக்கம் அடைகிறது. எனினும் அவர்களக்கு தற்போது விவசாயததிற்காக பயன்படுத்தப்படும் காட்டு நிலம் மிகக்குறைந்த அளவிலேயே இருப்பதால் அவர்களின் வாழ்க்கை முறை தொடர்ந்து அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறது. மரங்களைத் தொடர்ந்து வெட்டுவதாலும் காகித ஆலைகளுக்கு மூங்கில் தினமும் அதிக அளவில் தேவைப்படுவதால் அவை காகிகத ஆலைகளால் அளவுக்கு அதிகமாக சுரண்டப்படுவதாலும் காடுகள் அழிந்துக் கொண்டே வருகின்றன. மேலும் நீண்ட காலமாக மலை வாழின மக்களின் வாழ்க்கை, மீண்டும் மீண்டும் அச்சுறுத்தல் பட்டு வருவதால் வன அதிகாரிகள் பொடு விவசாய முறையை நிறுதத முயல்கின்றனர்.



படம் 5.9 காமனு தேவி

- பீடபூமிலுள்ள கிராமத்தின் விவசாய நிலைப்பாட்டைக் குறித்து நாம விவாதித்தோம், இம்மூன்று கிராமமக்களின் வாழ்க்கை நடைமுறைகளின் நிலைப்பாட்டை ஒப்பிடுக.
- கோயாக்கள் தங்களின் வாழ்க்கை முறையின் மீது உரிமை பெற என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு உறுதியளிக்க முடியும்?

பழங்குடியின மக்கள் காட்டில் விளையும் பழங்களைப் பற்றியும் காட்டு சுற்றுப்புறத்தைப் பற்றியும் மிக நுட்பமான அறிவைப் பெற்றளனர். இந்த மக்களின் தேவை மிகக்குறைவு ஆனால் அவர்கள் வாழும் காட்டின் செல்வம் மிக அதிகம், அது இயற்கையுடன் ஒத்துப்போவதாகவும் உள்ளது. அவர்கள் அவ்வாறு செய்வதற்கு உரிமை இல்லையா?

இக்கிராமங்களில் பள்ளி உள்ளிட்ட பிற வசதிகள் கிடைப்பது மிகக்குறைவே. அங்கு கிரிஜன ஆரம்பப் பள்ளி என்னும் ஒரு பள்ளி மட்டுமே உள்ளது. அவர்கள் ஊரிலிருந்து 20 கி.மீ தொலைவில் வாசேடு என்னும் மண்டல தலைமையகத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் மருத்துவமனையும் உள்ளன.

SCERT TELANGANA



படம் 5.10 பெனுகுலுவிற்கு வழி

**முக்கியச்சொற்கள்**

பொடு விவசாயம் பழங்குடியினர் மூங்கில் வீட்டுத் தோட்டம் காட்டு பொருட்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கொண்டா ரெட்டிகள் தங்களைச் சுற்றியுள்ள காடுகளின் மீது ஆதாரப்பட்டிருக்கும் பல்வேறு வழிமுறைகள் யாவை?
2. கொண்டா ரெட்டிகளின் பல்வேறு வாழ்க்கை முறைகளை பட்டியலிடு.
3. கொண்டா ரெட்டிகள் பல்வேறு பயிர்களை ஏன் வளர்க்கின்றனர் என நினைக்கிறாய்?
4. உன்னால் ஆய்வு செய்யப்பட்ட மூன்று கிராமங்களின் வயல்களின் தன்மையை அறிய அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிடுக?
5. கடந்த மூன்று பாடங்களின் துணைத்தலைப்புகளைப் படி. மூன்று கிராமங்களின் பல்வேறு கூறுகள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் நிரப்பு. தேவைப்பட்டால் அதிக வரிசைகளை இணைக்கவும். ஒத்த தலைப்புகள் இல்லாவிட்டால் தகவல் இல்லை என எழுதவும்.

| தலைப்புகள் துணைத்தலைப்புகள் | மலைக்கிராமம் | பீடபூமிக்கிராமம் | சமவெளிக்கிராமம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. உங்களுடைய கிராமம் நகரம் ........................... வகை நில வடிவத்தில் தற்போது அமைந்துள்ளது. வேறுவகையான நில வடிவத்தில் உன்னுடைய கிராமம் அமைந்துள்ளதாக கற்பனை செய்து அதைப்பற்றி எழுதுக.

**கலந்துரையாடல் :**

மரங்கள் இல்லையெனில் என்ன நிகழும்? அதன் விளைவு மற்றும் நம் பொறுப்புகளை பற்றி கலந்துரையாடுக.

SCERT TELANGANA

அத்தியாயம் 6

# உணவு சேகரிப்பு முதல் விளைவித்தல் வரை பண்டையகால மனிதர்கள்

உங்கள் வீட்டில் உண்ணும் உணவு எப்படி கிடைக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? எப்படி உணவுப்பொருள் விளைகின்றது? அவை மேம்பட்ட உணவாக மாற்ற எந்த கருவிகள் பயன்படுகின்றன? இந்த கருவிகளை கண்டுபிடித்தவர்கள் யார்?

மனிதன் உணவுப் பொருட்களை விளைச்சல் செய்யாமல், இயற்கையாக கிடைக்கும் உணவை மட்டும் உண்டு வந்திருந்தால், அவன் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை பற்றி அறிய கீழே உள்ள படத்தை காண்க



பண்டைக் கால மனிதர்களின் வாழ்க்கை முறை

படம்:. 6.1

SCERT TELANGANA



உணவை சேகரிக்கும் பண்டையகால மனிதர்கள்
படம் 6=.2

- மேலே காட்டப்பட்ட படத்தில் எப்படி இந்த மக்கள் உணவை சேகரிக்கின்றனர்?
- எந்த வகையான ஆடைகளை அவர்கள் அணிகின்றனர்?
- இப்படத்தில் ஐந்து அல்லது ஆறு வகையான ஆயுதங்களை நீங்கள் பார்க்கலாம். அவற்றை கண்டுபிடிக்க முடியுமா?
- இரண்டாவதுபடத்தை பாருங்கள். அங்கிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்கள் காட்டிலிருந்து என்ன கொண்டு வருகின்றனர்.
- படத்தைப் பார்த்து அதில் செய்யும் வேலைகளை விவரி.

## உணவு சேகரித்தல் மற்றும் வேட்டையாடுதல் :

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் காட்டில் இயற்கையாக கிடைக்கும் பழங்களையும், பூக்களையும், காட்டில் விளையும் தானியங்களையும், கிழங்கு வகைகளையும், தேனையும், வேர்களையும் சேகரித்து உண்டு வாழ்ந்தனர். அவர்கள் உணவிற்காக பறவைகள் மற்றும் விலங்குகளை வேட்டையாடினர். அவர்கள் எவ்வித பயிர்களையோ, விலங்குகளையோ வளர்க்கவில்லை.

- இயற்கையாக விளையும் உணவுப் பொருள் அல்லாமல், காட்டில் இருந்து கிடைக்கக்கூடிய பொருட்களை பட்டியலிட முடியுமா? அவைகளை உண்பதற்கு எப்படி தயார் செய்வீர்கள்?

நீங்கள் காட்டிற்குச் சென்றால் அங்கு சாப்பிடுவதற்கு என்னென்ன உணவுப் பொருட்கள் கிடைக்கும் என்று தெரியுமா? முதலில் எந்தெந்த உணவுகள் சாப்பிடத்தக்கவை, அவை எங்கு விளையும்? மரங்கள் எப்பொழுது பழங்கள் தரும்? அதை எப்படி உண்பது? அவற்றை பச்சையாக உட்கொள்ள முடியுமா? அவற்றை வேகவைக்க முடியுமா? அல்லது தண்ணீரில் கழுவவேண்டுமா? போன்ற நிறைய கேள்விகளுக்கு உங்களுக்கு விடை தெரிந்திருக்க வேண்டும்.

அதேபோல் நீங்கள் ஒரு விலங்கையோ அல்லது பறவையையோ வேட்டையாட சென்றால், அதனுடைய பழக்க வழக்கங்கள், நடவடிக்கைகள், இது எங்கு நிறைய நேரம் செலவழிக்கும்? இது எங்கு உணவு மற்றும் நீரை அருந்தும்? அவை எவ்வகையில் ஆபத்தானவை? அவற்றின் உறுப்புகளால் பயன் என்ன? பழைய காலத்து மனிதர்கள் நீண்ட காலங்களுக்கு பின் இவற்றை அறிந்து தங்களது வாரிசுகளுக்கு கற்றுத்தந்தனர்.

SCERT TELANGANA

- பழங்கால மக்களின் உணவு முறையிலும், உங்களின் உணவு முறையிலும் உள்ள வேற்றுமை மற்றும் ஒற்றுமையை விவரி?
- அவர்கள் உங்களைப் போன்ற ஆடைகளை உடுத்தியிருப்பார்கள் என்று நினைக் கிறீர்களா? அவர்கள் என்ன அணிந்திருப்பார்கள்.

## கற்கருவிகள் :

இன்றைக்கு நாம் பல இயந்திர கருவிகளை பயன்படுத்துகின்றோம். ஆனால் பழங்கால மனிதர்கள் கற்களையும், எலும்புகளையும், மரக்கட்டைகளையும் கருவிகளாக பயன் படுத்தினர். தொடக்கத்தில் பெரிய கற்களை மற்ற கற்களால் உடைத்து அதற்குரிய வடிவம் கொடுத்து அதைத்தான் மாமிசம் வெட்டுவதற்கும், பூமியை தோண்டி கிழங்கு எடுப்பதற்கும், விலங்குகளை வேட்டையாடுவதற்கும் கருவியாய் பயன்படுத்தினர்.



படம் 6.3. எப்படி கற்கருவிகள் உருவாக்கப்பட்டன என்பதற்கு ஒரு செய்முறை இங்கு காட்டப்பட்டுள்ளது.

பின்னர் சிலஆயிரம் ஆண்டுகள் கழித்து உறுதியான கல்லில் சிறிய, மிகச்சிறந்த கருவிகளை உருவாக்கினார். இவற்றை தான் நுண்ணியகற்கள் என்பர்.

அவற்றிற்கு எலும்பு கைப்பிடிகளை பொருத்தி இதைதான் கத்திகளாகவும், அம்புகளாகவும், அரிவாள்களாகவும் பயன்படுத்தினர். இந்த கருவிகள் தான் மண்ணைத் தோண்டவும், மரத்தை வெட்டவும், விலங்குகளின் தோல்களை உரிக்கவும், தோல்களை சுத்தம் செய்யவும், தோல்களை வைத்து உடை தைக்கவும், இறைச்சியை வெட்டவும் பயன்பட்டது.



படம் 6.8 நுண்ணிய கல்லைக் கொண்டு செய்யப்பட்ட அரிவாள்



படம் 6.8 நுண்ணிய கல்லைக்



(A) B)

படம் : 6.4 (a, b) பழங்கால கருவிகள், அமராபாத், மற்றும் மகபூப் நகரில் கண்டெடுக்கப்பட்டது.



படம் 6.5 கற்களால் உருவாக்கப்பட்ட கருவிகள், கண்டெடுக்கப்பட்ட இடம் அமராபாத் மஹபூப்நகர்.



படம் 6.6 கற்களினால் தயாரிக்கப்பட்ட கூர்மைக் கருவிகள் எல்லேஸ்வரத்திலும், நல்கொண்டாவிலும் கண்டெடுக்கப்பட்டது.



படம் 6.7 கானாபூர் மற்றும் அதிலாபாத்தில் கண்டெடுக்கப்பட்ட நுண்ணிய கற்கள்

SCERT TELANGANA

பழங்கள் மற்றும் வேர்கள் வெட்டவும், விலங்குகளை வேட்டையாடவும் இக்கருவிகள் பயன்படுகின்றன.

இந்த பழங்கால மனிதர்களின் கற்கருவிகள் இந்தநாள் வரை அழியாமல் இருந்திருக்கின்றது. இந்த கருவி கிடைத்த இடத்தையும். கருவியையும் ஆய்வு செய்ததன் மூலம் பழங்கால மக்களின் வாழ்க்கையை நாம் அறிய முடிகிறது.

- தற்பொழுது மக்கள் எந்த தேவைக்காக கற்களை பயன்படுத்துகின்றனர்?

## நெருப்பு :

பழங்கால மக்கள் நெருப்பை கண்டுபிடித்ததன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் காணப்பட்டது. அனேகமாக இரண்டு கற்களை உரசியும், மரக்குச்சிகளை தேய்த்தும் நெருப்பை உருவாக்கியிருக்க முடியும். நெருப்பை வைத்து அவர்கள் உணவை வேகவைத்து உண்ண ஆரம்பித்தனர். சமைப்பதற்கு இதுதான் ஆரம்பமாக இருந்தது.

அது மட்டும் அல்லாமல் விலங்குகளின் அபாயத்திலிருந்து தப்பிக்க நெருப்பு அவர்களுக்கு பயன்பட்டது. குகைகள் உள்ளே வாழவும் மரக்கட்டைகளை தீமூட்டி அதை நீண்ட நேரம் உபயோகித்தனர்.

- தற்பொழுது நெருப்பை எதற்காக பயன்படுத்துகிறோம்?
- பழங்கால மனிதனின் வாழ்க்கையை உணர காய்ந்த இலைகள் அல்லது பஞ்சை வைத்து இரண்டு கற்களை உரசி தீமூட்ட முயற்சியுங்கள்.

## நாடோடி வாழ்க்கை :

அக்கால மனிதர்கள் குகைகளிலும், மரத்தடியிலும், பாறைக்கடியிலும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வீடுகட்டவில்லை. அவர்கள் ஒரு நாடோடி வாழ்க்கையை வாழ்ந்தனர். தொடர்ந்து ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். இப்படி தொடர்ச்சியாக இடம் பெயர்பவர்களை நாடோடிகள் என்று கூறுவர்.

- பழங்கால மனிதர்கள் ஏன் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர் என்ற காரணத்தை உங்களால் அறிய முடிகிறதா?
  - o மனித குழுக்கள் ஒரே பகுதியிலுள்ள பழங்களையும், விலங்குகளையும், வேட்டையாடி முடித்து விட்டால் என்ன நடக்கும்?
  - o விலங்குகள் ஒரே இடத்தில் தங்குமா அல்லது இடம் பெயருமா?
  - o நீர் அதே இடத்தில் வருடம் முழுவதும் கிடைக்குமா?
- இன்றைய காலத்தில் மக்கள் இடம் பெயர்கிறார்கள். அப்படி வேறு இடத்திற்கு செல்லும்பொழுது எந்த பொருட்களை உடன் எடுத்து செல்வார்கள்?
- பழங்காலத்து மனிதர்கள் இடம் பெயரும்பொழுது எந்தப் பொருட்களை தங்களுடன் எடுத்து சென்றிருப்பார்கள்?
- ஏன் தற்காலத்து மனிதர்கள் இடம் பெயராமல் ஒரே இடத்தில் வீடு கட்டி குடியேறுகிறார்கள்?



*படம் 6.9 பாண்டவ மலையில் உள்ள குகை ஓவியங்கள் (ரேகொண்டா, ஜெயசங்கர் மாவட்டம்)*

SCERT TELANGANA

## ஓவியம் :

அக்காலத்து மனிதர்கள் குகைளிலும், மலைப் பாறைகளிலும் விலங்குகளின் படத்தையும், வேட்டையாடும் கலையையும் படமாக வரைந்தார்கள். பல வண்ண கற்களை பூமியில் நட்டு, பின்னர் அதில் விலங்கின் கொழுப்பைப் பூசி பின் மூங்கில் பட்டையை வைத்து வண்ணம் தீட்டுவர். இது போன்ற செயல்கள் அவர்களின் மத ரீதியான நம்பிக்கையை காட்டுகிறது.

- உங்கள் ஊரில் உள்ள மக்கள் இது போன்று வண்ணம் தீட்டும் வழக்கம் திருவிழாவின் போதோ அல்லது மதவிழாவின்போதோ உள்ளதா?

**தெலங்கானாவின் கற்காலப் பகுதிகள்:**

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் முநதைய கற்காலத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்தனர். ஏறக்குறைய மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அவர்களால் உருவாக்கிய கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. இப்பகுதிகளில் சில ஜெயசங்கர் மாவட்டத்தில் எக்காலா, நாகர் கர்னூல் மாவட்டத்தில் அமராபாத், நல்கொண்டா மாவட்டத்தில் ஏலேஸ்வரம் பெத்தபள்ளி மாவட்டத்தில் இராமகுண்டம் அதிலாபாத் மாவட்டத்தில் உட்னூர், நிஜாமாபாத் மாவட்டத்தில் ஆர்மூர், சங்கா ரெட்டி மாவடத்தில் மஞ்சீரா பள்ளத்தாக்கு, பத்ராத்ரி மாவட்டத்தில் செர்லா போன்றவையாகும்.

- உங்களுடைய மாவட்டத்தில் இது போன்ற பகுதிகளை உன் ஆசிரியரிடமிருந்து தெரிந்து கொள்ளவும், அவ்விடங்களுக்குச் சென்று பார்வையிடவும், அருகில் உள்ள நகரத்தின் அருங்காட்சியத்தில் கற்கருவிகள் உள்ளனவா என்று பார்க்கவும்.

**சிறிய கற்கால மற்றும் பாறைக்கலைப் பகுதிகள்:**

தெலங்கானாவில் வாழ்ந்த வரலாற்றுக்கு முந்தைய மக்கள் பெருமளவில் சிறுகற்களையும் அதிக எண்ணிக்கையில் ஓவியங்களையும் விட்டுச் சென்றனர். இந்த ஓவியங்கள் வரங்கல் மாவட்டத்தின் திருமலகிரி கிராமத்திற்கு அருகிலுள்ள பாண்டவுல குட்டாவின் பாறைப் பகுதிகளின் சுவர்களில் காணப்படுகின்றன. இது தெலங்காணா மாநிலத்தை உலகின் பாறைக் கலைப் பகுதிகளின் வரைபடத்தில் காட்டுகிறது மற்றும் பத்மநாயக்கர், காகதீயர் முன்பு முந்தைய கற்காலம் 12000 முதல் 500 வரையிலான தனிச்சிறப்பு கொண்ட பகுதியாகும்.

- பாண்டவுலகுட்டாவின் பாறைப்பகுதியில் உள்ள ஓவியங்களைக் காட்டும் படத்தை 69ல் பார்க்கவும்.



*படம் 6.10 கம்மம் மாவட்டத்தின் பெனுபள்ளி மண்டலம் ராமசந்திராபுரத்தில் நீலாத்திரி பாறையிலான கூரை*

SCERT TELANGANA

நீங்கள் காண்பது என்னது? படங்களை உற்றுநோக்கி விவரி. பண்டைய ஓவியங்களில் வரையப்பட்ட சில ஓவியங்களை உங்களால் காண முடிகிறதா? அவை ஏன் பண்டைய ஓவியங்களின் மீது வரையப்பட்டுள்ளன என்று கருதுகிறாய்?

- ஓவியங்கள் எந்த வண்த்தில் உள்ளன இந்த ஓவியங்களை உருவாக்குவதில் அவர்கள் எந்த பொருட்களை – வண்ணங்கள் மற்றும் தூரிகைகளை – பயன்படுத்தினர் என்பதைக் கண்டுபிடி.
- உன்னுடைய மாவட்டத்திலுள்ள பாறைக் கலைப்பகுதியைக் கண்டறிய கீழ்கொடுக்கப் பட்டுள்ள படத்தைப் பார்.ஷ

பாறைக்கலை ஓவியங்கள் வேட்டையாடுதல், சண்டையிடும் காட்சிகள், தேன் திரட்டுதல், ஆடல், இசை போன்றவைற்றை கொண்டுள்ளன. பாறை ஓவயித்தில் சடைஎருமை, எருமை, மாறிமான், மான், யானை காட்டு வெள்ளாடு, புலி, முதலை, தேள், முள்ளம்பன்றி, நண்டு, தவளை, தவழும் பூச்சிகள் மீன், ஆமை, பல்லி, குரங்கு, கரடி மற்றும் நாய் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. ஓவியங்களில் குழுகு, ராஜாளி, கொக்கு, மயில், காகம், தேனீக்கள் நிறைந்த கூடுகள், வண்ணத்துப் பூச்சி போன்ற பறவைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. ஜியோமிதிக்குறியீடுகள் மற்றும் மனித உருவங்களும் ஓவியங்களில் காணப்படுகின்றன. அம்பு, வில், வாள் மற்றும் நீண்ட ஈட்டி போன்றவையும் ஓவியங்களில் காணப்படுகின்றன.




*நிலப்படம் 1 தெலங்கானா மாநிலத்தில் உள்ள முக்கியமான இடங்களில் பழங்கால மனிதர்களால் வரையப்பட்ட கற்சிலைகள்.*

SCERT TELANGANA

## இக்காலத்து வேட்டையர்கள் :

உலகில் பல்வேறு பகுதிகளில் தற்பொழுது கூட, வேட்டையாடி காட்டில் உணவு சேகரித்து இயற்கையான வாழ்க்கை வாழும் மக்களும் உள்ளனர். நமது மாநிலத்தில் பழங்குடியினர் மற்றும் செஞ்சுக்கள் என்போர் தற்போது இதுபோல வாழ்வதை காண முடிகிறது. இவர்களுடன், கல்வியாளர்கள் சேர்ந்து சிறிது காலம் வாழ்ந்து, அவர்களின் வாழ்க்கை முறையை அறிந்தனர். இதுபோன்ற நிறைய வரலாற்று ஆய்வுகளில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, வாழ்ந்த பழங்காலத்து மனிதர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது.



*படம் 6.11 (ஏ)*



*படம் 6.11 (பீ)*



*படம் 6.11 (சி) 80 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழங்குடியினரின் வேட்டைக்காட்சி*

## பகிர்ந்து உண்டு வாழும் முறை :

பழங்கால மனிதர்கள் சிறு குழுக்களாக நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததை பார்த்தோம். ஆண், பெண், இருபாலரும், வேட்டை மற்றும் உணவு தேடுதலில் ஈடுபட்டனர். குழந்தைகள் மற்றும் பெண்கள் உணவு தேடுதல், மற்றும் சிறு விலங்குகளை வேட்டையாடுதலில் நாட்டம் காட்டினர். ஆண்கள் பெரிய விலங்குகளை, பின்தொடர்ந்து அதை வேட்டையாடி வந்தனர்.

இப்படி வேட்டையாடி சேகரித்து வரும் உணவை அனைவரும் பகிர்ந்து உண்ணுவர். உணவை சேமித்து வைக்கும் பழக்கம் அன்றைய காலகட்டத்தில் இல்லை. பதப்படுத்த முடியாமல் இறைச்சி, மீன், பழம், இலை, கிழங்குவகைகள், மற்றும் தானியங்கள் பயன்படுத்தப்பட்டன.

தற்போது அதை பதப்படுத்த பல அடைப்பான்கள் உள்ளன. அவை மாத கணக்கில் பதப்படுத்தி வைக்கும். ஆனால் அக்கால மனிதர்களிடம் பதப்படுத்துவற்கு என்று ஒன்றுமில்லை. ஏனென்றால் அவர்கள் தொடர்ச்சியாக ஒரு இடத்தில் இருக்க மாட்டார்கள். இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருப்பார்கள்.

உணவுப் பொருட்களை அனைவரும் பகிர்ந்து உண்பது மட்டும் அல்லாமல், அவர்களிடையே ஏழை, பணக்காரன் என்ற ஏற்ற தாழ்வு கிடையாது. அனைவரும் சமம் என்று வாழ்ந்தனர். அனைவரோடு கலந்து ஆலோசித்து அனைத்தும் முடிவு செய்தனர்.

காட்டிலுள்ள விலங்குகளை வேட்டை யாடினாலும், அவர்கள் விலங்குகளின் மீதும், செடி, கொடி, மரங்களின் மீதும், மலை, ஆறுகளின் மீதும் மிகுந்த மதிப்பு வைத்திருந்தனர். அவற்றை தெய்வமாக வழிபட்டனர். அதனால்தான் அவர்களுக்கு எல்லா நேரமும் உண்ண உணவு கிடைத்தது.



*படம் 6.12 வேட்டையாடி கிடைத்த மானிற்கு நன்றி செலுத்துகின்றனர்.*

அக்கால மக்கள் காட்டில் வாழும் விலங்குகளை வேட்டையாடி, உணவு சேகரித்தலை கற்பனை செய்து பார்க்கலாம்.

- ஏன் அன்றைய மனிதர்களால் உணவை நீண்ட நேரம் பதப்படுத்த முடியவில்லை?
- அவர்கள் உணவை பகிர்ந்து உண்ணாவிட்டால் ஏதேனும் சண்டை வரும் என நினைக்கிறீர்களா?
- ஏன் அவர்களில் ஏழை என்று யாரும் இல்லை?
- விலங்கை வேட்டையாடிய பின்பு, அதற்கு மரியாதை செலுத்தும் அக்கால மனிதனுக்கும், உணவை அறுவடை செய்த பின்பு, மரியாதை செலுத்தும் இக்கால மனிதர்களுக்கும், ஏதேனும் ஒற்றுமையை உங்களால் காண முடிகிறதா?

## உணவை சேகரிப்பதிலிருந்து உணவை விளைவித்தல் :

மனிதன் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விலங்குகளை வேட்டையாடியும் உணவை சேகரித்தும் வாழ்ந்தான். 12,000 ஆண்டுகளுக்கு முன்புதான் உணவை விளைவித்து உண்டான். அவர்கள் ஏன் வாழ்க்கை முறையை மாற்றினர்? கண்டறியவும்.

12,000 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு பெரிய காலநிலை மாற்றம் ஏற்பட்டது. வெப்பம் அதிகரித்தது. இதனால் பெரிய இயற்கை மாற்றம் ஏற்பட்டது. காடுகள் எல்லாம் புல்வெளிகளாக மாறியது. இந்த புல்வெளிகள் ஆடு, மாடுகளுக்கு உணவாக பயன்பட்டது.

அங்கு, மனிதன் உண்ணக்கூடிய உணவு தானியங்களும் இருந்தது. அவர்கள் இந்த புல்வெளிக்கும், விலங்குகளுக்கும் மிக நெருக்கமாக இருந்ததால், அவர்கள் படிப்படியாக அவற்றை ஆண்டனர். இதைத்தான் தாவரங்களின் ஆளுதல் என்று குறிப்பிடுவர். இது என்ன என்று பார்ப்போம், இதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பார்ப்போம்.

## உணவு விளைவித்தல் மற்றும் கால்நடைகளை வளர்த்தல் போன்ற வற்றை கற்றனர்.

உணவு தரக்கூடிய செடிகள் எந்த இடத்தில் வளர்கின்றன என்பதை அக்காலத்து மக்கள் கவனமாக பார்த்தனர். விதையிலிருந்து எப்படி மற்றொரு செடி உருவாகிறது என்பதையும் பார்த்தனர். இந்த செடி, கொடிகளை, பறவை, விலங்குகளின் தாக்குதலிலிருந்து காப்பாற்றினர். புல்வெளி பகுதிகளில் வாழ்ந்த மக்கள், தாங்கள் இருக்கும் இடத்திலேயே தானியங்களை உற்பத்தி செய்தனர். இப்படித்தான் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் விவசாயிகளாக உருவானார்கள்.

பல்வேறு இடங்களில் வாழும் மக்கள் கோதுமை, நெல், கேழ்வரகு, பருப்பு வகைகள், கிழங்கு வகைகள், காய்கறிகள் போன்றவற்றை உற்பத்தி செய்ய கற்றுக்கொண்டனர். மக்கள் தொகை அதிகரித்த போது மற்றவர்களும் உணவு தானியங்களை விளைவிப்பதற்கும், அதை பயன்படுத்துவதற்கும் தெரிந்துக் கொண்டனர்.



SCERT TELANGANA

அதேபோன்று வளர்ப்பு விலங்குகளை அவர்களது விளைநிலங்களில் மேய அனுமதித்தனர். அவற்றை வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்தனர். இவ்வாறு விலங்கு மேய்ப்பவர்கள் மாமிசம், விலங்குகளின் தோல் மற்றும் பால் போன்றவற்றால் பயனடைந்தனர். பின்னர் கழுதைகளையும், எருதுகளையும், சுமைத்தூக்குவதற்காக பயன்படுத்தினர். உதாரணமாக, பொருட்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லவும், நிலத்தை உழுவதற்கும் இவைகள் பயன்பட்டன.

## பழக்கப்படுத்துதல் :

நல்ல விளைச்சல் தரும் தாவரங்களையும், கால்நடைகளையும், மக்கள் தேர்வு செய்து வளர்த்தனர். அவற்றை கெடாமல் பார்த்துக் கொண்டனர். அவற்றின் விதைகளை பத்திரப்படுத்தி அடுத்த பருவ காலத்தில் விதைக்க பயன்படுத்தினர். அதேபோல் ஒரு சில குறிப்பிட்ட விலங்கினங்களை மட்டும் இனப்பெருக்கத்திற்கு விட்டனர். உணவு தரும் செடிகளும், விலங்குகளும் மனிதரால் வளர்க்கப்பட்டதால், அவை காட்டில் உள்ளது போன்று இயற்கையாக அல்லாமல், வேறுபட்டது.

மக்கள் விதைகளை தெளித்து அது பழம் தரும் வரை அதை பாதுகாத்தலையும், அதேபோன்று குறிப்பிட்ட பிராணிகளை இனவிருத்தி செய்தலையும், பழக்கப்படுத்துதல் என்று கூறப்படுகிறது.

- விவசாயிகள் தற்போதும் பழக்கப் படுத்துதல் முறையில் தான் சிறந்த விதைகளை அடுத்த ஆண்டுக்கும் தேர்வு செய்கின்றனரா?

எல்லா மனிதர்களும் இப்படி விவசாயம் செய்தல், கால்நடைகளை வளர்த்தல் போன்ற காரியங்களில் ஈடுபடவில்லை, பெரும்பாலான மனிதர்கள் காட்டில் வேட்டையாடுவதையும், உணவு தேடுதலையும் தொடர்ந்தனர். அதே போல் ஒரே மாதிரியான விவசாயத்தை அனைவரும் செய்யவில்லை. தொடக்கத்தில் மக்கள் பொடு போன்ற மாற்று விவசாயத்தை செய்தனர். (இதை பற்றி ஆறாம் பாடத்தில் நீங்கள் படிப்பீர்கள்) காட்டில் வேட்டையாடி உணவு சேகரித்தலையும், உணவு தானியங்களை பயிர் செய்து விலங்குகள் வளர்ப்பதையும் சேர்ந்து செய்தனர்.

மண் வளத்தை காப்பதற்கு உரமிடுதல் அவசியம் என்று மக்கள் புரிந்துக் கொண்டனர். ஏரிகளில் நிலத்தை உழுது, விலங்கின் கழிவுகளை உரமாக கொட்டி விவசாயம் செய்தபோது அவர்கள் அடிக்கடி இடம் பெயர்வது குறைந்து விட்டது. ஒரே நிலத்தை மீண்டும் மீண்டும் செழுமையாக்கி பயன்படுத்தினர். இதனால், விவசாயத்திற்கு கால் நடைகளின் தேவை இன்றியமையாததாக மாறிவிட்டது. அவற்றைக் கொண்டு ஏர் உழுதல், மண்உரம் தயார் செய்தல் மற்றும் போக்குவரத்து தேவையை நிறைவேற்றிக் கொண்டனர்.

## நிலையான வாழ்க்கை :

மனிதர்கள் விவசாயம் செய்யத் தொடங்கியதும், அவர்கள் நீண்ட காலத்திற்கு ஒரே இடத்திலேயே தங்கினார்கள். பயிர்களை பார்த்துக் கொள்ளவும், தண்ணீர் பாய்ச்சவும், களை எடுக்கவும், ஆடு மாடுகளை மேய்க்கவும், தானியங்கள் விளையும் வரை காத்திருந்தனர். அறுவடையின் போது நிறைய தானியங்கள் கிடைத்தது. எல்லாவற்றையும் அவர்களால் உண்ண முடியவில்லை. அதனால் அவற்றை ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை சேமித்து வைத்தனர். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் வீடு கட்டி வாழ்ந்தனர் என்பது தெரிகிறது.

SCERT TELANGANA

நிலையாக ஒரு இடத்தில் தங்குவதென்பது தவிர்க்க முடியாததாகி விட்டதால் அவர்கள், கற்கள் மரக்கட்டைகள், மண், வைக்கோல் ஆகியவற்றால் குடிசை வீடு அமைத்தனர். உணவு தானியங்கள், பால், நீர் போன்றவற்றை வைப்பதற்கு அவர்கள் மண்பானைகளை உருவாக்கினார்கள். அதற்கு வண்ணம் பூசி மெருகேற்றினர். சமைப்பதற்கு அடுப்புகளையும் அரைப்பதற்கு ஆட்டுக்கல்லையும் உருவாக்கினர். தொல்பொருள் ஆய்வாளர்கள், பழைய கால மனிதர்கள், வாழ்ந்த இடத்தைத் தோண்டும் போது குடிசைகள், பானைகள், அடுப்புகள், கற்கோடாலிகள் கிடைத்தது. சில இடங்களில் வறுக்கப்பட்ட தானியங்கள் கிடைத்தது. தானியம் சேமித்து வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பானை, நெருப்பால் சுடப்பட்டிருந்தது.



*படம் 6.13 பழங்கால பானை இதில் என்ன சேமித்து வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?*



*படம் 6.14 தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்ட உணவு சேமிப்புகளின் மீதமுள்ளவை.*

ஆதிகால விவசாயிகள் காடுகளில் இருக்கும் மரங்களையும், கிளைகளையும் புதுமையாக தயாரிக்கப்பட்ட கல்லாலான ஆயுதத்தால் வெட்டினர். இந்த ஆயுதத்தை புதிய கற்கால கருவி என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் சரியான கல்லை தேர்வு செய்து அவற்றை கூர்மையான கோடலியாக மாற்றினர். கோடாலியின் தலைபகுதியில் மரக்கட்டையால் ஆன கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கும். அவற்றை பயன்படுத்தி மரங்களை வெட்டினர். இந்த கற்கருவியினால் விவசாயம் செய்த இந்த கால விவசாயத்தை புதிய கற்காலம் என்று கூறுவர்.



*படம் 6.15 அமராபாத் மற்றும் மெகபூப் நகரில் கண்டெடுக்கப்பட்ட மர கைபிடியாலான கோடாலி.*



*படம் 6.16 செருபல்லி மற்றும் மகபூம் நகரில் கண்டெடுக்கப்பட்ட புதிய கற்கால அரவை கற்கள்*

**ஆதாரம் :**

தெலங்கானா தொல் பொருள் ஆராய்ச்சி அருங்காட்சியகம், ஐதராபாத்.

SCERT TELANGANA

விவசாயம் செய்ததால் அவர்களின் வாழ்க்கை முறை மிகப்பெரிய அடிப்படை மாற்றம் கண்டது.

- உணவை சேமித்து வைப்பதற்கு அவர்கள் என்னென்ன செய்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?
- ஏன் தானியங்களை விளைவித்ததால் ஒரே இடத்தில் மக்கள் நீண்ட காலமாக தங்க நேரிட்டது?
- பழங்கால மக்கள் வாழ்ந்த குடிசை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து வரைக? அவர்கள் வாழ்ந்த வீட்டிற்கும் இப்போது உள்ள உங்கள் வீட்டிற்கும் என்ன வேறுபாடு உள்ளது?

பாலுசிஸ்தானில் 10000 ஆண்டுகளுக்கு முன்பும், இந்தியாவின் காஷ்மீரில் 5000 ஆண்டுகளுக்கு முன்பும் பீகாரில் 4 அல்லது 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் பழங்கால விவசாயம் நடந்த சான்றுகள் கிடைத்துள்ளன.

தக்காணத்தில் தெலங்கானா - கர்நாடக மாநில எல்லையில் பழக்கப்படுத்துதல் முறை நடந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்த இடங்களில் நிறைய சாம்பல் மேடுகள் இருப்பதை காண முடிகிறது.

5000 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த இடத்தில் தான் வேட்டைக்காரர்கள் கால்நடைகளை வளர்க்கத் தொடங்கினர். என தொல்பொருள் ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

ஆடு, மாடுகளை கூட்டமாக ஒரே இடத்தில் கட்டப்பட்டு, அவற்றின் சாணத்தை சேகரித்துள்ளனர். இவை தான் பண்டிகை காலத்தில் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் இந்த இடங்கள் சாம்பல் மேடுகளாக காட்சியளிக்கின்றன. இதே போன்ற சாம்பல் மேடுகள் நாகர் கர்நூல், ஆந்திராவில் கர்னூல், அனந்தப்பூர் இடத்தில் காணப்படுகிறது. சாம்பல் மேடுகளாக, புதிய கற்கால கல், கோடாலி மற்றும் கையால் உருவாக்கப்பட்ட பானைகளும் கிடைத்துள்ளன. சில நூறு வருடங்களுக்கு பிறகு எல்லா மக்களும் விவசாயம் செய்யத் தொடங்கி கிராமங்களிலேயே வாழ்ந்தனர்.

## தெலங்கானாவில் புதிய கற்காலம்:

**தெலங்கானாவில் அதிகமான எண்ணிக்கையில் புதிய கற்கால அரவை கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வரங்கலில் கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனகான் ஜெயசங்கர், சித்திபேட், நகர்கர்னூல், மகபூப் நகர், கரீம் நகர், அதிலாபாத் மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. போலாகொண்டா வரங்கல் மாவட்டத்திலுள்ள பகுதியில் களிமண்ணால் செய்யப்பட்ட பொருட்களான நுண் பொருட்கள், கைகளால் செய்யப்பட்ட பானை, தானியங்கள் சேகரிக்க பாத்திரங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து 3300 வருடங்களுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.**

### முக்கியச் சொற்கள்

வேட்டையாடி உணவை சேகரித்தல்
கற்கருவிகள்
நுண்ணியக்கற்கள்
நாடோடிகள்
பகிர்ந்து உண்டு வாழ்தல்
பழக்கபப்படுத்துதல்
மேய்ப்பர்கள்
பொடு
நிலையான வாழ்க்கை
புதிய கற்காலம்
தொல் பொருள் ஆராய்ச்சியாளர்

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பழங்கால மனிதர்கள் கதர் ஆடைகளையும், பருத்தி ஆடைகளையும் ஏன் அணியவில்லை?(AS1)
2. பழங்களை வெட்ட எந்த கத்தியை உபயோகப்படுத்துகிறோம்? இந்த கருவிகள் இல்லையென்றால் என்ன செய்வாய்?(AS4)
3. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய கருவிகளையும், தற்போது பயன்படுத்தும் கருவிகளையும் ஒப்பிட்டுப் பார்.(AS1)
4. அக்கால மனிதர்கள் ஏன் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்தனர்? எந்த வகையில் அவர்களுக்கும், நமக்கும் பயணம் செய்வதில் வேற்றுமை மற்றும் ஒற்றுமை காணப்படுகிறது?(AS1)
5. தெலங்கானா வரைபடத்தில் பின்வரும் பாறைக்கலைப் பகுதிகளை குறிக்கவும்.(AS5)

   அ) அசிஃபாபாத் ஆ) பாண்டவுலகுட்டா இ) கோகபேட்டை

   ஈ) துர்க்கம் உ) ரேகொண்டா ஊ) ராமச்சந்திராபுரம்.
6. தற்போதுள்ள விவசாயி மற்றும் மேய்ப்பவர்களின் வாழ்க்கை, புதிய கற்கால மக்களின் வாழ்க்கைக்கும் இடையே உள்ள மூன்று வேறுபாட்டினை கூறுக?(AS1)
7. பழங்கால மக்களால் வளர்க்கப்பட்ட கால்நடைகளையும், செடிகளையும் பற்றி பட்டியலிடுக. ஒவ்வொன்றைப் பற்றியும் சிலவரிகள் எழுதுக.(AS3)
8. அரைப்பானும், அடுப்பும் இல்லையெனில், அது நம் உணவை எவ்வாறு பாதித்திருக்கும்?(AS4)
9. தொல்பொருள் ஆராய்ச்சியாளரிடம் தற்கால அகழ்வாராய்ச்சியை பற்றி தெரிந்துக்கொள்ள கேட்க விரும்பும் ஐந்து கேள்விகள் என்ன?(AS4)
10. இந்த படத்தில் நிறைய பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் எது வேட்டையாடி சேகரித்த பொருள் அல்ல? எவையெல்லாம் விவசாயிக்கும், வேட்டையாடி சேகரிக்கும் மக்களுக்கும் பொதுவானவை? பல்வேறு குறிகளை பயன்படுத்தி, அவற்றை வேறுபடுத்திக் காட்டுக.(AS1)



11. பழங்கால மக்கள் விலங்குகளை பழக்கப்படுத்தியதன் மூலம் அவர்களின் வாழ்க்கை எளிதாக மாறியது என்று எவ்வாறு கூறுவாய்.(AS6)
12. 47ஆம் பக்கத்தில் உள்ள நாடோடி வாழ்க்கை என்னும் தலைப்பின் கீழ் உள்ள பத்தியை படித்து அதன் மீது உன் கருத்தினை தெரிவி.(AS2)

SCERT TELANGANA

செயல் :

குறுக்கெழுத்து விளையாட்டை விளையாடு.



**இடமிருந்து வலம் :**

1. இதெல்லாம் பழங்கால மனிதர்கள் தங்கும் இடம் (5)
2. இந்த மக்கள் இடம் பெயர்ந்து கொண்டே இருப்பர் (6)
3. மாற்று விவசாயம் (4)
4. புதுமையான கற்கருவி பழங்கால மக்களால் உருவாக்கப்பட்டது (4)
5. கருவிகளை செய்தவற்காக பழங்கால மக்கள் இதை பயன்படுத்தினர் (4)

**மேலிருந்து கீழ்**

1. இந்த மக்களை நாம் வேட்டையாடி உணவு சேமிப்பவர்கள் என்று அப்போது கூறினோம் (8)
2. பெரிய கல்லில் இருந்து உருவாக்கப்பட் சிறிய துண்டு (9)
3. இந்த விலங்குகள் ஏர் உழுவதற்கும், பொருள்களை சுமந்து செல்லவும் பயன்பட்டது (7)
4. பழங்கால மனிதர்கள் இதை உண்பதற்காக சேகரித்தனர் (5)
5. விலங்குகளின் இறைச்சி இதில் சுடப்பட்டது (4)

**செயல்திட்டம்** : உங்கள் பகுதிக்கு அருகிலுள்ள கற்கால வரைபடங்கள் அமைந்துள்ள இருப்பிடங்களைக் கண்டறிந்து சென்று பார்க்கவும். அது குறித்த அறிக்கையை எழுதி வகுப்பறையில் பார்வைக்கு வைக்கவும்.

SCERT TELANGANA

அத்தியாயம் 7

# தற்காலத்தில் விவசாயம்

**அது வெங்கடாபுரத்தில் வேர்க்கடலை அறுவடைக் காலம். விவசாயிகள் நவம்பர் மாதக் கடைசி வாரத்தில் வேர்க்கடலை விதைகளை விதைத்து பிப்ரவரியில் அறுவடை செய்தனர். நாங்கள் கிராமத்திற்குச் செல்லும் வழியில் பெண் தொழிலாளர்களான ரமா, லட்சுமியம்மா மற்றும் பத்மா போனடறோர் ஒருவேர்க்கடலை வய×ல் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் வேலையைப் பற்றி அவர்களிடம் நாங்கள் பேசத் தொடங்கினோம்.**

## வெங்கடாபுரம் வேர்க்கடலை வயலில் விவசாயக் கூலிகள் :

*நீண்ட நேரமாக தரையில் குனிந்து சுடும் வெயிலில் வேர்க்கடலைக் கொடியை பிடுங்குவது என்பது எளிதான வேலை அல்ல. எங்கள் முதலாளியான ரவி அவர்கள், நாங்கள் பிடுங்கிய வேர்க்கடலையின் அளவைக் கொண்டு எங்களுக்குக் கூலி தருவார். நாங்கள் வேகமாக வேலை செய்ய வேண்டும், இல்லையெனில் முழுநாளின் முயற்சிக்கு எங்களுக்கு 50-60 ரூபாய் கூட கிடைக்காது, என்று லட்சுமியம்மா கூறினார்.*

*இந்த நாட்களில் நீங்கள் அனைவரும் மிகவும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். இல்லையா? என்று நாங்கள் கேட்டோம்.*

ஆமாம், ஆனால் இதுபோன்ற வேலையை ஓராண்டின் ஒரு சில வாரங்கள் மட்டுமே பெறமுடியும். சில சமயங்களில் நாங்கள் அரசின் திட்டப் பணிகளில் வேலையை தேடவேண்டி இருக்கும். இல்லையெனில் வீடுகளில் வேலையின்றி உட்கார்ந்திருக்க வேண்டும், என்று பத்மா கூறினார்.

அரசின் திட்டப் பணிகளில் கூட எங்களுக்கு ஓரிரு வாரங்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கும், என்று ரமா கூறினார்.



படம் 7.1 வேர்க்கடலை அறுவடை செய்தல்

லட்சுமி கூறுகையில், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும், காய் கறிகளுக்கும் துணிகள் மற்றும் பிள்ளைகளின் படிப்புத் தொடர்புடைய பொருட்களுக்கும் கூட விலை ஏறிவிடும் போது எங்கள் கூலி மட்டும் உயர்ந்த பாடில்லை, என்று தெரிவித்தார்.

சாதாரணமாக பெண் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ,100 முதல் ரூ,130 வரை கிடைக்கும். ஆனால் ஆண்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.200-250 கிடைக்கும். அரசு வேலைவாய்ப்பு திட்டங்களில் இருபாலருக்கும் ஒரு நாளைக்கு ரூ.150 கிடைக்கும். விவசாயம்

SCERT TELANGANA

சாராதப் பணிகளுக்கு இன்னும் சிறிது கூடுதலான பணம் கிடைக்கும். ஆண்களுக்கு ரூ.300 முதல் 350ம், பெண்களுக்கு ரூ.200யும் கிடைக்கும். ஆனால், அதுபோன்ற வேலைகள் சிறிய அளவிலேயே உள்ளன.

விவசாயம் சாராத வேலை வாய்ப்பு எங்களுக்கு எங்கே கிடைக்கிறது? அதோடு, ஒரு கட்டுமானப் பணியாளராக ஆக வேண்டுமானால் அது எளிதல்ல. அதற்காக நாங்கள் பெருநகரங்களுக்கும், நகரங்களுக்கும் செல்ல வேண்டியுள்ளது என்றார் பத்மா.

எங்கள் பக்கத்து கிராமங்களில் உள்ள சில விவசாயிகள் பூக்களையும், திராட்சைகளையும் பயிரிடுகின்றனர். தினந்தோறும் பணிக்குச் செல்பவர்களுக்கும் அந்த வேலையைக் கற்றுக்கொண்டவர்களுக்கும் மட்டுமே அங்கு வேலை கிடைக்கும். திராட்சை அல்லது பூந்தோட்டங்களின் சிக்கலான வேலைகளை திடீரென்று நாங்கள் எப்படி செய்ய முடியும்? அதுவும் ஓராண்டில் ஒரு சில நாட்கள் மட்டுமே எவ்வாறு செய்வது? அவர்கள் சிறுவர்களை அங்கு அனுமதிப்பதும் இல்லை. நான் எவ்வாறு குழந்தைகளை விட்டுச்செல்வது? என லட்சுமி மேலும் கூறினார்.

நாங்கள் அரசின் திட்டப்பணிகளுக்கு அதிகமான திறன்கள் தேவைப்படாததால் அவற்றை செய்கிறோம், என்று ரமா கூறினார்.

ரமா, லட்சுமி மற்றும் பத்மாவைப் போல் ஏழைக்குடும்பங்கள் தங்கள் குடும்பங்களை நடத்தத் தேவையான வருவாயை ஈட்ட ஏராளமான சவால்களை எதிர்கொள்கின்றனர். அதோடு மட்டுமின்றி பெண்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தல், உணவு தயாரித்தல், நீர் எடுத்து வருதல், உணவு தயாரித்தல், மற்றும் விறகுகளை கொண்டு வருதல் போன்ற வீட்டுப்பணிகளில் அதிக நேரத்தை செலவழிக் கின்றனர்.

தெலங்கானாவில் சுமார் 2/5 பங்கு குடும்பங்கள் விவசாயக் கூலிகளாக உள்ளனர். இவர்களில் சிலருக்கு மட்டும் சிறிதளவு நிலம் உள்ளது. எஞ்சியவர்கள் நிலமற்றவர்களாக உள்ளனர். விவசாயம் சாராதப் பணிகளில் வருவாய் அதிகமாக இருப்பினும் அதுபோன்ற வேலைகள் கிராமப் புறங்களில் குறைவாகவே உள்ளன. எனவே தான் வெங்டாபுரத்தின் பெரும்பாலான குடும்பங்கள் பெருநகரங்களுக்கும், நகரங்களுக்கும் குடியேறி விடுகின்றன.

- வெங்கடாபுரத்தில் தொழிலாளர்கள் எவ்வகையான வேலைகளைத் தேடுகிறார்கள்
- ஓராண்டின் குடும்பச் செலவுகளை சமாளிக்க தொழிலாளர்கள் எந்தெந்த வழிமுறைகளை கையாளுகின்றனர்?
- பல்வேறு சூழ்நிலைகளில் பெண்களுக்கும் ஆண்களுக்குமான கூலிகளை ஒப்பிடு. இந்த வேறுபாடு ஏன் எழுகிறது என நினைக்கிறாய்?

**வெங்கடாபுரத்தின் சிறு விவசாயிகள் :**

பணியாட்களிடம் நாங்கள் பேசுவதைக் கண்டதும் ரவி எங்களிடம் பேச வந்தார். ரவி, வேர்க்கடலை அறுவடை செய்ய ஓரிரு ஆண் பணியாளர்களையும் பல பெண் பணியாளர்களையும் வேலைக்கு அமர்த்தியுள்ளார். ஆண்கள் பொதுவாக வேர்க்கடலைச் செடியை வேரோடு பிடுங்கவும், ஒன்று சேர்த்து கட்டு கட்டி ஓரிடத்தில் கட்டுகளை எடுத்துச் சென்று வைக்கவும் பயன்படுத்தப்படுகின்றனர். கொடியிலிருந்து வேர்க்கடலைகளை தனியே பிரித்தெடுக்கப் பெண்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

நான் அறுவடைக்கு மட்டுமே கூலியாட்களைப் பயன்படுத்துகிறேன். நான் பொதுவாக மற்ற வேலைகளைச் செய்ய என் குடும்ப உறுப்பினர்களை அல்லது பக்கத்தில் உள்ள விவசாயிகளின் உதவியை பெற்றுக் கொள்வேன். என்று ரவி கூறினார்.

ரவியின் மகளும் வேர்க்கடலையைப் பிடுங்கிக்கொண்டிருந்தார். கல்லூரியின் கட்டணங்களும் மற்ற செலவுகளும் ரவியின் செலுத்தும் திறனுக்கு அப்பால் இருந்ததால் தன் மகளை நகரத்தில் உள்ள கல்லூரிக்கு அனுப்பவில்லை. எனவே அவள் வயல்களில் தற்போது வேலை செய்கிறாள்.

ரவியிடம் 4 ஏக்கர்கள் நிலமும் ஓர் ஆழ்துளை கிணறும் உள்ளது. முன்பு அவர் கிராமத்திலுள்ள ஏரியிலிருந்து நீர்ப்பாசனம் பெற்றார். தற்போது அவருடைய வயல்களுக்கு நீர்ப்பாசனம் எட்டுவதில்லை.

SCERT TELANGANA

ஐந்தாண்டுகளுக்கு முன்பு அவர் ரூ.75,000 கடன்பெற்று ஓர் ஆழ்துளை கிணற்றைத் தோண்டினார். முதல் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஆண்டுக்கு இருமுறை பயிர் செய்தார், கடந்த ஆண்டு முதல் ஆழ்துளை கிணற்றின் நீர் ஒரு முறை பயிரிட மட்டுமே போதுமானதாக இருந்ததால் தற்போது ஒரு பயிரை மட்டுமே பயிரிடுகிறார்.

நான் ஒரு தரகரிடமிருந்து உரங்கள் மற்றும் விதைகளை வாங்க கடன் வாங்கினேன். அவருக்கு கடனை திரும்பச் செலுத்தி இந்த வேர்க்கடலையை சந்தைவிலையை விடச்சற்று குறைவான விலைக்கு தான் அவருக்கு விற்க வேண்டியுள்ளது. அவர் என் உற்பத்தியை அனுப்பிவைக்கும்படி ஏற்கனேவ தொலைபேசியில் பலமுறை கேட்டுவிட்டார்.

நீங்கள் ஏன் வங்கிகளில் கடன் பெறக்கூடாது? என்று நாங்கள் கேட்டோம்.

எங்களுக்கு அவசரமான தேவை இருக்கும்போது வங்கிகள் கடன் தர மிகவும் தாமதம் செய்கின்றன. பல சமயங்களில் நாங்கள் தரகர்கள் அல்லது பணம், கடன் தருபவர்கள் மீது ஆதாரப்படுகிறோம்.

ரவி போன்ற விவசாயிகள் விவசாய உள்ளீடுகளான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை வாங்க கடன் பெற வேண்டியுள்ளது.

விதைகள் நல்ல தரமானவைகளாக இல்லாவிட்டால் அல்லது தகுதியற்ற முறைகளில் உரங்களைப் பயன்படுத்தினாலோ பூச்சிகள் பயிர்களைத் தாக்கி பயிர்களின் விளைச்சல் குறைந்து விடும்.



படம் 7.2 உரத்தை பயன்படுத்தும் விவசாயி

குறைவான விளைச்சலால் விவசாயிகளால் சில நேரங்களில் தங்களின் கடனை திரும்பச் செலுத்த முடிவதில்லை. கடன் தருபவர்களிடமிருந்தும், தரகர்களிடமிருந்தும் அவர்கள் கடன் பெறுவதால் அவர்களின் உற்பத்தியை முன்பே நிர்ணயிக்கப்பட்ட குறைவான விலைக்கு விற்க வேண்டியுள்ளது. அவர்களின் விளைச்சலும் நல்ல விலையைப் பெற்றுத் தருவதில்லை. குடும்பங்கள் நடத்த, மேலும் கடன் பெற வேண்டியுள்ளது. விரைவில் கடன் தொகை அதிகரித்து விடும். எவ்வளவு அவர்கள் சம்பாதித்தாலும் கடனை திரும்பச் செலுத்த இயலாமல் போய்விடும். சில ஆண்டுகளில் பயிர் தவறிவிடுவதாலும் ஒன்று அல்லது மற்ற காரணங்களாலும் தீவிரமான துன்பநிலை ஏற்பட்டு விடும். அண்மையில் சிறு விவசாயிகளின் துன்ப நிலை தீவிரமடைந்து விட்டதால் வேறு வழி தெரியாமல் திகைக்கின்றனர்.

**ஒப்பந்த முறையில் பயிரிடுதல்**

சில விவசாயிகள் இப்பிரச்சனையிலிருந்து விடுபட, சில சிறப்புப் பயிர்களின் உற்பத்தி மற்றும் அளிப்புகளுக்கு குழுக்களிடம் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்கின்றனர். பரவலாக இல்லாவிட்டாலும் தெலங்கானாவின் சில பகுதிகளில் குழுக்கள் விவசாயிகளிடம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு எண்ணெய் வித்துக்கள், அரிசி, வெள்ளரிக்காய்கள் இளநீர், நெல்லிக்காய், மக்காச்சோளம், வேர்க்கடலை, சோயா, அவரை, பருத்தி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களை பயிரிட முற்படுகின்றனர். ஒப்பந்த பயிரிட்டு முறையில் குழுக்கள் விவசாயிகளுக்கு சிறப்பான பயிரிடு முறைகளையும் பின்பற்ற அறிவுரை வழங்குவதோடு பணஉதவியும் செய்கின்றனர். அவர்கள் விளைச்சலை முன்கூட்டியே நிர்ணயித்த விலைக்கு வாங்கி உள்ளவர்களுக்கே வழங்கிய விலைகளை கழித்துக் கொண்டு எஞ்சிய தொகையை விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். கம்பெனிகள் தாங்கள் உருவாக்கும் சொந்த உற்பத்திப் பொருட்களுக்கு இந்த விளைச்சலைக் கச்சா பொருட்களாக பயன்படுத்துகின்றன. சீவல்கள், தக்காளி சாறு அல்லது மருந்துகள் போன்றவை மற்ற நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்கின்றன.

பயிர்களின் உள்ளீடுகளுக்கு முன் பணமும் விலையயையும் உறுதி செய்யப்படுவதால் பெரும்பாலான விவசாயிகள் இந்த ஏற்பாட்டை வரவேற்கின்றனர்.

இருப்பினும் விவசாயிகள் குறைவான விளைச்சல் என்னும் சிக்கலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கம்பெனியில் விரும்பப்பட்ட தரத்திற்கு விளைச்சல் இல்லாமல் போனால் விளைச்சலை குழு வாங்க மறுப்பதன் மூலம் விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்திவிடும். ஒப்பந்த பயிரிட்டு முறையின்கீழ் அதிக விளைச்சலைப் பெற விவசாயிகள் ரசாயன உரங்களையும், நிலத்தின் நீரையும் அளவுக்கதிகமாக பயன்படுத்துகின்றனர். இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து மண்ணின் தரம் குறைந்துவிடுகிறது.

ஒப்பந்தப் பயிரீட்டு முறையில் தங்கள் சொந்த உணவுக்காக பொதுவாக சிறந்த நிலங்களை சிறுவிவசாயிகள் அடிக்கடி பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அவர்களின் வீட்டு உணவுப் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

- சிறு விவசாயிகள் அறுவடைகாலத்தில் மட்டும் கூலியாட்களை வேலைக்கு அமர்த்துவது ஏன்?
- பயிரிடுவதன் மூலம் சிறுவிவசாயிகளால் தங்கள் வீட்டுத் தேவைகளை சமாளிக்க முடிகிறதா?
- சிறு விவசாயிகளும், கூலியாட்களும் கூலிகளை தானியமாகப் பெறுவதற்குப் பதில் பணமாகப் பெற விரும்புவது ஏன்?

## வெங்கடாபுரத்தில் சிறு விவசாயிகளும் கூலியாட்களும்

நாங்கள் ஒரு ஓட்டுவீட்டைக் கண்டோம். அவ்வீட்டின் முன் அறுவடை செய்யப்பட்ட வேர்க்கடலைச் செடிகளைக் கொண்ட ஒரு டிராக்டர் இருந்தது. அவ்வீட்டில் வசிக்கும் ஒரு விவசாயிடம் நாங்கள் பேசினோம். அவர் பெயர் ராமன். அவர் ரவியைப் போன்ற மற்றொரு விவசாயி

“பயிரீட்டு முறை பற்றி அறிய வேண்டுமானால் நீங்கள் ஒரு பெரிய விவசாயிடம் செல்ல வேண்டும்” என்றார் அவர். “நாங்கள் உங்கள் வீட்டின் முன் ஒரு டிராக்டரைக் கண்டதால் உங்களிடம் விவாதிக்க நினைத்தோம்” என்று நாங்கள் கூறினோம்.

“ஓஹோ! அது என்னுடையதல்ல. இந்த ஊரின் பெரிய விவசாயியான விஜயகுமாரிடம் நான் வேலை செய்கிறேன். அவர் என் வயல்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறார். மேலும் எனக்கு பணம் தேவைப்படும் போதெல்லாம் அவரிடம் கடன் பெறுகிறேன்” என்றார்.

**தெலங்கானாவில் சிறு விவசாயிகள்:**

ராமனுக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் பெற ஊரிலுள்ள ஏரியின் மீது ஆதாரப்பட்டுள்ளார். இருந்தாலும் ஒரு சில பெரிய விவசாயிகள் தங்கள் வயல்களுக்கு ஏரி நீரை திருப்பிவிடுவர். ராமன் போன்ற சிறு விவசாயிகளின் நிலங்களுக்கு நீர் செல்வதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன் விஜயகுமாரிடமிருந்து ராமன் கடன் வாங்கி ஆழ்துளை கிணறு ஒன்றை தோண்டினார். 500 அடி ஆழம் தோண்டிய பிறகும் நீர் காணப்படவில்லை. ராமன் தன் வயலுக்கு ஆழ்துளை கிணற்று நீர் கிடைப்பதைப் பற்றி கனவு காண்பதை நிறுத்த வேண்டியதாயிற்று, வாங்கிய கடனை கட்டவேண்டியதாயிற்று. அவர் தன் வயலில் தன் குடும்ப உறுப்பினர்களின் உதவியால் கரீஃப் பருவத்தில் மட்டும் பயிர் செய்கிறார். ரவியைப் போல் அறுவடைக் காலத்தில் மட்டும் சில கூலியாட்களை வேலைக்கு அமர்த்துகிறார்.

வயலிலிருந்து வரும் வருமானம் தன் குடும்பத்தை நடத்த ஓராண்டில் மூன்று மாதங்களுக்கு மேல் போதுமானதாக இல்லாததால் அவர் விஜயகுமாரின் வயல்களில் வேலை செய்கிறார். விஜயகுமார் ராமனின் நெல் வயல்களுக்கு நீரினை வழங்குகிறார். அதற்குப் பதிலாக ராமன் விஜயகுமாரின் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதோடு அவரால் தரப்படும் எந்த முக்கியமான வேலையையும் செய்ய வேண்டும். ராமனால் டிராக்டர் ஓட்ட முடியுமாதலால் டிராக்டர் ஓட்டுநராகவும் அவர் பணியமர்த்தப்பட்டு வயல்களை உழுதல், நெல் மற்றும் பிற பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லுதல் ஆகியப் பணிகளை செய்கிறார். தெலங்கானாவில் ஒவ்வொரு ஐந்து விவசாயிகளிலும் நால்வர் ரவியையும், ராமனையும் போன்றவர்களே. அவர்களுக்கு மிகச்சிறிய அளவிலேயே நிலமும் நீர்ப்பாசன வசதிகளும் உள்ளன. அவர்களுக்குக் கடன் அதிகமாக தேவைப்படுவதால் பணக்கார விவசாயிகளையும் **கடன் தருபவர்களையும் அல்லது தரகர்களையும்** தேடிச் செல்ல வேண்டியுள்ளது. அவர்கள் தங்கள் உற்பத்தியைக் குறைந்த விலைக்கு விற்கக் கட்டாயப்படுத்தப் படுகின்றனர். அவர்கள்



SCERT TELANGANA

தங்களுடைய இரட்டிப்பு விளைவுகளை சமாளிக்க மற்றவர்களின் வயல்களில் வேலை செய்ய வேண்டியுள்ளது.

- ராமனால் ஓராண்டில் இரண்டு அல்லது மூன்று முறை பயிரிட முடிவதில்லை ஏன்?
- சிறு விவசாயிகள் பெரிய விவசாயிகளின் மீது எவ்வாறு ஆதாரப்பட்டுள்ளனர்? ராமனுடைய நிலையினை எடுத்துக் காட்டுகளுடன் தருக.
- ரவி மற்றும் ராமனின் நிலைகளில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் யாவை?
- சிறு விவசாயிகள் வங்கிகளிடமிருந்து எளிதில் கடன் பெற முடியாதது ஏன்?

**ஒரு பெரிய விவசாயியுடன் உரையாடல்**

ராமன் தன் முதலாளியான விஜயகுமாரிடம் எங்களை அழைத்துச் சென்றார். விஜயகுமாரின் வீட்டைச் சுற்றி ஒரு பெரிய சுற்றுச் சுவரும், உள்ளே ஒரு நெல் அறுவடை செய்யும் இயந்திரமும், ஒரு தூற்றும் இயந்திரமும், ஒரு ஏர் உழும் டிராக்டரும் இருந்தன.

கூலியாட்கள் வேர்க்கடலைச் செடிகளை டிராக்டரிலிருந்து சுமை இறக்கிக் கொண்டிருந்தனர், ஒரு கூரைவேயப்பட்ட தொழுவத்தில் 10-15 பெண்கள் வேர்க்கடலைகளை செடியிலிருந்து வேறுபடுத்திக் கொண்டிருந்தனர். இந்த ஆண்டில் வேர்க்கடலையில் நல்ல விளைச்சல் இருந்தது என விஜயகுமார் எங்களிடம் கூறினார்.

“இதை எப்போது நீங்கள் விற்பீர்கள்?” “இப்போது இல்லை, நான் இவற்றை சில வாரங்கள் உலர்த்திய பிறகு விற்பேன்” என்று விஜயகுமார் கூறினார்.

விஜயகுமாருக்கு தன் விளைச்சலை உலர்த்தப் பெரிய நெற்களம் உள்ளது. அவருக்கு தன் நெல், உர மூட்டைகள் மற்றும் பிற விவசாயக் கருவிகளை போட்டு வைக்க கிடங்கு போன்ற பெரிய அறையும் உள்ளது.



படம் 7.3 விஜயகுமாரின் வீடு

SCERT TELANGANA

“அறுவடை செய்த புதிய வேர்க்கடலை அக்காலத்தில் குறைவான விலைக்கு விற்பதால் நான் பொதுவாக அதை உலர்த்தி ஒரு சில மாதங்கள் கழித்து விற்பேன். வியாபாரிகள் உலர்த்தப்பட்ட வேர்க்கடலையை உயர்ந்த விலைக்கு வாங்கிக்கொள்வர்” என்று விஜயகுமார் கூறினார்.

விஜயகுமாரிடம் 25 ஏக்கர் நிலமும், மூன்று ஆழ்துளை கிணறுகளும் உள்ளன. அவருடைய நெல்வயல்கள் கிராமத்து ஏரியின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளன. அவர் அறுவடை இயந்திரமும், தூற்றும் இயந்திரத்தையும் வாங்க ஒரு வங்கியிலிருந்து ரூ.25 லட்சம் கடன் பெற்றார். இவற்றை மற்ற விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுகிறார். வெங்கடாபுரத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள பல விவசாயிகள் இந்த கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். அவர் முர்ரா வகை எருமைகளால் பெறும் பா-னால் கூடுதலான வருவாயை ஈட்டுகிறார். அவருக்கு ஒரு உர அங்காடியும் உள்ளது. இந்த அனைத்து வருவாய்களையும் கொண்டு விஜயகுமாரால் பல விவசாய எந்திரங்களை வாங்கவும், ஆழ்துளை கிணறுகள் தோண்டவும், பிற சிறு விவசாயிகளிடமிருந்து நிலம் குத்தகைக்கு பெறவும் முடிகிறது. அவர் சிறு விவசாயிகளுக்கும், கூலியாட்களுக்கும், தேவையான நேரத்தில் கடன் தருவதால் அவருடைய வயலில் வேலை செய்ய கூலியாட்களை எளிதில் பெற முடிகிறது. விஜயகுமாருக்கு, அருகில் உள்ள நகரத்திலும் ஒரு வீடு உள்ளது. அதில் அவருடைய மனைவியும், குழந்தைகளும் வாழ்கின்றனர்.

எங்களுடைய பேச்சைக் கேட்டதும் விஜயகுமாரின் 75 வயது தந்தையார் வெளியில் வந்து எங்களுடன் விவாதத்தில் கலந்து கொண்டார்.

“இந்த நாட்களில் விவசாயம் செய்வது பயனுடையதாக உள்ளது என்று பேசுவதில் யாதொரு பயனுமிருப்பதாக நான் கருதவில்லை”. என்று கூறினார். “முன்பெல்லாம் நாங்கள் சிறிய அளவிலேயே உரங்களையும், பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்தினோம். விளைச்சல் குறைவாக இருப்பினும் நிலத்தடி நீர் மட்டம் நிலைத்ததாக இருந்தது. என் வயல்களில் எந்தப் பயிரும் தவறியதாக எனக்கு நினைவில்லை. தற்போது நாம் அதிக அளவில் உரங்களையும் பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்துகிறோம். மேலும் நிலங்களை உழ டிராக்டர்களைப் பயன்படுத்துகிறோம் எங்களுடைய சொந்த அறுவடை இயந்திரங்களையும் நெல்லை பிரிக்க பயன்படும் இயந்திரங்கள் பயன்படுத்தி வருகிறோம். இருப்பினும் விளைச்சல் அதிகரிப்பதில்லை. எங்களுடைய பெரும்பாலான சுற்றத்தார்கள் பயிர்கள் தவறுவதால் வருந்துகின்றனர்”.



படம் 7.4: பருத்தி வயல்

- சிறு விவசாயிகள் குறைவான விலைக்கு விற்கும்போது விற்பதற்கு முன் உயர்வான விலைக்கு காத்திருக்க விஜயகுமாரால் எவ்வாறு முடிகிறது?
- விஜயகுமாரின் விவசாயக் கருவிகளை பட்டியலிடு. எவ்வகையான விவசாயிகள் அதுபோன்ற கருவிகளைப் பெற முடியுமா?
- விஜயகுமாரின் வருமானத்திற்கான அனைத்து மூலங்களையும் பட்டியலிடு.
- கடந்த காலத்தில் இருந்ததைப் போன்று பயிர் செய்வது தற்போது சிறப்பாக இல்லை என்னும் விஜயகுமாரின் தந்தையின் கருத்தினை நீ ஏற்கிறாயா? உன்னுடைய காரணங்களைக் கூறு.

CERT TELANGANA

## தெலங்கானாவில் விவசாயம் :

சில ஆண்டுகளாக, தெலங்கானா விவசாயத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நெல் முக்கிய பயிராக இருந்தாலும், கம்பு, கேழ்வரகு மற்றும் மக்காச் சோளம் ஆகியவைக் குறைந்து அவற்றின் இடத்தில் பணப்பயிர்களான பருத்தி, கரும்பு, வேர்க்கடலை, மஞ்சள், மிளகாய் போன்றவை வந்துவிட்டன. இந்த அனைத்து பயிர்களுக்கும் விதைகள், நீர், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்ற வடிவில் முதலீடு தேவைப்படுகிறது. இவற்றிற்காக விவசாயிகள் கடன்கள் வாங்க வேண்டியுள்ளது.

சில பத்தாண்டுகளுக்கு முன் விவசாயிகள் தங்கள் நிலங்களின் நீர்ப்பாசனத்திற்கு ஏரிகள் மற்றும் கால்வாய்கள் மீது ஆதாரப்பட்டிருந்தனர். தற்போது தெலங்கானாவில் பாதிக்கு மேலான நிலங்கள் ஆழ்துளை கிணற்றின் மீது ஆதாரப்பட்டள்ளன. இதன் விளைவால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து மழைப்பொழிவின் மீது ஆதாரப்படுவது அதிகரித்துள்ளது.

இவை அனைத்தும் சிறு விவசாயிகளையும் பயிர் தவறுதல்களால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவர்களாக ஆக்கியுள்ளன. அவர்களால் வாங்கிய கடனை கட்ட முடியவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் நிலங்களை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டு நகரங்களில் குடியேறுகின்றனர். இன்றைய காலங்களில் ஐந்தில் நால்வர் இத்தகைய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

தற்போது மாறாக பெரிய விவசாயிகளால் புதிய கருவிகள் மற்றும் விவசாய உற்பத்திகளுக்கான வளர்ந்து வரும் சந்தைகள் போன்றவற்றின் மூலம் நன்மை அடைய முடிகிறது. அவர்கள் தற்போது தங்களுடைய முதலீடுகளை பால் பண்ணைகள், கோழிப்பண்ணைகள், கடைகள், பள்ளிகள் போன்றவற்றை அமைக்கவும் கடன் தருவதிலும் மாற்றி வருகின்றனர்.

விவசாயக் கூலியாட்கள் கிராமப் புறங்களில் போதுமான வேலை கிடைப்பதுமன்றி தக்க கூ-களும் உயரவில்லை. அரசாங்க வேலைவாய்ப்பு திட்டங்களின் மூலம் சிறிது ஆறுதல் கிடைத்தாலும், ஓராண்டில் சில நாட்கள் மட்டுமே வேலை கிடைக்கிறது. வேலைதேடி நகர்ப்புறங்களுக்கு குடியேற வேண்டியுள்ளது.

### முக்கிய சொற்கள்

| | |
|---|---|
| விவசாயக் கூ-யாட்கள் | ஒப்பந்த பயிரிடுமுறை |
| சிறு விவசாயிகள் | கரீஃபருவம் |
| குடியேறுதல் | பணப்பயிர்கள் |
| கடன் தருபவர்கள் | பூச்சிக் கொல்- மருந்து |

## உனது கற்றலை மேம்படுத்துக

1. வெங்கடாபுரத்தின் விவசாயிகளுக்கு அரசாங்கம் எவ்விதத்தில் உதவி செய்து குடியேறுவதைத் தடுக்க முடியும் என்று நீ நினைக்கிறாய்?(AS6)
2. கீழ்காணும் அட்டவணையை நிரப்பு(AS3)

| நபர் | சாதாரண காலத்தில் கூலிகள் | அறுவடை காலத்தில் கூலிகள் | விவசாயம் சாராத வேலைகளில் கூலி | அரசுத்திட்டங்களில் வழங்கப்படும் கூலிகள் |
|---|---|---|---|---|
| ஆண் | | | | |
| பெண் | | | | |

SCERT TELANGANA

3. உங்கள் கிராமத்தில் உள்ள ஒரு பெரிய விவசாயின் நிலையை வெங்கடாபுரத்திலுள்ள விஜயகுமாரின் நிலையுடன் ஒப்பிடு.(AS1)

4. வெங்கடாபுரத்தில் வங்கிக் கடனைப் பெற்றவர் யார்? எதற்காக பெற்றார்?(AS1)

5. விவசாயிகளுக்கு வங்கிகளும், கடன் வழங்குபவர்களும் எவ்வாறு கடன் தருகிறார்கள்?(AS1) கடன் வழங்குபவர்களிடமிருந்து கடனை வாங்குவது நன்மைதரக் கூடியது என நீ நினைக்கிறாயா?(AS4)

6. விவசாயிகளின் நிலைமைகளை எவ்வாறு மேம்படுத்த முடியும்?(AS6)

7. வெங்கடாபுரத்திலுள்ள மூன்று விவசாயிகளை ஒப்பிட்டு விவரங்களையக்கொடு.(AS1)

| வ.எண். | பொருள் | ரவி | ராமன் | விஜயகுமார் |
|---|---|---|---|---|
| 1 | நிலத்தின் அளவு (ஏக்கரில்) | | | |
| 2 | நீர்ப்பாசன ஆதாரம் | | | |
| 3 | விவசாயக் கருவிகள் | | | |
| 4 | உரத்தின் பயன்பாடு | | | |
| 5 | வேர்க்கடலை விற்கும் முறை | | | |
| 6 | மற்ற பணிகள் | | | |

8. சிறு மற்றும் இறுதிநிலை விவசாயிக்ள எதிர் கொள்ளும் சிக்கல்களைப் பற்றிய செய்திகளை சேகரிக்கவும். அவர்களின் சிக்கல்களைத் தீர்ப்பதில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?(AS3)

9. தற்காலத்தில் அனைத்து விவசாயிகளும் உணவுப் பயிர்களுக்குப் பதிலாக பணப்பயிர்களுக்கு முன்னுரிமை தருகின்றனர். இது ஏதேனும் பிரச்சனைகளுக்கு வழிவகுக்குமா?(AS4)

10. உங்கள் பாடநூ-ல் உள்ள பக்கம் 59ல் உள்ள ஒப்பந்த பயிரிடுமுறையை படித்து கருத்து தெரிவிக்கவும்.(AS2)

11. அட்லாஸ் புத்தகத்தின் உதவியைக் கொண்டு இந்தியாவில் வேர்க்கடலைவிளையும் பகுதிகளை குறித்துக் காட்டவும்.(AS5)

**செயல்திட்டம் :**

1. உன் ஆசிரியரின் உதவியுடன் ஒரு சிறு வியாபாரிடமும், ஒரு பெரிய விவசாயிடமும் நேர்காணல் நடத்து, அவர்களின் பயிரிட்டு முறையிலுள்ள நிலைகளைக் குறித்து கண்டறி – எத்தனை ஏக்கர் நிலத்தில் அவர்கள் சாகுபடி செய்கின்றனர், அவர்கள் எந்த பயிர்களை வளர்க்கின்றனர், அவர்கள் எவ்வாறு விற்கின்றனர், என்ன சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பது போன்ற நிலைகளைக் குறித்து ஆராய்க. இந்நிலைகளை வெங்கடாபுரத்தில் நாம் கண்டவற்றோடு ஒப்பிடுக.

2. ஒரு பெரிய நகரத்தில் உங்கள் பள்ளி அமைந்திருக்கும் பட்சத்தில் உங்கள் தெரு அல்லது உங்கள் காலனியில் உள்ள குடும்பங்களின் தொழில்களின் பட்டியலைத் தயார் செய், அவற்றை சுயமாக வேலை செய்பவர்கள், சாதாரண கூலியாட்கள் மற்றும் சீரான சம்பளம் பெறுபவர்கள் என்று மூன்று வகுப்புகளாக வகைப்படுத்து, விவரங்களை உன்னுடையில் வகுப்பில் விவாதி.

SCERT TELANGANA

அத்தியாயம்

# 8

பகுதி - அ

# விவசாய உற்பத்தியின் வணிகம்

SCERT TELANGANA

தினந்தோறும் நாம் அனைவரும் அரிசி, தினைகள்,பருப்புகள், காய்கறிகள்,பழங்கள், பால், சாக்கரை, தேநீர், காபி போன்றவற்றை பயன்படுத்துகிறோம். இவற்றில் பெரும்பாலான பொருட்கள் கிராமங்களில் உள்ள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன. பல்வேறு வழிகளில் நம்மை வந்தடைகின்றன. தினந்தோறும் நாம் பயன்படுத்தும் பொருட்களின் பெயர்களை கீழ்காணும் பட்டியலில் நிரப்பிக் காட்டுங்கள்.அப்பொருட்கள் நமக்கு எங்கிருந்து கிடைக்கின்றன என்பதையும் எழுதுங்கள்.

| வ.எண். | வகைகள் | பொருட்கள் | இவற்றை நாம் எங்கிருந்து பெறுகிறோம் |
|---|---|---|---|
| 1. | உணவு தானியங்கள் | | |
| 2. | பருப்புகள் | | |
| 3. | எண்ணெய் | | |
| 4. | வாசனைப்பொருட்கள் | | |
| 5. | காய்கறிகள் | | |
| 6. | பழங்கள் | | |
| 7. | சர்க்கரை | | |
| 8. | தேநீர் / காபி | | |

மக்கள் விவசாயப் உற்பத்தி பொருட்களை சிறு வியாபாரிகள் சந்தைகள் மற்றும் சிறு கடைகளில் இருந்து பெறுகின்றனர். சமீப காலத்தில் விவசாயிகள் தங்கள் காய்கறிகள் மற்றும் பழங்களை உழவர் சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.இந்த அத்தியாயத்தில் இவை எவ்வாறு இயங்குகின்றன என்பதை குறித்து கற்போம்.

## தெருக்களில் காய்கறிகள் விற்பனை

கௌரி என்னும் பெண் ஒரு சிறிய காய்கறி வியாபாரி அவள் ஸ்ரீ புரம் என்னும் கிராமத்தில் வசிக்கிறாள். அவர் அந்தந்த பருவ காலங்களில் கிடைத்திடும் காய்கறிகளை சமீபத்தில் உள்ள மொத்த விற்பனை காய்கறி சந்தையில் கொள்முதல் செய்து கூடையில் நிரப்பி தலைமீது சுமந்து கொண்டு தெருக்களில் திரிந்து விற்பனை செய்கிறார்.

அவள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அங்கு வசிப்பவர்களிடம் காய்கறிகள் தேவையா என்று கேட்டு விற்பனை செய்கிறார். அக்கிராமத்தில் கௌரியை போலவே மேலும் இரண்டு (அ) மூன்று பெண்கள் காய்கறி வியாபாரம் செய்கின்றனர்.

கௌரி தினந்தோறும் தன்னுடைய கிராமத்தில் இருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்படுவார். அவள் நகரத்தில் உள்ள மொத்த காய்கறி சந்தைக்கு சென்று காய்கறிகளை கொள் முதல் செய்கிறார். நகரத்திற்கு சென்று திரும்பி வர அவளுக்கு 25 ரூபாய் போக்குவரத்து செலவாகிறது.

கௌரி தான் வாங்கி வந்த எல்லா காய்கறிகளையும் வீட்டில் இருப்பு வைத்திருப்பார். அதில் ஒரு கூடை அளவு காய்கறிகளை




*படம் 8.1 கௌரி தன் தலையின் மீது காய்கறிகளை சுமந்து வருகிறார்.*

நிரப்பிக் கொண்டு சென்று விற்பார். அதிலுள்ள காய்கறிகளை விற்பனை செய்தவுடன் திரும்பவும் வீட்டிற்கு சென்று கூடையை நிரப்பிக் கொண்டு வியாபாரத்தை தொடர்வார். இவற்றிற்கிடையே சமைப்பது, குழந்தைகளுக்கு ஊட்டிவிடுவது மற்றும் இதர வீட்டு வேலைகளை செய்வார். சில நாட்கள் உடல் நலமில்லா சமயங்களில் வீட்டிலேயே ஓய்வு எடுப்பார்.

வாடிக்கையாளர்களிடமிருந்து அவள் எவ்வளவு பெறுவாள்? உதாரணமாக அவள் தக்காளியை 10 கிலோ ரூ.100க்கு வாங்கினால் அதனை கிலோ ரூ.15 வீதம் விற்பாள். ஆனால் அனைத்து தக்காளியையும் ரூ.15க்கு விற்க முடியாது. தக்காளி அதிகம் பழுத்திருந்தால் அவற்றை ரூ.10க்கு விற்க வேண்டும். வீணாவதை தடுக்க ரூ.5க்கும் விற்க வேண்டிவரும். காலை ரூ.15க்கு விற்று மாலை அவற்றை ரூ.8/9க்கு கிலோ தக்காளி விற்க வேண்டிவரும். ஆக மொத்தம் ஒரு நாளைக்கு அவளால் ரூ.100/150 மட்டுமே சம்பாதிக்க முடியும். அது அன்றாட தேவைக்கு போதுமானதல்ல.

- கௌரி தனது வருவாயை அதிகரிக்க 1 கிலோ தக்காளியை 20 ரூபாய்க்கு விற்பனை செய்வார் என்று நீ கருதுகிறாயா?

கௌரி தனக்கு வந்த வருவாயில் ஒரு பகுதியை அடுத்த நாள் பொருட்களை கொள்முதல் செய்திட வைத்துக்கொள்வாள்.

இல்லையென்றால், அவள் வட்டிவியாபாரி சுய உதவி குழுக்கள் அல்லது மொத்த வியாபாரியிடம் இருந்து கடன் வாங்க வேண்டியிருக்கும் அவளுக்கு கடன் தருவதற்கு அவர்கள் மறுத்ததில்லை. ஆனால் அவர்கள் விதிக்கும் காலவரம்பு மற்றும் விதிமுறைகள் கடினமாக இருக்கும், உதாரணத்திற்கு, வட்டி வியாபாரி (அ) மொத்த வியாபாரியிடம் இருந்து 500 ரூபாய் கடன் வாங்கியிருந்தால், அவர்கள் 450 ரூபாய் தான் கொடுப்பார்கள். மறுநாள் அவர்களுக்கு 500 ரூபாயை திரும்ப செலுத்தி விட வேண்டும். அவளுக்கு தவிர்க்க முடியாத பிரச்சனை ஏற்பட்டு, அன்றைக்கே எல்லா காய்கறிகளையும் விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அவை கெட்டுப்போய் குறைவான விலைக்கு விற்க வேண்டியிருக்கும்.

நம் மாநிலத்தில் உள்ள ஆயிரக்கணக்கான நடமாடும் வியாபாரிகளில் கௌரியும் ஒருவள் நகரங்களில் பெரும்பாலான வியாபாரிகள் நகராட்சி அல்லது தனியாரிடம் இருந்து கடைகளை வாடகைக்கு பெற்று நிரந்தரமாக ஒரே இடத்தில் வியாபாரம் செய்கின்றனர். வேறு சிலர் நடை பாதைகள் மீது கடைகள் வைத்து வியாபாரம் செய்கிறார்கள், அதற்கு நகராட்சி மன்றத்திற்கோ அல்லது ஊராட்சி மன்றத்திற்கோ சிறிதளவு கட்டணம் செலுத்துகின்றனர்.

கௌரியை போன்ற நடமாடும் வியாபாரிகள் பல்வேறு வாழ்க்கை பிரச்சனைகளை எதிர்கொண்டு, தொடர்ச்சியாக கடனாளிகளாக வாழ்ந்து வருகின்றனர். வட்டி வியாபாரிகளிடம் இருந்து கடன் வாங்கி, வியாபாரம் செய்கின்றனர். கடனையும், வட்டியையும் சேர்த்து திரும்ப செலுத்தும் போது அவர்களது வருவாயில் பெரும் பகுதி போய் விடுகிறது.

பொதுவாக வங்கிகள் இது போன்ற சிறு வியாபாரிகளுக்கு கடனை தருவதில்லை. இரண்டாவதாக, விற்கபடாத காய்கறிகளை பாதுகாத்து வைத்திட குளிர்சாதன பெட்டிகள் இவர்களிடம் கிடையாது. எனவே, அவ்வாறு மீதமாகும் காய்கறிகளை அடுத்த நாள் குறைவான விலைக்கு விற்க வேண்டியுள்ளது. இதற்கு மாறாக, பெரிய வியாபாரிகளிடம் குளிர் சாதன சேமிப்பு வசதிகள் (அல்லது) கிடங்குகள் உள்ளன. வங்கிகளிடம் இருந்து குறைந்த வட்டிக்கு கடனுதவியை அவர்கள் பெற முடிகிறது.

- வட்டி வியாபாரிகள் கடனை தருவதற்கு விதிக்கும் விதிமுறைகள் யாவை?
- நிரந்தரமான கடைகளை கொண்ட பெரிய வியாபாரிகளுக்கு மட்டும் வங்கிகள் கடனை தருவதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

SCERT TELANGANA

◆ கௌரியை போன்ற நடமாடும் வியாபாரிகளுக்கு அரசாங்கம் எந்தெந்த வழிகள் மூலம் உதவி செய்ய முடியும் என்று நீ கருதுகிறாய்?

**வாரச்சந்தை :**

நகரத்தின் பல்வேறு பகுதிகள் (அ) பல்வேறு சிறு நகரங்களில் வாரத்திற்கு ஒரு நாள் நடத்தப்படும் சந்தைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா?இப்படிப்பட்ட சந்தைகளை வாரச் சந்தைகள் என்பர். வியாபாரிகள் தங்களுடைய பொருட்களை விற்பனை செய்திட ஒரு சந்தையில் இருந்து மற்றொரு சந்தைக்கு செல்வர். இச்சந்தை வியாபாரிகள் தங்களுக்கு தேவையான சரக்குகளை நகரங்களிலுள்ள மொத்த வியாபாரிகளிடம் இருந்து கொள் முதல் செய்து பெருமளவு மக்களுக்கு அவை சேருமாறு செய்கின்றனர். இந்தியாவில் இப்படிப்பட்ட சந்தைகள் 25,000 மேல் இருக்கின்றன என்பது உங்களுக்கு தெரியுமா? அவை கிராமங்கள் மற்றும் நகர் புறங்களிலும் செயல்படுகின்றன. நம் தெலங்கானாவில் உள்ள சந்தைகள் குறித்து சில விவரங்கள் தெரிந்து கொள்வோம்.

**சௌட்டுப்பல் நகரத்தின் ஞாயிற்றுக் கிழமை சந்தை**

சௌட்டுப்பல் யாதாத்ரி மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரம். சௌட்டுப்பல் சந்தை ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் வேலை செய்யும். இச்சந்தையில் 200க்கும் மேற்பட்ட வியாபாரிகள் காய்கறிகள்,பழங்கள், ஆடைகள், மாமிசம், மீன், கருவாடு, கையால் செய்யப்பட்ட மற்றும் ரெடிமேட் காலணிகள், அழகுசாதனப்பொருட்கள், கயிறுகள், கால் நடை வளர்ப்புக்கு தேவையான உபகரணங்கள் அரிவாள்கள் முதலியவற்றை தயாரித்து விற்கின்றனர். இங்கு எருமைகள்,ஆடுகள், செம்மறி ஆடுகள், போன்றவற்றையும் விற்பனை செய்கின்றனர். 40 கிராமங்களில் இருந்து மக்கள் பொருட்களை வாங்கிட இந்த சௌட்டுப்பல் சந்தைக்கு வருகின்றனர்.

சௌட்டுப்பல் சந்தையில் கால்நடைகளை விற்கவும், மளிகை சாமான்கள் மற்றும் திண்பண்டங்களை விற்கவும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும்.

இச்சந்தையில் காய்கறிகளை விற்கும் ஒவ்வொரு வியாபாரிக்கும் நிலையாக ஒரு குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்பட்டு இருக்கும். விலங்குகளை விற்கும்பகுதியில் அவற்றை கட்டிவைக்க கொட்டகைகள் வசதியும் செய்து தரப்பட்டிருக்கும்.



படம் 8.2 சந்தையின் தோற்றத்தை காட்டும் படம்

SCERT TELANGANA

**இந்திரா - உலர்ந்த மிளகாய் விற்பனையாளர்:**

இந்திரா 36 வயதுடைய பெண். அவள் பல ஆண்டுகளாக சந்தையில் உலர்ந்த மிளகாயை விற்று வருகிறார்.அப்பெண் சொட்டுப்பல் என்னுமிடத்தில் இருந்து 50கி.மீ தூரத்தில் உள்ள கட்டங்கூர் கிராமத்தில் வசிக்கின்றார். அப்பெண் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறார். அப்பெண்ணின் மகனும்,மகளும் அரசாங்க பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள் இவ்வியாபாரத்தை தன்னுடைய அப்பாவிடம் இருந்து கற்றுக் கொண்டார். இந்திராவின் கணவரும் இதே வியாபாரத்தை செய்கிறார். ஒரு வாரத்தில் இவள் நான்கு வாரச் சந்தைகளுக்கும் மூன்று பெரிய கிராமங்களுக்கும் சென்று உலர்ந்த மிளகாயை விற்பனை செய்கிறார். இவளுடைய ஒரு வார பயண திட்டம் கீழே தரப்பட்டுள்ளது.







இந்திரா தினந்தோறும் அதிகாலையில் எழுந்து, வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு அன்றைக்குச் செல்ல வேண்டிய சந்தை (அ) கிராமத்திற்கு புறப்படுவார். அவர் உலர்ந்த மிளகாய் மூட்டைகளை கொண்டு சென்று காலை 10 மணிக்கு விற்பனையை தொடங்கி மாலை 7 மணிக்கு முடித்து கொள்வார்.

இந்திராவும் அவளுடன் சேர்ந்து சில பெண்களும் மிளகாய் மூட்டைகளை லாரி (அ) வேன் (அ) ஆட்டோவை வாடகைக்கு பேசி சந்தைக்கு சேர்த்திடுவர். இந்திரா தன் வியாபாரத்திற்கு தேவையான மிளகாய் மூட்டைகளை கம்மம் நகரத்தில் உள்ள மொத்த வியாபாரியிடம் இருந்து கொள்முதல் செய்கிறார். தொலைபேசி மூலம் வியாபாரியிடம் பேசி தனக்கு தேவையான மிளகாயை வாங்குகிறார். ஒவ்வொரு சனிக்கிழமையும் மொத்த வியாபாரி அவளது கிராமத்திற்கு வந்து பணத்தை வாங்கிக் கொண்டுச் செல்வார்.

சந்தையில் மிளகாயை விற்கும் போது மற்ற எல்லா வியாபாரிகளைப் போலவே இந்திரா நீண்ட நேரம் தரையில் உட்கார்ந்து இருப்பாள். இவ்வியாபாரம் மிகுந்த சிரமத்துடன் கூடிய வேலை. ஒரு வாரத்தில் ஆறு நாட்கள் அவள் தன் கிராமத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்ய வேண்டியுருக்கும், வாரத்தில் ஒரு நாள் மட்டும் தன் சொந்த கிராமத்தில் கடை வைத்து வியாபாரம் செய்கிறார். அந்த நாளில் மொத்த வியாபாரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை செலுத்துகிறார்.

இந்திரா ஒரு நாளைக்கு 200 முதல் 300 ரூபாய் வரை சம்பாதிக்கிறாள்.எல்லா சமயங்களிலும் நல்ல தரமான மிளகாய், மொத்த வியாபாரியிடம் இருந்து கிடைக்கும் என்ற உத்திரவாதம் இருக்காது. அவள் தொலைபேசி மூலம் தனக்கு வேண்டிய சரக்கை வாங்குவதால் ஒவ்வொரு மூட்டைகளையும் பரிசீலித்து வாங்க முடியாது. சில சமயங்களில் தரம் குறைந்த மிளகாய் அனுப்பபடும் போது நஷ்டம் ஏற்படுகிறது.

இந்திரா தனது வியாபாரத்தை தொடர்ந்து நடத்திட,அவள் உறுப்பினராக சேர்ந்துள்ள சுய உதவிக்குழுவிடம் இருந்து 30,000/- ரூபாய் கடன் பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு மாதமும் 1200 ரூபாய்களை மாத தவணை முறைப்படி கடனை திருப்பி செலுத்தி வருகிறாள். நூறு ரூபாய்களுக்கு மூன்று ரூபாய் வட்டி வீதம், வட்டி வியாபாரியிடம் கடன் வாங்குவதை விட குறைந்த வட்டிக்கு சுய உதவி குழுவிடம் கடன் பெறுவது மிகவும் நல்லது என்று இந்திரா கருதினாள். சுய உதவிக் குழுவில் வாங்கிய கடனுக்கு 25 பைசா மட்டுமே வட்டியாக செலுத்துகிறாள். அரசாங்கத்தின் குறைந்த வருவாய் உடையோருக்கான 25பைசா வட்டி திட்டத்தால் இது சாத்தியமாயிற்று.

SCERT TELANGANA

விவசாய உற்பத்தி பொருட்களான மிளகாய் போன்றபொருட்களோடு தொழிற் சாலையில் உற்பத்தி செய்யப்படும் துணி, ஆயத்த ஆடைகள், டார்ச்விளக்குகள், தீப்பெட்டிகள், பாத்திரங்கள், கருவிகள், பிளாஸ்டிக் பொருட்கள், குடங்கள், போன்றவற்றையும் சிறு வியாபாரிகள் சந்தைகளில் விற்கின்றனர். சந்தையில் வியாபாரம் செய்வதற்காக ஒவ்வொரு வியாபாரியும் நகராட்சி மன்றத்திற்கு கட்டாயமாக 10 ரூபாய் கட்டணம் செலுத்துகின்றனர், கால் நடைகளான பசுக்களும், எருதுகள், செம்மறி ஆடுகள், ஆடுகள், போன்ற வற்றை விற்கும் சிறப்பு சந்தைகள் உள்ளன.மிக தொலைவான இடங்களில் இருந்தும் பக்கத்து கிராமங்களில் இருந்தும் அவற்றை கொண்டு வருகின்றனர். விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் கால் நடைகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் அச்சந்தைக்கு வருவர். இதற்காக கால்நடை சந்தையில் தரகர்களின் உதவியோடு விலங்குகளை விற்றல்(அ) வாங்குதல் பரிமாற்றங்களை செய்திடுவர். இச்செயல்களுக்காக இடைத்தரகர்களுக்கு தரகுத் தொகை தரப்படுகிறது.

சந்தையில் உள்ள வியாபாரிகளில் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கினர் பெண்கள் ஆவர் சந்தையில் பொருட்களை விற்பதை பரம்பரை வியாபாரமாக பல வியாபாரிகள் கொண்டிருக் கின்றனர். அதாவது அவர்களுடைய குடும்பங்கள் பல தலைமுறைகளாக சந்தை வியாபாரத்தை செய்கின்றனர் என்று பொருள். சந்தையில் பெரும்பாலான இடங்கள், ஒரு குறிப்பிட்ட வியாபாரிகளுக்கே முன்பதிவு செய்யப்படுகின்றன.

வேறு எந்த வியாபாரிகளும் அங்கு கடைகள் ஏற்பாடு செய்து கொள்ள முடியாது. பெரும்பாலான இவ்வியாபாரிகள் வாரச் சந்தைகளையே தேர்ந்தெடுத்துக் கொள்வர் அதாவது வாரத்திற்கு ஒருமுறை அந்த இடங்களில் கடைசெய்து வியாபாரம் செய்கின்றனர். பல்வேறு சந்தைகளிலும் வாரத்திற்கு ஒரு முறை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வாணிபம் செய்கின்றனர். அவர்கள் வசதிக்கு ஏற்றவாறு எந்தெந்த சந்தைகளுக்கு எந்தெந்த நாட்களில் சென்று வியாபாரம் செய்ய வேண்டும் என்று வாரந்தோறும் பயணத் திட்டத்தை வகுத்துக் கொள்கின்றனர்.

சிறு வியாபாரிகள் விவசாய உற்பத்தி பொருட்களான பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற விரைவில் கெட்டுப் போகும் பொருட்களை விற்கின்றனர். இவர்கள் கூட கௌரியை போன்று பல்வேறு கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர் அவர்களுக்கு பொருட்களை பாதுகாத்து வைக்கும் வசதிகள் கிடையாது. அவர்களுடைய இருப்பிடங்கள் சந்தைகளில் இருந்து வெகு தொலைவுகளில் இருப்பதால் மொத்த சந்தையில் வாங்கியவற்றை முழுவதுமாக விற்க வேண்டி உள்ளது. சந்தை வியாபாரிகள் அவர்களுடைய சரக்குகள் அனைத்தையும் வீடுகளில் வைத்துக் கொள்வர். விரைவில் அழுகும் பொருட்களை மாலை நேரத்திற்குள் விற்க முடியாமல் போனால் திரும்பவும் வீட்டிற்கு எடுத்து சென்றால் போக்குவரத்து செலவு வீணாகும்.

சில சமயங்களில் அவர்களுடைய பொருட்களை கொள்முதல் விலையை விட குறைவாக விற்று விடுகின்றனர். அதிகமான நஷ்டம் ஏற்படமால் இருக்க அவர்கள் அவ்வாறு விற்கின்றனர்.

இந்திரா போன்ற வழக்கமான சந்தை வியாபாரிகள் மட்டுமின்றி சந்தையில் அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் விவசாயிகள் மற்றும் காய்கறி பயிர் செய்வோர் தங்கள் உற்பத்தி பொருட்களை நேரிடையாக விற்க சந்தைக்கு வருகின்றனர்.

இவ்வாறாக சந்தைகள் மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யவும் பெருமளவு சிறு வியாபாரிகள், தொழிலாளிகள் மற்றும் போக்குவரத்து நடத்துநர்கள் முதலியோரின் வாழ்க்கை ஆதாரங்களை அளித்திடவும் முக்கிய சாதனமாக விளங்குகிறது.

- நிரந்தர சந்தைக்கும், வாரச் சந்தைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
- நிரந்தரமான கடைகள் இருந்தாலும் உங்களுக்கு சந்தையின் தேவை உள்ளதா? ஏன்?
- சிறு வியாபாரிகளின் வாழ்க்கையை மேம்படுத்த சந்தைகளை எவ்வாறு உருவாக்கலாம்?

**தெலங்கானாவில் உள்ள உழவர் சந்தைகள்:**

பெரும்பாலான விவசாய உற்பத்திகளான உணவு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் முதலியவை நேரிடையாக மொத்த வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றன. அவர்களிடம் இருந்து சிறு வியாபாரிகள் கொள் முதல் செய்து நுகர்வோருக்கு விற்கின்றனர். இருப்பினும் உற்பத்தியாளர்கள் அவர்களுடைய பொருட்களை நேரிடையாக நுகர்வோருக்கு விற்கும் சில சந்தைகளும் உள்ளன. அவ்வகையை சேர்த்து தான் உழவர் சந்தை.

நாங்கள் ராமகோபால் என்பவரை நேர்க்காணல் கண்டோம், அவர் தந்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது

SCERT TELANGANA



*படம் 8.3 உழவர்ச் சந்தை*

**இவ்வுழவர் சந்தைக்கு எப்போது முதல் வந்து கொண்டிருக்கிறீர்கள்?**

நான் உழவர் சந்தைக்கு வர 2003ல் ஆரம்பித்தேன். என் பக்கத்து கிராமத்தவர்கள் 2000ஆம் ஆண்டிலிருந்தே இச்சந்தைக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

**உங்களைப் போன்ற விவசாயிகள் மட்டுமே உழுவர் சந்தையில் பொருட்களை விற்கின்றனரா?**

துவக்கத்தில் இவ்வுழவர் சந்தை நடத்தும் அதிகாரிகள் எங்களுடைய கிராமத்திற்கு வந்தனர். பின்பு எங்களுடைய பெயர், முகவரி பயிடப்படும் பயிர்களின் விவரம், நிலத்தின் பரப்பளவு முதலிய தகவல்கள் அடங்கிய புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை கொடுத்தனர். இந்த அடையாள அட்டை உள்ள நபர் மட்டுமே உழவர் சந்தைக்குள் வந்து கடை வைத்து தனது உற்பத்தி பொருட்களை விற்க அனுமதிக்கப்படுவர். முதலில் “வருபவருக்கு முதல் ஒதுக்கீடு” என்ற கொள்கை படி தினந்தோறும் உழவர்களின் வருகையை ஆதாரமாக கொண்டு சந்தையில் கடை வைக்க இடம் ஒதுக்கி தரப்படுகிறது. இச் சந்தை உழவர்களுக்காக மட்டும் ஏற்படுத்தபட்டு இருந்தாலும், ஓரிரு ஆலைகளை நடத்துவோர் மற்றும் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த பெண் வியாபாரிகளையும் நான் கவனித்தேன். அவர்களுக்கென்று சொந்த கடைகள் ஒதுக்கப் பட்டுள்ளன. ஆலை நடத்துவோர் எங்களிடம் இருந்து நெல்லை வாங்கி இருப்பு வைக்கின்றனர்.சுய உதவி குழுக்களை பெண்கள் நம் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் காய்கறிகளை விற்பனை செய்கின்றனர்.

**உங்களுடைய உற்பத்தி பொருட்களை விற்றிட நீங்கள் வாடகை ஏதாவது செலுத்துகிறீர்கள்?**

இல்லை ஆலைகள் நடத்துவோர் மற்றும் சுய உதவி குழக்களை சேர்ந்த வியாபாரிகள் பயன்படுத்தும் கடைகளுக்கு அவர்கள் வாடகை செலுத்துகின்றனர்.

**உழவர் சந்தைக்கு ஏன் வர துவங்கினீர்கள்?**

இதற்கு முன் நான் விளைவித்த பொருட்களை மொத்த விற்பனை சந்தைக்கு எடுத்துச் சென்றேன். அங்கு விலையை நிர்ணயிக்கும் வாய்ப்பு இருந்தது இல்லை. மொத்த வியாபாரி நிர்ணயித்த விலைக்கே விற்க வேண்டியிருந்தது. பல சமயங்களில் எனது காய்கறிகளை மிகவும் மலிவான விலைக்கே விற்றேன். நான் செய்த செலவுத் தொகை கூட கிடைத்ததில்லை உழவர் சந்தையில் என் போன்ற விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்புள்ளது. என்னை போன்ற விவசாயிகள் ஏறத்தாழ 10முதல் 15 வரையிலான கிராமங்களில் இருந்து வருகின்றனர். எங்களது காய்கறிகளை இருப்பு வைத்திட போதுமான இடம் இருந்ததில்லை.

**உங்களுடைய உற்பத்தி பொருட்களுக்கு விலையை எவ்வாறு நிர்ணயம் செய்கின்றனர்?**

உழவர் சந்தையில் உற்பத்தி பொருட்களின் விலைகளை நிர்ணயிக்க கமிட்டி இருக்கிறது.ஒவ்வொரு நாளும் காலையில் சந்தையின் விலைகளை கமிட்டியுடன் கலந்தாலோசித்து அதிகாரிகள் நிர்ணயம் செய்கின்றனர்.கமிட்டியில் மூன்று விவசாயிகளும், அதிகாரிகளும் உறுப்பினர் களாகி இருப்பர். மொத்த விற்பனை விலையை விட 25சதவீதம் அதிகமாகவும், சில்லறை விற்பனை விலையை விட 25 சதவீதம் குறைவாகவும் இருக்குமாறு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது இங்குள்ள நடைமுறை கொள்கை ஆகும்.

**உழவர் சந்தையால் நுகர்வோர் மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

ஆமாம் இவ்வுழவர் சந்தையில் நுகர்வோர் பழங்கள் மற்றும் காய்கறிகள் மட்டுமின்றி மிகவும் அத்தியாவசியமான அரிசி,பருப்பு,புளி,உலர்ந்த மிளகாய், சமையல் எண்ணெய் போன்ற பொருட்களையும் வாங்கிச் செல்கின்றனர்.

SCERT TELANGANA

அவர்கள் இப்பொருட்களை நியாயமான விலைகளில் பெறுகின்றனர், நான் காய்கறிகளை சாகுபடி செய்கின்றேன். என் உற்பத்தி பொருட்களை வாடிக்கையாளர்கள் மிகவும் ஆர்வத்துடன் விலை பேசி வாங்கிக் கொள்கின்றனர். என் மகிழ்ச்சியை வார்த்தைகளில் சொல்ல முடியாது. நான் என் உழைப்பிற்கான முழு விலையை பெறுகிறேன். எனது பொருட்களை வாங்கிச் செல்லும் வாடிக்கையாளர்கள் அவர்கள் பணத்தின் முழு மதிப்பை பெறுகின்றனர் நாங்கள் கல்வி கற்றிருந்தால் இணையதளம் மூலம் பல்வேறு மார்க்கெட்டுகளில் நிலவும் விலைகளை அறிந்து கொண்டு அதிக விலைகள் கிடைக்கும் மார்க்கெட்டுக்குச் சென்று எங்கள் பொருட்களையும் அங்கு விற்பனை செய்வோம்.

**உழவர் சந்தையில் நீங்கள் ஏதாவது பிரச்சனையை எதிர் கொண்டீர்களா?**

ஆம் சில சமயங்களில் எதிர்கொண்டேன் சந்தைக்கு தாமதமாக வரும் சமயங்களில் நான் கொண்டு வந்த காய்கறிகளை வைத்து விற்பனை செய்திட போதுமான இடம் கிடைக்காது. ஏதோ ஒரு மூலையில் அமர வேண்டியிருக்கும் எங்களது வண்டிகளை நிறுத்தி வைத்திடவும் போதிய இடம் கிடைக்காது. சில போலியான உழவர்கள் இச் சந்தையில் காய்கறிகள் விற்க வருகின்றனர். அது மட்டுமன்றி தொலை தூரங்களில் அமைந்துள்ள கிராமங்களில் விவசாயிகள் இவ்வுழவர் சந்தையின் பயனை பெற முடியாமல் இருக்கின்றனர்.




படம் 8.4 உழவர் சந்தை விலைப்பட்டியல்

- உழவர் சந்தையில் விவசாயிகள் மட்டுமே விற்பனை செய்கின்றனர். (உண்மை /பொய்)
- உழவர் சந்தைகளில் பயனாளிகள் யார்? ஏன்?
- உழவர் சந்தையில் விவசாயிகள் பெறும் பயன்கள் யாவை?
- உழவர் சந்தையில் சந்தைகளின் விலைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது ?

**முக்கியமான சொற்கள்**

வாணிபம்

தெரு வியாபாரிகள்

சந்தை

உழவர் வந்தை

25 பைசா வட்டி திட்டம்

சுய உதவிக் குழுக்கள்

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. விவசாயப் பொருட்களை எவ்வாறு விற்கின்றனர்?(AS1)
2. கௌரி,இந்திரா மற்றும் உழவர் சந்தையில் ராமகோபால் ஆகிய மூவர் இடையே கீழ்கண்ட அம்சங்களின் உள்ள வேறுபாடுகளை பட்டியலிடு.(AS1)

| பரிசீலிக்கும் அம்சங்கள் | கௌரி | இந்திரா | உழவர் சந்தையில் ராம கோபால் |
|---|---|---|---|
| வியாபாரம் செய்திட பணத்தை எங்கிருந்து பெறுகின்றனர்? | | | |
| பொருட்களை எங்கு விற்கின்றனர்? | | | |
| விலையை எவ்வாறு நிர்ணயிக்கின்றனர்? | | | |

3. சில்லறை வியாபாரிகள் வியாபாரம் செய்யும் போது எதிர் கொள்ளும் பிரச்சனைகள் யாவை?(AS1)
4. சில்லறை வியாபாரிகள் அவர்களுடைய வருமானத்தை அதிகரித்து கொள்ள உதவும் வழிகள் யாவை?(AS1)
5. வட்டி வியாபாரிகளிடம் இருந்து கடன் பெறுவதைக் காட்டிலும் சுய உதவி குழவிடம் இருந்து பெறுவதே சாலச் சிறந்தது ஏன்? (AS6)
6. வட்டி வியாபாரிகள் வங்கிகள், சுய உதவி குழுக்கள், ஆகிய மூன்று அமைப்புகளிடம் இருந்து கடன் பெறுவதில் உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை விவரித்து எழுதுக.(AS1)
7. மொத்த விற்பனை கடைகள் மூலம் விற்பதை விட உழவர் சந்தையில் விற்பனை செய்வதே சிறந்தது என்று ஏன் கருதுகிறீர்கள்?(AS1)
8. பக்கம் 62ல் உள்ள கடைசிப் பத்தியைப் படித்து கலந்துரையாடவும்.(AS2)
9. உங்கள் மாவட்ட வரைபடத்தில் சந்தைகள் நடக்கும் இடங்களை ஆசிரியர் உதவியுடன் குறிக்கவும்.(AS5)
10. உழவர் சந்தை என்றால் என்ன? அதன் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?(AS1)
11. சௌட்டுப்பல் சந்தையில் வியாபாரிகளிடம் இருந்து நகராட்சி, கிராம பஞ்சாயத்து எதற்காக கட்டணம் வசூலிக்கிறது?(AS1)

செயல்திட்டம் :

1. உங்கள் பகுதியிலுள்ள பல்வேறு காய்கறி விற்பனையாளர்களிடம் அவர்களின் பணி, வாழ்க்கை முறை மற்றும் பிரச்சனைப்பற்றி தெரிந்துக் கொள்ள உரையாடவும். அவர்களை பற்றி ஓர் அறிக்கையை தயாரித்து வகுப்பில் பகிர்ந்துக் கொள்ளவும்.
2. அருகில் உள்ள ஒரு சந்தைக்கு சென்று அது செயல்படும் முறையை உற்றுநோக்கி அதன் வரைபடத்தை வரைந்து உங்கள் வகுப்பில் காட்சிக்கு வைக்கவும்.

SCERT TELANGANA

அத்தியாயம்

# 8

பகுதி – ஆ

# விவசாய உற்பத்தியின் வணிகம்

SCERT TELANGANA

முந்தைய பாடத்தில் கொள்விலை வாணிகத்தின் சில அம்சங்களைக் கண்டோம். சிறு வணிகர்கள் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள நுகர்வோரிடத்திற்கு பல்வேறு உற்பத்திப் பொருட்களை எவ்வாறு கொண்டு வருகின்றனர் என்பதைக் கண்டோம். இந்தப் பாடத்தில் நெல் மொத்த வாணிகத்தின் சில அம்சங்களைப் பற்றி நாம் படிக்கவிருக்கிறோம். நெல், அரிசி ஆலை உரிமையாளர்களாலும் பெரிய அளவில் வியாபாரம் செய்யக்கூடிய பெரிய வணிகர்களாலும், விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகிறது. இந்த வாணிகம் எவ்வாறு நடக்கிறது என்பதைக் காண்போம்.

### விவசாயச் சந்தை வளாகம்

உழவர் சந்தையைப் போன்றே விவசாயச்சந்தை வளாகம் (AMY) என்பது அரசாங்கத்தால் நடத்தப்படும் ஒரு சந்தையாகும். இங்கு விவசாயிகள் தங்கள் உற்பத்தியை விற்று உடனடியாக பணத்தைப் பெற முடியும்.

சந்திரசேகர் என்பவர் நல்கொண்டாவிலிருந்து வரும் ஒரு விவசாயி இந்த ஆண்டு அவருக்கு அறுவடையில் 60 குவிண்டால் நெல் கிடைத்தது. அவர் தன் நெல் மூட்டைகளை டிராக்டரில் ஏற்றி நல்கொண்டா விவசாய சந்தை வளாகத்திற்கு கொண்டு வந்தார். அவர் தன் மூட்டைகளை இறக்கி ஏல விற்பனைக்காக வரிசையில் இணைந்துக் கொண்டார்.

சுமார் காலை 10 மணிக்கு விவசாயச் சந்தை வளாகத்திற்கு குழு உறுப்பினர்கள் வந்து விவசாயிகளின் பெயரடங்கிய காகிதத்தை மூட்டைகளின் மேல் ஒட்ட வைத்து அதில் எத்தனை குவிண்டால் அரிசி என்பதையும் எழுதினர். காலை 11 மணிக்கு மொத்த வியாபாரிகளும் அரிசி ஆலை உரிமையாளர்களும் நெற்குவியலிடம் வந்து அவற்றின் தரத்தை பார்வையிட்டனர். பிறகு குழு உறுப்பினர்கள் ஒரு விவசாயியின் முதல் நெற்குவியலி-ருந்து ஏலத்தை தொடங்கினர். அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்ச ஆதரவு விலை (MSP - Mininum Support Price) குவிண்டாலுக்கு ரூ1080 என்பதால் குழு அலுவலர்கள் தங்களது ஏலத்தை அந்த விலையிலிருந்தே தொடங்கினர்.

### குறைந்த ஆதரவு விலை

ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் விலையை கணக்கில் கொண்டு அரிசி, கோதுமை போன்ற பல்வேறு பயிர்களுக்கு குறைந்த ஆதரவு விலையை அறிவிக்கிறது. உயர்ந்த விலைக்கு எந்த வியாபாரியும் வாங்க முன் வராவிட்டால் அரசாங்க நிறுவனங்களான இந்திய உணவுக் கழகம் (FCI) போன்றவை குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு விவசாயிகளிடமிருந்து உற்பத்தியை வாங்கிக் கொள்ளும். இந்த வகையில் அரசாங்கம் விவசாயிகளுக்கு குறைந்த ஆதரவு விலைக்கு தங்களது உற்பத்தியை விற்க உறுதியளிக்கிறது. அதே சமயம் விவசாயிகள் அதிகமான விலைக்கு தங்கள் உற்பத்தியை விற்றுக்கொள்ளவும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏலத்தின் போது ஏலத்திற்காக வந்துள்ள அரிசிக்கு பேரம் பேசப்படுகிறது. பேரம் என்பது ஒரு உற்பத்தியை வாங்குபவர் வாங்க நினைக்கும் விலை ஆகும். ஒரு வியாபாரி பேரம் பேசிய பின் விவசாய சந்தை வளாகக்குழு அலுவலர் மெதுவாக மூன்று வரை எண்ணுவார் மற்றொரு வியாபாரி மூன்று வரை எண்ணுவதற்குள் அதிக விலைக்கு பேரம் பேசினால் ஏலம் தொடரும். அடுத்த பேரம் பேசும் வரை விவசாய சந்தை வளாகக்குழு அலுவலர் மூன்று வரை எண்ணுவார். மூன்று எண்ணுவது முடிந்துவிட்டால்

ஒருவர் விரும்பினாலும் கூட அடுத்த எந்த அதிக விலை பேரம் கூட அனுமதிக்கப்படமாட்டாது. சந்திரசேகரின் நெற்குவியலருகில் பல வியாபாரிகளும் அரிசி ஆலை உரிமையாளர்களும் கூடினர். அவர்கள் சந்திரசேகரின் நெல் உலர்ந்திருப்பதாகவும் குறைந்த அளவு சொத்தையான நெல்கள் இருப்பதாகவும் கண்டறிந்தனர். ஏலம் தொடங்கியவுடன் வியாபாரிகளும், ஆலை உரிமையாளர்களும் நெல்லின் தரத்தைக் கருத்தில் கொண்டு விலையை உயர்த்தினர். சந்திரசேகர் அந்த நாளின் ஏலத்தில் அதிக விலையை ரூ 1150ஐ ஒரு குவிண்டாலுக்குப் பெற்றார். அதை வாங்கியவர் ஒரு பெரிய அரிசி ஆலை உரிமையாளர். மற்ற பெரும்பாலான விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு ரூ 1100மட்டுமே பெற்றனர்.



படம் 8.5 விவசாயச் சந்தை வளாகம்

விவசாயச் சந்தை வளாகக் குழு அலுவலர்கள் நெற்குவியலுக்காக பல வியாபாரிகள் பேசிய பேரங்களின் விலை விகிதங்களை குறித்துக் கொண்டனர். அவர் அலுவலகத்திற்குத் திரும்பிச் சென்று வியாபாரியின் பெயரையும் துண்டுச் சீட்டின் எண்ணையும் குறித்துக் கொண்டு சந்திரசேகருக்கு அவரின் நெல்லுக்காக அதிக அளவு விகித பேரம் வியாபாரியால் பேசப்பட்டதைத் தெரிவித்தனர். அவர் விற்க சம்மதித்தார். குழு உறுப்பினர்கள் விலை விகிதத்தையும் அரிசியின் அளவையும் வியாபாரியால் செலுத்தப்பட வேண்டிய மொத்த பணத்தையும் ஒரு சீட்டுத்துண்டில் எழுதி வியாபாரியிடம் வழங்கினர்.

ஒரு வியாபாரியால் பேரம் பேசப்பட்ட அதிகளவு விலைக்கு விற்க ஒரு விவசாயிக்கு விருப்பமில்லையெனில் அவர்/அவள் அடுத்த நாள் அல்லது ஒரு வாரம் வரை காத்திருக்கலாம்.

விவசாயச் சந்தை வளாகத்திலிருந்து அரிசியை வாங்க வேண்டுமெனில் ஒவ்வொரு வியாபாரியும் அனுமதிக் கட்டணம் செலுத்த வேண்டும். அரிசி அவர்களால் வாங்கப்படும் போது வாங்கும் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ஒரு ரூபாயை குழுவிற்கு கமிஷன் செலுத்த வேண்டும். விவசாயிகள் எதற்காகவும் எதுவும் செலுத்தத் தேவையில்லாவிட்டாலும் நடைமுறையில் சுமை இறக்கவும், சுத்தம்செய்யவும் நிர்வாகச் செலவுகளுக்காகவும் ஒவ்வொரு 100 ரூபாய் வியாபாரத்திற்கும் ரூ 3.50 பைசாவை அவர்கள் செலுத்துகின்றனர். இது வியாபாரியால் விவசாயிகளுக்குப் பணம் செலுத்தும் போது கழிக்கப்பட்டு விவசாயச்சந்தை வளாகத்திற்கு செலுத்தப்படுகிறது.

- இந்த நடைமுறை ஏற்புடையது என்று நீங்கள் கருதுகிறீர்களா? எவ்வாறு இந்த முறையில் விவசாயிகள் நன்மை அடைகின்றனர்?

விவசாய சந்தை வளாகத்தில் விற்கும் விவசாயிகள் சில சமயம் போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக்காக தங்கள் விவசாய உற்பத்தியில் குவிண்டாலுக்கு ரூ 10செலுத்த வேண்டியுள்ளது. இது தங்களது கிராமத்தில் விற்கும் போது செலுத்துவதை விட அதிகமாகும்.

ஆலை உரிமையாளர் சந்திரசேகரிடம் வந்து சீட்டுத் துண்டைப்பார்த்து விவசாய சந்தை வளாகம் கட்டணங்களைக் கழித்து விட்ட பின் செலுத்திவிட்டார்.

SCERT TELANGANA

- அவர் சந்திரசேகருக்கு எவ்வளவு செலுத்தினார் என்பதை உங்களால் கணக்கிட முடியுமா?

அரிசியின் மொத்த அளவு

......................................குவிண்டால்கள்

ஒரு குவிண்டாலுக்கு விலை விகிதம்
ரூ ................................/ குவிண்டால்

மொத்தம் தொகை
= ...................................................................

சுமை ஏற்றுதல் மற்றும் தூய்மைபடுத்தும் கட்டணங்கள்
ரூ 3.50X.............................

சந்திரசேகருக்கு செலுத்திய மொத்தம் தொகை
.............=.......................= .......................

- விவசாய சந்தை வளாகத்தில் விவசாயிகள் தங்களது உற்பத்தியை விற்பதால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை?



వ్యవసాయ మార్కెట్ కమిటీ, చౌటుప్పల్
జిల్లా: నల్లగొండ.
మార్కెట్ అనుమతి పత్రము

నెం. 3295 తేది.........................

1. రైతు పేరుశ్రీ.........................
2. గ్రామము......................... మండలం.........................
3. పట్టాదారు పాస్‌పుస్తకం నెం......................... విస్తీర్ణం.........................
4. మార్కెట్ కు తీసుకురాదలచిన " ధాన్యము " యొక్క పరిమాణము (బస్తాలు).........................
5. మార్కెట్ కు తీసుకురావలసిన తేది.........................

కార్యదర్శి

సూచనలు :

1. అనుమతి పత్రము పొందుటకు పట్టాదారు పాసు పుస్తకము లేక సంబందిత మండల రెవిన్యూ అధికారిచే ధృవీకరణ పత్రం కార్యదర్శి వద్ద దాఖలు చేయవలెను.
2. రైతులు మార్కెట్‌కు ధాన్యము తీసుకొని వచ్చినప్పుడు వారి వెంట తప్పనిసరిగా ఈ పత్రము తీసుకొని రావలెను.
3. మధ్య దళారీలు రైతుల పేరుతో మార్కెట్ కు ధాన్యమును తెచ్చిన యెడల వారి యొక్క ధాన్యమును ప్రభుత్వము స్వాధీన పర్చుకొని వారిపై చట్టరీత్యా తగు చర్యలు చేపట్టబడును.
4. రైతులు వారు తెచ్చిన ధాన్యమును అమ్మిన తరువాత తక్ పట్టీ మరియు అనుమతి పత్రము చూపి వారి పట్టాదారు పాసు పుస్తకమును వాపసు పొందగలరు.
5. అనుమతించిన తేదికి ముందుగాని తరువాత గాని వచ్చిన యెడల అట్టి ధాన్యము మార్కెట్ లోనికి అనుమతించబడదు.
6. రైతులు వారి ధాన్యమును కళ్ళముల వద్దనే శుభ్రపరిచి మార్కెట్ కు తీసుకొని వచ్చినచో మంచి ధర లభించును.

*படம் 8.6 சந்தை குழுவின் ரசீது*

போதிய அளவு விவசாய உற்பத்தியைப் பெற்றுள்ள சந்திரசேகரைப் போன்ற விவசாயிகள் விவசாயச் சந்தை வளாகங்களில் விற்கவிரும்புகின்றனர். கிராமங்கள் போல் அல்லாது இங்கு பணம் பெறுவதில் எந்த தாமதமும் பொதுவாக ஏற்படுவதில்லை. விற்பனையானது வெளிப் படையான ஏலத்தில் நடைபெறுவதால் விவசாயிகளுக்கு இயன்ற அளவு நல்ல விலையைப் பெறும் வாய்ப்பு உள்ளது. சில விவசாய சந்தை வளாகங்களில் லஞ்சம் பெறும் அலுவலர்களும் வியாபாரிகளும் இணைந்துக் கொண்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையைத் தந்து ஏமாற்றினாலும் எல்லாவிடங்களிலும் இது போன்ற தவறுகள் ஏற்படுவதில்லை.

தெலங்கானாவில் ஏறக்குறைய 100 விவசாய சந்தை வளாகங்கள் உள்ளன. பண்னை உற்பத்திகளில் சுமார் 4ல் 1 பங்கு அவற்றில் வியாபாரம் செய்யப்படுகின்றன. மற்ற மூன்று பாகம் உற்பத்தி எங்கு விற்கப்படுகின்றன? என நினைக்கின்றீர். விவசாய சந்தை வளாகங்களுக்கு ஏன் அந்த விவசாயிகள் வருவதில்லை? வாருங்கள் நாம் கண்டறிவோம்.

## அரிசி ஆலை உரிமையாளருக்கு விற்றல்

இது ஒரு நெல் அறுவடை காலம். ஒரு அரிசி ஆலை உரிமையாளரான சந்துலால் என்பவரின் குமாஸ்தாவிற்காக வெங்கடாபுரம் கிராமத்திலிருந்து மல்லையா என்பவர் காத்துக் கொண்டிருந்தார். மல்லையாவால் தனது நீர்ப்பாசன வசதி கொண்ட ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து 14 குவிண்டால் நெல்லை அறுவடை செய்ய முடிந்தது. அவருடைய விளைச்சல் மிகவும் குறைவாக இருந்ததால் அவரால் உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகளுக்குத் தேவையான பணத்தை செலவழிக்க முடியவில்லை.

சந்துலாலால் அனுப்பப்பட்ட குமாஸ்தா டிராக்டரில் வந்து இறங்கி மல்லையாவின் நெல் உலர்ந்து உள்ளதா என்றும், சொத்தைகள் அதிகமாக உள்ளதா என்றும் சரிபார்த்தார். குமாஸ்தா மல்லையாவின் நெல் மூட்டைகளை தனது டிராக்டரில் ஏற்றிக் கொண்ட பிறகு, மற்ற விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளைப் பெறச்சென்றார்.

அரிசி ஆலையில் மல்லையாவின் நெல்மூட்டைகள் எடைபோடப்பட்டன. அது 14 குவிண்டால்கள் இருந்தன. குமாஸ்தா ஒரு கையளவு நெல்லை எடுத்து சந்துலாலிடம் காட்டினார். சந்துலால்

SCERT TELANGANA

அதன் வறட்சி மற்றும் சொத்தைகளின் அடிப்படையில் குவிண்டாலுக்கு ரூபாய் 950 என்று விலையை நிர்ணயித்தார் இது விவசாயச் சந்தை வளாக விலையை விட மிகவும் குறைவு. அங்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ 1110ஆக உள்ளது. மல்லையாவிற்கு அவசரமாக பணம் தேவைப்பட்டது. எனவே உடனடியாக பணம் செலுத்தும்படி கேட்டார்.உடனடிக் கட்டணம் செலுத்த சந்துலால் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ரூ1.50 குறைத்து

(அதாவது) ரூ14.25/குவிண்டாலுக்குசெலுத்தினார். இது தான் ஒவ்வொரு அரிசி ஆலை உரிமையாளரும், வியாபாரிகளும் நல்கொண்டாவில் பின்பற்றும் முறையாகும். நெல் விற்பனை மூலம் மல்லையா பெற்ற வருமானத்தைக் கணக்கிடுவோம்.

நெல்லின் எடை = 14 குவிண்டால்கள். ஆலை உரிமையாளரால் நிர்ணயிக்கப்பட்ட அரிசி விலை

= குவிண்டாலுக்கு ரூ950.

14 குவிண்டால்களின் விலை = ரூ950X14

=ரூ 13,300

உடனடிச் செலுத்துதலுக்காக குறைக்கப்பட்ட தொகை ரூ14.25 x 14= ரூ 200

செலுத்தவேண்டிய மொத்த தொகை

= 13,300- 200 = ரூ 13,100/-

(15 நாட்கள் மல்லையா காத்திருந்தால் உடனடிக் கமிஷன் தொகை கழிக்கப்பட்டிருக்காது)

- மல்லையா ஏன் சந்துலாலுவிற்கு குறைந்த விலைக்கு தனது அரிசியை விற்றார் என்பதை உங்களால் கூறமுடியுமா? மேற்கொண்டு படிப்பதற்கு முன் வகுப்பறையில் இதற்கான சாத்தியமான காரணங்களை விவாதியுங்கள்.

நான்கு மாதங்களுக்கு முன் மல்லையா சந்துலாலிடமிருந்து உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகளுக்காக ரூ 5000 கடன் வாங்கினர். எனவே அவரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு தங்களது உற்பத்தியை விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். எனவே மல்லையாவிற்கு செலுத்த வேண்டிய பணத்திற்கு பதில் சந்துலால் தனக்கு சேர வேண்டிய கடன் தொகையையும் அதற்கான வட்டியையும் கழித்துக் கொண்டார். இறுதியாக மல்லையா எவ்வளவு தொகையைப் பெற்றார் என்பதைக் கணக்கிடுவோம்.

மல்லையாவால் வாங்கப்பட்ட கடன் தொகை

= ரூ 5000

4 மாதங்களுக்கான வட்டி ரூ 400 மொத்தம்

கழிக்கப்பட்டவை = ரூ 5400

நெல்லுக்கு செலுத்த வேண்டிய தொகை

= ரூ 13,100

இறுதியாக நெல்லுக்காக செலுத்திய தொகை

(ரூ 13,100- 5400) =ரூ 7700/-

(குறிப்பு : எல்லா கணக்கீடுகளும் ரூபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது)



*படம் 8.b3 அரிசி ஆலைக்குக் கொண்டு செல்ல டிராக்டரில் ஏற்றப்படும் நெல்*

SCERT TELANGANA

தெலங்கானாவில் மல்லையா போன்ற விவசாயிகள் அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்தும் அல்லது பணக்கார நிலக்கிழார்களிடமிருந்தும் கடன் பெறுவதால் தங்களுடைய உற்பத்தியை குறைந்த விலைக்கு அவர்களுக்கே விற்கும் படி கட்டாயப்படுத்தப் படுகின்றனர். எடைபோடுவதிலும் நெல்லுக்கு விலை தருவதிலும் கூடஅவர்கள் ஏமாற்றப்படுகின்றனர். விவசாயிகளுக்குக் கடன் தரும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தங்கள் ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களையும் அவர்களால் நிர்ணயிக்கப்படும் குறைந்த விலைக்கும் பெறுகின்றனர்.

- விவசாயச் சந்தை வளாகத்தில் மல்லையா தனது உற்பத்தியை விற்று இருந்தால் எவ்வளவு தொகையை அதிகமாக பெற்றிருப்பார்?
- ஆலை உரிமையாளருக்கு விற்றதால் எவ்வளவு பணத்தை அவர் இழந்தார்?
- ஆலை உரிமையாளருக்கு பதில் வங்கியில் அவர் கடன் பெற்றிருந்தால் எவ்வளவு வேறுபாடு இருந்திருக்கும்?
- ஒரு அரசாங்க வங்கியில் மல்லையா கடன் பெற்றிருந்தால் இன்னும் எவ்வளவு அதிகமான பணத்தை அவரால் ஈட்டியிருக்க முடியும்?

வெங்கடாபுரத்தின் பெரிய விவசாயிகளும், நிலக்கிழார்களும் சிறு விவசாயிகளுக்கு கடன் தந்து அவர்களிடமிருந்து அரிசியை வாங்குகின்றனர். அவர்கள் தங்களுடைய சொந்த அறுவடையையும் விவசாய சந்தை வளாகங்களில் உள்ள பிற விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட அனைத்தையும் நகரம் சார்ந்த மொத்த நெல் வியாபாரிகளிடமோ அல்லது அரிசி ஆலைகளிலோ விற்கின்றனர். விவசாயிகள் பல வழிகளில் நிலக்கிழார்களுக்கு கடன்படுகின்றனர்– அவர்கள் பணம், விதை, டிராக்டர்கள், தண்ணீரையும் கூட கடன் வாங்குகின்றனர். இதனால் நெல்லை நிலக்கிழார்களுக்கு விற்க கட்டுப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் செலுத்தும் எந்தத்தொகையையும் பெற்றுக் கொள்கின்றனர். விவசாயிகளுக்குக் கடன் தருபவர்களும் தங்கள் கடனுக்குப் பாதுகாப்பான அறுவடையை கவனித்து வருவர். மேலும் தங்களுடைய கடன் தொகையை திரும்பப் பெறுவதற்காக விவசாயிகளிடமிருந்து உற்பத்தியை வாங்கிக்கொள்வார். எனினும் இந்த முறையில் விவசாயிகளால் உயர்ந்த சாத்தியமான விலைக்கு விற்க முடியாமல் அவர்களின் பொருட்களை குறைந்த விலைக்கு விற்க ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது.

- வெங்கடாபுரத்தின் விவசாயிகளிடமிருந்து நெல்லைப் பெறுவதில் நிலக்கிழாருக்கும் அரிசி ஆலை உரிமையாளருக்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

## தரகர்கள் மூலம் விற்றல்

சாந்தி என்பவர் வெங்கடாபுரத்தில் வாழும் மற்றொரு விவசாயி. அவரது கணவர் இறந்த பின் பண்ணையை நிர்வகிக்கத் தொடங்கினார். அவர் பயிர் செய்யும் நோக்கங்களுக்காக உள்ளூர் சுய உதவிக் குழுவில்(SHG) உறுப்பினராகி ரூ 20,000/- கடன் வாங்கினார். அவருடைய 1.5 ஏக்கர் நிலத்தி-ருந்து அவருக்கு 14 குவிண்டால் விளைச்சல் கிடைத்தது. அவர் ஏழுகுவிண்டாலை எடை போட்டு விற்பனைக்காக ஒதுக்கி வைத்தார். மீதியை குடும்ப நுகர்விற்காக வைத்துக் கொண்டார்.

அடுத்த நாள் நல்கொண்டாவிலுள்ள ஒரு பெரிய அரிசி ஆலை உரிமையாளரின் தரகர் கிராமத்திற்கு வந்து நெல்லை வாங்க விவசாயிகளை அணுகினார். அவர் சாந்தியின் நெல்லைப் பார்த்து அதிக நேர பேரத்திற்குப்பின் குவிண்டாலுக்கு ரூ 1000 தர முன் வந்தார். சாந்தி எடைபோடும் போது 6.5 குவிண்டால் மட்டும் இருப்பதாகக் கூறினார். மற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் நன்றாக எடைபோடும்படி வற்புறுத்தினார். இந்த முறை 7 குவிண்டலாக மாறியது. தரகர் சாந்தியிடமிருந்து நெல்லைப் பெற்றுக் கொண்டு பணத்தை 15 நாட்களில் தருவதாகக் கூறிவிட்டுச் சென்றார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு அவர் திரும்பிவந்து சாந்திக்கு ரூ 6825ஐ செலுத்தினார். தனது தரகு பணம் குவிண்டாலுக்கு ரூ 20ஐ கழித்து கொண்டு மீதியை செலுத்தினார்.

நாங்கள் சாந்தியை சந்தித்து சில கேள்விகளை அவரிடம் கேட்டோம். " நீங்கள் எந்த வியாபாரியிடமிருந்தும் கடனைப் பெறவில்லை. நீங்கள் ஏன் உங்கள் உற்பத்தியை விவசாயச்சந்தை வளாகத்தில் விற்க கூடாது?

SCERT TELANGANA

"நல்கொண்டா செல்ல டிராக்டர் வாடகையும் சுமை ஏற்றவும் சுமைஇறக்கவும் கட்டணமும் நான் செலுத்த வேண்டும், கூடுதலாக அங்கு பெறும் விலை என் போக்குவரத்து செலவுக்குப் போதாது. அதோடு மட்டுமின்றி நானோ அல்லது என் மகனோ எங்கள் பண்ணை வேலையில் ஒரு நாள் வீணடிக்க வேண்டி வரும். எங்களுக்கு விற்பனைக்கு குறைவான நெல்லே உள்ளது. அதிக அளவில் நெல் பெற்றுள்ள விவசாயிகள் மட்டுமே நல்கொண்டாவிற்குச் செல்வார்கள்", என்று சாந்தி பதிலளித்தார்.

''பெரும்பாலான விவசாயிகள் விவசாய சந்தை வளாகம் மற்றும் அரிசி ஆலைகளுக்கு ரூ.1100-1150 வரை உயர்ந்த விலைக்கு விற்பதைப் போன்று தாங்கள் ஏன் உயர்ந்த விலையைக் கேட்கக் கூடாது?

"இந்தத் தரகர்கள் அது போன்ற உயர்ந்த விலையைச் செலுத்தமாட்டார்கள். எங்களால் சுற்றி வரும் தொல்லையைத் தவிர்க்கவும் வீட்டிலிருந்தே விற்கவும் முடிகிறது.''

தரகர்கள் விவசாயிகளுக்கும், நகரம் சார்ந்த பெரிய ஆலை உரிமையாளர்கள் அல்லது மொத்த விற்பனை செய்யும் அரிசி வியாபாரிகளுக்குமிடையே செயல்படுகின்றனர். அவர்கள் சாந்தி போன்ற விவசாயிகளிடமிருந்து சிறிய அளவில் அரிசியைப் பெறுகின்றனர். அவர்களுக்கு வியாபாரம் செய்ய நிலையான கடையோ அல்லது கிடங்கோ இருப்பதில்லை. அவர்கள் அறுவடை காலங்களில் ஒவ்வொரு விவசாயிகளிடமும் சென்று அரிசியை வாங்க பேச்சு வார்த்தை நடத்துகின்றனர். அவர்கள் பணத்தையும் போக்குவரத்துக்கான வாகனங்களையும் அனுப்பி வைப்பார்கள். அவர்கள் விவசாயிகளிடமும் ஆலை உரிமையாளர்களிடமும் தரகினைப் பெறுவர். இவர்களில் சிலர் விவசாயிகளுக்கு கடன் வழங்குபவர்களாக இருப்பர். இது போன்ற சமயங்களில் அவர்கள் தங்களது கடன் தொகையை சந்துலால் வழக்கில் நாம் முன்பு கண்டதைப் போல் வட்டியுடன் கழித்துக்கொள்வர்.

- மல்லையா ஒரு குவிண்டாலுக்கு ரூ 935 பெற்றார். ஆனால் சாந்தி ஒரு குவிண்டாலுக்கு ரூ 975 பெற்றார். இவற்றில் ஏதாவது வேறுபாடு உள்ளதா? இருப்பின் எவ்வாறு?

**தெலங்கானாவில் நெல் வியாபாரம் :**

தெலங்கானாவில் நெல் வியாபாரம் ஆந்திரபிரதேசத்தில் பயிரிடப்படும் நெல்லில் பெரும்பாலானவை சந்தையில் விற்கப்படுகிறது. விவசாயிகள் தங்கள் சொந்த பயன்பாட்டிற்கு சிறிய அளவை மட்டுமே வைத்துக் கொள்வார். சாந்தி போன்ற சிறு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லில் கணிசமான அளவு தங்கள் சொந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்துகின்றனர். பெரிய விவசாயிகள் தங்கள் உற்பத்தியில் பெரும்பாலானவற்றை சந்தைகளில் விற்று விடுகின்றனர்.

விவசாயிகள் தங்கள் விளைச்சலின் நான்கில் மூன்று பாகத்தை அவர்களுடைய கிராமத்திலும் எஞ்சிய நான்கில் ஒரு பாகத்தை விவசாய சந்தை வளாகத்திலும் விற்கின்றனர். பெரிய விவசாயிகள் விவசாய சந்தை வளாகத்தில் விற்கின்றனர். இந்த விவசாயிகள் டிராக்டர்கள் போன்ற வாகனங்களை சொந்தமாக வைத்துள்ளதால் போக்குவரத்து செலவுகள் குறையும்.

கிராமங்களில் நிலக்கிழார்கள்,தரகர்கள் சிறு அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து பல வகையில் வியாபாரிகள் நெல்லைப் பெறுகின்றனர். பெரும்பாலான சூழ்நிலைகளில் ஓரிரு ஏக்கர் நிலங்களைக் கொண்ட சிறு விவசாயிகளான மல்லையா சந்திரசேகர் போன்றவர்கள் இந்த வியாபாரிகளிடம் கடன் வாங்கி விடுவதால் அவர்களுக்கு மட்டுமே விற்க கட்டுப்பட்டுள்ளனர்.

## கடன்படுதல் மற்றும் நெல் விற்றல்

சிறுவிவசாயிகளும் இடைநிலை விவசாயிகளும் விவசாயம் செய்ய,முக்கியமாக விதைகள் உரங்கள்,பூச்சிக் கொல்லிகள், நீர்ப்பாசன வசதி போன்றவற்றை வாங்குவதற்காக கடன்படுவதை நாம் காண்கிறோம். சீரான வங்கிகளில் கடன் வாங்குவது இவர்களால் முடியாத ஒன்று என்பதால் இவர்கள் கடன் தருபவர்கள், வியாபாரிகள், ஆலை உரிமையாளர்கள் போன்றவர்களிடம் கடன் பெறுகின்றனர். ஒரு விவசாயி ஒரு முறை இவர்களிடம் கடன் பெற்றுவிட்டால் அவன் அல்லது அவள் தங்கள் உற்பத்தியை இவர்களுக்கு மட்டுமே விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்த விவசாயிக்கு வேறு வழியில்லாமல் போகிறது. வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கே விற்கவும் வேண்டியதாகிறது. நெல் வியாபாரிகள் குறைந்த

SCERT TELANGANA

விலையை செலுத்துவதோடு மட்டுமன்றி பல்வேறு வழிகளில் குறைவாகவும் எடைபோடுகின்றனர். மேலாக அவர்கள் தரகு பணம் பெறுகின்றனர். இந்த விவசாயிகளில் பெரும்பாலானோர் தாமதாக பணத்தைப் பெறுகின்றனர். இந்த வியாபாரிகளும் நிலக்கிழார்களும் தேவையான நேரத்தில் பணத்தைக் கடன் வழங்குவதால் விவசாயிகள் நெற்களை அவர்களுக்கே விற்க வேண்டியுள்ளது.

- அனைத்து விவசாயிகளும், தங்களுடைய பொருட்களுக்கு நியாயமான விலையைப் பெற உறுதி அளிக்கும் பல்வேறு வழிமுறைகளைப் பற்றி சிந்திக்கவும், வழிமுறைகளினால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றி உன் வகுப்பில் விவாதிக்கவும்.

**முக்கியச் சொற்கள்**

விவசாயச் சந்தை வளாகம்

குறைந்தபட்ச ஆதரவு விலை

இந்திய உணவுக் கழகம்

வியாபாரிகள்

மொத்த விற்பனை வியாபாரிகள்

தரகர்கள்.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. நரசாபுரத்தில் செயல்படும் நெல் வியாபாரிகளை பட்டியலிட்டு ஒரு குவிண்டால் நெல்லுக்கு அவர்கள் எவ்வளவு விலையை தர முன்வருகின்றனர் என்பதை எழுது(AS3)
2. நீ ஒரு கிராமத்தில் வாழ்ந்தால் நெல்லை யார் வாங்குகிறார்கள்,விலைகள் எவ்வாறு செலுத்துகின்றனர், என்னும் விவரங்களை சேகரி.(AS3)
3. ஒரு பலசரக்கு அங்காடிக்குச் சென்று ஒரு கிலோ அரிசியின் விலையைத் தெரிந்துகொள், ஒரு விவசாயி பெறும் ஒரு கிலோ நெல்லின் விலையும் இது எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?(AS1) (நினைவில் கொள்க 1குவிண்டால் = 100கிலோ கிராம்கள்)
4. அரிசிக்கு ஒரு தனி விலையை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும் என்று நீ கருதுகிறாயா?(AS4)
5. சுய உதவிக் குழுக்கள் மூலம் விவசாயிகள் எவ்வாறு நன்மையடைகின்றன?(AS4)
6. பக்கம் 81 மற்றும் 82களில் உள்ள கடன் படுதல் மற்றும் நெல்விற்றல் பத்தியை படித்து கலந்துரையாடவும்.(AS2)
7. உங்கள் கிராமத்திற்கு அருகில் AMY இல்லாத ஒரு சூழ்நிலையை கற்பனை செய்.(AS4)

### செயல் திட்டம்

1. ஒரு சில மாணவர்களை அருகிலுள்ள விவசாயச் சந்தை வளாகத்திற்கு அழைத்து செல்லலாம். அங்கு நடப்பதை கவனித்த பின் நெல் மற்றும் இதர உற்பத்தியின் பேர விலை பேசப்படுவதை எடுத்துக் காட்டும் பாத்திர நடிப்பை செல்ல வைக்கவும்
2. ஆந்திரப்பிரதேசத்திலுள்ள சிறு வியாபாரிகளின் நிலையை எடுத்துரைக்கும் ஒரு சிறிய நாடகத்தை எழுதி நடிக்கவும்.

SCERT TELANGANA

அத்தியாயம்

9

# பழங்குடி இனத்தில் சமூக தீர்மானங்கள் இயற்றுதல்

ஒரு பகுதியில் அதிக எண்ணிக்கையில் கூடி வாழும் மக்கள் தங்களுடைய பொதுவான பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்கின்றனர்? அதில் அவர்களின் தலைவர்களின் பங்கு யாது? அதற்காக அத் தலைவர்கள் பெறுவது என்ன? இந்த அத்தியாத்தில் ஒரே இனத்தை சேர்ந்த ஏறக்குறைய சமத்துவம் கொண்ட சமுதாயத்தில் முடிவுகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பது குறித்து கற்கப்போகிறோம்.

**பழங்குடியினர் - அனைத்து மக்களும் சமமாக உள்ள சமூகங்கள் :**

மலைகள், காட்டுப் பகுதியில் நிலையான வாழ்விடங்கள் ஏற்படுத்திக் கொண்டு நெடுங்காலமாக வாழ்ந்து வரும் மக்கள் சமூகத்தை பழங்குடியினர் என்பர்.

நம் தெலங்கானாவில் சென்சுக்கள், கொண்டா ரெட்டிகள், கோண்டுகள், கோயர்கள், யானாதிகள், சவாராக்கள் போன்ற பழங்குடி இனத்தவர்கள் உள்ளனர். நம் நாட்டிலுள்ள மாநிலங்கள் அனைத்திலும் ஏதாவது ஒரு வகை பழங்குடி இனத்தவர் வாழ்கின்றனர். அம்மக்கள் வெவ்வேறு வாழ்க்கை முறை கலாச்சாரங்கள், மொழிகள் கொண்டிருக்கின்றனர். இவ்வேற்றுமைகள் இருப்பினும் பழங்குடி மக்கள் என்று ஏன் அழைக்கப்படுகின்றனர்? இவர்களிடையே சில பொதுவான குணங்களை காண முடிகிறது. அவை பின்வருமாறு

i. ஒவ்வொரு பழங்குடி இனத்தில் உள்ள மக்கள் தங்களை பொதுவாக முன்னோர் வழி வந்தோர் என கருதுவர். எனவே, ஒரு பழங்குடி இனத்தில் அனைவரும் ஒருவருக்கு மற்றவர் உறவினர் என்று நினைத்திடுவர்.

ii. தங்கள் பகுதியில் உள்ள நிலம், காடுகள், மேய்ப்பு நிலங்கள், நீர்வளம், முதலியவை அனைத்தும் பொதுவான செல்வம் என்று நம்புவர், தனிபட்ட குடும்பங்களுக்கு அல்லது நபர்களுக்கு சொந்தமானவை அல்ல. எனவே, பழங்குடி இன உறுப்பினர்கள் அனைவரும் பகிர்ந்து கொண்டு பயன்படுத்தி கொள்வர். இவ்விஷயத்தில் அவ்வின மக்கள் விதிமுறைகளை ஏற்படுத்தி கொண்டு பின்பற்றுவர்.

iii. பழங்குடி சமூகங்களில் உள்ள அனைவருக்கும் அதன் வளங்களில் சம உரிமை இருப்பதால் பணக்காரன் மற்றும் ஏழை என்ற வேறுபாடுகள் இருக்காது. எடுத்துக்காட்டாக. பழங்குடி பகுதியின் நிலம் அனைத்தும் குடும்பங்களிடையே ஒவ்வொரு குடும்பத்தின் அளவை பொறுத்து பகிர்ந்தளிக்கப்படும். சில சமயங்களில் பழங்குடி பகுதியின் நிலம் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுபகிர்வு செய்யபட்டு குடும்பங்களுக்கு தரப்படும். சில பழங்குடிகளில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக நிலத்தை உழுவர். உற்பத்தியாகும் பொருட்களை சமமாக பகிர்ந்து கொள்வர். எந்த ஒரு குடும்பமும் தனக்கு தரப்பட்ட நிலத்தை விற்க இயலாது. ஏனெனில் நிலம் பழங்குடி சமூகத்திற்க்கு சொந்தமானது. எந்த ஒரு நபரும் தான் உழுது பயன்படுத்தும் நிலபரப்பை விட அதிகமாக பெற்றிருக்க முடியாது.

SCERT TELANGANA

iv. பொதுவாக பழங்குடி இனத்தில் உள்ள எல்லா குடும்பங்களும் எல்லா வகை வேலைகளையும் செய்கின்றனர். வேளாண்மை, காடுகளில் இருந்து உணவு சேகரித்தல், கால்நடைகளை மேய்த்தல், துணி நெய்தல், கூடை பின்னுதல், வீடுகள் கட்டுதல், கருவிகள் செய்தல் போன்றவற்றை பழங்குடியினர் செய்கின்றனர்.

v. குடும்பத்தின் வேலைகளை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பங்கெடுத்து செய்திடுவர். இருப்பினும் பல பழங்குடி இனங்களில் முடிவுகள் எடுப்பதில் பெண்களை விட ஆண்கள் அதிக அதிகாரம் மற்றும் பங்கு பெற்று இருக்கிறனர்.

vi. பழங்குடியினர் தங்கள் கடவுள்கள் மற்றும் மூதாதையர்களை மகிழ்விக்க கூட்டாக பகிர்ந்து செய்யும் சடங்குகள், பண்டிகைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவர். பழங்குடி இனத்தில் உள்ள அனைத்து உறுப்பினருக்கும் பொதுவான தனிப்பட்ட புராணக் கதைகள், பழக்கங்கள், பாடல்கள் பாடும் முறைகள், ஆடல்கள் ஆடும் முறைகள், ஓவியம் வரையும் முறைகள் காணப்படும்.

- பழங்குடி மக்களின் முக்கிய தொழில்கள் யாவை?
- பழங்குடி மக்கள் எவ்வாறு சமமாக உள்ளனர் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பழங்குடி மக்கள் பல சிறிய கிராமங்கள் (அ) வாழ்விடங்கள் அடங்கிய பெரும் நிலபரப்புகளில் நிலைத்து வாழ்கின்றனர்.

பழங்குடி இன மக்கள் தங்கள் பொது பிரச்சனைகள் குறித்து எவ்வாறு முடிவு எடுக்கின்றனர்? அவர்களிடையே ஏற்படும் சண்டைகளை எவ்வாறு தீர்த்து கொள்கின்றனர்? அதிலாபாத் மாவட்டத்தில் வாழும் கோண்டு பழங்குடி மக்கள் எவ்வாறு முடிவு செய்கின்றனர் என்பதை காண்போம். ஹாய்மென் டோர்ப் எழுதிய ஆந்திரபிரதேச பழங்குடி கோண்டுகள் நூலில் இருந்து எடுத்து தரப்பட்டுள்ளது.

மனித வரலாறு குறித்து ஆராயும் கல்வியாளர்கள் பழங்குடி மக்களை குறித்து ஆராய்ந்து வருகின்றனர். அவர்கள் பழங்குடி இனத்தவரோடு வாழ்ந்து, அவர்களின் கலாச்சாரம், வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், முடிவு எடுக்கும் முறை முதலியவற்றை பதிவு செய்து கொண்டனர். அப்படிப்பட்ட கல்வியாளர்களில் பிரசித்த பெற்றவர் பியூரர் ஹாய்மென்டோர்ப். அவர் 1940ல் ஆந்திரபிரதேசத்திற்கு வந்து பழங்குடியினரை பற்றி ஆய்வு செய்தார். அவர் சென்சுக்கள், கொண்டா ரெட்டிகள், கோண்டுகள் குறித்து பரிசீலித்து புத்தகங்கள் எழுதினார். அவர் பல்வேறு இந்திய பழங்குடியினர் குறித்து ஆய்வு செய்தார். குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பழங்குடி மக்கள் குறித்து ஆய்வு செய்தார்.



*படம் 9.1 பீயூரர் ஹாய்மென்டோர்ப்*



*படம் 9.2 ஆந்திர பிரதேச பழங்குடி மக்களிடையே ஹாய்மென்டோர்ப்*

SCERT TELANGANA

## கோண்ட் பஞ்சாயத்து மற்றும் பாட்லர்.

கிராமத் தலைவன் தன் அதிகாரத்தை கிராம பஞ்சாயத்து குடும்பங்களின் வயதான ஆண்கள் அடங்கிய கவுன்சிலிடம் இருந்து பெறுகிறார். இக்கவுன்சிலுக்கு கிராமம் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்கள் குறித்தும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளது. கிராமத் தலைவன் இதன் தலைவராக செயல்படுகிறார். இக்கிராம பஞ்சாயத்து கோண்ட் சமூகம் முழுமைக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறது.

இக்கிராம பஞ்சாயத்து தேவையான போது மட்டும் கூடும். இதன் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறாது. முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்படும்போது எல்லா வயதான ஆண்களும் கலந்துக்கொள்வர். சிறுவர்கள் மற்றும் பெண்கள் கூட்டத்தின் நிகழ்ச்சிகளை அமர்ந்து கவனிப்பர் பஞ்சாயத்து கவுன்சில் இயற்றும் தீர்மானங்களில் பெண்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால் தங்கள் வழக்குகளை சுதந்திரமாக பஞ்சாயத்து சபை முன்பு சமர்ப்பிக்கலாம்.

கிராம பஞ்சயாத்தின் பணிகளுள் முக்கியமானவை பெரிய திருவிழாக்கள், பண்டிகைகளின் தேதிகளை நிர்ணயித்தல், திருமணங்கள், விவாகரத்துகளுக்கு அனுமதி/ மறுப்பு அளித்தல், திருமணம் மற்றும் இறப்பு சடங்குகளின் நெறி முறைகளை நிர்ணயித்தல், சண்டை சச்சரவுகளை தீர்த்து வைத்தல் முதலியவை ஆகும். கிராம பஞ்சாயத்து அபராதங்கள் விதிக்கவும், எந்த ஒரு நபரை கிராமத்தை விட்டு விலக்கி வைக்கவும், அவருடன் தொடர்பு வைத்து கொள்ளாமல் செய்யவும் அதிகாரம் உடையது.(தடை)

பல கிராம மக்களிடையே ஏற்படும் தகராறுகள் தீர்த்து வைத்திட எல்லா கிராம பஞ்சாயத்துக் களின் கூட்டு பஞ்சாயத்து நடத்தப்படுகிறது. ஒரு தகராறு பஞ்சாயத்து முன்பு வைக்கப்படும் போது அதன் முதல் நோக்கம் அவ்வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் பெறுவது ஆகும். வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் இரு சாராரும் தங்கள் கருத்துக்களை விவரமாக கிராம சபை முன்பு எடுத்து கூற அனுமதிக்கப்படுவர்.

பின்பு அச்சமூகத்தின் மூத்த உறுப்பினர் வழக்கின் உண்மை விவரங்களை தெளிவாக அறிய குறுக்கு கேள்விகளை கேட்பார். அத்துடன் சாட்சிகளை அவர்களுடைய சாட்சியங்களை சொல்ல வைப்பார். இதன் பிறகு கோண்ட் இனத்தின் பாரம்பரியமான பண்பாட்டு அம்சங்கள் பற்றியும், இதுபோன்று முன்பு விசாரிக்கப்பட்ட வழங்குகளில் எடுத்த முடிவுகள் குறித்தும் விவாதிப்பர். வழக்கின் இரு சாராருக்கும் ஏற்புடைய தீர்வு காண முயற்சிப்பர். எல்லா அம்சங்களும் விவாதிக்கப்பட்ட பின் மூத்த உறுப்பினர் ஒரு தீர்மானத்தை முன் மொழிவார். இது இறுதி முடிவு அல்ல. பாதிக்கப்பட்ட நபர் சில மாற்றங்களை கோரலாம். அவருடைய பதிலை கேட்ட பிறகு பஞ்சாயத்து இறுதி முடிவு எடுக்கும்.

- கோண்ட் பஞ்சாயத்தின் உறுப்பினர்கள் ஆக முடியாதவர்கள் யார்?
- பஞ்சாயத்திற்கு எல்லா வீடுகளில் இருந்து பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- பஞ்சயாத்து ஒரு வழக்கில் முடிவு செய்திட எந்தெந்த விஷயங்களை கவனத்தில் எடுத்துக்கொள்கிறது?

அவர்கள் எவ்வாறு விசாரித்து தீர்ப்பு தருகின்றனர் என்பதற்கு ஒரு சுவையான எடுத்துக்காட்டு இங்கு தரப்பட்டுள்ளது.



படம் 9.3 கோண்ட் பஞ்சாயத்து தனது கலந்துரையாடலை துவங்க உள்ளது

SCERT TELANGANA

ஒரு நாள் பஞ்சாயத்து முன்னிலையில் ஒரு பெண் தன்னிடம் வம்பு செய்த ஒரு ஆண் மீது புகார் செய்து நீதி கேட்டார். தன்னை கேலி செய்து வம்பு செய்ததால் அந்த நபரின் கன்னத்தில் அறைந்ததாகவும் கூறினார். இதனால் அந்த நபர் தன்னை அடித்து, கீழே தள்ளியதாகவும், சமாளித்துக்கொண்டு அவரிடம் இருந்து தப்பி ஓடியதாகவும் விவரித்து கூறினார். பஞ்சாயத்து குற்றம் சாட்டப்பட்ட நபரிடம் விவரம் கேட்டது. அவர் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். பஞ்சாயத்து பெரியோர் அந்நபரை எவ்வாறு கண்டிக்கலாம் என கருத்து கேட்டனர். அதற்கு அப்பெண் அதிக பட்ச தண்டனை தர வேண்டும் என்றும் இனி தனக்கு தொல்லை தரமாட்டேன் என எழுதி தரவேண்டும் எனவும் கருத்து கூறினார். பின்பு பஞ்சாயத்து பெரியோர் அந்த நபரை கூட்டத்தின் நடுவில் நிற்க சொல்லி அப்பெண் முன்பு குனிந்து மன்னிப்பு கேட்க வைத்தனர்.

- பஞ்சாயத்து கூறிய முடிவு, புகார் கொடுத்த அப்பெண்ணை திருப்தி அடைய செய்ததா?
- பஞ்சயாத்து ஏன் காயப்பட்ட பெண்ணின் வழக்கை எடுத்துக்கொண்டது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

## கிராமத் தலைவர் (பாட்லா)

ஒவ்வொரு கிராமமும் ஒரு கிராமத் தலைவரை (பாட்லா) பெற்றுள்ளது. பொதுவாக இவர் பரம்பரை வழி வந்தவர். (தந்தை (அ) தாய் மரணத்திற்கு பிறகு மகன் (அ) மகள் பெற்றோரின் பதவி (அ) சொத்துக்களை பெறுமாறு செய்யப்பட்ட ஏற்பாட்டை பரம்பரை முறை என்பர்) இவர் கிராம பஞ்சயாத்துக்கு பொறுப்புடையவர்.

பல விஷயங்களில் திறமையான தலைவராக செயல்பட முடியும். கிராம பஞ்சாயத்து தேவைப்படும் போது மட்டும் கூடும். ஆனால் கிராமத் தலைவர் தினமும் செயல்படுகிறார். கிராமத்தலைவர் பொதுவாக ஆரம்ப காலங்களில் அக்கிராமத்தை உருவாக்குவதில் தலைமையேற்று நடத்தியவரின் குடும்பத்தை சார்ந்தவராக இருப்பார்.

பாட்லாவின் முக்கிய பணி கிராம மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதிலும், கிராம மக்கள் சார்பாக அரசு பிரதிநிதிகளுடனும், வெளியூர் மக்களுடன் பேச்சு வார்தைகள் நடத்துவதும் ஆகும். தன் சமூகத்தின் பல்வேறு செயல்களை ஒருங்கிணைக்கிறார். பண்டிகைகள் கொண்டாட்டமும் இதில் அடங்கும். கிராமத்திற்கு வருகை புரியும் விருந்தினரை வரவேற்று உபசரிப்பு செய்கிறார். இவர் செய்யும் எல்லா செயல்களுக்கும் பலனாக கிராமத்தில் உள்ள எல்லா ஆண்களும், பெண்களும் ஒரு நாள் இவருடைய நிலத்தில் வேலை செய்வர். இந்த உதவியால் தன் குடும்பம் உழுகின்ற நிலபரப்பை காட்டிலும் அதிகம் உழமுடிகிறது. இதனால் கிடைத்திடும் அதிக விளைச்சலைக் கொண்டு கிராமத்திற்கு வருகை புரியும் விருந்தினரை உபசரிக்க முடிகிறது.

கிராமத் தலைவர் முரட்டுத் தனமாக நடந்து கொள்ளும் சமயங்களிலும், கிராம மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக செயல்படும் போதும் பஞ்சயாத்து அவரை நீக்கி விட்டு மற்றொரு தலைவரை தேர்வு செய்து கொள்ளும் (அல்லது) பிற குடும்பங்கள் அனைத்தும் கிராமத்தை விட்டு இடம் பெயர்ந்து புது இடங்களில் இருப்பிடத்தை அமைத்துக் கொள்வர்.

- கிராம தலைவராக யார் ஆக முடியும்?
- கிராம பஞ்சயாத்துக்கும், பாட்லாவுக்கும் உள்ள தொடர்பு யாது?
- பாட்லாவின் சிறப்பு பங்கு என்ன?
- பாட்லாவை எப்போது நீக்குவர்?

ஹாய்மென்டோர்ப் கூற்றுப்படி இம்முறை 1940 மற்றும் 1950 காலங்களில் வேறு இனத்தவர் கோண்ட் கிராமங்களில் குடியேறி வாழ தொடங்கியது முதல் படிப்படியாக மாற்றம் அடைய ஆரம்பித்தது. இவர்களில் மராட்டியரும், தெலுங்குகாரர்களும் உள்ளனர். இதற்கு நவீன பஞ்சயாத்துராஜ் தேர்தல்களும் காரணமாகும். இச்சமூகத்தை சேர்ந்த பலர் தங்கள் தகராறுகளை தீர்த்து கொள்ள அரசு காவல் துறை (அ) நீதி மன்றங்களையும் அணுக ஆரம்பித்தனர். கிராம தலைவர்களின் பதவியும், முக்கியத்துவமும் பொதுத்தேர்தலின் மூலம் புதிய சர்பஞ்சுகள் தேர்வு செய்யப்படுவதால் மறைய தொடங்கியது.

SCERT TELANGANA

- கோண்ட் பழங்குடி கிராம பஞ்சாயத்து அமைப்பின் முக்கிய அம்சங்களை பற்றியும் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடு
- கோண்ட் பஞ்சாயத்து உறுப்பினராக வேறு ஜாதியை சேர்ந்தவர் அனுமதிக்கப்படுவார் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ஹாய்மென்டோர்ப் கருத்துப்படி மக்களிடம் நன்மதிப்பு பெற்ற கிராமத்தலைவர், நன்மதிப்பு பெறாத கிராமத் தலைவரை காட்டிலும் அதிக நிலபரப்பில் விளைச்சல் செய்ய முடிந்தது. இது எவ்வாறு சாத்தியமானது என்று உன்னால் விளக்க முடியுமா?

எல்லா வயது வந்த ஆண் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் இனத்தின் மரபுகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை புரிந்து வைத்திருத்தனர் என்பதை நாம் கண்டோம், ஒவ்வொரு குடும்பமும் தனது இனம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கருத்து தெரிவிக்கும் உரிமை பெற்றிருந்ததையும், கிராம குடும்பங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து கிராமத் தலைவனை காட்டிலும் சக்தி வாய்ந்தவையாக இருந்ததையும் காண்போம்.

கிராமத் தலைவன் தன் சமூகத்தை சேர்ந்த உறுப்பினர்களை தன் செயல்களால் ஏற்றுக் கொள்ளும்படி செய்தல் வேண்டும். தன் சமூகத்தார் மகிழ்ச்சியாக இருக்கச் செய்தல் வேண்டும். இதன் மூலம் தன்னுடைய நிலையை நிறுத்தி கொண்டார். கிராம மக்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்ய முடியாது. கிராமத் தலைவரின் சேவைகளுக்கு கைம்மாறாக அவரது நிலத்தில் மக்கள் இலவசமாக உழுது தருதல் என்ற வடிவில் சிறப்பு சலுகை பெற்றிருந்ததையும் நாம் கண்டோம். இதனால் தனது இனத்தை சேர்ந்த மக்களை விட அதிக செல்வத்தை பெற்றிட முடிந்தது. ஆனால் அவர் தன்னிடமுள்ள அதிக செல்வத்தை தனது இனத்து மக்களின் நல்வாழ்விற்கு செலவு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இப்படிபட்ட ஏற்பாடுகள் பல்வேறு பழங்குடி இனங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**முக்கியச் சொற்கள்**

1) சமுதாயம்/பாரம்பரியம்
2) பகிர்ந்துக் கொள்ளப்ட்டும் கொண்டாட்டங்கள்
3) மனிதவியலை ஆராய்பவர்
4) பொது வளங்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. இவ்வகையான பஞ்சாயத்து அமைப்பு சமநிலை உள்ள பழங்குடி இனத்தில் மட்டும் சாத்தியம் என்று ஏன் நினைக்கின்றாய்? பழங்குடி மக்களிடையே சமநிலை இல்லாத போது (அ) வெவ்வேறு சமூகத்தினர் ஓரிடத்தில் வாழ்ந்தால் என்ன நிகழும்?(AS6)
2. உன்னுடைய பகுதியில் இது போன்ற சமூக பஞ்சாயத்து கேள்விப்பட்டியிருக்கிறாயா? அது குறித்து அறிந்த உன் ஆசிரியர்கள், பொற்றோர்கள் மற்றும் மூத்தோருடன் அது செயல்படும் விதம் குறித்து கலந்துரையாடு.(AS4)
3. காவல் துறை மற்றும் நீதித்துறைகளின் தலையீடு இல்லாமல் கோண்டு பஞ்சாயத்தில் தீர்ப்பு வழங்கி வந்தனர், இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?(AS4)
4. பஞ்சாயத்து தீர்ப்பில் அநீதி ஏற்பட்டது என்று பழங்குடியினர் கருதினால் அவர்களுக்கான மாற்று சட்ட ஏற்பாடுகள் யாவை?(AS1)
5. தெலங்கானா புறவரிப் படத்தில் பழங்குடியினர் அதிக அளவில் வசிக்கும் மாவட்டங்களை குறிக்கவும்.(AS5)

   (அ) கம்மம் (ஆ) அதிலாபாத் (இ) மகபூப் நகர்
6. கிராமத் தலைவர் என்ற தலைப்பின் கீழுள்ள பத்தியை படித்து உன் கருத்தை தெரிவி.(AS2)

SCERT TELANGANA

அத்தியாயம் 10

# ராஜ்ஜியங்கள் மற்றும் குடியரசுகளின் தோற்றம்

ஆறாவது அத்தியாயத்தில் நாம் பழங்குடி சமூகங்களின் நிர்வாக முறை குறித்து கற்றுக் கொண்டோம். நீங்கள் பெரிய ராஜ்ஜியங்களை ஆட்சி செய்த மன்னர்கள், பேரரசர்கள் குறித்து கேள்விப்பட்டு இருப்பீர்கள்.ஆரம்ப காலங்களில் எவ்வாறு ராஜ்ஜியங்களையும் குடியரசுகளையும் ஏற்பாடு செய்திட முடிந்தது என்பது குறித்து நாம் இப்பாடப் பகுதியில் கற்க இருக்கிறோம்.

SCERT TELANGANA

**கங்கைநதி பள்ளத்தாக்கு பகுதியில் : ஜனபதங்கள் முதல் மகாஜன பதங்கள் வரை ...**

- இந்திய வரைபடத்தின் கங்கை யமுனா நதிகள் பாயும் பகுதிகளில் உள்ள சமவெளி பகுதிகளை குறித்து கண்டறியுங்கள் நவீன நகரங்களான டெல்–, அலகாபாத், வாரணாசி, லக்னோ, கான்பூர் மற்றும் பாட்னா குறித்து காட்டுங்கள். இப்பகுதிகள் பெனும கூரூ, போசுவர் மற்றும் பெனுகுலு கிராமங்களைப் போல் உள்ளவைா? காரணங்களை கூறுங்கள்.

வட இந்தியாவில் பரந்த சமவெளி பரப்பை சிந்து– கங்கைச் சமவெளி என்று அழைப்பர். இமயமலைகளுக்கும் தீபகற்ப பீடபூமிக்கும் இடையே கங்கை, யமுனை நதிகள் பாய்கின்றன இச்சமவெளி பகுதி அதிக மழைப் பொழிவை பெற்றிருப்பதால் செழிப்புடன் விளங்குகிறது. இமய மலைகளில் இருந்து பாயும் இந்நதிகள் அங்கிருந்து வண்டல் மண்ணையும் சமவெளிப் பகுதிகளுக்கு கொண்டு வந்து சேர்க்கின்றன. இந்த நதிகள் வருடம் முழுவதும் பாய்ந்து கொண்டே இருக்கும்.

துவக்கத்தில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு சாதகமான சமவெளிப் பகுதிகளில் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டு விவசாயம் செய்து நிரந்தரமாக தங்கி வாழ்ந்தனர் இவர்களை "ஜன" 'என்றும்,இவர்கள் நிரந்தர இருப்பிடகள் ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்த பகுதி "ஜனபதம்" என்றும் சமஸ்கிருத மொழியில் அழைக்கப்படுகிறது.

மக்கள் 4000 ஆண்டுகளுக்கு முன்பு இந்நதிகளின் கரையோர பகுதிகளில் நிரந்தரமாக குடியேற தொடங்கினர். கல், செம்பு, வெண்கலம் மற்றும் இரும்புக் கருவிகளை பயன்படுத்தி காடுகளை வெட்டி, நிலப்பகுதிகளை உழுது, நெல் மற்றும் இதர பயிர்களை பயிரிட்டனர், இவ்விதமாக இப்பகுதியில் பெரிய கிராமங்கள், பட்டினங்கள் வளர்ச்சியடைந்து. பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வந்தனர். இப்படிப்பட்ட பெரிய கிராமங்கள் மற்றும் பட்டினங்கள் அடங்கிய கூட்டுப்பகுதிகளை மஹா ஜனபதங்கள் (அ) பெரிய ஜனபதங்கள் என்றழைத்தனர்.

- சிந்து–கங்கைச் சமவெளி பகுதிகளில் முதலில் குடியேறிய இனத்தவர்களின் பெயர் உன் ஆசிரியர் உதவியுடன் தெரிந்து கொள்ளுங்கள்.
- ஜனபதம் என்பதன் பொருள் என்ன? மஹாஜன பதங்களுக்கும், இதற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?

### மஹாஜனபதங்கள் குறித்து நாம் எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்?

இவற்றில் இருந்த கிராமங்கள் மற்றும் பட்டினங்கள் குறித்தும் இரண்டு வகையான ஆதாரங்களைக் கொண்டு நாம் தெரிந்து கொள்ள முடியும் அவற்றில் ஒன்று இப்பகுதியில் நடத்தப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் ஆகும். மற்றொன்று அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் ஆகும்.




*படம் 10.1 பதினாறு மஹாஜனபதங்களை குறித்துக் காட்டும் வரைபடம்.*

**சில முக்கியமான மஹாஜனபதங்கள் :**

- மேலே தரப்பட்டுள்ள இந்திய வரைபடத்தை பாருங்கள் இவ்வரைபடம் சில மஹாஜன பதங்களின் பரந்த பரப்பை காட்டுகின்றது அத்துடன் மஹாஜன பதத்திற்கு சம்பந்தபட்ட பெரும் நகரங்களின் பெயர்களையும் குறிக்கிறது. மஹாஜனபதங்களின் வழியாக பாயும் நதிகளையும் நீங்கள் காண முடியும்.

கங்கை நதி பள்ளத்தாக்கு பகுதியில் தோன்றிய மகாஜன பதங்கள் மற்றும் நகரங்கள் குறித்தும் ஒரு பட்டியலை தயார் செய்யுங்கள்.

| மகாஜனபதம் | நகரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |



SCERT TELANGANA

தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கங்கைச் சமவெளி பகுதியில் நூற்றுக்கணக்கான இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தனர். அவற்றின் உதவியால் அக்காலத்து மக்களின் வாழ்க்கை முறை குறித்து ஆராய்ந்தனர். அக் காலத்து மக்களின் வாழ்க்கை முறை குறித்து அக்காலத்து நூல்கள் பெரும்பாலும் வேத மரபினை பின்பற்றியவர்கள், புத்தமத மற்றும் ஜைன மததுறவிகளால் தொகுத்து இயற்றப்பட்டுள்ளன. அந்நூல்கள் மத நூல்களாக இருப்பினும், அக்காலத்து பட்டினங்கள், கிராமங்கள் குறித்தும். மன்னர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் குறித்தும் நிறைய தெரிவிக்கின்றன, சில நூல்கள் கிரீஸ் போன்ற தொலைதூர நாடுகளை சேர்ந்தவர்களால் எழுதப்பட்டன, பல்வேறு ஆதாரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை கொண்டு அக்காலத்து விஷயங்கள் குறித்து தெரிந்து கொள்வோம்.

தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நடந்தவற்றில் சில முக்கியமான இடங்கள் டில்லி,அத்ராஞ்சிகேரா, கௌசாம்பி (அலகா பாத் அருகே) பாட்னா, அயோத்தியா, ராஜ்கிர் முதலியவை ஆகும்.

இக்காலத்தில் எழுதப்பட்ட சில முக்கியமான நூல்கள் : உபநிஷத்துகள் தர்ம சூத்திரங்கள், திகநிகயா, மஜ்ஜிம நிகயா ஹெரோடோடஸ் எழுதிய வரலாறு மற்றும் ஸ்ட்ராபோ முதலியவையாகும்.

- இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் நாம் வசித்த கிராமங்கள் மற்றும் பட்டினங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்வாராய்ச்சி நடத்தினால் நம் கிராமங்கள் பட்டினங்கள் குறித்து எதை கவனிப்பார்கள்?
- ஒரு பகுதி கிராமம் (அ) பட்டினம் என்று எவ்வாறு முடிவு செய்கின்றனர் ?
- ஒரு நூலில், குறிப்பிட்ட ஒரு நகரம் முழுவதும் தங்கம் மற்றும் வெள்ளியால் கட்டப்பட்டது என்றும் ஆயிரகணக்கான மக்கள் பரந்த பெரிய மாளிகைகளில் வாழ்ந்தனர் என்றும் எழுதப்பட்டிருந்தால் அது கற்பனையா ? உண்மையா? என்பதை எவ்வாறு தீர்மானிப்பாய் ?

## மஹாஜனபதங்களின் காலத்தில் கிராமங்கள் :

அக்காலத்து நூல்கள் படிப்பதால் விவசாயம் செய்யும் நிலச்சொந்தகாரர் கிரஹபதி (அ) கஹபதி எனப்பட்டனர் என்பதை நாம் அறிய முடிகிறது. அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து விவசாய வேலைகளை செய்தனர் அவர்கள் தாசர்கள் (அ) அடிமைகளை (யுத்தத்தில் கைதிகளாகி விவசாயிகளுக்கு சேவை செய்திட) விவசாய வேலைகள் செய்திட பயன்படுத்தினர் அது மட்டுமன்றி புருத்துகா என்னும் வேலையாட்களுக்கு கூலிகள் கொடுத்து நிலத்திலும் வீடுகளிலும் வேலைகளை செய்வித்துக் கொண்டனர் சில பணக்கார நிலக்கிழார்கள் அதிக அளவு நிலமும், அடிமைகளும் பெற்றிருந்தனர் சாதரணமாக அதிக அளவு நிலம் கொண்டிருப்பவரே கிராமத் தலைவர் ஆனார், மன்னரின் சார்பாக கிராம மக்களிடம் இருந்து வரிவசூல் செய்தார் அதுமட்டுமன்றி சில சமயங்களில் நீதிபதியாக, போலீஸ் அதிகாரியாக செயல்பட்டு கிராமத்தில் சட்டம் ஒழுங்கை பராமரித்தனர்.

பெரும்பாலான கிராமங்களில் திறம்பட்ட கைவினை தொழிலாளிகள் தொழில் செய்வோர் இருந்தனர், கருமான்கள் விவசாயத்திற்கு பயன்படும் கருவிகளை செய்தனர் (கடப்பாரை, அரிவாள்கள், கோடாரிகள், அம்புகள் முதலியவை). குயவர்கள் சமையலுக்கும், தானியங்கள் சேமிக்கவும் பயன்படும் பானைகளை செய்தனர். வண்டிகள், ஏர்கலப்பை, இதர வீட்டு சாமான்களாகிய மேஜை நாற்காலி, கட்டில் போன்வற்றை தச்சர்கள் உருவாக்கித் தந்தனர். நெசவாளிகள் துணிகளை நெய்து கொடுத்தனர் நிலக்கிழார் இத்தொழில் செய்தோருக்கு, அவர்கள் உற்பத்தி செய்தவற்றிக்காக தானியங்களை கொடுத்திருக்கிறார் என தோன்றுகிறது, இப்பொருட்கள் விவசாயத்திற்கு இன்றியமையாதவை. அவற்றை சுயமாக தயாரித்து கொள்ளும் நிலக்கிழார்களுக்கு போதுமான திறமை மற்றும் நேரம் இருந்திருக்காது.

- கோண்ட் பழங்குடிஇன கிராமங்களையும் மகாஜனபதங்களின் கிராமங்களையும் ஒப்பிட்டு பார்த்து ஒற்றுமைகள் வேறுபாடுகளை எழுது
- நிலக்கிழாருக்கும், கைவினை தொழில் செய்வோருக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?

### மஹாஜனபதங்களின் நகரங்கள் :

இதற்கு முந்தைய பக்கத்தில் நீங்கள் தயாரித்த பட்டியலிலுள்ள நகரங்களை பாருங்கள் அவற்றில் எப்படிபட்ட மக்கள் வாழ்ந்திருப்பார்கள்? என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

SCERT TELANGANA

அக்காலத்து நகரங்களில் தங்கள் வாழ்க்கைக்காக பிறருக்கு உழைத்து வேலை செய்யும் ஏழை தொழிலாளிகள் அதிகமாக இருந்தனர். அவர்களில் சிலர் அடிமைகள் மற்றும் பணியாட்களாக இருந்தனர் பெரும்பாலோர் கைவினை தொழில் செய்வோர்களாக இருந்தனர். அவர்கள் பொருட்களை தயாரித்து விற்பனை செய்தனர் அவர்கள் எவற்றை தயாரித்தனர்? எல்லா நகரங்களிலும் மிகுந்த தேவை இருந்த அழகான பானைகளை தயாரித்தனர், தரமான துணிகளை நெய்து அவற்றை மஹாஜனபதங்களில் இருந்த செல்வந்தர்களுக்கு விற்றனர், தங்கம் மற்றும் வெள்ளியாலான ஆபரணங்களை தயாரித்தனர். இரும்பு, செம்பு, பித்தளை போன்ற உலோகங்களால் பாத்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரித்தனர். மரக்கட்டைகள் பயன்படுத்தி வண்டிகள், மேஜை, நாற்காலி கட்டில் போன்றவற்றை செய்தனர். இவர்கள் மட்டுமன்றி ராணுவ வீரர்கள், கணக்கர்கள், கட்டிட தொழிலாளிகள் குதிரை பயிற்சியாளர்கள், துப்புரவு வேலை செய்வோர், தண்ணீர் கொண்டு வருவோர், மரக்கட்டைகள் மற்றும் தந்தம் பயன்படுத்தி பொம்மைகள் செய்வோர் என்று பலவகை பணியாட்கள் இருந்தனர் இவர்கள் தயாரித்த பொருட்கள் சிலவற்றை மட்டுமே அகழ்வாராய்ச்சியில் வெளிப்பட்டன. (பானைகள், செங்கற்கள், இரும்பு மற்றும் செம்பு பொருட்கள் ) அக்காலத்து நூல்கள் மூலமாகவும் அவர்களை குறித்து மேலும் நாம் அறியலாம்.

கைவினை தொழில் செய்வோர் உற்பத்தி செய்த



*படம் 10.2 வர்ணம் தீட்டப்பட்ட பாத்திரம். தட்டுகள், பாத்திரங்கள் வர்ணம் பூசப்பட்டிருந்தன. இவைகள் மகாஜனபதங்களுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டன.*

பொருட்களை வாங்கி அவற்றை நிலக்கிழார்களுக்கு அதிக லாபத்திற்கு விற்கும் வியாபாரிகளும் இருந்தனர். அதுமட்டுமன்றி பல்வேறு நாடுகளில் சிறப்பாக கிடைத்திடும் பொருட்களை வாங்கி வந்து அவர்களுடைய ஜனபதங்களில் விற்பவர்கள் இருந்தனர். அவர்கள் தங்களுடைய வியாபாரத்திற்காக தங்கள் பரிவாரங்களுடன், எருதுகள், கழுதைகள் ஒட்டகங்களுடன், இரவும், பகலும் பல வாரங்கள்,மாதங்கள் பயணம் மேற்கொண்டனர், ஆறுகள், சமவெளிகள், மலைகள், பாலைவனங்கள் போன்றவற்றை கடந்து சென்று வாணிபம் மேற்கொண்டனர் அவர்களுக்கு வந்த மிகப் பெரும் லாப பணத்தை கொண்டு பெரிய மாளிகைகளில் எண்ணற்ற அடிமைகள், பணியாட்களின் சேவைகளுடன் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர்.

- நகரங்களில் வாழும் மக்களுக்கு உணவு தானியங்கள், பால், மாமிசம் முதலியவை தேவைப்படுகிறது, நகரங்களில் விவசாயம் இல்லாமால் அவ்வளவு நபர்கள் அவற்றை எவ்வாறு பெற்றனர் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**மன்னர்கள், ராணுவம் மற்றும் வரிகள் :**

பெரும்பாலான மஹாஜனபதங்களை மன்னர்கள் ஆட்சி செய்தனர் மன்னர்களுக்கு சொந்தமான ராணுவப்படை இருந்தது மக்கள் தங்கள் கட்டளைகளை பின்பற்றுமாறு செய்யவும், இதர ராஜ்ஜியங்கள், படையெடுத்து ஆக்கிரமிப்பதை தடுக்கவும் ராணுவம் உதவியது மன்னர்கள் தலைநகரங்களில் வசித்தனர். தலைநகரை சுற்றி மரக்கட்டைகள் செங்கற்கள், மண், கற்கள், பயன்படுத்தி உறுதியான கோட்டைகளை கட்டிக் கொண்டனர் (10.3 படத்தை பாருங்கள்)

- இவற்றிக்காக பெருமளவு தொகை செலவு செய்ய வேண்டியிருந்தது ராணுவ வீரர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டியிருந்தது. செங்கற்களை லட்சக்கணக்கில் தயாரித்து கொடுத்த செங்கல் தயாரிப்பவருக்கும் பொது கட்டிடங்கள் கட்ட வேலை செய்த ஆயிரக்கணக்கான ஆண், பெண், தொழிலாளிகளுக்கும், கூலி தரவேண்டி இருந்தது.

மேற்குறிப்பிட்ட அனைத்திற்கும் தேவைபட்ட பணத்தை மன்னர்கள் எவ்வாறு பெற்றனர்?



***படம் 10.3 கௌசம்பி நகரின் மாபெரும் செங்கற்களால் ஆன கோட்டைச் சுவரை காட்டும் - வரைபடம்.***

கோண்ட் இன மக்களின் கிராமத் தலைவன் பாட்லாவும் அவ்வப்போது வெளிப்புற படையெடுப்பில் இருந்து தங்கள் கிராமங்களை பாதுகாக்க வேண்டி இருந்தது, அப்படிபட்ட சமயங்களில் கிராம மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு போராடினர். கிராம மக்கள் ஒரு நாள் கிராமத் தலைவரின் நிலங்களில் இலவசமாக வேலை செய்து கொடுக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்தது,இதனால் கிடைக்கும் கூடுதல் வருவாயை பயன்படுத்தி "பாட்லர்" விருந்தினரை உபசரிக்க திருவிழாக்கள் நடத்த ஆகும் செலவுகளை செய்தார் என்பதை நாம் கண்டோம்,ஆனால் இனத் தலைவனை சிறந்த செல்வந்தராக்கும் வகையில் வருவாய் இருந்ததில்லை. இன மக்கள் அனைவருக்கும் பயன் தரும் என்று கருத்து ஏற்படும் போது மட்டுமே சாதாரண மக்கள் அனைவரும் இனத் தலைவருடன் ஒத்துழைத்தனர் அவர் கட்டளைகளை பின்பற்றினர்.

சாஞ்சி ஸ்தூபத்தில் காணப்படும் சிற்ப கலைவேலைப்பாடு கொண்ட சித்திரத்தை (படம் 10.4) பாருங்கள். இது 2000 ஆண்டுகள் பழமையானது இதில் நீங்கள் மன்னனை எவ்வாறு அடையாளம் காணமுடியும்?

மஹா ஜனபதங்களின் மன்னர்கள் பழங்குடி இன தலைவர்கள் (அ) முக்கியமானவர்கள் இடையே நிறைய வேறுபாடுகள் இருந்தன. மன்னர்கள், மக்களிடம் இருந்து வரிகளை வசூலித்தனர். நிலக்கிழார், கைவினைத் தொழில் செய்வோர், விவசாயிகளிடம் இருந்து வரிகளை வசூல் செய்திட அதிகாரிகள் யாராவது மறுத்தால், அவர்களை தண்டிக்க ராணுவ வீரர்கள் இருந்தனர். இந்த அதிகாரிகள் மற்றும் ராணுவ வீரர்கள் மன்னனின் ஊழியர்களாவர். எனவே மன்னனின் கட்டளைகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டனர். மக்கள் தன் கட்டளைகளை பின்பற்றுமாறு பார்த்துக் கொள்ளவும் இவர்கள் பயன்பட்டனர்.

- மஹா ஜனபதங்களின் மன்னர்களுக்கு ராணுவம் ஏன் தேவைபட்டது?
- கோண்ட் இன தலைவன் பட்லா மற்றும் மஹாஜனபதங்களின் மன்னனுக்கும் இடையே வருவாய் மற்றும் செலவுகளை ஒப்பிட்டு வேறுபாடுகள் எழுதுக.



*படம் 10.4 ஒரு மன்னன் கோட்டைக்கு வெளியே தேரில் செல்லும் காட்சி*

SCERT TELANGANA

பல அரசர்கள் அதிக வலிமையுடையவர்களாகவும், செல்வங்களுடனும் இருக்க வேண்டும் என்று எண்ணினார். இதற்காக இரண்டு மார்கங்களை பின்பற்றினர். முதலாவது அவர்கள் ராஜ்ஜியத்தில் இருந்த மக்கள் மீது அதிக வரி விதித்தல் மற்றொன்று பக்கத்து நாடுகளை வெல்லுதல், விவசாயம் செய்து வந்த கிரஹபதிக்களிடம் இருந்து மன்னர்கள் வரிகள் வசூலித்தனர். அவர்கள் தங்கள் விளைச்சலை ஆறு சமபாகங்களாக பிரித்து ஒரு பாகத்தை மன்னனுக்கு செலுத்தினர் இதை 'பாகா' என்று அழைத்தனர் கைவினை தொழில் செய்வோரும் வரி செலுத்த வேண்டியிருந்தது. மன்னனின் நிலத்தில் மாதம் ஒன்றுக்கு ஒரு நாள் வீதம் வேலை செய்வதன் மூலம் வரியை செலுத்தினர். பசுக்கள் மற்றும் செம்மறி ஆடுகளை மேய்த்து தொழில் செய்து வந்த விலங்கு மேய்ப்பர்களும் விலங்குகளிடம் இருந்து கிடைத்திடும் பொருட்களை வரியாக செலுத்தினர். வணிகர்களும் அவர்கள் விற்பனை செய்யும் பொருட்களின் மீது வரிகளை செலுத்தினர். வேட்டையாடிகள் மற்றும் உணவு சேகரிப்போரும் கூட காட்டு உற்பத்தி பொருட்களான விலங்குத்தோல், மரக்கட்டைகள் முதலியவற்றை செலுத்தினர். இவ்வாறாக மன்னருக்கு வரிகள் பல வடிவத்தில் பல்வேறு வகைப் பொருட்களிலிருந்து கிடைத்தன. இக்காலத்தில் அப்போது தான் நாணயங்களின் பயன்பாடு துவங்கி இருந்தது.மக்கள் சில வகையான வரிகளை நாணயங்கள் வடிவில் செலுத்தினர்.

- ஒவ்வொருவரும் தாங்கள் உழைத்து சம்பாதித்த வருவாயில் ஒரு பகுதியை கட்டாயமாக வரியாக செலுத்த வேண்டியிருந்தால் அது அவர்களின் வாழ்க்கை மீது எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்தும் ?
- அம்மக்களின் வரிகளை செலுத்த ஏன் அங்கீரித்து இருப்பார்கள் என்று நீ கருதுகிறாய் ? ஏதோ ஒருவகையில் அவர்கள் இந்த புதிய ஏற்பாட்டால் பயனடைந்தனர் என நினைக்கிறீர்களா?
- 'பாகா' என்றழைக்கபட்டது எது? தற்போதுள்ள அரசாங்கமும் விவசாயிகளிடம் இருந்து விளைச்சலை வரியாக வசூலிக்கிறதா?

விவசாயிகள் மேம்பட்ட நீர்பாசனம், மேம்பட்ட விவசாய முறைகளை பின்பற்றி அதிக உற்பத்தியை சாதித்திட மன்னர்கள் ஊக்கப்படுத்தினர் என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. அவ்வாறு செய்வதால் மன்னர்களுக்கு அதிக வரி கிடைத்திடும் என்று கருதப்பட்டது.

அவ்வாறே, வணிகர்களையும் ஊக்கப் படுத்தி ஆட்சி பரப்பின் தொலை தூரங்களுக்கும் வியாபாரம் செய்ய வைத்துள்ளனர். மன்னர்கள் கிராமத் தலைவர்களை வியாபாரிகளிடம் இருந்து தங்கள் சார்பாக வரி வசூல் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். இதனால் கிராம தலைவனின் அதிகாரம் மற்றும் வளங்கள் அதிகரித்திட வழி ஏற்பட்டது.
மன்னர்கள் தங்கள் ஆட்சி பரப்பை விஸ்தரித்து மேம்படுத்த தொடர்ந்து யுத்தங்கள் செய்து கொண்டே இருந்தனர். இப்போர்களில் பங்கேற்கும் படைகளுக்கு ஊதியங்கள் அளித்தனர். தோல்வி அடைந்த பகுதிகளை நாசப்படுத்தினர். கிராமங்களை எரித்தல், பயிர்களை அழித்தல், கொள்ளையடித்தல் போன்றவற்றை செய்து சாதாரண குடிமக்களை துன்புறுத்தினர். பல சமயங்களில் தோற்கடிக்கபட்ட ராஜ்ஜியங்களின் மக்களை அடிமைகளாக்கி, கிரஹபதிகள், வணிகர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு விற்றனர்.

- யுத்தத்தால் பாதிக்கப்பட்டதும், மன்னருக்கு வரிகள் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளதுமான ஒரு கிராமத்தினை பற்றி எழுத முயற்சி செய்திடு. அக்காலத்திய கிராமங்கள் குறித்து உங்களுக்கு தெரிந்தவற்றை கவனத்தில் கொண்டு எழுதுக.
- கைவினைப்பொருள் உற்பத்தி மற்றும் வாணிபத்தையும் அபிவிருத்தி செய்திட மஹாஜனபதங்களின் மன்னர்கள் ஏன் ஆர்வம் காட்டினர்?
- மன்னர்கள் விதித்த வரிகளால் கிராமத் தலைவர்கள் எவ்வாறு பயனடைந்தனர்?

**மகதா ஒரு வலிமையான ராஜ்ஜியம் :**

நீங்கள் தயாரித்த ராஜ்ஜியங்களின் பட்டியலில் மகத ராஜ்ஜியம் உள்ளதா? இந்த ராஜ்ஜியம் கங்கை நதியின் இரண்டு புறங்களிலும் பரவியிருந்து. நதிகள் நிலபரப்புகளை வளமாக மாற்றின. நிலக்கிழார்கள் தங்களுடைய நிலங்களை சுலபமாக உழுதனர். நதிகள் மூலம் பொருட்களை ஏற்றுமதி செய்தனர். படைகள் இடம் பெயர்ந்து செல்லவும், நதிகள் உதவின. மகத ராஜ்ஜியத்தில் ஒரு பகுதியில் காடுகளில் பரப்பு இருந்தது.

SCERT TELANGANA



*படம் 10.5 சாஞ்சியில் உள்ள ஸ்தூபத்தில் காணப்படும் போர்க் காட்சியை காட்டும் சிற்ப வேலைப்பாடு*

அக்காடுகளில் இருந்து யானைகளை பிடித்து வந்து போர்களில் சண்டையிடுவதற்கு அவற்றிற்கு பயிற்சி கொடுத்தனர், காடுகளில் இருந்து கிடைத்த மரக்கட்டைகள் கொண்டு கோட்டைகள், அரண்மனைகள், ரதங்கள் கட்டுமான பணிகளில் பயன்படுத்தினர். மகத நாட்டின் தெற்கு திசைகளில் இரும்புத்தாது இருப்பு இருந்தன. அதை பயன்படுத்தி ஆயுதங்கள் தயாரித்தனர்.

இக்காரணங்களினால் மகத நாடு வலிமை வாய்ந்த நாடாக உருவானது. பிம்பிசாரரும் அவருடைய மகன் அஜாத சத்ருவும் மகத நாட்டை வலிமை வாய்ந்த நாடாக உருவாக்கினர். மஹாபத்மாநந்தர் மற்றொரு முக்கியமான மன்னராவார். இம்மன்னர்கள் அனைவரும் தங்கள் ராணுவத்தை பயன்படுத்தி பிற ராஜ்ஜியங்களை கைப்பற்றினர். அதன் விளைவாக மஹாபத்மாநந்தர் காலத்தில் அவர்களது ராஜ்ஜியம் வடமேற்கு இந்தியாவில் இருந்து ஒடிசா வரை விரிவடைந்தது.

மகத ராஜ்ஜியத்தைப் போன்று எல்லா மகாஜனபதங்களும் மன்னர்களால் ஆட்சி செய்யப்படவில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். சிலவற்றில் மன்னர்கள் கோண்ட் இன தலைவர்கள் போன்று சாதரண மக்கள் மீது ஆதாரப்பட்டிருந்தனர். தங்கள் ராஜ்ஜியத்தின் நல்வாழ்விற்காக சம்பிரதாயங்களை பின்பற்றினர். திருவிழாக்களை நடத்தினர்.

- மகத அரசர்கள் இயற்கை வளங்களைக் கொண்டு வ-மையான அரசை எவ்வாறு அமைத்தனர் என நினைக்கின்றீர்? மகத அரசின் இரு இயற்கை வளத்தினை குறித்தும் அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதையும் இரு வரிகளில் எழுதவும்.

## வஜ்ஜி - ஒரு கனா ராஜ்ஜியம் :

வஜ்ஜி எனப்பட்ட மஹா ஜனபதம் மகத ராஜ்ஜியத்தின் வடக்கே அமைந்து இருந்தது குடியரசு அரசாங்கத்தை அது கொண்டிருந்தது. கனா ராஜ்ஜியத்தில் ஒரு ஆட்சியாளர் கிடையாது. பல ஆட்சியாளர்கள் அடங்கிய குழு இருந்தது சில சமயங்களில் ஆயிரம் பேர் கலந்து ஆட்சி செய்தனர். ஒவ்வொருவரும் தன்னை மன்னன் என்று அழைத்துக் கொண்டனர். அவர்கள் மத சம்பிரதாயங்களை பின்பற்றினர். எல்லோருக்கும் சம்பந்தபட்ட அம்சங்கள் குறித்து சபை கூட்டங்கள் நடத்தி அனைவரும் பங்கேற்று கலந்துரையாடி தீர்மானங்கள் இயற்றினர். பெண்கள், அடிமைகள் மற்றும் பணியாட்களுக்கு இச்சபை கூட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பு தரப்படவில்லை.

புத்தர் மற்றும் மஹாவீரர் இவ்வகை 'கனா'க்களை சேர்ந்தவராவர். இவர்கள் புகழ் பெற்ற மத போதகர்கள். எல்லா மஹாஜனபதங்களும் இவர்களை மதித்து நடந்து கொண்டனர். இந்த கனா ராஜ்ஜியங்களை வெற்றி கொள்ள மன்னர்கள் எவ்வளவு முயன்றாலும் அவை 1500 ஆண்டுகள் காலம் வ-மை வாய்ந்தவையாக நீடிந்திருந்தன.

### முக்கியச் சொற்கள்

ராஜ்ஜியம்
குடியரசு
ஜனபதம்
மஹாஜனபதம்
தாசர்கள்
பர்த்துகாக்கள்
இனத்தலைவர்கள்

SCERT TELANGANA



*10.6 கான சபைக் கூட்டத்தை காட்டும் சித்திரம் (சாஞ்சி ஸ்தூபம்)*

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கனா என்பதன் பொருள் என்ன? மன்னர்கள் ஆட்சி செய்தராஜ்ஜியங்களுக்கும் இவற்றிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?(AS1)
2. கனாக்கள் மற்றும் கோண்ட் பன்ச்கள்/ (பஞ்சாயத்துகள்) இடையே காணப்படும் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் குறித்து எழுதுக.(AS1)
3. அக்காலத்து மஹாஜனபதங்களின் கிராம நிர்வகாகத்திற்கும், தற்போதுள்ள கிராம நிர்வாகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தெரிவியுங்கள்.(AS1)
4. தற்போதுள்ள அரசாங்கங்கள் கைத்தொழில் செய்வோர் மீது எவ்விதத்தில் வரிகளை விதிக்கின்றன? மஹாஜனபதங்களின் வரி விதிக்கும் முறையும் தற்போதுள்ள முறையும் ஒரே மாதிரியானவையா?(AS4)
5. பக்கம் 87ல் உள்ள இரண்டாவது பத்தியை படித்து உன் கருத்தை கூறவும்.(AS2)
6. இந்திய புறவரிப்படத்தில் 89வது பக்கத்தில் உள்ள படம் 1ஐ அடிப்படையாகக் கொண்டு 16 மகா ஜனபதங்களை குறிப்பிடவும்.(AS5)

அத்தியாயம் 11

# முதலில் தோன்றிய பேரரசுகள்

**நந்தர் வம்ச அரசரான மஹா பத்மநந்தருக்கு அடுத்து, சில ஆண்டுகளுக்குப் பிறகு இளைஞனான சந்திர குப்த மௌரியர் மகத நாட்டின் மன்னரானார். இவர் மௌரிய வம்ச ஆட்சியை தோற்றுவித்தவர் ஆவார். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒருவரை அடுத்து மற்றவர் வாரிசு முறையில் ஆட்சி செய்வதை வம்சம் என்பர்) சந்தரகுப்தரின் மகன் பிந்துசாரர் மற்றும் பேரனான அசோகர் மகத நாட்டை ஆண்டவர்கள். இவர்கள் இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பகுதியை ஆட்சி செய்தனர். இந்திய வரைபடத்தில் மகத பேரரசின் ஆட்சிப்பரப்பை பாருங்கள். அப்பேரரசு தற்போதுள்ள ஆப்கானிஸ்தானில் இருந்து, தெற்கே கர்நாடகம் வரையிலும், கிழக்கில் மேற்கு வங்காளம் வரையிலும் பரவியிருந்தது.**

## மௌரியப் பேரரசு :

பெரும் பரப்பைக் கொண்ட ராஜ்ஜியங்களை பேரரசுகள் என்பர். அவற்றை ஆட்சி செய்வோரை பேரரசர்கள் என்பர். இந்திய துணைக் கண்டத்தில் முதன் முதலில் தோன்றி பேரரசர்களில் சந்திர குப்த மௌரியரும் ஒருவராவார். துவக்கத்தில் மகத ராஜ்ஜியம், மகதம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை மட்டும் ஆட்சி வரம்பாக கொண்டிருந்தது. ஆனால், சிறிது காலத்திற்கு பிறகு அப்போது இருந்த எல்லா மஹாஜனபதங்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இப்பேரரசு வடமேற்கில் இந்துகுஷ் மலைகளையும் இந்தியாவின் மாபெரும் தார் பாலைவனத்தையும், குஜராத், சிந்து கங்கை நதிப் பள்ளத்தாக்குகளையும், மால்வா பீடபூமியையும், மத்திய இந்தியாவின் பரந்த காட்டுப் பரப்பபையும் கிருஷ்ணா, கோதாவரி, துங்கபத்திரா பள்ளத்தாக்கு பகுதியையும் கொண்டிருந்தது. இப்பரந்த பேரரசின் ஆட்சிப் பரப்பையும், அதில் வாழ்ந்த பல்வேறு மக்களையும் நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். இவற்றில் கங்கை பள்ளத்தாக்கு, கிருஷ்ணாநதி பள்ளத்தாக்கு மால்வா, குஜராத் மற்றும் பஞ்சாப் பகுதிகள் மிகுந்த செழிப்பான, அதிக மக்களடர்த்தி கொண்ட கிராமங்களையும், நகரங்களையும் கொண்டிருந்தன. வேறு சில பகுதிகள் வாணிபத்திற்கும், கைத்தொழில்களுக்கும் பிரசித்த பெற்று இருந்தன, இப்பகுதிகளில் இருந்த பெரிய நகரங்களில் துறைமுகங்களையும், பிற நாடுகளையும், இணைக்கும் முக்கியமான வியாபார மார்கங்கள் இருந்தன. சில பகுதிகள் விலை மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர சுரங்கங்களுக்கு பிரசித்தி பெற்று விளங்கின.

- மௌரிய பேரரசைக் குறித்து எந்தெந்த ஆதாரங்கள் மூலம் நாம் கற்க முடியும்?
- மௌரிய பேரரசில் இருந்த வாணிப மார்கங்களை குறிக்கவும். இந்த வாணிப மார்க்கங்கள் பேரரசர்களுக்கு ஏன் முக்கியமானவை?
- பேரரசுகளுக்கும், மஹா ஜனபதங் களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

மௌரிய பேரரசர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்களிடம் இருந்தும் வளங்கள் மற்றும் வரிப்பணத்தை பெற்றனர். இவ்வளவு பெரிய பரந்த பேரரசை எவ்வாறு பேரரசர்கள் ஆட்சி செய்தினர்? எடுத்துக்காட்டாக, கிருஷ்ணாநதி சமவெளிப் பகுதியில் உள்ள கிராம மக்கள் வரி செலுத்த மறுத்தால், பாட்னாவில் உள்ள பேரரசருக்கு எவ்வாறு தெரியும்? அவர்களை தண்டிக்குமாறு ராணுவத்திற்கு எவ்வாறு கட்டளை பிறப்பிக்க முடியும்? மற்றும் ராணுவம் எவ்வாறு கிருஷ்ணா நதி சமவெளிப் பகுதிகளுக்கு சென்று அக்கிராமங்களை கண்டறிய முடியும்? வரி செலுத்தாதவரை எவ்வாறு தண்டிப்பர்? இவற்றை செய்திட எவ்வளவு காலம் பிடிக்கும்?

SCERT TELANGANA

**நாம் எவ்வாறு தெரிந்து கொள்ளலாம் ?**

மௌரிய பேரரசை குறித்து நாம் தெரிந்து கொள்ள அதன் சம காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் நமக்கு உதவுகின்றன. சந்திர குப்தரின் அமைச்சரான கௌடில்லியர் எழுதிய அர்த்த சாஸ்திரம் என்னும் நூல் மிக முக்கியமானது. சந்திர குப்தரின் அமைச்சரவையில் இருந்த கிரேக்க தூதுவர் மெகஸ்தனீஸ் இயற்றிய இண்டிகா என்னும் நூலும் முக்கியமான ஆதாரமாகும். இவை மட்டுமன்றி அசோகரின் ஆட்சியின் போது, அவரது கட்டளைப்படி பேரரசின் பல்வேறு பகுதிகளில் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள் மூலம் அக்காலத்து விஷயங்கள் குறித்து நிறைய அறிய முடிகிறது.

**அர்த்த சாஸ்த்திரம் :**

சாணக்கியர் சந்திர குப்த மௌரியரின் அமைச்சராவார். இவரது வேறு பெயர் கௌடில்லியர். இவர் எழுதிய அர்த்த சாஸ்த்திரம் என்பது மிக முக்கியமான நூலாகும். இதில் ஒரு மன்னன் பிற நாடுகளை எவ்வாறு வெல்ல வேண்டும், நாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பன குறித்து விளக்கியுள்ளார். அது மட்டுமன்றி, மன்னர்கள் தங்களுக்கு எதிராக நடக்கும் சூழ்ச்சி, சதிகளில் இருந்து எவ்வாறு காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும், பல்வேறு தொழில் செய்வோர் மீது எவ்வாறு வரிகள் விதிக்க வேண்டும், வரிகளை எவ்வாறு வசூலிக்க வேண்டும் என்பன குறித்தும், விவரித்துள்ளார். இந்திய துணைக் கண்டத்தில் கிடைத்திடும் இயற்கை வளங்கள் குறித்தும் விளக்கமாக இந்நூலில் எழுதி வைத்துள்ளார்.




*படம் : 1 மௌரியப் பேரரசில் இருந்த முக்கிய நகரங்கள் மற்றும் இடங்களை காட்டும் இந்திய வரைபடம்.*

SCERT TELANGANA

மௌரியர்கள் பேரரசின் பல்வேறு பகுதிகளை பல்வேறு முறைகளில் ஆட்சி செய்தனர். பாடலிபுத்திரம், மற்றும் அதை சுற்றியிருந்த பகுதிகள் பேரரசரின் நேரடி கட்டுபாட்டில் இருந்தன. மக்களிடம் இருந்து வரிகளை வசூலிக்கவும், பேரரசரின் கட்டளைகளை கீழ்படியாதவர்களை தண்டிக்கவும், அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். நாட்டு நடப்புகள் குறித்தும், அதிகாரிகள் பணியாற்றும் திறன் குறித்தும், பேரரசருக்கு தகவல்களை சேர்த்திட உளவாளிகள் இருந்தனர். பேரரசரின் கட்டளைகளை தூதுவர்கள் அதிகாரிகளுக்கு சேர்த்தனர். அமைச்சர் மற்றும் அரச குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் அதிகாரிகளின் செயல்களை பேரரசர் மேற்பார்வை செய்தார்.

- பேரரசர் தன் நேரடி ஆட்சியில் கீழ் இருந்த பகுதிகளை கட்டுப்படுத்த என்னென்ன முறைகளை பின்பற்றினார்?
- பேரரசருக்கு ஏன் உளவாளிகள் தேவைப்பட்டனர் என்று நீ கருதுகிறாய்?

இவற்றை தவிர பிற பகுதிகள் அல்லது மாகாணங்கள் இருந்தன. மாகாண தலைநகரங்கள் மூலம் இவை ஆட்சி செய்யப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை தட்சசீலம், உஜ்ஜயினி மற்றும் சுவர்ணகிரி குறிப்பிட்டத் தக்கவை, இவற்றை ஆட்சி செய்திட இளவரசர்கள் அனுப்பபட்டனர். இவர்களை ஆளுநர்கள் என்று அழைத்தனர்.

இவ்வாளுநர்கள் தங்கள் மாகாணங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அனைத்து முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பெற்றிருந்தனர். அது மட்டுமன்றி அவர்களுக்கு சொந்தமான ராணுவமும், அதிகாரிகளும் இருந்தனர். பேரரசர் தனது தகவல்களை தூதுவர்கள் மூலம் ஆளுநர்களுக்கு அனுப்பி வைத்தார். மாகாண ஆளுநர்கள் தங்கள் பகுதியில் பின்பற்றப்பட்ட பழக்க வழக்கங்கள், சமூக விதி முறைகளை நன்கு அறிந்து முக்கியமான குடும்பங்களின் உதவியையும் பெற்று ஆட்சி செய்தனர்.

இம்மாகாணங்களுக்கு இடையே அதிக கிராமங்கள், நகரங்கள் இல்லாத பரந்த காடுகள் இருந்தன. இக்காட்டுப் பகுதிகளின் வழியாக வணிகர்கள், ராணுவம், தூதுவர்கள் பயணம் செய்ய பயன்படுத்தப்பட்ட முக்கிய சாலைகளை கொண்டிருந்தன. இவற்றை நிர்வகிக்க மௌரியர்கள் தனிப்பட்ட ஏற்பாடுகள் செய்திருந்தனர். இந்நெடுஞ்சாலைகள் வழியாக தங்கச் சுரங்கங்கள் கொண்ட சுவர்ணகிரி, வெளிநாட்டுப் பொருட்கள் கிடைக்கும் தட்சசீலம் பகுதிகளுக்கு சென்று வந்தனர். இக்காட்டுப் பகுதிகளில் இருந்து விலங்கின் தோல்கள், காட்டு விலங்குகள், விலை மதிப்புள்ள ரத்தினகற்கள், தங்கம், போன்றவற்றை வரிகளாகவும், பரிசுப் பொருட்களாகவும் பெற்றனர், இக்காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் பிறர் தலையீடு இன்றி வாழ்ந்திட அனுமதிக்கப்பட்டனர் என்று தோன்றுகிறது.

- மௌரிய பேரரசர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு வளங்களை வரிகளாக வசூலித்ததின் அவசியம் என்னவாக இருக்கும் என்று நீ கருதுகிறாய்?
- விவசாயிகள், கைவினை தொழில் செய்வோர், வணிகர்கள், விலங்கு மேய்ப்பவர்கள், காட்டுவாசிகள், தாங்கள் செலுத்திய வரிகளுக்கு பதிலாக எதைப் பெற்றிருப்பார்கள் என்று நீ கருதுகிறாய்?
- மௌரியர்களுக்கு தட்சசீலம், சுவர்ணகிரி போன்ற நகரங்கள் எவ்விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை?
- பேரரசரின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்த பாடலிபுத்திரம் மற்றும் அதை சுற்றியிருந்த பகுதியையும், மாகாணங்களையும், காட்டுப் பகுதிகளையும், வெவ்வேறாக ஆட்சி செய்ததன் காரணம் என்ன? இம்மூன்று பகுதிகளை ஆட்சி செய்திட பொதுவான விதிமுறைகள் வகுக்கப்பட்டன என்று நீ நினைக்கின்றாயா?

## அசோகர் தனிச்சிறப்பு வாய்ந்த ஆட்சியாளர்.

அசோகர் மௌரிய ஆட்சியாளர்களில் மிகவும்புகழ் பெற்றவர். தன் செய்திகளை கல்வெட்டுகள் மூலம் மக்களுக்கு சென்றடையுமாறு செய்த முதல் ஆட்சியாளர் அசோகர். அவருடைய கல்வெட்டுகள் பெரும்பாலும் பிராகிருத மொழியில் பிராமி லிபியில் எழுதப்பட்டுள்ளன.

## அசோகரின் கலிங்கப் போர் :

கலிங்கம் என்பது தற்போது கடலோர மாநிலமான ஒடிசாவின் பழைய பெயராகும். (இந்திய வரைபடத்தை பாருங்கள்) கலிங்கத்தை வெற்றி கொள்ள அசோகர்

SCERT TELANGANA

போர் செய்தார். கலிங்கப் போரில் நிகழ்ந்த வன்முறை, ரத்த வெள்ளம், முதலியவற்றை, கண்டு மிகவும் மனம் வருந்தினார். இனிமேல் யுத்தம் செய்யப்போவதில்லை என்று பிரகடனம் செய்தார். உலக வரலாற்றில், போரில் வெற்றி அடைந்து, போரை கைவிட்ட ஒரே ஒரு மன்னன் அசோகர் ஆவார்.

**கலிங்க யுத்தத்தை குறித்து தெரிவிக்கும் அசோகரின் கல்வெட்டு**

அசோகர் தன் கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்கண்டவாறு பிரகடனம் செய்துள்ளார்.

மன்னனாக முடிசூடி எட்டு ஆண்டுகளுக்கு பிறகு, நான் கலிங்க நாட்டை வென்றேன். ஒன்றரை லட்சம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர். கொல்லப்பட்டனர்.

**இது என்னுள் துக்கத்தை நிரப்பியது ஏன் தெரியுமா?**

ஒரு சுதந்திர நிலப்பரப்பை வெற்றி கொள்ளும் போது, லட்சகணக்கான மக்கள் இறக்கின்றனர். உறவினர்கள், நண்பர்கள், அடிமைகள், பணியாட்கள், போன்றோருடன் தயவுடன் நடந்து கொள்பவர்கள் கூட இறக்கின்றனர் (அ) அவர்களுக்கு விருப்பமானவர்களை இழக்கின்றனர். இதனால் நான் மிகவும் துக்கம் அடைந்துள்ளேன். இன்று முதல் தர்மத்தை கடைபிடிக்க வேண்டும் என முடிவு செய்துள்ளேன்.

தர்ம கொள்கைகள் குறித்து பிறருக்கு பிரச்சாரம் செய்திடவும் முடிவு செய்துள்ளேன். வலிமையை பயன்படுத்தி மக்களை வெற்றி கொள்வதை விட, தர்ம நெறிப்படி வெல்வதே மிகவும் சிறந்தது என நம்புகிறேன்.

வருங்காலத்தில் எனக்குப் பிறகு என் மகன், பேரன் முதலியோர் போரைக் குறித்து ஆலோசிக்காமல் இருக்கவும், போர் செய்வதற்கு பதிலாக தர்ம கொள்கைகள் குறித்து எவ்வாறெல்லாம் பிரச்சாரம் செய்ய முடியும் என்பது குறித்தும் யோசிக்க வைத்திட இச்செய்தியை கல்வெட்டில் செதுக்கி வைத்துள்ளேன். (தம்மா என்பது பிராகிருத மொழிச்சொல். இதற்கு ஈடான சமஸ்கிருத சொல் தர்மா என்பதாகும்.)

- போர் குறித்து அசோகர் கொண்டிருந்த மனப்பான்மையில் கலிங்கப் போர் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தியது?
- கலிங்க யுத்தம் குறித்து தன்னுடைய எண்ணங்களை பாறைகள் மீது அசோகர் ஏன் செதுக்கி வைத்தார்?
- அசோகர் போர்கள் செய்வதை முழுவதும் நிறுத்தி கொண்ட செயல், இந்திய துணை கண்டத்தின் மக்களிடையே எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்?

**அசோகரின் தர்மக் கொள்கை என்றால் என்ன?**

அசோகரின் தர்மக் கொள்கையில் கடவுள் வழிபாட்டு பூஜைகள், பலியிடுதல் போன்றவை இல்லை. தந்தை, தன்னுடைய குழந்தைகளுக்கு கற்றுத் தருவது போல தன் குடிமக்களுக்கு தர்மக் கொள்கைகளை கற்றுத் தருவது தனது கடமையாக கருதினார். அசோகர் புத்தருடைய போதனைகளால் ஊக்கம் பெற்றார்.

பல்வேறு பிரச்சனைகள் அவருக்கு இடையூறு விளைவித்தன. இவருடைய பேரரசில் இருந்த குடிமக்கள் பல்வேறு மதங்களை பின்பற்றினர். இதனால் அவர்களிடையே சச்சரவுகள் எற்பட்டன. விலங்குகள் பலியிடப்பட்டன. அடிமைகள் மற்றும் பணியாட்களை துன்புறுத்தினர். அத்துடன் சமூகத்தில் இருந்த குடும்பங்களிலும், சுற்றுப்புறங்களில் இருந்தவர்களிடையேயும், சண்டைகள் நடந்து வந்தன. இப்பிரச்சனைகளை தீர்த்து வைப்பது தனது கடமை என்று அசோகர் கருதினார். இதற்காக அவர் தர்ம மகாமாத்திரர்கள் என்னும் அதிகாரிகளை நியமித்தார். அவர்கள்



*படம் 11.2 பேரரசர் அசோகர்.*

SCERT TELANGANA

பேரரசின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று, மக்களுக்கு தர்மக் கொள்கைகளைப் பற்றி போதித்தனர். அது மட்டுமின்றி அசோகர் தன்னுடைய புத்தமத கொள்கைகளை கற்பாறைகள் மீதும், கல்தூண்கள் மீதும் செதுக்கச் செய்தார். கல்வியறிவு இல்லாத மக்களுக்கு கல்வெட்டுகளில் உள்ள செய்திகளை படித்து காட்ட அதிகாரிகளுக்கு கட்டளையிட்டார்.

அசோகர் புத்த மத கொள்கைகளை சிரியா, எகிப்து, கிரீஸ் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பரப்ப தூதுவர்களை அனுப்பி வைத்தார்.

மக்களுக்காக சாலைகள் அமைத்தார். மரங்களை நட்டார் கிணறுகளை வெட்டச் செய்தார். பயணிகள் வசதிக்காக சத்திரங்கள் கட்டச் செய்தார். அத்துடன் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் மருத்துவமனைகள் ஏற்படுத்திக் கொடுத்தார்.

**அசோகர் குடிமக்களுக்கு அளித்த செய்தி**

மக்கள் நோய்வாய்ப்படும் போதும், திருமணங்கள் நடத்தும் போதும், குழந்தைகள் பிறக்கும் போதும், வெளி ஊர்களுக்கு பயணம் மேற்கொள்ளும் போதும், பல்வேறு சம்பிரதாயங்களை பின்பற்றுகின்றனர். அவற்றால் எவ்விதமான பயனும் இல்லை. அவற்றுக்கு பதிலாக மக்கள் இதர நெறி முறைகளை பின்பற்றுவதால் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். அவை யாவை?

அந்நெறி முறைகள் பின்வருமாறு :

பணியாட்கள், அடிமைகளுடன் மென்மையாக நடந்து கொள்ளுதல், பெரியோரை மதித்தல், எல்லா உயிரினங்களுடன் இரக்கத்துடன் நடந்து கொள்ளுதல், பிராமணர்களுக்கும், துறவிகளுக்கும் காணிக்கைகள் தருதல் முதலியவை ஆகும்.

தன் மதத்தை புகழ்வதும், பிறருடைய மதங்களை விமர்சித்தலும் தவறான செயல் ஒவ்வொருவரும் பிறருடைய மதத்தை மதித்து நடந்து கொள்ளவேண்டும்.

தன்னுடைய மதத்தை புகழ்ந்து பேசி, பிறருடைய மதங்களை விமர்சித்து பேசுபவர்கள் தங்கள் மதத்திற்கு அதிக தீங்கு செய்கின்றனர்.

எனவே, பிற மதங்களுடைய முக்கிய அம்சங்களை புரிந்துகொண்டு அவற்றை மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

- தர்ம கொள்கைகளை பிரச்சாரம் செய்தவன் மூலம் அசோகர் எந்தெந்த பிரச்சனைகளை தீர்த்து வைக்க முடியும் என்று விரும்பினார்?
- அடிமைகளையும், பணியாட்களையும் மக்கள் ஏன் தாழ்த்தி நடத்துகின்றனர் என்பதன் காரணங்களைக் கூறுங்கள் பேரரசர் அசோகரின் கல்வெட்டுச் செய்தியால் அவர்களின் நிலைமேம்பாடு அடைந்ததா? உங்கள் பதிலுக்கான காரணங்களை கூறுங்கள்.
- பொதுமக்களிடையே தர்மக் கொள்கைகளை அசோகர் ஏன் பரப்பச் செய்தார்?
- மத சம்பிரதாயங்களுக்கு பதிலாக எவற்றை மக்கள் பின்பற்றுமாறு ஊக்குவித்தார்?
- சிரியா, எகிப்து, இலங்கை
- மேலே குறிப்பிட்ட நாடுகளை உலக வரைபடத்தில் குறித்துக் காட்டுக. பாட்னாவில் இருந்து இந்நாடுகளுக்கு செல்லும் மார்க்கத்தை விவரி.

## தக்காணத்தில் இருந்த ராஜ்ஜியங்கள் மற்றும் சாம்ராஜ்ஜியங்கள்

மௌரியர்கள் தக்காணத்தை வெற்றி கொண்ட போது (கோதாவரி நதியில் இருந்து கிருஷ்ணா, துங்கபத்திரா நதி பள்ளத்தாக்கு பகுதி வரை) பெரும்பாலான பகுதிகள் கிராமங்கள், சிறுபட்டினங்களை கொண்டிருந்தன. அவற்றில் இரும்பு பொருட்கள் மற்றும் கருவிகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. சில பகுதிகளில் தங்கம், சுரங்கங்களில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டு ஆபரணங்கள் தயாரிக்கப்பட்டன. இதர பகுதிகள் பெரும்பாலும் காட்டுப்பகுதிகளாக இருந்தன. அவற்றில் வேட்டைக்காரர்கள் மற்றும் உணவு சேகரிப்போர், விலங்கு மேய்ப்பர்கள் சிறு குடியிருப்புகளைக் கொண்ட பரப்புகளில் வாழ்ந்து வந்தனர்.

பிறப்பு, மற்றும் திருமணங்களால் இம்மக்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வகை சமூக மக்கள் காட்டுப்பகுதிகளில் வாழ்ந்துவந்தனர். பரஸ்பர தொடர்புடைய இம்மக்கள் பழங்குடி இனம் எனவும் அழைக்கப்பட்டனர். இவ்வின மக்களில் சில முக்கியமான நபர்கள் சக்தி வாய்ந்த தலைவர்களாயினர். தங்கள் இனத்தை வழி நடத்தி செல்லுதல் மற்றும் அவர்களிடையே

SCERT TELANGANA

ஏற்படும் சண்டைகளை தீர்த்து வைத்தல் போன்றவற்றை செய்தனர். அவர்கள் படிப்படியாக வளங்களை சேர்த்துக்கொண்டு சக்தி வாய்ந்தவர்களாக உருவாகி, தங்கள் இனத்தின் காட்டுப்பரப்பை ஆட்சி செய்தனர்.

- பல்வேறு பட்டினங்கள் வலிமை வாய்ந்த கோட்டைகளை கொண்டிருந்தன. அவை எப்படிப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர் கொண்டன? அப்பட்டினங்களுக்கு கோட்டைகள் ஏன் தேவைப்பட்டிருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
- சிந்து – கங்கைப் பள்ளத்தாக்கு மற்றும் கிருஷ்ணா–துங்கபத்திரா பள்ளத்தாக்கு பகுதிகளுக்கும், இடையே காணப்பட்ட எந்தெந்த ஒற்றுமைகள் கிராமங்கள் மற்றும் பட்டினங்கள் வளர்ச்சிக்கு வழி வகுத்தன?

மௌரியப் பேரரசு வீழ்ச்சி அடைந்த பிறகு, அப்பழங்குடி இனங்களின் தலைவர்கள் சிற்றரசர்களாக உருவெடுத்தனர். அவர்களுள் ஆந்திர சாதவாகனர்கள் நர்மதை நதி பகுதியில் இருந்து கிருஷ்ணா கோதாவரி டெல்டா பகுதி வரை பரந்த சாம்ராஜ்யத்தை ஏற்பாடு செய்து கொண்டனர். சாதவாகன மன்னர்களின் மிகவும் முக்கியமானவர்கள் கௌதம புத்திர சாதகர்ணி, வசிஷ்ட புத்ர புலுமாவி மற்றும் யக்ஞ ஸ்ரீ சாதகர்ணி, போன்றோர் ஆவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் 200 ஆண்டுகள் கிருஷ்ணா நதிக்கரையில் அமைந்திருந்த அமராவதியின் அருகில் இருந்த தானிய கடகம் என்னுமிடத்தை தலைநகரமாக கொண்டு ஆட்சி செய்தனர். சாதவாகன மன்னர்கள் பல்வேறு இனத்தலைவர்கள், சிற்றரசர்கள் போன்றோரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஆனால், அவர்களுடைய செயல்களில் இடையூறு ஏற்படுத்தாமல் சுதந்திரமாக ஆட்சி செய்திட அனுமதித்தார்.



*படம் 11.2 நாணயத்தின் மீது அச்சிடப் பட்ட கௌதமிபுத்ர சாதகர்ணியின் உருவம்.*

அமராவதி, பட்டிப்ரோலு, வட்டிலமானு முதலிய இடங்களில் புத்த மடாலயங்கள் மற்றும், ஸ்தூபங்கள் கட்ட, பல்வேறு இனத்தலைவர்கள், அக்குடும்பங் களைச் சேர்ந்த பெண்கள், வணிகர்கள் பெருமளவு நன்கொடைகள் அளித்தனர். இப்பகுதிகள் வரிவிதிப்பில் விலக்கு தரப்பட்டன. இவர்கள் ஆட்சியின் போது வங்காளம் மற்றும் ரோம் நகரத்துடன் வாணிப தொடர்பு மிக முக்கியமானதாக விளங்கியது. இப்பகுதியில் ரோமானிய நாணயங்கள், ரோம கலை நுட்பம் கொண்ட பானைகள் கிடைத்துள்ளன. வியாபாரிகள் படகுகள் மூலம் கடலோர மார்க்கங்களில் சரக்கு போக்குவரத்தை நடத்தினர். கிருஷ்ணா நதி மீதும் படகுகள் மூலம் அமராவதி போன்ற பட்டினங்களுக்கு சரக்கு போக்குவரத்து நடந்து வந்தன.

**சாதவாகனர்கள் காலத்தில் கோடிலிங்காலா:**

தெலங்கானாவின் ஜகதியால் மாவட்டத்தில் பெத்தவாகுவிற்கும் கோதாவரி நதிக்கும் எல்லம்பள்ளி அணைத்திட்டத்தின் மேல் நீரோடை அருகில் அவை இணையுமிடத்தில் கோடி லிங்காலா அமைந்துள்ளது. இது பண்டைய இந்தியாவின் 16 மகா ஜனபதங்களில் ஒன்றான அஸ்மகாவின் தலைநகரமாகும்.



*படம் 11.3 கோடிலிங்காலா நாணயங்கள்.*

இது சாத வாசண வம்சத்தின் முதல் தலைநகரமாகும். அகழ்வாராய்ச்சியின் போது இங்கு சாதவாகணர்களுக்கு முந்தைய துளையிடப்பட்ட வெள்ளி நாணயங்களும், சாதவாகண மற்றும் இச்சுவாக காலத்தின் நாணயங்கள், மதிப்பு வாய்ந்த பழைய பொருட்களான பானைகள், டெர்ரகோட்டா உருவங்கள், மற்றும் அதிக எண்ணிக்கையில்



*படம் 11.4 கோடிலிங்காலா பானை*



SCERT TELANGANA

பீங்கான் பொருட்களும் கிடைத்தன. சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு சுற்றுகிணறும் இங்கு கண்டெடுக்கப்பட்டது. சாதவாகன வம்சத்தைத் தோற்றுவித்தவரான ஸ்ரீமுருகர் மற்றும் பிற ஆட்சியாளர்களான கண்ஹர் மற்றும் சாதகர்ணி ஆகியோரால் வெளியிடப்பட்ட பல்வேறு நாயணங்களும் இங்கு கிடைத்தன. பல்வேறு வாயில்கள் மற்றும் நான்கு மூலைகளில் மேற்பார்வையிடும் கோபுரமும் கொண்ட மண் கோட்டையும் இங்கு இருந்தது.

மேலும் கோடிலிங்காலாவில் புத்த மதத்துறவிகளின் கல்தூன்கள், விகாரங்கள் மற்றும் சைத்தியங்கள் போன்றவை தெலங்கானாவின் பாணிகிரி, நேல கொண்டபள்ளி, கொண்டாபூர், தூளி கதா, பெத்த பங்கூர் மற்றும் கேசர குட்டை போன்ற இடங்களில் காணப்பட்டன.

- நீங்கள் வீடுகளைக் கட்ட சுட்ட செங்கற் களைப் பயன்படுத்துகிறீர்களா?
- சுற்றுக்கிணறுகள் உள்ளனவா? சாக்கடை நீரை எடுத்துச்செல்ல நிலத்தடிக்குழாய்கள் உள்ளனவா? நீங்கள் கருமார்களின் பணிமனையைக் கண்டதுண்டா? வகுப்பறையில் அதைப்பற்றி கலந்துரையாடவும்.
- பெத்தபங்கூரிலிருந்து ரோம் நகரத்திற்குப் பொருட்களை எடுத்துச்செல்லும் வியாபாரியாக உன்னை கற்பனைச் செய்து கொள். அதன் அடிப்படையில் ஒரு கதை எழுது.

**சில இனத்தவரின் தலைவர்கள் சிற்றரசர்களாக எவ்வாறு ஆனார்கள்?**

- கர்நாடக மாநிலத்தில் பல்லாரி மாவட்டத்தில் மியாகதோணியில் கிடைத்த கல்வெட்டு

சாதவாகன காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டு மியாகதோனி என்னும் கிராமத்தில் ஒரு பாறைக்கல் மீது செதுக்கப்பட்டுள்ளதை படியுங்கள்.

- சாதவாகன மன்னன் புலுமாவியின் எட்டாவது ஆண்டு ஆட்சி காலத்தில் அவருடைய மஹா சேனாதிபதி ஸ்கந்தநாகாவின் ஜனபதாவில் உள்ள சாதவாகன மாவட்டத்தில் குமாரதத்தா அதிபதியாக உள்ள பேவுரா கிராமத்தில் வசிக்கும் கவுண்ட் இனத்தைச் சேர்ந்த சாம்வா என்னும் கஹபதி இந்த ஏரியைக் தோண்டச் செய்தார்.

1. வேபுரா கிராமத்தில் வாழ்ந்த இனம் எது?
2. அவ்வினத்தின் தலைவன் யார்?
3. வேபுரம் கிராமம் உள்ள ஜனபதாவிற்கு தலைமை பொறுப்பேற்றிருந்தவர் யார்?
4. கஹபதி சம்வா ஏன் ஏரியை தோண்டச் செய்திருப்பார் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

சாதவாகனர்களின் பேரரசு வீழ்ச்சியடைந்த சிறிது காலம் கழித்து இக்ஷ்வாகுகள் அரசர் பட்டங்களை பெற்று மன்னர்களாயினர். இக்ஷ்வாகுகள் தங்கள் சாம்ராஜ்யத்தை கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள நாகர்ஜுன கொண்டாவின் அருகிலுள்ள விஜயபுரியை தலைநகராக கொண்டு நிறுவினர். இவ்வம்சத்தின் முக்கியமான மன்னர்கள் சாண்டமூலன் மற்றும் வீரபுருஷதத்தா ஆவர். இம்மன்னர்கள் இதர இனத்தைச் சேர்ந்தவர்களை மணந்து கொள்வதின் மூலம் அவ்வினத் தலைவர்களையும், சிற்றரசர்களையும் ஒருங்கிணைக்க முயன்றனர். அத்துடன் அஸ்வமேதயாகம், ராஜசூயயாகம், போன்ற அதிக செலவுடன் கூடிய யாகங்களை செய்து பிராமணர்களுக்கு தாராளமாக தானங்கள் செய்து தங்களுடைய தனித்தன்மையை பறைசாற்ற முயன்றனர். இம்மன்னர்கள் தங்களை ராமாயணத்தில் உள்ள இராமருடைய வாரிசுகள் என்று கூறிக்கொண்டனர். மிக சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இக்ஷ்வாகு மன்னர் குடும்ப பெண்கள் புத்த துறவிகளை ஆராதனை செய்தனர். நாகார்ஜுன கொண்டா பகுதியில் புத்த மடாலயங்கள் மற்றும் ஸ்துாயங்களைக் கட்ட பெருமளவு நன்கொடைகள் அளித்து ஆதரித்தனர். இவர்கள் நாகார்ஜுன கொண்டா பகுதியில் மிகப் பெரிய புத்த மடாலயமும் மற்றும் ஸ்தூபமும் கட்டியுள்ளனர்.



*படம் 11.5 நாணயத்தின் மீது சித்தரிக்கப்பட்ட வசிஷ்ட்புத்திர புலுமாவி மன்னனின் உருவம்.*

SCERT TELANGANA

**இந்திய துணை கண்டத்தில் வாழ்ந்த சில முக்கியமான மன்னர்கள் :**

**குஷாணர்கள் :**

குஷாணர்கள் சீனாவி-ருந்து குடியேறியவர்கள். பிறகு இரண்டாயிரம் ஆண்டிற்கு முன் ஆப்கனிஸ்தான் மையமாக கொண்டு ஒரு பேரரசை உருவாக்கினர். இவர்களில் மிகவும் புகழ்பெற்றவர் கனிஷ்கர். இவர் 78 CE-ல் அரியணை ஏறினார். இன்றைய இந்தியா மற்றும் பாகிஸ்தான் மதுரா மற்றும் அலகாபாத் வரை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தனர். ஆப்கனிஸ்தானின் ஆக்ஸஸ் நதிவரை அரசை பரப்பினர். அவர்கள் இந்தியா, சீனா, ஈரான் மற்றும் ரோம் இடையே வர்த்தக மார்க்கத்தை கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தினர். இந்த யுகத்தை வாணிப, மத பிரசார, கலைஞர்கள் மற்றும் அறிஞர்களின் யுகம் எனலாம். இந்த நாடுகளிடையே மக்களும் பழக்கவழக்கங்கள், மத மற்றும் தத்துவ நெறிகள், கலை மற்றும் கட்டிட அமைப்பை அறிந்திருந்தனர். இதனால் தங்கம் புழக்கத்திற்கு வந்தது. தங்க காசுகளும் அச்சடிக்கப்பட்டன.

**சகா சாகாப்தம்**

78 CE-யில் கனிஷ்கா பதவி ஏற்ற காலத்தை சகா சகாப்தம் என்று அழைத்தனர். அதிக தென் இந்தியர்கள் நாட்காட்டியாக பயன்படுத்துகின்றனர். சாதாரண சகாப்தத்தை விட 78 ஆண்டுகள் பின் தங்கியுள்ளது.

**குப்த பேரரசு :**

குப்தர்கள் பேரரசு இன்றைய பீகாரில் சிறு அரசாக துவக்கப்பட்டது. மூன்று தலைமுறைகளுக்குள் குஜராத் முதல் வங்காளம் வரை, டெல்- முதல் மத்திய பிரதேசம் வரை வட இந்தியாவை ஆக்கிரமித்தனர். இவர்களில் முக்கியமான அரசர்கள் சந்திர குப்தர்-I, சமுத்திர குப்தர், சந்திர குப்தர்-II, குமார குப்தர் மற்றும் ஸ்கந்த குப்தர். குப்தர்கள் இந்திய வரலாற்றில் இரு முக்கிய அரசியல் மாற்றங்களை கொண்டு வந்தனர். முதலாவதாக, அவர்கள் வெற்றி கொண்ட நாட்டை பழைய அரசரையே ஆள அனுமதித்தனர். ஆனால் பேரரசின் ஆதிக்கத்தை ஏற்று ஆணையை பின்பற்ற வேண்டும். ஆத-னால் பல பழைய அரசுகள் தோற்றும் ஆள துவங்கினர். குறிப்பாக தென்னிந்திய அரசுகள். இரண்டாவதாக, சில குப்த அரசர்கள், சிற்றரசர்கள், நட்பு பாராட்டிய அரசர்கள் அதிகார உரிமையுடன் பிராமணர்களுக்கு கிராமங்களை தானமாக வழங்கினர். இக்கிராமத்தினர் வரி செலுத்தத் தேவையில்லை. மற்றும் உள்ளாட்சி அதிகாரிகளின் ஆணையை ஏற்கவும் தேவையில்லை. இக்கிராமங்களில் குடிபுகுந்த பிராமணர்கள் யாகங்கள் செய்தும், இளம் பிராமணர், சத்ரியர்கள் மற்றும் வைடியர்களுக்கு வேதங்களை கற்றுத்தந்தனர். அவர்கள் இதிகாசங்கள், புராணங்களை அனைவருக்கும் கற்றுத்தந்தனர்.

**மெகரோலி இரும்பு தூண் :**

இது டில்லியில் குதுப்மினாரை சார்ந்து உள்ளது. இரண்டாம் சந்திர குப்தரால் கட்டப்பட்டது. இதன் சிறப்பு யாதெனில் 17 நூற்றாண்டுகளாக திறந்த வெளிக்காற்றிலும் துரு பிடிக்காமல் இருக்கிறது.



SCERT TELANGANA

- எதற்காக குப்தர்கள் காலத்தில் மதங்கள் வளர்ச்சியடைந்தது?
- குப்தர்கள் தென்னந்தியாவில் தோற்ற மன்னர்களையே ஆளச் செய்ததன் காரணம் என்ன?
- கிராமங்களை பிராமணர்களுக்கு அளித்தது குப்தர்களுக்கு எவ்வழியில் உதவியது?

குப்தர் கால பேரரசர்கள் வேதம் சார்ந்த மத அடிப்படையிலான அஸ்வமேத யாகம் செய்ய ஊக்குவித்தனர். புராண பழக்கவழக்கங்களை நடைமுறைக்கு கொண்டுவந்து வைணவம் மற்றும் சைவத்தை சார்ந்த கோயில்களை கட்டினர். இவற்றுள் விஷ்ணு அவதாரங்கள், சிவன் மற்றும் துர்கையின் உருவங்களை பதித்தனர். வழிபட அறக்கட்டளைகளும் ஏற்படுத்தப்பட்டது.

இதுபோன்ற ஆதரவினால் யாகங்கள் போன்ற சடங்குகள் ஒன்றிணைக்கப்பட்டு சிவன், விஷ்ணு மற்றும் துர்கை வழிபாட்டால் இந்து மதம் வளர்ச்சியுற்றது. குப்தர்கள் பௌத்த மதத்தையும் ஆதரித்தனர். சாஞ்சி ஸ்தூபம் மற்றும் ஜைன மடங்கள் கட்ட பண உதவி அளிக்கப்பட்டது.

SCERT TELANGANA




*Map 2: Gupta Empire 320-550 CE*

**குப்தர்கள் காலத்தில் பல அழகிய கோயில்கள் கட்டப்பட்டன. இன்றைக்கும் மத்திய பிரதேசத்திலுள்ள தியோகார் மற்றும் உதயகிரி, உத்திர பிரதேசத்திலுள்ள பிட்ராகான் மற்றும் இரான் பகுதியில் கோயில்களை காணலாம். அவை இந்தியாவில் உருவாக்கப்பட்ட அழகிய கற்சிற்பங்களை கொண்டுள்ளது. அவை சிவன் மற்றும் விஷ்ணு போன்ற கடவுள்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. சாரநாத்தில் உள்ள புத்த சிற்பங்கள் குப்தர்கள் அம்மதத்தையும் ஆதரித்தனர் என்பதை காட்டுகிறது.**

- குப்த பேரரசர்கள் வேத முறைகளையும், கோயில் வழிபாடுகளையும், பௌத்த மற்றும் ஜைன மடாலயங்களையும் ஆதரித்ததற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

## முக்கியச் சொற்கள்

1. பேரரசு
2. அர்த்த சாஸ்திரம்
3. தர்மமகாமாத்திரர்கள்
4. தர்மா கொள்கை
5. வெற்றிக் கொள்ளல்
6. தக்காணம்
7. சாதவாகனர்கள்
8. இக்ஷ்வாகு
9. யாகங்கள்
10. மடாலயம்
11. துணைக் கண்டம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பல்வேறு இனத்தலைவர்களின் அங்கீகாரம் பெறுவதற்கு இக்ஷ்வாகு மன்னர்கள் என்ன செய்தனர்?(AS1)
2. அசோகர் தனிச்சிறப்பு வாய்ந்த ஆட்சியாளர் என்று கருதுவது ஏன்?(AS5)
3. தக்காணத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு ராஜ்ஜியங்கள் ஏற்பட வழி வகுத்த சூழ்நிலைகள் யாவை?(AS6)
4. வரைபடம்1ல் மூன்று நதிகள் மற்றும் இரண்டு மாகாணத் தலைநகரங்களையும் கண்டறியவும்.(AS5)
5. அசோகர் கலிங்க போருக்குப் பின் இனி மேல் போர் செய்வதில்லை என்று உறுதிபூண்டார். இவ்வாறான முடிவுகள் உலக அமைதிக்குத் துணை என்று நீ கருதுகிறாயா? எவ்வாறு?(AS6)
6. உலகப்புற வரிப்படத்தில் கீழ்காணும் நாடுகளை குறிக்கவும்.(AS5)

   (அ) சிரியா (ஆ) எகிப்து (இ) கிரீஸ் (ஈ) இலங்கை (உ) இந்தியா
7. அசோகர் காலத்தில் வாரிசு ஆட்சி முறை இருந்தது. தற்கால ஆட்சிமுறை அக்கால ஆட்சி முறையுடன் எவ்வாறு வேறுபட்டிருந்தது?(AS4)
8. அசோகர் குடிமக்களுக்கு அளித்த செய்தி எனும் தலைப்பின் கீழுள்ள பத்தியை படித்து உன் கருத்தை தெரிவிக்கவும்.(AS2)
9. குப்தர்கள் காலத்தில் சமுதாயக் கொள்கைகள் என்ன? விவாதிக்கவும்.(AS1)

**செயல்திட்டம் :**

- உங்கள் பகுதியில் ஏதாவது பழங்கால கல்வெட்டு இருந்தால் அதுகுறித்து மேலும் விவரங்களை சேகரித்து தெரிந்து கொள்ளுங்கள்.

SCERT TELANGANA

அத்தியாயம் 12

# ஜனநாயக அரசு

**செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட கீழ்கண்ட தலைப்புச் செய்திகளை படியுங்கள் அரசாங்கம் செய்கின்ற பல்வேறு செயல்கள் குறித்த அறிக்கைகளை நீங்கள் காண்கிறீர்கள். இவற்றில் பெரும்பாண்மையானவை நாட்டின் மக்கள் நல விவகாரங்கள் குறித்த அம்சங்கள் ஆகும்.**

அமைப்புச்சாரா தொழலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க அரசு முடிவு

வெள்ளப் பெருக்குகளை சமாளிக்க நிவாரண=ச திட்டங்கள் விரைவில் அறிவிக்கப்படும், அரசு கூறுகிறது.

வெங்காயத்தின் விலையை அரசு நிர்ணயம் செய்துள்ளது. சந்தையில் தட்டுப்பாடு இல்லை என அரசு அறிவிப்பு.

உச்ச நீதிமன்றதிற்கு மேலும் ஐந்து நீதிபதிகள் : அரசு நியமனம்

அரசு, நிலக்கரி மற்றும் மின்துறைகளை சீரமைத்திட முடிவு செய்துள்ளது.

.5,000க்கு மேற்பட்ட கிராமங்களில் வசதிகள் பற்றாக்குறையாக உள்ளது என அரசு அறிவிப்பு

## அரசாங்கம் என்ன செய்கிறது?

தற்போது உள்ள காலத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் தீர்மானங்கள் செய்யவும், பல்வேறு பணிகளை செய்து முடித்திடவும், அரசாங்க அமைப்பு தேவைப்படுகிறது, பள்ளிகள் மற்றும் சாலைகள் எங்கு அமைக்க வேண்டும்? வெங்காயத்தின் விலை மிகவும் அதிகமாகும் போது விலையைக் குறைத்திட என்ன செய்ய வேண்டும்? மின்சாரத்தின் அளிப்பை அதிகரிக்க என்னென்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்? அரசாங்கம் பல்வேறு சமூகம் சார்ந்த பிரச்சனைகளை தீர்த்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்கிறது, எடுத்துகாட்டாக ஏழைகளுக்கு உதவும் பல்வேறு திட்டங்களை அமுலாக்குகிறது. தபால் துறை, ரயில்வே துறை போன்ற முக்கியமான சேவைத்துறைகளை இயக்கி பணி புரிகிறது.

அரசாங்கம் நாட்டின் எல்லைகளை பாதுகாக்கும் பணியையும் செய்ய வேண்டி உள்ளது. மற்ற நாடுகளுடன் அமைதியான நட்புறவை பராமரிக்க வேண்டி உள்ளது. நாட்டின் எல்லா குடிமக்களும் போதுமான உணவும், நல்ல உடல் ஆரோக்கிய வசதிகளையும் பெற்றிருக்குமாறு உத்திரவாதம் தரவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு உள்ளது. இயற்கைச் சீற்றங்களான சுனாமி; நில நடுக்கம் ஏற்படும் போது அரசாங்கம் மீட்பு மற்றும் நிவாரண உதவி பணிகளை செய்கிறது. சண்டைகள் நிகழும் போதும், யாராவது குற்றம் செய்தாலோ அவர்களை நீதிமன்றத்தில் நீங்கள் பார்த்திருப்பீர்கள், நீதி மன்றங்கள் அரசாங்கத்தின் ஒரு பிரிவு. இப்பணிகளை அரசாங்கம் எவ்வாறு செய்ய முடிகிறது என நீங்கள் வியப்பு அடையலாம்.

SCERT TELANGANA

மனிதர்கள் ஒன்று சேர்ந்து பல்வேறு தொழில்கள் செய்து சமூகமாக வாழ்க்கை நடத்தும்போது, அம் மக்களுக்காக முடிவுகள் இயற்ற சில அமைப்புகள் தேவைப்படுகின்றன. எல்லோரும் பின்பற்ற கூடிய விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக இயற்கை வளங்களையும், நாட்டின் எல்லைகளையும் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறு செய்வதால் மக்கள் பாதுகாப்பு உணர்வை பெறுவர். தலைமையேற்று நிர்வகித்தல், சட்டங்கள் இயற்றி, தங்கள் நிலப்பரப்பில் வாழும் மக்களிடையே அவற்றை அமுலாக்குதல் போன்றவை வாயிலாக அரசாங்கங்கள், தங்கள் மக்கள் சார்பாக செய்கின்றன.

- நீ படிக்கும் பள்ளிக் கூடத்தை நிர்வகிப்பது யார்?
- உனக்குத் தெரிந்த அரசாங்க செயல்கள் சிலவற்றை பட்டியலிடு.

## அரசுகளின் வகைகள் :

ஒன்பதாவது அத்தியாயத்தில் பழங்குடி இன மக்கள் எவ்வாறு தங்களை தாங்களே ஆட்சி செய்து கொள்கின்றனர், எவ்வாறு அவ்வினத்தின் பல்வேறு குடும்பங்களை சேர்ந்த ஆண் உறுப்பினர்கள் ஒன்று கூடி, விவாதித்து முடிவு செய்கின்றனர், அவ்வினத்தின் தலைவர் எவ்வாறு முடிவுகளை நடைமுறை படுத்துகிறார், என்பதையும் படித்தோம். மக்கள் தொகை குறைவாக உள்ள போது இம்முறை சாத்தியமாகும். ஆனால் பல ஆயிரக்கணக்கான மற்றும் லட்சக்கணக்கான குடும்பங்கள் உள்ள



*படம் 12.1 ரயில்நிலையம்*




*12.2 அஞ்சல் அலுவலகம்*



*படம் 12.3 உச்சநீதிமன்றம்*

*அரசாங்கத்தின் பாகமாக இயங்கும் அமைப்புகளின் சில எடுத்துக்காட்டுகள்.*

சமுதாயத்தில் இம் முறை சாத்தியமாகும் என்று நீ கருதுகிறாயா?

அம்மக்கள் எப்படிப்பட்ட பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்? ஒரே வகையான மதம், ஜாதி, மொழி போன்ற கலாச்சார பின்னணி கொண்ட சமுதாயங்களில் பழங்குடி இன ஜனநாயக முறை நடைமுறைக்கு உகந்தது. இவ்வகை சமூகங்களில் நடத்தை விதிமுறைகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ள கூடியது.

இருப்பினும், பல்வேறுப்பட்ட கலாச்சாரம் கொண்ட மக்கள் சமுதாயத்தில், பழங்குடி இன ஜனநாயகமுறை செயல்படுத்த முடியுமா? மூன்றாவதாக, பழங்குடி இன ஜனநாயகம் ஒரே விதமான நோக்கங்கள், ஆர்வங்கள் கொண்டிருந்ததால் நடைமுறையில் இருந்தது.

SCERT TELANGANA

அச்சமூகத்தில் ஏழை, பணக்காரர் போன்ற வேறுபாடுகள் காணப்படாது. ஆனால் பலதரப்பட்ட கலாச்சாரம் கொண்ட சமுதாயத்தில், சிலர் விவசாயிகளாகவும், சிலர் வியாபாரிகளாகவும், சிலர் வட்டி வியாபாரிகளாகவும், சிலர் தொழில் அதிபர்களாகவும், சிலர் நிலம் (அல்லது) இதர வளங்கள் இல்லாத தொழிலாளிகளாகவும் உள்ளனர். இவ்வகை சமுதாயத்தில் மிக அதிக அளவு கருத்து வேற்றுமைகள் நிலவும், ஒரு பிரச்சனை குறித்து பொதுவான தீர்வு அதாவது எல்லோராலும் ஒத்துக் கொள்ள கூடிய தீர்வுகாண இயலாது.

பண்டைய வரலாற்று காலங்களில், அரசர்கள், அரசிகள் மற்றும் பேரரசர்கள் தாங்களாகவே சட்டங்கள் இயற்றி அவற்றை ராணுவம் மற்றும் அதிகாரிகள் மூலம் நடைமுறைப் படுத்தியதை நாம் கண்டோம். சாலைகள் எங்கு அமைக்க வேண்டும். மக்களிடமிருந்து எவ்வளவு வரியை வசூல் செய்ய வேண்டும்? என்பனவற்றை அவர்களே தீர்மானித்தனர். மக்கள் ஒத்து கொள்ளாத போது, கட்டளையை பின்பற்றாத போது, மன்னர்கள் அவர்களை தண்டித்தனர். அவர்களின் கட்டளைகளை எதிர்த்து கேள்வி கேட்கவோ, கீழ்படிய மறுக்கவோ எவராலும் முடியாது. மன்னனின் விருப்பத்தின் படி நிர்வாக முடிவுகள், கட்டளைகள், ஆட்சி இருந்தது.

பல மன்னர்கள் தங்கள் பகுதியை மட்டும் ஆட்சி செய்வதில் திருப்தி அடையவில்லை. அவர்களின் ஆட்சி பரப்பை விஸ்தரிக்க தொடர்ந்து போர்கள் நடத்தினர். இம்முறையான அரசாங்கம் "**மன்னராட்சி**" **எனப்படும். இதில் மன்னன் (அ) ராணி முடிவுகள் இயற்றவும், அரசாங்கத்தை நடத்தவும் அதிகாரம் பெற்றிருப்பர். முக்கியமான வழக்குகளில் மன்னன் இறுதி தீர்ப்பு வழங்கும் நீதிபதியாக செயல்படுவார்.**



*படம் 12.5 சட்டமன்றம்*

**நிர்வாகம் சம்மந்தப்பட்ட விஷயங்களில் கலந்தாலோசிக்க அமைச்சர் குழுவை பெற்றிருப்பார். ஆனால் முடிவு செய்யும் அதிகாரம் மன்னனிடம் இருக்கும். மன்னர்கள் தாங்கள் செய்த செயல்களுக்காகவோ, எடுத்த முடிவுகளுக்காகவோ விளக்கம் தர தேவையில்லை.**



*படம் 12.4 சாலிவாஹன மன்னன்*

- **பழங்குடி இன மக்களாட்சி முறையையும் மன்னராட்சி முறையையும் ஒப்பிடுக.**
  i. **இவ்விரண்டில் எந்தமுறை மக்கள் கருத்திற்கு அதிக மதிப்பு தருகிறது?**
  ii. **இவ்விரண்டு முறைகளில் எந்த முறை பெரிய சமுதாயத்தில் (அ) பல்வேறுபட்ட கருத்துகள் கொண்ட சமுதாயத்தில் சாத்தியமாகும்?**

SCERT TELANGANA

iii. **இவ்விரண்டு முறைகளில் எந்த முறையில் ஆட்சியாளர் கொடுக்கோலான, அநீதி உடையவனாக மாறும் அபாயம் உள்ளது?**

- **பெருமளவு மக்களின் தேவைகளை கவனித்து பல தரப்பட்ட பிரச்சனைகள் கொண்ட சமுதாயத்தை எதிர்கொண்டு நிர்வகித்து அநீதி (அ) கொடுங்கோல் ஆட்சியாக மாறாத அரசாங்க அமைப்பை நீ கூற முடியுமா?**
- **மன்னராட்சியிலும் அப்பழங்குடி இன சமூகத்திலும் அதிக போர்கள் நடைபெறும் என நீ கருதுகிறாயா? காரணங்களை கூறுக.**

## மக்களாட்சி அரசாங்கங்கள் :

நாட்டிலுள்ள எல்லா சமூக மக்களின் கருத்துகளை மனதில் கொண்டு ஆட்சி செய்யவும், அடக்குமுறை (அ) அநீதி கொண்ட சக்திகள் அரசாங்கத்தை கைப்பற்றி கட்டுப்படுத்துவதை தடுக்கவும், பயன்படும் ஆட்சி முறை மக்களாட்சி அரசாங்கம் ஆகும். உலகம் முழுவதும் மன்னராட்சிக்கு எதிராக மக்கள் செய்த போராட்டங்களின் பலனாக, மக்களின் விருப்பங்களுக்கேற்ப மக்களாட்சி முறை சாத்தியமாயிற்று.

தற்போது இந்தியா ஒரு மக்களாட்சி நாடு. மாறுபட்ட கலாச்சாரம், எதிர்பார்ப்புகள் கொண்ட மக்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அரசாங்கம் ஆட்சி செய்கிறது என்று நாம் எவ்வாறு உறுதிபடுத்த முடியும்?

பல மில்லியன் மக்கள் நம் நாட்டில் வாழ்கின்றனர். முடிவுகள் இயற்றுவதில் எல்லா மக்களையும் பங்கேற்கச் செய்தால், எண்ணற்ற கருத்துக்கள் உண்டாக வழி வகுக்கும். அவர்கள் அதிக நேரம் எடுத்துகொள்வதுடன் ஒருமித்த முடிவை எடுக்க இயலாது. அது மட்டுமின்றி, மக்கள் அனைவரும் பொது விஷயங்களில் பங்கேற்க நேரம், பணம், சக்தியை செலவழிக்க முடியாத நிலையில் உள்ளனர். இப்பிரச்சனையை நாம் எவ்வாறு தீர்க்க முடியும்?

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் மக்களாட்சி குறித்து வரையறை கூறிய போது "ஜனநாயகம் என்பது மக்களின், மக்களால், மக்களுக்காக ஆட்சி செய்யும் அரசாங்கம்" என்று கூறினார். இவர் கூறிய கருத்து குறித்து யோசித்துபார். இவர் கருத்தை நீ ஏற்று கொள்கிறாயா?



*படம் 12.6 ஆபிரஹாம் லிங்கன்*

இதை நாம் இரண்டு நெறிமுறைகள் வாயிலாக செய்ய முடியும். அதில் ஒன்று பிரதிநிதித்துவ ஜனநாயகம் மற்றொன்று "பெரும்பான்மை கருத்துபடி ஆட்சி" இக்கருத்துக்கள் குறித்து மேலும் விவரமாக புரிந்து கொள்வோம்.

தற்போதுள்ள காலத்தில் மக்களாட்சி முறை அரசாங்கங்கள் என்றால் பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையை குறிக்கிறது. பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையில் மக்கள் பொது தேர்தல் மூலம் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். எடுத்துக்காட்டாக ஒரு கிராமத்தில் இரண்டு முதல் ஐந்தாயிரம் மக்கள் வசிப்பதாக கருதுவோம். அது நூறு (அ) இருநூறு நபர்களைகொண்ட வார்டுகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு வார்டும் தங்கள் பிரதிநிதியை தேர்ந்தெடுக்கும்.

பதினெட்டு வயது நிரம்பிய அனைவரும், வாக்குரிமை கொண்டிருப்பர். ஆண் (அ) பெண், செல்வந்தர் (அ) ஏழை, படிக்காதவர் (அ) படித்தவர் என்ற வேறுபாடு இன்றி, எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், எந்த மொழியை பேசுபவராக இருப்பினும், அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு. பதிவான வாக்குகளில் எல்லோரையும் விட அதிகமாக வாக்குகள் பெற்றவர் மக்களின் பிரதிநிதி

SCERT TELANGANA

ஆவார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஓரிடத்தில் கூடி மக்களின் சார்பாக முடிவுகள் இயற்றுவர்.



*படம் 12.7 கிராமப் புறத்தில் வாக்குபதிவு ஒரு நபர் ஒரு வாக்கு மட்டுமே பதிவு செய்தார் என்பதை உறுதி செய்ய விரல் மீது அழியாத மை வைக்கப்படுகிறது.*




*படம் 12,8 பிரதிநிதித்துவ மக்களாட்சி*

இவ்வாறாக அமைதியான, நியாயமான தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுதல் நம் மக்களாட்சி முறையின் அடிப்படை ஆகும். தேர்தலுக்கு முன்பாகவே, எந்த விஷயங்கள் குறித்து அரசாங்கம் பணியாற்ற வேண்டும் என்று மக்கள் தங்களிடையே எண்ணி அவை குறித்து விவாதித்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு நபர்கள் (அ) கட்சிகள் பலதரப்பட்ட அம்சங்கள் குறித்து வெளிப்படையாக எடுத்துச் சொல்வர். இதனால் வாக்காளர்கள் எந்த வேட்பாளரை தேர்ந்தெடுக்க வேண்டும், எந்த கட்சியின் கருத்து தங்களுக்கு ஏற்றது, என்பன குறித்து முடிவு எடுக்க முடிகிறது. மக்கள் பிரதிநிதிகள் அவர்கள் தேர்தலின் போது அவர்கள் கூறிய கருத்துகளை நிலைப்படுத்த வேண்டும் எனவும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பாடுபடவேண்டும் எனவும், அவ்வப்போது மக்களை சந்தித்து அவர்களின் கருத்து அறிந்து, பிரச்சனைகள் குறித்து கேட்டு தீர்க்க ஆவண செய்ய வேண்டும் எனவும், பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள், பிரநிதிநிகளை ஐந்து ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கின்றனர். அதன் பிறகு மறுபடியும் தேர்தல் நடைபெறும். மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பர்.

- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கருத்துக்களை மக்கள் தெரிந்து கொள்வது முக்கியமானது என்று நீ ஏன் கருதுகிறாய்?
- மக்கள் பிரதிநிதிகள் காலவரையறை இன்றி எப்போதைக்கும் பதவியில் இருக்குமாறு தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன நடக்கும்?
- மக்கள் பிரதிநிதிகள் தங்களை தேர்தலில் தேர்ந்தெடுத்த மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயல்பட முடியும் என்று நீ நினைக்கிறாயா?

மக்கள் பிரதிநிதிகள் சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் அதாவது ஒரு வாக்கு அதிகம் பெற்றாலும் தேர்தலில் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்கள். இதர வேட்பாளர்களுக்கு வாக்களித்தவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பெரும்பான்மை யோரின் முடிவுக்கு கட்டுபட வேண்டும்.

அதுபோலவே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பெரும்பாலான முடிவுகள், சாதாரண பெரும்பான்மை அடிப்படையிலேயே உருவாகின்றன. ஏதாவது ஒரு முடிவு மொத்தமுள்ள உறுப்பினர்களில் பாதியளவை விட அதிகமான உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டால், அம்முடிவு அமுல்படுத்தப்படும்.

**எடுத்துக்காட்டாக** : ஒரு கிராம பஞ்சாயத்தில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். ஒரு திட்டத்தை 11 உறுப்பினர்கள் ஆதரித்தால், அதுநிறை வேற்றப்பட்டு நடைமுறை படுத்தப்படும் 9 உறுப்பினர்கள் எதிர்ப்பு இருப்பினும் இது சாத்தியமாகும். இவ்வாறாக நவீன ஜனநாயக முறை எந்த ஒரு விவகாரம் குறித்தும்

SCERT TELANGANA

அனைவரின் ஒப்புதலை பெறுவதற்கு முயற்ச்சிக்காது. பெரும்பான்மை கருத்துப்படி முடிவுகள் இயற்றப்படுகின்றன.

எண்ணிக்கையில் குறைவாக உள்ள சிறுபான்மையினரின் கருத்தை உதாசீனப்படுத்துவதால் அவர்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்துகிறது.

- மேற்கூறிய முடிவுகள் சரியானதா? சில உதாரணங்களுடன் விவரி,
- வகுப்பறை நியமங்கள் உருவாக்கவும், வகுப்பறையை கவனித்துக்கொள்ளவும், மாணவர்கள் சங்கத்தை அமைத்திடுக. முடிவுகள் இயற்றுவதில் அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் முறையையும், பிரிதிநிதிகளை தேர்வு செய்து அவர்கள் மூலம் முடிவு செய்யும் முறையையும், முயன்று பாருங்கள். எல்லா மாணவர்களும் தங்கள் அனுபவம் குறித்து அறிக்கை தயார் செய்திட அறிவுறுத்துங்கள்.




படம் 12.9 விலைவாசி உயர்வை கண்டித்து மக்கள் பேரணி

### தேர்ந்தெடுக்கப்பட்ட பிரநிதிநிகள் மீது கட்டுப்பாடுகள்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரநிதிநிகள் கொடுமையானவர்களாக மாறாமல் இருக்கவும், சிறுபான்மையினரின் கருத்தை உதாசீனப்படுத்தாமல் இருக்கவும் செய்ய எவ்வாறு உறுதிபடுத்த முடியும்?

மக்களாட்சியில், மக்களால் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அதிகாரம், நாட்டின் அரசியலைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. மக்கள் பிரநிதிகள் அரசியலமைப்பு சட்ட நெறி முறைகளுக்கு (அ) செயல்முறைகளுக்கு எதிராக நடந்து கொண்டால் நீதி மன்றங்கள் அவர்களின் முடிவுகளை ரத்து செய்ய முடியும். மக்கள் பிரிதிநிதிகளின் முடிவுகளை ஏற்காதவர்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், கண்டித்து குறை கூறவும் முடியும். கூட்டங்கள் நடத்தியும், தொலைக்காட்சி, செய்தித் தாள்கள் வாயிலாகவும் இதை செய்யலாம்.

### சமத்துவமும், மக்களாட்சியும் :

மக்களாட்சியில், ஆண்-பெண், கல்லாதவர், கற்றவர், செல்வந்தர் – ஏழை, அதிகாரி, அனைவரும் பொது விஷயங்கள் குறித்து நேரம் ஒதுக்கி அவை குறித்து சொந்தமான கருத்தை கொண்டிருத்தல் வேண்டும். மக்களாட்சியில் மக்களுக்கு தேவையான தகவல்களை பெறும் வசதி இருக்கும். அதனால் அவர்கள் சரியான முடிவுகள் எடுக்க முடியும். மக்களாட்சியில் மக்கள் தங்கள் வாக்குகளை சுதந்திரமாக, இடையூறு இன்றி பயன்படுத்தி கொள்வர்.

துரதிஷ்டமாக, பெரும்பாலான நாடுகளில் மேற்குறிப்பிட்டவை முழுவதும் கிடைப்பது இல்லை. எடுத்துக்காட்டாக மக்களில் பலருக்கும் தேவையான கல்வியறிவு இல்லை. செய்தித்தாள்களை படித்தறியும் கல்வி அறிவும் காணப்படவில்லை. பல சமயங்களில் தகவல்கள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. செல்வந்தரும், அதிகாரம் கொண்டவர்களும் தகவல்களை அதிகளவு பெற முடிகிறது.

SCERT TELANGANA

## இந்தியத் தலைநகரத்தை காட்டும் வரைபடம்




படம் 12.10 தேசிய அளவில் அரசாங்கம்

தேசிய அளவில் அரசாங்கம் நாட்டின் பரப்பு முழுவதையும் ஆட்சி செய்யும் மத்திய அரசு என்று பொருள்.

மாநில அளவில் அரசாங்கம் என்பது நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களையும், ஒவ்வொரு மாநிலத்தில் இயங்கும் மாநில அரசாங்கத்தையும் குறிக்கும்.




படம் 12.11 மாநில அளவில் அரசாங்கம்

SCERT TELANGANA




படம்: 12.12 **மாவட்ட** அளவில் அரசாங்கங்கள்

மக்களில் பலர் குறிப்பாக பெண்களும், ஏழைகளும் பொது விவகாரங்களில் பங்கேற்க நேரமும், வசதிகளும் இல்லாமல் உள்ளனர். அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான பொருளை சம்பாதிக்கவும் (அ) அவர்கள் குடும்பங்களுக்காக வேலை செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தலுக்குமுன் அதிகாரம் படைத்தவர்கள் (அ) செல்வந்தகாரர்கள் மக்களை ஆதிக்கம் செய்வதாலும் (அ) சிறு பரிசு பொருட்களை கொடுப்பதாலும் வாக்கு பதிவை தங்களுக்கு சாதகமாக்கி கொள்கின்றனர். சில நேரங்களில் மக்கள் தங்கள் விருப்பப்படி வாக்களிக்காமல் அவர்களின் ஜாதி (அ) மதம் அடிப்படையில் வாக்களிக்குமாறு மனம் மாற்றப்படுகின்றனர். இந்த காரணங்களால் மக்கள் தங்கள் மக்களாட்சி உரிமையான வாக்குரிமையை சுதந்திரமாக பயன்படுத்து வதிலிருந்து தடுக்கப்படுகின்றனர். இதனால் தீர்வு காண வேண்டிய விவகாரங்கள், வேட்பாளரின் தகுதி போன்றவற்றை அவர்கள் முக்கியத்துவம் தர முடிவதில்லை.

- உங்கள் பெற்றோர் மூலம் தற்போதுள்ள தேர்தல் முறையின் பிரச்சனைகளை தெரிந்துகொள்

- தேர்தல் முறையில் உள்ள பிரச்சனைகள் குறித்து அறிக்கை தயாரித்து வகுப்பறையில் விவாதித்து, அவற்றை தீர்க்கும் வழிமுறைகள் என்னவென்பதை கண்டறிக.
- சமத்துவமின்மை குறித்து நீ என்ன புரிந்து கொண்டாய்? எடுத்துகாட்டுடன் விளக்குக.
- மக்கள் தங்களுக்கு தேவையான வேட்பாளரை தேர்ந்தெடுப்பதில் உள்ள முக்கியத் தடைகள் யாவை?

## பல்வேறு மட்டங்களில் அரசாங்கம்

அரசாங்கம் உள்ளூர் மட்டத்திலும், மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பணியாற்றுகிறது. உள்ளூர் மட்டம் என்றால் உங்கள் கிராமம் (அ) நகரத்தை குறிக்கும். மாநில மட்டம் என்றால் மாநிலம் முழுவதையும் குறிக்கும். ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம், தமிழ்நாடு போன்ற எல்லா மாநிலங்களையும் குறிக்கும். தேசிய மட்டங்களில் என்றால் நாடு முழுவதையும் குறிக்கும். இப்புத்தகத்தில் அடுத்து வரும் பாடங்களில் உள்ளூர் மட்டத்தில் இயங்கும் அரசாங்கங்கள் குறித்து நீங்கள் படிக்க போகிறீர்கள்.

SCERT TELANGANA

அடுத்த சில வகுப்புகளில் மாநில அரசுகள், மத்திய அரசு எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நீங்கள் கற்கலாம்.

- மூன்று (அ) நான்கு மாணவர்கள் அணிகளை உருவாக்கி, ஒவ்வொரு அணிக்கு கீழ்கண்டவற்றில் ஏதேனும் ஒரு அம்சம் குறித்து சிறு நாடகம் செய்து காட்டச் செய்க.
- தேர்தல் கூட்டம் நடத்தி வேட்பாளர்களுடன் கலந்துரையாடுதல்
- சரியான தகவல்களை அறியாத மக்கள், வாக்களித்தல் முடிவை எவ்வாறு எடுக்கின்றனர்?
- மக்களாட்சி மற்றும் மன்னராட்சி அரசுகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைக் கூறு.

- செல்வந்தர்கள், அதிகாரம் படைத்த மக்கள் எவ்வாறு கிராமங்களில் உள்ள வாக்காளர்களை ஆதிக்கம் செய்கின்றனர்?

**முக்கியச் சொற்கள்**

- **மக்களாட்சி**
- மன்னராட்சி
- அரசியலமைப்புச் சட்டம்
- தேர்தல்கள்
- முடிவுகள் இயற்றுதல்
- பிரதிநிதித்துவம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கோண்ட் பழங்குடி இன அரசாங்கத்திற்கும், நவீன மக்களாட்சி அரசாங்கத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகள், வேற்றுமைகள் குறித்து கலந்துரையாடு.(AS1)
2. நிர்வாக முடிவுகள் எடுக்கும்போது சிறுபான்மையினரின் கருத்துகளை சேர்த்துக்கொள்ள முடியுமா? சில உதாரணங்களுடன் விவரி.(AS1)
3. உங்கள் பள்ளிக்கூடம் எல்லா மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் நடத்தப்பட்டால் எவ்வாறு இருக்கும்? முடிவுகள் எடுப்பதில் அனைவரும் பங்கேற்பதை நீ முன்னுரிமை தருவாயா?(AS6)

   (அ) பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்புகிறாயா? உன் காரணங்களை தருக.
4. உங்கள் வீட்டில் ஜனநாயக முறைப்படி முடிவுகள் எடுக்கப்படுகின்றனவா? ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை கூறமுடியுமா?(AS4)
5. கோபாலுடைய தந்தை ஒரு கடை துவங்குவது குறித்து வீட்டிலுள்ள எல்லா உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தினார். ஆனால் ஒவ்வொருவரும் வேறுபட்ட கருத்தை கூறினர். இறுதியில் அவர் கடையை துவங்க முடிவு செய்தார். அவர் ஜனநாயக முறையை பின்பற்றினார் என நீ கருதுகிறாயா?(AS1)
6. மேரியின் தாயார் தன் குழந்தைகள் அனைவரிடமும் ஞாயிற்றுகிழமை அன்று எங்கு செல்ல விரும்புகின்றனர் என கேட்டார்? இரண்டு குழந்தைகள் திரைப்படம் பார்க்க செல்ல விரும்பினர். மூன்று குழந்தைகள் பூங்காவிற்கு சென்று விளையாட விரும்பினர். மேரியின் இடத்தில் நீ இருந்தால் என்ன முடிவை எடுப்பாய்?(AS1)
7. கீழ்கண்டவற்றை அரசாங்கத்தின் நிலைகள் படி வகைப்படுத்து (உள்ளாட்சி, மாநிலம், மத்திய அரசு) பாராளுமன்ற உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர், சர்பஞ்ச், மேயர், முதலமைச்சர், பிரதம மந்திரி.(AS1)
8. உங்கள் தொகுதியின் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில முதல்வரின் படங்களை நாளிதழ்களில் இருந்து சேகரிக்கவும்.(AS3)
9. பக்கம் 110ல் உள்ள இந்திய வரைபடத்தினை பார்த்து இந்தியாவின் புறவரி படத்தை வரைக.(AS5)

செயல்திட்டம் :

1. கடந்த ஏழு நாட்களின் செய்தித்தாள்களை படித்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பற்றிய செய்தியை சேகரிக்கவும். அவ்வற்றை குறிப்பேட்டில் ஒட்டவும். இவற்றின் மூலம் நீங்கள் கண்டறிந்த அரசின் நடவடிக்கைகளை பட்டியலிடு. அரசால் செய்யப்படும் அனைத்து செயல்களை பற்றியும் ஒரு எண்ணத்தைப் பெற வகுப்பறையில் உரையாடு.
2. உன் கிராமத்தில் வாக்காளர் 10 பேரிடம் சென்று தேர்தலில் ஒரு வேட்பாளரை தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் எந்த குறிப்புகளை பின்பற்றுகின்றனர் என்னும் தகவலை சேகரி. ஓர் அறிக்கையை எழுதி வகுப்பறையில் விவாதிக்கவும்.

SCERT TELANGANA

அத்தியாயம் 13

# கிராம பஞ்சாயத்துகள்

## பொது மக்களுக்கு வசதிகள் செய்து தருதல் :

ஒரு கிராமத்தில் கைபம்பு பழுதுபட்டுள்ளது. கிராமத்தின் மற்றொரு பகுதியில் கழிவு நீர் குழாய் கசிந்து கொண்டிருக்கிறது. சாலை சேற்றுப்பாங்காக உள்ளது. இப்பிரச்சனைகளை யார் தீர்த்து வைப்பார்கள். சாலைகள், கைபம்புகள், தெரு விளக்குகள் போன்றவை கிராம மக்கள் அனைவருக்கும் சொந்தமானவை. இவற்றை பொது மக்களின் வசதிகள் என்பர். இவற்றை ஏற்படுத்தி தருபவர்கள் யார்? இவை யாரால் பராமரிக்கப்பட வேண்டும்? இந்த நோக்கத்திற்காக, நாம் கிராமங்களில் கிராம பஞ்சாயத்துகளையும், நகர் புறங்களில் நகராட்சி மன்றங்களையும் பெற்றுள்ளோம்.

- உங்கள் பகுதியில் செய்து தரப்பட்டுள்ள பொது மக்கள் (Public amenities) வசதிகள் குறித்து தெரிவிக்கவும்.
- உன் கிராம பஞ்சாயத்து (அ) நகராட்சி செயல்படுத்திய பல்வேறு திட்டங்கள் குறித்து உன் வகுப்பில் விவாதிக்கவும்.

## கிராம மட்டத்தில் மக்களாட்சி :

அரசாங்கத்தின் துறைகள், மக்களுக்கு தேவையான அனைத்து பொது வசதிகளையும் செய்து தர முடியும். ஆனால், அவை மாநில தலை நகரில் உள்ள உயர் அதிகாரிகளின் கட்டளைகளை பின்பற்றி செயல்படும். இப்படிப்பட்ட ஏற்பாட்டில், கிராம மக்கள் தங்கள் கருத்துக்களை சொல்ல, நிர்வாக விஷயங்களில் பங்கேற்க முடியாது. அதற்கும் மேலாக கிராமத்தின் தேவைகளை பிறரை விட அக்கிராம மக்கள் தான் சிறப்பாக தெரிந்து வைத்திருப்பார். அவர்களின் பிரச்சனைகளை பிறரை விட, அவர்கள் தான் மிக சுலபமாக தீர்த்து கொள்ள முடியும். இவற்றை விட மிக முக்கியமானது. சாதாரண மக்களையும் நிர்வாகத்தில் பங்கேற்க செய்வதாகும். அதற்கென நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சயாத்துகள், மற்றும் நகராட்சி மன்றங் களையும் பெற்றுள்ளோம். இவை உள்ளூர் மட்டத்தில் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கின்றன.

இம்முறையில் அடித்தள மட்டத்தில் 'கிராம சபை' மக்களாட்சி நடைமுறையில் இயங்கும் அமைப்பு ஆகும். இதில் கிராமத்தில் உள்ள எல்லா வாக்களார்களும் இருப்பர். கிராம பஞ்சாயத்து செயல்களை கிராம சபை மறுபரிசீலனை செய்கிறது. கிராம நல்வாழ்விற்கு தேவையான அம்சங்கள் குறித்து முடிவு செய்வதில் கிராம சபை பங்கேற்கிறது. கிராம மக்கள் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் பஞ்சாயத்து உறுப்பினர்கள், கிராம சர்பஞ்ச் போன்றோரை தேர்ந்தெடுக்கின்றனர். சர்பஞ்ச் கிராம பஞ்சயாத்தின் அன்றாட பணிகளை நிர்வகிக்கிறார்.

## கிராம சபை

இதற்கு முந்தைய அத்தியாயத்தில் நாம் மக்களாட்சி அரசாங்கம், பொது விவகாரங்களில் அனைத்து மக்களின் பங்கேற்றலை உறுதி செய்ய வேண்டியவரின் அவசியம் பற்றியும் படித்தோம். மாநிலம் (அ) தேசிய அளவில் முடிவுகள் எடுப்பதில் எல்லா மக்களும் பங்கு பெறுவது சாத்தியமாகாது. கிராம மட்டத்தில் இது சாத்தியம். கிராம சபை (அ) கிராம வாக்காளர்களின் சபை மூலம் முடிவுகள் இயற்றப்படுகின்றன. நம் நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக இந்த சாத்தியக்கூறை முயன்று சோதித்து பெற்று வருகிறோம்.

கனகம்மாள் தன்னுடைய கிராம சபை கூட்டத்தில் பங்கேற்க மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறார். இதற்கு காரணம் என்னவென்றால், குடும்ப அடையாள அட்டை பெறுவதற்கான

SCERT TELANGANA



படம் 13.1 கிராம சபை

*கூப்பன்கள் தரப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது கிராம சபை கூட்டாக எதற்காக கூட்டப்பட்டது? என்ன நடக்கும்? என்பதெல்லாம் தெரியாது. அக்கிராம சபை கூட்டத்தில் 70 நபர்கள் இருந்தனர். அதில் 20 நபர்கள் பெண்கள் இருந்தனர்.*

*அவர்களும் கனகம்மாள் போலவே கூப்பன்கள் பெறுதற்காக வந்திருந்தன. சர்பஞ்ச் கூட்டத்தை துவக்கி வைத்து கிராம பஞ்சாயத்து கடந்த ஆண்டில் செய்த பணிகள் குறித்தும், வரும் ஆண்டில் செய்திட திட்டமிட்டுள்ள பணிகள் குறித்தும், விவரங்கள் அடங்கிய அறிக்கையை படித்தார். நீங்கள் அனைவரும் இந்த அறிக்கையை ஆமோதிப்பீர்கள் என்று நம்புகிறேன். இதனை கூட்டத்தில் இருந்த மக்கள் கவனமாக கேட்கவில்லை. இருப்பினும் அனைவரும் கை தட்டினர். அதன் பிறகு அவர் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளோர் (Below Poverty Line) பெயர் பட்டியலை படித்துக்காட்டினார். அப்பட்டியலில் உள்ளவர்களின் குடும்பங்கள் அரசாங்கத்தின் பல்வேறு நல திட்டங்கள் மூலம் உதவிகள் பெற தகுதியுடைய பயனாளிகள் என அறிவித்தார்.*

*சர்பஞ்ச் அறிவித்து முடித்தவுடன் கனகம்மாள் எழுந்து நின்று தனக்கு நிலம் (அ) இதர வளங்கள் இல்லாததால் தன் பெயரையும் பயனாளிகள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். அது குறித்து கவனித்து ஆவண செய்து தருவதாக வாக்குறுதி, கொடுத்தார். கிராமசபையில் பங்கேற்றதற்கு கனகம்மாள் மகிழ்ச்சி அடைந்தார்.*

கிராம சபை கூட்டத்தின் முடிவில் குடும்ப அட்டைகள் தேவைப்பட்ட குடும்பத்தினருக்குரிய பெண்களுக்கு கூப்பன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தற்போது கிராம சபைகள் நடக்கும் விதம் குறித்த எடுத்துக்காட்டு தான் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம சபை கூட்டங்கள் சரியான தகவல்கள் மக்களுக்கு கிடைப்பதில்லை. கிராம சபை கூட்டங்களுக்கு மிகச் சிலரே ஆஜராகுகின்றனர். கிராம சபை நடவடிக்கைகளில் குறைந்த கவனம் செலுத்துகின்றனர். இருப்பினும் மக்களாட்சியில் கிராம மக்கள் அனைவரும் கிராம சபை கூட்டங்களில் பங்கேற்ப்பது அத்தியாவசியமானது ஆகும். கிராம சபையின் கடந்த ஆண்டு செயல்கள் குறித்த அறிக்கை குறித்து மக்கள் அனைவரும் விவாதிக்க வேண்டும். அச்செயல்கள் கடந்த ஆண்டு செய்யப்பட்டதா, அவை பயனுள்ளதாக இருந்தனவா என்பவைக் குறித்து கருத்து கூற வேண்டும். வரும் ஆண்டில் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் கலந்தாலோசிக்க வேண்டும். சபை செய்ய வேண்டிய இதர செயல்கள் குறித்தும் அவற்றை செய்து முடிக்க சிறந்த வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்க வேண்டி உள்ளது. வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளோர் பட்டியலை படிக்கும்போது கவனித்து, பயனாளிகள் உண்மையில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களா என உறுதி செய்ய வேண்டும். அதுபோலவே கிராம சபைகள் மகாத்மா காந்தி தேசிய கிராம வேலைவாய்ப்பு உறுதி சட்டம் **(MNREGA)** படி செய்விக்கப்பட்ட செயல்கள் குறித்தும், இதர திட்ட வேலைகள் குறித்தும் கேட்டறிய வேண்டும்.

ஆனால், நடைமுறையில் கிராம சபை கூடுவதில்லை. அவ்வாறு கூட்டம் நடந்தாலும் மிகச்–சிலரே பங்கேற்கின்றனர். பங்கேற்பவர்களில் கிராம சபை கூட்டங்களின் நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவதில்லை.

◆ நீங்கள் கிராமத்தில் வசிப்பவராக இருந்தால், கிராம பஞ்சயாத்து எவ்வாறு வேலை செய்கிறது என்பது குறித்து, உங்கள் பெற்றோருடன் கலந்துரையாடுங்கள். கிராம சபை கூட்டங்கள் குறித்து முன் கூட்டியே தகவல்கள் மக்கள் பெறுகின்றனரா? எத்தனை ஆண்கள், பெண்கள் கூட்டங்களில் பங்கேற்கின்றனர்? இதர கிராமங்களில் இருந்தும் வந்து பஞ்சாயத்து கூட்டங்களில் பங்கேற்கின்றார்களா?

SCERT TELANGANA

பஞ்சாயத்து கூட்டங்களில் கிராமத்துக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் விவாதிக்கப்பட்டனவா? இவைக் குறித்து முன்னதாகவே அறிவிக்கப்பட்டனவா? கிராம மக்கள் இவை குறித்து முறையாக கலந்துரையாடினார்களா? (அ) அவற்றை அங்கீகரித்தார்களா? என்பவற்றை குறித்து தெரிந்து கொள்ளுங்கள்.

- மேற்குறிப்பிட்ட அம்சங்கள் பஞ்சயாத்து ராஜ் அமைப்பு, ஜனநாயகத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமானது என்று நீ ஏன் கருதுகிறாய்?
- கிராம பஞ்சாயத்து கூட்டங்களில் மக்களை பங்கேற்க அழைக்கும் பிரசார வாசகங்கள் எழுத முடியுமா?

### கிராம பஞ்சாயத்து உருவாகும் முறை :

கிராம பஞ்சயாத்துகள் தேர்தல்கள் மூலம் உருவாக்கப்படுகின்றன. இத்தேர்தல் மாநில தேர்தல் கமிஷனரால் நடத்தப்படுகிறது.

### வாக்காளர் பட்டியல் :

கிராமத்தில் வாழும் 18 வயது நிரம்பியவர்கள் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொள்ள வேண்டும். வழக்கமாக அரசு ஊழியர் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று வாக்காளர் பட்டியலில் ஏதேனும் மாற்றம் உள்ளதா என்பதை ஆய்வு செய்வர். வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் (அ) நீக்குதல் குறித்த மனுக்களையும் பெற்று ஆவன செய்திடுவர்.

- வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் (அ) நீக்குதல் அத்தியாவசியமானது என்பதற்கான காரணங்களை கூறுக.
- உங்கள் குடும்பத்தில் 18 வயது (அ) அதற்கும் மேற்பட்ட வயதுடையோர் வாக்காளர் பட்டியலில் சேர்ந்துள்ளார் என்பதை கண்டறியவும்.
- உன் ஆசிரியர் மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதலை செய்வதுயார் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

- 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமை தரபடவில்லை. இது ஏன் என்று நீ கருதுகிறாய்?

### வார்டுகள் : (Wards)

ஒவ்வொரு கிராமமும் வார்டுகளாக பிரிக்கப்படும். எல்லா வார்டுகளிலும் சமமான வாக்காளர்கள் இருப்பர். ஒவ்வொரு வார்டில் இருந்தும் கிராம பஞ்சாயத்துக்கு ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுகிறார். இவர் வார்டு உறுப்பினர் எனப்படுகிறார். இதனால் கிராமத்தின் எல்லா பகுதிகளில் இருந்தும் தங்கள் பிரதிநிதித்துவம் செய்திட சாத்தியமாகிறது. ஒரு கிராம பஞ்சாயத்தில் குறைந்தபட்சம் 5 வார்டு உறுப்பினர்களையும், அதிக பட்சம் 21 வார்டு உறுப்பினர்களையும் காணலாம். 21 வயது வந்த எந்த ஒரு நபரும் தேர்தலில் போட்டியிடலாம். தேர்தல் கமிஷனர் ஆணைப்படி தேர்த-ல் தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ போட்டியிடுவோர் சிறிது தொகை கட்ட வேண்டும்.

### கிராம பஞ்சயாத்துக்களில் இட ஒதுக்கீடுகள் :

பெண்கள் வார்டு உறுப்பினராகவோ (அ) சர்பஞ்ச் பதவிக்கோ தேர்ந்தெடுக்கப்படுவது கடினமான செயலாகும். எனவே கிராம பஞ்சாயத்துக்களில் ஆண்களின் ஆதிக்கம் காணப்படுகிறது. இதன் விளைவாக மக்கள் தொகையில் பாதியளவு பெண்கள் சார்பாக பிரதிநிதித்துவம் இல்லை. இப்பிரச்சனையை மனதில் கொண்டு பாராளுமன்றம் எல்லா கிராம பஞ்சயாத்துகளிலும் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண்கள் வார்டு உறுப்பினர்களாகவும், சர்பஞ்சுகளாகவும் தேர்ந்தெடுக்க இட ஒதுக்கீடு செய்திட முடிவு செய்தது. இவ்விடங்கள் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டவை ஆகும். ஆந்திர அரசு பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு அளித்துள்ளது.

இது போலவே **SC, ST** மற்றும் **BC.** கொள்கை மூலம் கிராம பஞ்சாயத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வாறு கிராம பகுதியில் பிரதிநிதித்துவ உள்ள எல்லா சமூகத்தினரின் பிரதிநிதித்துவ அமைப்பாக பஞ்சாயத்துகள் செயல்படுகின்றன.

### தேர்தல்கள் :

சாதாரணமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் நடைபெறும். இத்தேர்தலின் போது ஒவ்வொரு வாக்காளரும் இரண்டு வாக்குகள் அளிப்பார். வார்டு உறுப்பினரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும், ஊராட்சி மன்றத் தலைவரை தேர்ந்தெடுக்க மற்றொரு வாக்கும் அளிக்கிறார்.

SCERT TELANGANA

அதிக வாக்குகள் பெறுவோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கபடுவர்.

நீங்கள் கிராமத்தில் வாழ்வதாக இருந்தால் கீழ்கண்டவற்றை கண்டறியுங்கள்.

- உங்கள் பஞ்சாயத்தில் எத்தனை வார்டு உறுப்பினர்கள் உள்ளனர்?
- உங்கள் வீட்டில் எத்தனை வாக்காளர்கள் உள்ளனர்?
- உங்கள் வீடு எந்த வார்டில் உள்ளது?
- உங்கள் வார்டின் பஞ்சாயத்து உறுப்பினர் யார்?

உங்கள் வார்டு சார்பாக தேர்தலில் எத்தனை பேர் போட்டியிட்டனர்? சென்ற தேர்தலில் என்ன நிகழ்ந்தது? என்பன குறித்து உங்கள் பெற்றோர் மூலம் தெரிந்து கொள். நீ அறிந்தவற்றை உன் வகுப்பில் எடுத்து கூறு.

### ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் செயலாளர் :

கிராம ஊராட்சி மன்றத்தில் தலைவராக உள்ளவர், கிராம பஞ்சாயத்தின் தீர்மானங்களை நடைமுறை படுத்துதல், கிராம பஞ்சாயத்தின் அன்றாட செயல்களை முறையாக நடக்குமாறு கவனித்துக் கொள்ளுதல், சர்பஞ்ச்சின் பொறுப்பாகும். சர்பஞ்ச் கிராமத்தில் உள்ள வாக்காளர்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.




படம் 13.2 மாதிரி வாக்குச்சீட்டு மற்றும் வாக்காளர் அட்டை

கிராம பஞ்சாயத்தின் வரவு-செலவுகளுக்கு சர்பஞ்ச் பொறுப்புடையவர் ஆவார். இதுபோல் பல பொறுப்புகள் அவருக்கு உள்ளது. பல கிராமங்களின் தலைவிதியை மாற்றி அமைத்த சர்பஞ்ச்சுகளின் திறமையான நிர்வாகத்தை நாம் காண முடிகிறது.

**துணைத் தலைவர் :** சர்பஞ்ச் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சேர்ந்து அவர்களில் ஒருவரை துணை தலைவராக தேர்ந்தெடுக்கின்றனர். சர்பஞ்ச் இல்லாத சமயங்களில் துணைத்தலைவர் கிராம பஞ்சாயத்தை நிர்வகிப்பார்.

**செயலாளர் மற்றும் நிர்வாக அதிகாரிகள்**

ஒவ்வொரு பஞ்சயாத்துக்கும் ஒரு செயலாளர் இருப்பார். இவர் ஒரு அரசு ஊழியர் ஆவார். கிராம பஞ்சாயத்தின் கூட்டங்களின் முடிவுகளை பதிவு செய்தல் மற்றும் பஞ்சாயத்தின் வரவு – செலவு கணக்குகளை பராமரித்தல், இவரது முக்கிய பணிகளாகும். பெரிய கிராம பஞ்சாயத்துகளின் அதிக வருவாய் இருக்கும் இவற்றிற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரி இருப்பார்.

### பஞ்சாயத்து செய்திடும் பணிகள் யாது?

கிராம பஞ்சாயத்துக்கள் பொது மக்களுக்கு தேவையான வசதிகளை செய்து தரும் பொறுப்புகளை கொண்டுள்ளது. கிராம சாலைகள், கழிவுநீர்க்கால்வாய்கள் அமைத்தல், பராமரித்தல், குடிநீர் வசதி ஏற்படுத்தி தருதல், தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களை சுத்தப்படுத்துதல், நியாய விலை கடைகளை நடத்துதல் முதலியவற்றை செய்கின்றன. பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடிகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு திட்டங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்புகள் பஞ்சாயத்துகளுக்கு உள்ளன. சிறு நீர்பாசன திட்டங்கள், நீர் தேக்கங்கள், நிர்வாகம், நில சீர்த்திருத்தங்கள், நடைமுறைப்படுத்தல் போன்ற மேம்பாட்டு திட்டங்கள் குறித்து திட்டமிட்டு செயல்படுத்த வேண்டிப் பொறுப்பு கிராம பஞ்சாயத்துக்கு உள்ளது.

SCERT TELANGANA



படம் 13.3 கிராம பஞ்சாயத்து கூட்டம்

பல மாநில அரசுகள் கிராம பஞ்சாயத்துகளுக்கு நிர்வாகத்தில் அதிக பங்கும், பணிகளும் தந்துள்ளன. இருப்பினும், ஆந்திரம் போன்ற சில மாநிலங்கள் பல முக்கியமான பணிகளை இன்னமும் தரவில்லை. அவற்றுள் சில சந்தைகள் நியாயவிலை கடைகள் மீது கட்டுப்பாடு, நில மேம்பாட்டு செயல்கள், சிறு அளவு காட்டுப்பொருள் உற்பத்தி, சிறு தொழிற்சாலைகள், நலிவுற்றோர்க்கான வீட்டு வசதி திட்டங்கள், மின்மயமாக்குதல், ஆரம்ப சுகாதார மையங்கள், மருந்தகங்கள் போன்றவை ஆகும். இவற்றை செய்து தரும் பணிகளை கிராம பஞ்சயாத்துகளுக்கு தரவில்லையென்றால் அவை தேவைகளை எதிர்கொண்டு நிறைவேற்ற இயலாது. கிராமத்தின் மேம்பாட்டுக்கு திறமையுடன் திட்டமிட்டு செயலாற்ற இயலாது.

ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தும் மாதம் ஒரு முறை கூடுகிறது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் பாதியளவு உறுப்பினர்கள் கட்டாயம் ஆஜராக வேண்டும். இல்லையெனில் கூட்டம் ரத்து ஆகும். சென்ற மாதத்தின் தீர்மானங்களை அறிக்கையாக படிப்பதோடு பொதுவாக பஞ்சாயத்து கூட்டங்கள் துவங்கும் (இவற்றை கடந்த மாத கூட்டத்தின் மினிட்ஸ் என்பர்) அதன் பிறகு சென்ற மாதத்தில் கிராம பஞ்சாயத்து செய்த பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பார். அப்பணிகளுக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது என்ற விவரத்தையும் தருவார், சில பணிகள் சரிவர செய்யப்படவில்லை என்று உறுப்பினர்கள் நினைத்தால் அவை குறித்து விவாதித்து விவரங்கள் அறிந்து கொள்வர். வார்டு உறுப்பினர்கள் அவர்களுடைய வார்டில் செய்ய நினைக்கும், புதிய பணிகள் குறித்தும், முன் மொழிந்து பேசலாம் (அ) நிலுவையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட திட்ட பணிகள் குறித்தும் கேட்டு அறியலாம்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் பல்வேறுபட்ட வார்டுகளின் தேவைகளை விவாதித்து தேவையான தொகை அறிக்கையை தயார் செய்வர். தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரியும் கிராம பஞ்சாயத்து முன் வைக்கப்பட்ட புதிய திட்ட பணிகளுக்கு தேவையான நிதி வசதி உள்ளதா என்று ஆய்வு செய்வர். அதன் பிறகு கிராம பஞ்சாயத்தின் ஆண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு, கிராம சபையில் விவாதிக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனைகள் பெற்று முடிவு செய்யப்படும்.

கிராம பஞ்சயாத்தின் முடிவு செய்யப்பட்ட ஆண்டு திட்டம் மண்டல மற்றும் ஜில்லா பரிஷத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அவற்றின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடுகளையும் பெற வேண்டும். கிராமத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் சர்பஞ்ச் திட்ட பணிகளை துவங்கி, மேற்பார்வை செய்து, முடித்து வைப்பார்.

ஆனால், பல சமயங்களில் இவ்வாறு இன்றி சர்பஞ்சுக்கள் தங்களுக்கு தோன்றும் திட்டங்களை தயாரித்து,கிராம சபையில் முறையாக ஒப்புதல் பெறாமலேயே மண்டல, ஜில்லா பரிஷத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். இவற்றிற்கு ஒதுக்கப்படும் நிதியும் போதுமானதாக இருப்பதில்லை. இவை குறித்து சிலர் மட்டுமே தெரிந்து வைத்திருக்கின்றனர்.

எனவே தான், பஞ்சாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் திட்டமிடுதலிலும், திட்டபணிகள் அமுலாக்கப்படுவதிலும், மேற்பார்வை செய்வதிலும் பங்கேற்க வேண்டியது அத்தியாவசியமானதாக உள்ளது.

SCERT TELANGANA

- உங்கள் கிராம பஞ்சாயத்திற்கு சென்று கடைசி பஞ்சாயத்து கூட்டம் எப்போது நடந்தது. அதில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் யாவை என்பன குறித்து கண்டறியுங்கள்.
- கிராம பஞ்சாயத்தின் எல்லா கூட்டங்களிலும் குறைந்தபட்சம் பாதி உறுப்பினர்களாவது பங்கு பெறுவது அத்தியாவசியமானது என்று நீ ஏன் கருதுகிறாய்?
- உங்கள் வார்டு சார்பாக ஆண்டு திட்டத்தில் சேர்த்திட எதை முன்மொழிந்து கூறுவாய்?

## கிராம பஞ்சாயத்து பணிகளுக்காக நிதி

கிராம பஞ்சாயத்துக்கள் தாங்கள் செய்ய வேண்டிய பணிகளுக்காக எங்கிருந்து நிதியை பெறுகின்றன?

கிராம பஞ்சாயத்துகள் வீட்டு வரி, நிலவரி, முதலிய சிறுவரிகளை விதித்து வசூலிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. இவற்றில் இருந்து வரும் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு பெறுகின்றன.

ஆனால் இவை சிறப்பு திட்டங்களை நடைமுறைபடுத்தி மாநில, மத்திய அரசுகளின் நிதி உதவி மீதே பெரும்பாலும் ஆதாரப்பட்டுள்ளன. மகாத்மா காந்தி தேசிய கிராம வேலை வாய்ப்பு உத்திரவாதம் சட்டப்படி **(MNREGA)** நிதி ஒதுக்கீட்டை பெறுகின்றன.

கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கப்பட்டும், நிதி பெரும்பாலான சமங்களில் போதுமானதாக இருப்பதில்லை. பஞ்சாயத்தின் உறுதியான மேம்பாட்டிற்கு தக்க நிதி உதவி கிடைப்பதில்லை. கிராம பஞ்சாயத்துகள் அவை திட்டமிட்டு, முடிவு செய்திடும் திட்டங்களுக்கு மிக குறைந்த நிதி ஒதுக்கீடுகளை பெற்றுள்ளன.

## மண்டல மற்றும் ஜில்லா பரிஷத்துகள் :

முந்தைய பிரிவில் கிராம பஞ்சயாத்துக்கள் குறித்து, படித்து அறிந்து கொண்டோம். ஒரு மண்டல பரிஷத் கீழ் 20 கிராம பஞ்சாயத்துகள் இருக்கும். மாவட்டத்தில் உள்ள எல்லா மண்டல பரிஷத்துகளும், ஜில்லா பரிஷத்தின் கீழ் செயல்படுகின்றன.

மண்டல பரிஷத் எல்லைக்குட்பட்ட தொகுதிகளின் உறுப்பினர்களை (MPTC) கிராம மக்கள் நேரிடையாக தேர்ந்தெடுக்கின்றனர். சிலர் நியமிக்கப்படுகின்றனர். ஜில்லா பரிஷத் உறுப்பினர்களும் அவ்வாறே தேர்ந்தெடுக்கப் படுகின்றன. ஜில்லா பரிஷத்தும், மண்டல பரிஷத்துகளும், மாவட்டத்தில் உள்ள கிராம பஞ்சாயத்துகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக் கின்றன. அவற்றின் நல திட்டங்களை அங்கீகரித்து, நிதி ஒதுக்கீடுகளையும் ஒருங்கிணைக்கின்றன.

## ஹாஜிபள்ளியை சேர்ந்த ஜங்கம்மா




*படம் 3.4 கிராம புரஷ்கார் விருதை இந்திய ஜனாதிபதியிடம் இருந்து ஜங்கம்மா பெறும் காட்சி*

ஹாஜிபள்ளி மஹபூப் நகர் மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமம், இதன் சர்பஞ்ச் ஜங்கம்மா பஞ்சாயத்தை வழி நடத்தி சென்று கிராமத்தில் பல காங்கிரீட் சாலைகள், பாதாள சாக்கடை போன்றவற்றை அமைக்கச் செய்தார். கிராம மக்கள் அனைவரையும், வீடுகளில் கழிவறை கட்ட ஒப்புக் கொள்ளச் செய்து. அவர்கள் கட்டிக் கொள்ளுமாறு செய்தார் பள்ளிக்கூடங்கள், அங்கன் வாடி மையங்கள், கிராம பஞ்சாயத்தில் குடிநீர் தொட்டிகள் கட்டப்பட்டன. கிராமம் முழுமைக்கும், குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இது தவிர இக்கிராமத்தில் நகரத்தை போன்று பாதாள சாக்கடை அமைப்பும் உள்ளது. மக்கள் நல திட்டங்களின் தகுதி உள்ள பயனாளிகள் அனைவருக்கும் உதவிகள் கிடைத்திட பஞ்சாயத்து உறுதி அளித்து நிறைவேற்றியது.

SCERT TELANGANA

இக்கிராம பஞ்சாயத்தின் முயற்சிகளின் வெற்றி அங்கீகரமாக மாநில அரசு நவம்பர், 2008ல் தூய்மை விருது (SUBRAM AWARD) வழங்கியது. மத்திய அரசு சார்பாக நிர்மல கிராம புரஷ்கார் விருது டிசம்பர், 2008ல் இந்திய ஜனாதிபதி திருமதி. பிரதீபா பாட்டீல் வழங்கினார். (குறிப்பு : கிராமத்தின் எல்லா வீடுகள், பள்ளிகள், அலுவலகங்கள், ஆகியவற்றில் கழிவறைகள் கட்டி திறந்த வெளியில் மலம் கழிப்பதை முழுவதும் தடுப்பதில் வெற்றி கண்ட கிராம பஞ்சாயத்துகளுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. நம் மாநிலத்தின் பல கிராமங்கள் இவ்விருதை பெற்றுள்ளன. உங்கள் பகுதியில் அப்படிப்பட்ட கிராமங்கள் இருக்கின்றனவா என்பதை கண்டறியுங்கள்)

- ஹாஜிபள்ளியில் கிடைக்கும் பொது பயன்பாடுகளை கண்டறியவும்.
- ஹாஜிபள்ளியின் சாலைகள் மற்றும் கழிவு நீர் கால்வாய்களின் சிறப்பு என்ன?
- உங்கள் கிராமத்தில் பள்ளியில் கழிவறைகள், கழிவுநீர் கால்வாய்கள், குடிநீர் சப்ளை, போன்றவற்றின் நிலைமை என்ன?

**கிராம சபையை வெற்றிகரமாக நடத்தும் கிராமங்களில் உள்ளனவா?**

கிராம சபை மூலம் மேம்பாட்டு திட்டங்களில் பங்கேற்க செய்வதில் வெற்றி கண்ட கிராமங்கள் பல உள்ளன.

நம் மாநிலத்தில் வரங்கல் மாவட்டத்தின் கங்கா தேவிபள்ளி, கரீம்நகர் மாவட்டத்தின் ராமசந்திராபுரம், நிஜாம்பாத் மாவட்டத்தின் அங்காபூர், கிராமங்கள் வெற்றிகரமாக மக்களின் பங்கேற்புடன் வளம் பெற்றுள்ளன. அதுபோலவே, மகாராஷ்டிர மாநிலத்தின் அகமத் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஹிவாரே பஜார் கிராமம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

**கங்கா தேவி பள்ளி பஞ்சாயத்து :**

கங்காதேவி பள்ளி கிராமத்தில் கிராம சபை மூலம் 18 வெவ்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. குடிநீர் விநியோகக்குழு, சுகாதாரக்குழு, ஆரோக்கியக் குழு, தகவல் தொடர்புக்குழு, முதலியவை சிலவாகும். இக்குழுக்கள் கிராம மக்களுக்கு சிறந்த சேவையை செய்து வருகின்றன. இக்கிராமம் கீழ்கண்டவற்றை சாதித்துள்ளது.

- மது அருந்துதல் முழுமையாக தடை செய்தல்.
- 100 சதவீதம் பள்ளி வயது குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்தல்.
- 100 சதவீதம் எழுத்தறிவு
- எல்லா குடும்பங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.
- தகுதியுள்ள கணவன் – மனைவிகளுக்கு குடும்ப கட்டுபாடு திட்டங்கள் பின்பற்ற செய்தல்.
- எல்லா குழந்தைகளுக்கும் தடுப்பூசி மருந்துகள் அளித்தல்.
- வங்கி சேமிப்பு திட்டங்களில் 100% குடும்பங்களை சேர்த்தல்.
- கிராம முழுமைக்கும் சுகாதார வசதி அளித்தல்.

ஒவ்வொரு கிராமவாசியும், 18 குழுக்களில் குறைந்தபட்சம் ஒன்றிலாவது தனது பங்கை ஆற்ற முடியும். கிராம மேம்பாட்டிற்கு சம்மந்தப்பட்டு எந்த ஒரு விஷயம் குறித்தும் கிராம சபையில் விவாதிக்க வேண்டியது அத்தியாவசியமானது. கிராம சபையின்



*13.5 கங்கா தேவி பள்ளி கிராம சபை*

SCERT TELANGANA

தீர்மானங்களுக்கு எல்லா கிராம மக்களும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

- கங்காதேவி பள்ளி எந்த மாவட்டத்தில் உள்ளது?
- கங்காதேவி பள்ளியில் எத்தனை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன?
- கங்காதேவி பள்ளி பஞ்சாயத்து குறித்து உன் கருத்து என்ன?
- கங்காதேவி பஞ்சாயத்து ஏன் வெற்றிகரமானதாக மாறியது?
- உன் கிராம பஞ்சாயத்தை, கங்காதேவி பள்ளி பஞ்சாயத்தோடு எவ்வாறு ஒப்பிடுவாய்?

**முக்கியச்சொற்கள்**

கிராம சபை

பொது மக்கள் வசதிகள்

உள்ளாட்சித்துறை அரசு

தேர்தல்

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. உங்கள் ஊரின் உள்ளாட்சித்துறை நிறுவனத்தின் உறுப்பினராக நீ இருந்தால் எந்த பிரச்சனைகளை அதிகம் விவாதிப்பாய்?(AS4)
2. உங்கள் கிராம பஞ்சாயத்து (அ) நகராட்சி மன்றத்தில் தீர்மானங்கள் இயற்றுவதில் பொது மக்கள் பங்கேற்க முடியும் என்று நீ நினைக்கின்றாயா? உனது விடைக்கு ஏற்ற உதாரணங்கள் தருக.(AS1)
3. கிராம சபை கூட்டங்களில் மிகச் சிலரே கலந்துகொள்கின்றனர். ஏன் என்று நீ கருதுகிறாய்?(AS1)
4. வறுமை கோட்டுக்கும் கீழ் உள்ளோர் பட்டியல் கிராம சபை கூட்டங்களில் படிக்கப்படுவது ஏன்?(AS1)
5. உங்கள் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் சர்பஞ்சுகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து கண்டறிந்து, சிறு கட்டுரை எழுதுக.(AS4)
6. பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் சர்பஞ்சுகளுக்கு கிராம முன்னேற்ற நிதி வழங்குவதில்லை. அவர்களுக்கு அத்தொகை தரப்பட வேண்டும் என நீ கருதுகிறாயா? உன் காரணங்களை கூறுக.(AS4)
7. அர்பணிப்பு தன்மையுடன் பணியாற்றும் சர்பஞ்சுகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் யாவை?(AS6)
8. உங்கள் கிராம பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் கிராம துணைசர்பஞ்ச, பஞ்சாயத்து செயலாளரை குறித்து விவரங்களை சேகரித்து பட்டியல் தயாரிக்கவும்.(AS3)
9. பக்கம் 118ல் உள்ள கங்காதேவி பள்ளிகிராம பஞ்சாயத்து பாடப்பகுதியை படித்து கலந்துரையாடவும்.(AS2)

## செயல் திட்டங்கள் (Projects)

1. உங்கள் கிராம தலைவர் அல்லது அவர்களை பள்ளிக்கு வரவேற்று, பஞ்சாயத்து அமைப்பின் பணி புரியும் விதம் குறிதது கலந்துரையாடி அறிந்து கொள். அவர்களை கேட்க வேண்டிய கேள்விகள் சிலவற்றை தயார் செய்திடு.

2. உங்களுடைய வார்டு உறுப்பினர் (அ) சர்பஞ்ச் உடன் கலந்துரையாடி அவர்களின் பணிகள் குறித்து அறிந்து கொள்ளுங்கள். கிராம பஞ்சாயத்தின் முக்கிய வேலைகள் குறித்தபடத்தொகுப்பு தயாரித்து, உன் பள்ளியில் பார்வைக்கு வைத்திடுக.

3. உன் பள்ளி சுற்றுப்புறத்தில் குப்பைகளை கண்டால் நீ அவற்றை என்ன செய்வாய்? பள்ளியின் தூய்மைக்காகவும், மரங்களை நடுவதற்காகவும் குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு நாளும் ஒரு குழுவை கொண்டு தூய்மையும் பசுமையும் திட்டத்தை நிர்வகிக்கவும்.

அத்தியாயம் 14

# நகர் புறங்களில் உள்ளாட்சித்துறை நிறுவனங்கள்

**படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள நகரத்தின் தோற்றத்தை பாருங்கள். கிராமங்கள் மற்றும் நகரங்கள் இடையே காணப்படும் வேற்றுமைகள் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். நகர்புறங்களில் வாழும் பொதுமக்களுக்கு தேவைப்படும் வசதிகள் யாவை? அவர்களுக்கு என்னென்ன வசதிகள் கிடைக்கின்றன? பொது மக்களுக்கு தேவையான வசதிகள் செய்து தர எந்த துறைகள் தேவைப்படுகின்றன? இவற்றை வகுப்பறையில் விவாதிப்போம்.**



*படம் 14.1 ஒரு நகரத்தின் தோற்றம்*

அதிக எண்ணிக்கையில் மக்கள் வாழும் இடங்களை நகரங்கள் மற்றும் மாநகரங்கள் என்பர். நகரங்களின் பல பாகங்களில் சாலைகள் அகலமாகவும், மக்கள் நெரிசலுடனும் காணப்படுகின்றன.

நகர் புறங்களில் கடைகள், வாகனங்கள் தொழிற்சாலைகள் அதிகமாக காணப்படுகின்றன. நகர்புற நிர்வாகத்திற்கு கிராமங்களை விட அதிக அளவு திட்டமிடுதலும், மக்களுக்கு செய்ய வேண்டிய வசதிகளும் தேவைப்படுகிறது. அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் அதிக எண்ணிக்கையில் நகரங்களுக்கு, வேலை வாய்ப்பு தேடியும், வாழ்க்கை நடத்தவும் இடம் பெயர்ந்து சென்ற வண்ணம் இருக்கின்றனர். எனவே, நகரங்கள் மற்றும் மாநகரங்களின் அளவு நாளுக்கு நாள் வளர்ந்து புதிய காலனிகள் தொடர்ந்து உருவாகி வருகின்றன. இந்த காலனிகளில் பல்வேறு வேலைகள் செய்து பிழைத்திடும் ஏழை மக்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.

SCERT TELANGANA

இம் மக்கள் அனைவருக்கும் குடிநீர், மின்சாரம், போக்குவரத்து வசதிகள், பள்ளி கூடங்கள், மருத்துவ மனைகள், போன்றவற்றை நிச்சயமாக செய்து தர வேண்டி உள்ளது. நகர்புறங்களில் காணப்படும் மிக முக்கியமான பிரச்சனை கழிவுப் பொருட்கள் (அ) குப்பைகள், சாக்கடை கழிவுகள் அகற்றுதல்.

இவ்வாறாக நகரங்கள் மற்றும் மாநகரங்களில் பொது மக்கள் வசதிகளை செய்து தருதல் மிகவும் சிக்கலான பணி. இதை செய்ய பெரிய அளவிலான நிறுவனம் தேவைப்படுகிறது. இந்நிறுவனத்தை தான் நகராட்சி என்பர். மக்கள் தொகையின் அடிப்படையில் நகராட்சி மூன்று வகைப்படுகின்றன.

20,000 முதல் 40,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் நகர பஞ்சாயத்து இருக்கும். 40,000 முதல் 3,00,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் நகராட்சி இருக்கும். 3,00,000 மக்கள் தொகைக்கும் மேல் இருந்தால் மாநகராட்சி இருக்கும்.

**நகராட்சிகள் உருவாகும் முறை**

கிராம பஞ்சாயத்துகள் போலவே நகராட்சியும் தேர்தல் மூலம் உருவாகின்றன. நகர் பகுதி வார்டுகளாக பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வார்டில் இருந்தும் ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்பிரதிநிதிகளை நகராட்சி கவுன்சிலர்கள் என்பர். மாநகராட்சிகளில் கார்ப்பரேட்டர்கள் என்பர். பஞ்சாயத்து தலைவராக சர்பஞ்ச் இருப்பது போல் நகராட்சிகளில் சேர்மன், மாநகராட்சிகளில் மேயர் தலைமை வகிக்கின்றனர்.

- நகராட்சி மன்ற தேர்தல் விதிமுறைகள் பஞ்சாயத்து தேர்தல் விதிமுறைகள் போன்றவை கிராம பஞ்சாயத்து குறித்து தரப்பட்டுள்ள தகவல்களை ஒப்பிட்டு பார்த்து, **கீழுள்ள தவறான தகவல்களை திருத்துக.**

i. நகராட்சி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும்.

ii. வாக்காளர் 19 வயது நிரம்பி இருக்க வேண்டும்.

iii. ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பிரதிநிதி இருப்பார்.



படம் 14.2 *EVM*

iv. வேட்பாளராக போட்டியிடுபவருடைய பெயர் கிராம வார்டின் வாக்காளர் பட்டியலில் இருக்கும்

v. எல்லா வார்டுகளின் பிரநிதிநிதிகளாக ஆண்கள் இருப்பர்.

vi. 21 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் தேர்தலில் போட்டியிட முடியும்

- உங்கள் ஆசிரியரின் உதவியோடு உங்கள் மாவட்டத்தில் உள்ள நகராட்சி (அ) மாநகராட்சிகளை கண்டறியவும்.

**நகராட்சி எவ்வாறு பணியாற்றுகிறது?**

நகராட்சி நிறைய பணிகளை செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், சாக்கடை மற்றும் குப்பைகளை அகற்றுதல், பள்ளிக்கூடங்களை நடத்துதல், நியாய விலைக்கடைகள் மற்றும் மருத்துவமனைகளை நிர்வகித்தல், இத்துடன் புதிய நல்வாழ்வு திட்டங்களை மேற்கொள்ளுதலும் இதன் பணியாகும். இப்பணிகளை நகராட்சி கவுன்சிலர்கள், மாநகராட்சி மன்ற கார்ப்பரேட்டர்கள் மட்டும் செய்ய இயலாது. இதற்காக நகராட்சி மன்றம் அதிக அளவில் வேலையாட்கள், உதவி அலுவலர்கள் கணக்காளர்கள் மற்றும் அதிகாரிகளை நியமித்து பணியாற்றச் செய்கிறது. ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலும் பல்வேறு துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் ஊழியர்கள் முறையாக பணியாற்றுமாறு செய்திட பொறுப்புடைய அதிகாரி இருப்பார்.

SCERT TELANGANA

எடுத்துக்காட்டாக : குடிநீர் வழங்கும் துறை, மின்சார விளக்கு பராமரிப்பு துறை, கல்வித் துறை, குப்பைகள் அகற்றும் துறை போன்றவை இருக்கும்.

நகராட்சி மன்ற கவுன்சிலர்களின் வேலைகள் என்ன என்று நீங்கள் வியப்படையலாம். கவுன்சிலர்கள் மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் தேவைகள், பிரச்சனைகளை நகராட்சி மன்ற கூட்டத்தில் விவாதித்து நிறைவேற்றுவர், பல வகை பணிகள் சரியான முறையில் நிறைவேற்றுவதை உறுதி செய்திட நகராட்சியில் பல கமிட்டிகள் உள்ளன.

இக்கமிட்டிகள் கவுன்சிலர்களின் பொறுப்பில் செயல்படுகின்றன. இவை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் சம்பந்தப்பட்ட துறைகளால் செய்யப்பட்டனவா என்பதை மறு ஆய்வு செய்யும் மற்றும் புதியதாக செய்ய வேண்டிய பணிகளை திட்டமிடுகின்றன. இவை புது திட்டங்களை தயாரித்து சமர்ப்பிக்கின்றன. நகராட்சி மன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு ஒப்புதலை பெறுகின்றன. இதன் முடிவுகளை அதிகாரிகள் மற்றும் நகராட்சி மன்றத்தின் ஊழியர்கள் நடைமுறைப்படுத்துகின்றனர்.

நகராட்சி வார்டு கவுன்சிலர்கள் தங்கள் வார்டின் தேவைகளை குறித்து கவுன்சில் நடத்தும் கூட்டங்களில் விவாதித்து, தீர்வு காணுமாறு செய்திடுவர். வார்டு கவுன்சிலர்கள், தங்கள் வார்டு மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் தேவைகள், பிரச்சனைகளை தெரிந்து கொள்வர், வார்டு மக்கள் தங்கள் வார்டு கவுன்சிலரை அணுகி எவ்வாறு தங்கள் பிரச்சனையை தீர்த்து கொள்கின்றனர் என்பதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் அறிவோம்.

- நகராட்சி மற்றும் கிராம பஞ்சாயத்துகளின் பணிகள் இடையே உள்ள வேறுபாடுகள் குறித்து நீ கூற முடியுமா?
- நகராட்சி பணிகளை செய்வதில் வெவ்வேறு துறைகள் எவ்வாறு உதவிபுரிகின்றன?
- உங்கள் பள்ளியின் செயல்களை செய்திட கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளனவா? அவற்றின் பட்டியலை தயார்செய்.



*படம் 14.5 சுகாதார பிரச்சனையை தீர்க்கக்கோரி அதிகாரிக்கு மனு அளித்தல்*

**ஒரு சமுதாய பிரதிநிதித்துவம்**

யாஸ்மின் கலா கூறியது “இதற்கு முன்பு எங்கள் காலனியில் எங்கு பார்த்தாலும் குப்பைகள் சிதறி கிடக்கும் இவை அகற்றப்படாத போது நாய்கள், எலிகள், ஈக்கள் சூழ்ந்து கொண்டு அவற்றில் நடமாடும், இவற்றின் துர்நாற்றத்தால் மக்கள் நோய்க்குள்ளாயினர். இந்நிலையால் எங்கள் காலனிப் பெண்கள் மிகவும் வருந்தினார்கள். அச்சமயத்தில் எங்கள் காலனியை சேர்ந்த கங்காபால் வார்டு கவுன்சிலரை நாம் சந்தித்து எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்” என்று கூறினாள். “நாம் கவுன்சிலரை தேர்ந்தெடுத் துள்ளோம். நம் குறைகளை தீர்க்க வேண்டிய கடமை அவருக்கு உள்ளது” என்று கூறி தன்னுடன் சில பெண்களை குழுவாக அழைத்துக்கொண்டு வார்டு கவுன்சிலர் வீட்டுக்குச்சென்றார்.

கோவிந்தம்மாள் தங்கள் பகுதியில், உள்ள நிலைமை குறித்து அவருக்கு விளக்கினாள். அடுத்த நாள் அவர்களுடன் சேர்த்து நகராட்சி ஆணையரை சந்தித்து பேசி வருவதாக வாக்குறுதி அளித்தார். அத்துடன் எங்கள் பகுதியில் வாழும் அனைவரிடமும் தேங்கி இருக்கும் குப்பைகளை அகற்ற கோரும் அந்த புகார் மனுவில் கையெழுத்து பெறச்சொன்னார். அன்று மாலை எங்கள் பகுதி குழந்தைகள் வீடு வீடாக சென்று இச்செய்தியை கூறி முடிந்த அளவு கையொப்பங்கள் பெறப்பட்டன.

அடுத்த நாள் காலை பெருமளவு பெண்கள் கூட்டத்துடன் வார்டு கவுன்சிலர் நகராட்சி மன்ற

SCERT TELANGANA

அலுவலகத்திற்கு சென்றார். நகராட்சி ஆணையர் அனைவரையும் சந்தித்து, ஏற்பட்ட பிரச்சனைக்கான காரணங்களை எடுத்து கூற ஆரம்பித்தார். போதுமான குப்பை லாரி இல்லாததால் நகராட்சி உடனுக்குடன் அகற்ற முடியவில்லை என்று கூறினார். ஆனால் கங்காபால் சாதுர்யமாக "பணக்காரர்கள் வாழும் பகுதிகளில் குப்பைகளை அகற்ற உங்களிடம் லாரிகள் உள்ளது போல் தோன்றுகிறது." என்றார்.

அப்பிரச்சனை குறித்து உடனே நடவடிக்கை எடுப்பதாக கூறினார். அதற்கு கங்காபால் "உடனடி நடவடிக்கை இரண்டு நாட்களில் எடுக்கவில்லை என்றால் பெருங்கூட்டத்துடன் பெண்கள் வந்து நகராட்சி அலுவலகத்தை முற்றுகை செய்து போராட்டம் நடத்துவோம்'' என எச்சரித்தாள் கலா.

தெருக்கள் சுத்தம் செய்யப்பட்டனவா? என்று கேட்டாள் ரெஹானா. வேலை முற்றுப்பெறாததை பொறுக்காத ரெஹானா, ஆமாம்,அந்நாளி-ருந்து துப்புரவு பணிகள் தினந்தோறும் செய்யப்படுகிறது.

- வார்டு கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளில் பொது மக்களுக்கான வசதிகள் ஒழுங்காக செய்யப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்திட என்ன செய்ய வேண்டும்?
- உன்னுடைய வீட்டு முன்பு குப்பைகள் குவியலாக கொட்டினால், நீ என்ன செய்வாய்?

### நகராட்சி மன்றங்களின் நிதி மூலங்கள்

நகராட்சி மன்றங்கள் வீடுகள், தண்ணீர், தெரு விளக்குகள், கடைகள், திரைப்பட டிக்கெட்டுகள், முதலியவற்றின் மீது வரிகள் விதிக்கின்றன. இருப்பினும், இவற்றிலிருந்து வரும் வருவாய் நகராட்சி மன்ற செயல்கள் செய்திட போதுமானதாக இருக்காது. அரசாங்கத்தின் நிதி மானியங்கள் மீது ஆதாரப்பட்டுள்ளன. மாநில அரசாங்கம் சாலை அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களுக்கும் மற்றும் நகராட்சியின் வழக்கமான பணிகள் செய்திடவும் நிதி ஒதுக்கீடுகள் செய்கிறது.


படம் 14.4 துப்புரவு பணி

### பணிகளை முடிக்க ஒப்பந்தம் செய்தல்

பணத்தை சேமிக்க நாட்டின் பல நகராட்சி மன்றங்கள் குப்பைகளை சேகரித்து அகற்றிட தனியார் ஒப்பந்தகாரர்களை வாடகைக்கு அமர்த்தி கொள்கின்றன. இதனை ஒப்பந்தமுறை என்பர். இதன் பொருள் இதற்கு முன்பு நகராட்சி ஊழியர்கள் செய்த வேலையை தற்போது தனியார் கம்பெனி செய்து முடிக்கும். இந்த ஒப்பந்த ஊழியர்கள் குறைவான சம்பளம் பெறுகின்றனர். இவர்களின் வேலை தற்காலிகமானது. குப்பைகளை சேகரித்தலும் ஆபத்தானது. பல சமயங்களில் ஒப்பந்த ஊழியர்கள் பாதுகாப்பு முறைகள் இன்றி செயல்படுகின்றனர். வேலை செய்யும்போது காயமடைந்தாலும் முறையான கவனிப்பு இருக்காது.

- நீங்கள் பட்டினத்தில் வசிப்பவராக இருந்தால் நகராட்சி மன்றத்தின் கீழ் எத்தனை பேர் வேலை செய்கின்றனர்? ஒப்பந்தகாரர்கள் வேலைக்கு அமர்த்தபட்டோர் எத்தனை பேர்? என்பதையும் அவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் யாவை? என்பதை கண்டறியவும்.
- நகராட்சி தங்கள் வேலைகள் செய்வதற்கு ஏன் ஒப்பந்தகாரர்களை நியமித்து கொள்ள முன்னுரிமை தருகின்றன?

### நகராட்சி ஊழியர்கள்

*நகராட்சி ஊழியர்கள் எப்படிப்பட்ட நிலைமையில் பணியாற்றுகின்றனர் என்பதை படித்து தெரிந்து கொள்ளுங்கள்.*

*அன்று திங்கட்கிழமை காலை 5 மணி சின்னம்மாள் எழுந்து வேலைக்கு செல்ல விரும்பவில்லை நேற்று ஞாயிற்று*

கிழமை எனவே வேலைக்கு போகவில்லை. அதனால், இன்று அதிகம் பெருக்க வேண்டி இருக்கும் அதிக குப்பை தொட்டிகளை சுத்தம் செய்ய வேண்டி இருக்கும் ஸ்டார் லைட் காலனியில் உள்ளோருக்கும் விடுமுறை அவர்கள் அதிகமான குப்பைகளை தொட்டியில் கொட்டி இருப்பார்கள். அந்த தெருவில் அதிகமான பிளாஸ்டிக் பைகள், கவர்கள் வீசப்பட்டிருக்கும். மக்கள் எவ்வளவு அதிக குப்பைகளை கொட்டுகிறார்களோ அவற்றை பிரித்தெடுத்தல் சின்னம்மாளுக்கு கடினமானதாகிறது. அவள் வசிக்கும் காலனியில் குப்பைத் தொட்டிகளே இல்லை. குப்பை குவியல்கள் காணப்படும். அவளின் குடிசை பகுதி, நகரத்தின் வேறு பகுதியில் இருந்து வரும் கழிவு நீர் குழாய் அருகே அமைந்துள்ளது. அதிலிருந்து கழிவு நீர் கசிந்து கொண்டே உள்ளது. அந்த சாக்கடை நீர் குடிநீர் குழாய் அருகே தேங்கி உள்ளது.

சின்னம்மாள் காலனி அணியாமலே சென்று வீட்டிற்கு தண்ணீர் பிடித்து வந்தாள். அப்போது நஜ்மா வீட்டருகே வந்துவிட்டாள். சீக்கிரம் புறப்படு. இன்னமும் பத்து நிமிடங்களில் நாம் ஸ்டார் லைட் காலனிக்கு சென்று சுத்தம் செய்வதை துவங்கா விட்டால் 6.45 மணிக்கு வரும் குப்பைலாரியை தவறவிட்டு விடுவோம் என்றாள். சின்னம்மாள். சிறிது வெந்நீர் குடித்து விட்டு. அவளுடைய மகள்களின் தோள்களை உலுக்கி நான் வேலைக்கு சென்று கொண்டிருக்கிறேன், பள்ளிக்கு தாமதமாக செல்லாதீர்கள். பாத்திரத்தில் மீதமுள்ள சாதத்தை சாப்பிட்டு விட்டு பள்ளிக்கு செல்லுங்கள், என்று கூறினாள்.

சின்னம்மாளும், நஜ்மாவும் அங்கிருந்து ஸ்டார் லைட் காலனிக்கு நடந்தே சென்றனர். அவர்களுடைய காலனியில் இருந்து ஸ்டார்லைட் காலனிக்கு பேருந்து வசதி இல்லை. வழக்கமான ஓரிடத்தில் துடப்பங்களையும், தள்ளுவண்டிகளையும், பெற்று கொண்டனர். அந்த பழைய வண்டிகள் எல்லாவித ஒலிகளை எழுப்பின. இருவரும் தெருவை பெருக்கத் தொடங்கினர். எல்லாவிதமான குப்பைகளும் இருந்தன. குப்பைத் தொட்டிகள் நிரம்பி வழிந்திருந்தன. அதுவும் ஒரே ஒரு நாளில் அத்தனையும் சேர்ந்திருந்தன. மக்கள் குப்பைகளை தொட்டிகளின் வெளியே கொட்டியிருந்தனர். பல இடங்களில் மக்கள் குப்பைகளை சிதறியிருந்தனர். தேவையில்லா வீட்டுபொருட்கள், கடைக்காரர்களிடம் பெற்ற பொட்டலங்களின் கவர்கள், தையல்கடைகளில் இருந்து மீதமான துண்டு துணிகள் என பலவித குப்பைகள் இருந்தன.

தெருவை பெருக்குதல் அவர்களுடைய வேலையின் ஒரு பாகம் மட்டுமே, குப்பைகளை குவியலாக சேர்த்த பிறகு, அவற்றை குப்பை லாரியில் ஏற்ற வேண்டும். அவர்கள் பல சமயங்களில் மட்கும் குப்பைகளான சமையலறைக் கழிவுகள், எலும்புத் துண்டுகள், காய்கறிகள். நறுக்கியத்தில் மீதமுள்ளவை மற்றும் உயிரி மட்கு பொருட்களில் இருந்து வெறும் கைகளால் அவற்றோடு உள்ள பிளாஸ்டிக் பைகள், பாட்டில்கள், பால் கவர்களை பொறுக்கி எடுக்க வேண்டியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு தெரு முனைகளில் பச்சை மற்றும் நீல வண்ண குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டன. மக்கள் தங்கள் குப்பைகளை வகைப்படுத்தி தனித்தனியாக கொட்டுவார்கள் என கருதப்பட்டது. மூன்று (அ) நான்கு வாரங்கள் சிலர் அவ்வாறு வகைப்படுத்தி குப்பைகளை கொட்டினர். ஆனால் இப்போது அவ்வேலையை சின்னம்மாளும், நஜ்மாவும் செய்யவேண்டியுள்ளது.

குப்பைகளை எடுத்துச்செல்ல அவர்களுக்கு தள்ளு வண்டிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவற்றின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சின்னம்மாள் சில சமயங்களில் உடைந்த ஒரு சக்கரத்துடன், கிறீச்சிட்டு எழுப்பும் சத்தத்துடன், இவ்வண்டியை தெருவின் மீது இழுத்து செல்வதை விட தலையில் சுமந்து செல்வதே சுலபமானது என்று மனதில் நினைப்பாள். ஒரு முறை யாரோ சந்தித்து புகைப்படம் எடுத்து ஏன் நீ கையுறைகள் அணியவில்லை? உனக்கு முகமூடியோ மேல் அங்கியோ இல்லையா? என்று கேட்டதை ஞாபகபடுத்திக் கொள்வாள். ஒப்பந்தகாரருக்கு அப்படிப்பட்ட உபகரணங்கள் அளித்திட பணம் செலுத்தப்பட்டது போல் தோன்றுகிறது.

**துப்புரவு தொழிலாளிகளை மக்களில் பலர் கேலியாக 'முனிசிபாலிடி' என்று அழைப்பது சின்னம்மாளுக்கு தெரியும். அவர்களின் தொழில் அசுத்தமானது என கருதப்படுகிறது. பிறர் செய்யும் அசுத்தங்களை நகரம் முழுவதும் இவர்கள் சுத்தம் செய்கின்றனர். பல தேநீர் கடைகளில் இவர்களுக்கு ஒழுங்கான முறையில் டீ தரப்படுவதில்லை.**

**பத்து (அ) பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கம், நகராட்சிக்கு துப்புரவு தொழிலாளிகளை நியமித்து வந்தது. ஆனால் தற்போது அரசாங்கம் அவர்களை நியமிப்பது இல்லை. ஒப்பந்தகாரர்களுக்கு நகரத்தை சுத்தம் செய்யும் பொறுப்புதரப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரர்கள் அவர்களுக்கு ஊதியங்கள் வழங்குகிறார்கள்.**

**தெருவை பெருக்குபவர்கள் தவிர சிறு மோட்டார் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் போன்றோரும் ஒப்பந்தக்காரர்கள் மூலம் பணியமர்த்தப்படுகின்றனர். நகரத்தின் பல்வேறு பாகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட குப்பைகள் சின்னம்மாள் வசிக்கும் காலனிக்கு அருகில் குவியலாக கொட்டப்படுகின்றன.**

- **சின்னம்மாள் எங்கு வேலை செய்கிறாள்? அவளை வேலைக்கு அமர்த்தியது யார்?**
- **சின்னம்மாள் மற்றும் நஜ்மா செய்யும் வேலை சமுதாயத்தில் உள்ள மக்களால் மதிக்கப்படுகிறதா?**
- **இவ்விரண்டு காலனிகளில் உள்ள கனிசமான வித்தியாசங்கள் குறித்து நீ என்ன நினைக்கிறாய்?**
- **இவ்விரண்டு காலனிகளின் கற்பனை படத்தை வரைக.**

## வேமுலவாடா நகர பஞ்சயாத்து :

### ஒரு தனி ஆய்வு :

வேமுலவாடா என்பது ராஜன்னா மாவட்டத்தின் ஒரு நகர பஞ்சாயத்து ஆகும். அதில் 20 வார்டுகள் உள்ளன. 2011 வரை அது ஒரு பேரூர் பஞ்சாயத்தாக இருந்தது. இங்கு இராஜ ராஜேஸ்வரர் ஆலயம் ஒரு பிரபலமான புனிதத்தலமாக உள்ளது. இக்கோயிலுக்கு அதிக எண்ணிக்கையில் புனிதப் பயணிகள் வருகின்றனர். கோயில் நிர்வாகிகள் அதன் வளாகங்களை தூய்மையாக வைக்க சிறப்பு கவனம் செலுத்துகின்றனர்.

இந்த நகரத்தின் சிறப்புத் தன்மை அதன் குடிநீர் விநியோக முறையாகும். அதை ஆகாய கங்கை என்பர். அது 2003ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அவை குழாய்களை தூய நீர் திட்டத்தின் கீழ் இக்குழாய்வழிகள் 10-15 குடும்பங்களை இணைக்கின்றன. இம்முறையில் ஐந்தாயிரம் குடும்பங்கள் இதுவரை இணைக்கபட்டுள்ளன. ஒரு நாள் விட்டு ஒரு நாள் இக்குடும்பங்களுக்கு நீர் விநியோகிக்கப் படுகிறது

நகரத்தில் குப்பைகள் தினமும் அகற்றப்படுகின்றன. பணியாட்களுக்கு சக்கர வண்டிகள், கையுறைகள், முகமூடிகள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் நீர்கொட்டும் கூடைகள், ட்ரா- ஆட்டோ ரிக்ஷாக்கள், டிராக்டர்கள் போன்றவற்றையும் குப்பைகளை திரட்ட பயன்படுத்தி குப்பை மேட்டில் கொட்டுவர். இக்குப்பை மேடு நகரத்திற்கு ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது குப்பையி-ருந்து நெகிழிகளை அகற்றி அதை மின் உற்பத்திக்கு பயன்படுத்த வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை.



படம் 14.5 நகராட்சியில் குடிநீர் விநியோகம்

பெரும்பாலான வீடுகளுக்கு தனிப்பட்ட கழிவறைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை அரசு சாராத நிறுவனங்கள் மற்றும் அரசு நிதிகளின் இணைப்பால் கட்டப்பட்டன.

பதுகம்மா கொண்டாட்டங்களுக்காக சிற்றோடையில் ஒரு தனிப்பட்ட இடத்தை ஒதுக்கி மற்றொரு வசதியை நகராட்சி உருவாக்கியுள்ளது. நகரம் மக்களுக்கு பண்டிகைக் காலத்தல் பாதுகாப்பையும் மின்விளக்கினையும் ஏற்பாடு செய்து வருகிறது..



படம் 14.6 குடிநீர் விநியோக பைப்லைன்



படம் 14.7 பதுக்கம்மா தெப்ப

### முக்கியச் சொற்கள்

- உள்ளாட்சித்துறை அரசாங்கம்
- நகராட்சி கவுன்சில்
- மாநகராட்சி
- ஒப்பந்த முறை
- உயிரி மட்கு பொருட்கள்

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. உங்கள் பகுதியில் குப்பையை எவ்வாறு சேகரிக்கின்றனர்? அவற்றை என்ன செய்கின்றனர்?(AS1)
2. கிராம பஞ்சாயத்து செய்து தராத, நகராட்சிகள் செய்து தரும் பொது மக்களுக்கான வசதிகள் யாவை?(AS1)
3. நீங்கள் நகரங்களில் வாழ்பவராக இருந்தால், உங்கள் வார்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நகராட்சி செய்த பணிகளை பட்டியலிடுக.(AS3)
4. தெருக்குழாயில் குடிநீர் அரை மணிக்கும் மேல் வருவதில்லை. தங்கள் பக்கெட்டுகளில் நீர் நிரப்ப நீண்ட வரிசையில் பலர் நிற்க வேண்டி உள்ளது, என்று காந்தம்மாள் கூறுகிறார்? இப்பிரச்சனையை தீர்க்க நீ என்ன அறிவுரை கூறுவாய்?(AS4)
5. கந்தசாமி தெரு விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்கிறார். நகராட்சியால் நியமிக்கப்பட்ட ஒப்பந்தகாரரிடம் வேலை செய்து வருகிறார். கந்தசாமி வேலை செய்யும் சமயத்தில் மின்சாரம் தாக்கி கையில் காயம் ஏற்பட்டது. இவர் இரண்டு மாதங்கள் வேலை செய்ய முடியவில்லை. அவ்விரண்டு மாதங்கள் சம்பளம் பெற முடியவில்லை, அத்துடன் என்ன செய்யச்சொல்லி அறிவுரை கூறுவாய்?(AS4)
6. பொது மக்களுக்கு நகராட்சி மன்றங்கள் மிக குறைந்த செலவில் வசதிகளை செய்து தர வேண்டியது அதன் கடமை என்று சிலர் நினைக்கின்றனர். வேறு சிலர் நகராட்சிகள் அதில் வேலை செய்வோருக்கு கௌரவமான வேலை சூழ்நிலைகளை ஏற்படுத்தி தர வேண்டும் என கருதுகின்றனர். நீ இவை குறித்து என்ன நினைக்கிறாய்? உன் கருத்துக்களை கூறுக.(AS4)
7. மாநகராட்சி ஏழைகளுக்கு செய்யும் பணிகள் யாவை?(AS1)
8. கிராமத்தையும், நகரத்தையும் வேறுபடுத்தி காட்ட உன்னால் முடியுமா?(AS1)
9. மாநகரங்களிலும், கிராமங்களிலும் நீ அதிகம் விரும்புவன யாவை?(AS6)
10. உங்கள் மாவட்ட புறவரிபடத்தில் நகராட்சி மன்றங்களை குறிக்கவும்.(AS5)
11. உள்ளூர் கவுன்சிலர்/மாநகராட்சி உறுப்பினர்களை சந்தித்து நகராட்சி மன்றத்தின் பணிகளைப் பற்றி தெரிந்து கொள்ள சில வினாக்களை தெரிவிக்கவும்.(AS2)
12. பக்கம் 124ல் உள்ள முதல் பத்தியை படித்து கலந்துரையாடவும்.(AS2)

## செயல் திட்டங்கள் :

1, உங்கள் பகுதிக்கு அருகிலுள்ள நகராட்சி செய்து தந்துள்ள வசதி இடங்களான பேருந்துநிலையம், மருத்துவமனை, பள்ளிக்கூடம், சந்தை பொதுக் கழிப்பிடங்கள் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை சென்று பார்வையிடு. அவற்றின் நிலைமை குறித்து பட தொகுப்பு மற்றும் அறிக்கை தயார் செய்திடு.

2. நகராட்சி ஊழியர்கள் இருவரை நேர்காணல் காண்க. அவர்களின் தினசரி செயல்கள் குறித்து படத்தொகுப்பு தயார் செய்க. அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பதிவு செய்க.

3. நகராட்சி மன்றங்களின் செயல்பாடுகள் குறித்து ஒரு வாரம் செய்திகளில் வெளியிடப்பட்ட செய்தி துணுக்குகளை சேகரி, நகராட்சி மன்றங்களின் செயல்பாடுகள் குறித்து சேகரித்தவற்றின் செய்தி சுருக்கம் தயார் செய்திடு.

SCERT TELANGANA

அத்தியாயம் 15

# நமது சமூகத்தில் வேற்றுமைகள்

**நாம் வாழும் பூமியானது பல வேறுபாடுகளுடனும், மனித வாழ்க்கை பல வேற்றுமைகளுடனும் இருப்பதை கடந்த பாடங்களில் கண்டோம். வேற்றுமைகள் என்பது பல இடங்களுக்கு இடையே மட்டுமல்ல நீங்கள் படிக்கும் வகுப்பறையிலும் உள்ளன.**

## மக்களிடையே வேற்றுமைகள்

உனது வகுப்பறையை கவனி. உன்னைப்போல் யாராவது அவ்வாறு கவனிக்கிறார்களா என கவனி. இப்பாடத்தில் மக்கள் ஒவ்வொருவரும் பல வேற்றுமைகளுடன் உள்ளனர் என அறியலாம்.

அவர்கள் பலப் பகுதிகளையும், பண்பாட்டையும், மதத்தையும் சார்ந்துள்ளனர் என அறியலாம். இவ் வேற்றுமைகள் நம்மிடையே பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மக்களாலும் அவர்களுடைய மத, பண்பாட்டு வேறுபாடுகளாலும் இந்தியா பன்முக வகையில் சிறக்க உதவுகிறது. நமது வாழ்வுடன் இணையும் வேற்றுமைகள் எவை?

இந்தியா ஏன் பல்வேறு வேறுபாடுகளுடன் உள்ளது? இவ்வேற்றுமை வேறுபட்ட அம்சங்களின் ஒரு பாகமா? இவ்வேற்றுமைகள் ஏற்பட காரணத்தை இப்பாடத்தில் காணலாம்.

*பின்வரும் படங்களை கவனி. இவை உன்னுடைய வயதுடைய மூன்று மாணவர்கள் வரைந்த படங்களாகும். காலியாக உள்ள கட்டத்தில் மனித உருவத்தை நீ வரையவும்.*



*உங்கள் வயதுள்ள குழந்தைகள் வரைந்த படங்கள்*

SCERT TELANGANA

உன்னுடைய ஓவியம் மற்றவருடையதை போன்று உள்ளதா? மூவரின் ஓவியங்களும் வெவ்வேறு வகையில் உள்ளன. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் பல ஓவிய திறன்களுடன் இருக்கின்றோம்.

உன்னைப் பற்றிய தகவல்களை பின்வரும் காலியிடத்தில் நிரப்புக.

1. நான் வெளியே செல்லும்போது அணிய விரும்புவது ____________
2. நான் வீட்டில்____________ மொழியில் பேசுகிறேன்.
3. என்னுடைய விருப்பமான விளையாட்டு ____________
4. நான் ____________ நூல்களை படிக்க விரும்புகிறேன்.

மேற்கூறியதில் எத்தனைபேர் ஒரேவிதமாக பதிலளித்தனர் என உன் ஆசிரியரிடம் கேட்டு அறியவும்.

உன்னுடன் பொருந்தும் விதமான பதிலை எழுதியவர் யார்? யாருமில்லை. ஆனால் பதில் மட்டும் ஒன்றியிருக்கும். விவாதிப்போம்.

ஒரே வித நூலை படிப்பது, விளையாடுவது ஒரே மொழி பேசுவது போன்றவற்றிலும் வேறுபாடு உண்டு.

## நண்பர்களை உருவாக்குதல்

மாற்று கருத்து உடையவருடன் நட்புணர்வை வளர்ப்பது எளிது என நீ நினைக்கின்றாயா? பின் வரும் கதையை படிக்கவும்.

சுமனுடைய தாய் விகாராபாத்தில் ஒரு காய்கறி கடையை நடத்துகிறார். சுமன் தன் தாயிக்கு கடையில் உதவியாக இருக்கிறான்.

அவனை அனைவரும் "காய்கறி சுமன்" என அழைப்பர்.

ஒரு நாள் ஒரு மாணவன் பள்ளிச் சீருடையில் அவன் கடை முன்பு நின்றான். காய்கறி சுமன், "என்ன வேணும்? எனக் கேட்டான். சீருடையில் இருந்த மாணவன் வெண்டைக்காய் அரை கிலோ என்றான்.

காய்கறிகார சுமன் "வெண்டை அரை கிலோ போதுமா?" என்று கூறி வெண்டைக்காயை கொடுத்து அனுப்பினான். மாணவனும் தலையசைத்து காசு கொடுத்து காய்கறியை வாங்கி சென்றான்.



*படம் 15.1 காய்கறி கடையில் சுமன்*

மறுநாளும் மாணவன் கடைக்கு வந்து "என்ன காய்கறிகள் உள்ளன?" எனக்கேட்டான். அதற்கு காய்கறி சுமன் கத்து, துராய், பிண்டி, டமாட்டா, ஆலு, பியாஜ், என்றான். அதற்கு பள்ளி மாணவன். நீ எந்த மொழி பேசுகிறாய்.? தெலுங்க மொழி வராதா? "எங்கிருந்து வந்துள்ளாய் எனக் கேட்டான்? "ஹம் பீகார் கீ ஹய்ன், மை கர்மே இந்தி போல்தே ஹை", எனக்கு ஓரளவு தெலுங்கு வரும் என்றான் "உன்னுடைய பெயர் என்ன? என பள்ளி மாணவன் கேட்டான். என் பெயர் சுமன் எல்லோம் என்னை காய்கறிகார சுமன் என்று அழைப்பர் என காய்கறிகார பையன் கூறினான். என்னுடைய பெயரும் சுமன் என்று பள்ளி மாணவன் கூறி கைகுலுக்கினான், இருவரும் நண்பர்களாயினர்.

ஞாயிற்றுக் கிழமைகளில் மாணவன் சுமன், காய்கார சுமனை கிரிக்கெட் விளையாட அழைப்பான். காய்கறி சுமன் பந்தை தடுப்பதில் தேர்ந்தவன். காய்கறிகளை தரையில் விழாமல் மற்றும் உருளாமல் விளையாடுவேன் என்பான்.

சில வாரங்களுக்குப் பிறகு காய்கறிகார சுமன் கவலையுடன் இருப்பதை மாணவன் சுமன் கண்டு என்னவாயிற்று உனக்கு? என காரணத்தை கேட்டான். அதற்கு அவன், “தன்னுடைய கடையுள்ள இடம் நகராட்சிக்கு சொந்தமானது என்றும், அதை காலி செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர்”, என்றான். அதிகக்கடைகள் உள்ள சந்தைப் பகுதியில் கடைவைக்க கூறுகின்றனர் என்றான். அங்கு வாடகை கட்டக்கூட முடியாத நிலையில் உள்ளோம். நாங்கள் எங்கு செல்வதென எங்களுக்கு தெரியவில்லை என்றான் காய்கறி சுமன். மாணவன் சுமன் வீட்டிற்கு சென்ற பிறகும் இதைப்பற்றி கவலை அடைந்தான். எப்படி உதவி செய்வதென திகைத்தான். இரண்டு நாட்களுக்குப் பிறகு மாணவன் சுமன் காய்கறி வாங்க வந்தபொழுது அங்கு கடையில்லாததைக் கண்டு மனம் வருந்தினான். நகராட்சி ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டது என அறிந்து வருந்தினான்.

இக்கதையில் இருவருடைய பெயர்கள் மட்டும்தான் ஒன்று. ஆனால் அவர்களுடைய தாய்மொழி, வாழும்முறை, செய்யும் தொழில், வசதி, வாய்ப்புகள் பல வேற்றுமைகளுடன் உள்ளன. இருப்பினும், அவர்கள் நண்பர்களாக திகழ்ந்தனர்.

- இருவர்களின் வேற்றுமைகளை பட்டியலிட முடியுமா?
- பீகார் மாநிலத்தவரின் பண்டிகைகள், உணவு, பழக்கம் ஆகியவற்றை அறியவும்.
- விகாராபாத்தில் வாழும் மாணவன் சுமனின் உணவு, பழக்கம் ஆகியவற்றை அறியவும்.
- அவர்கள் எவ்வகை வீடுகளில் வசிக்கின்றனர்?
- காய்கறி சுமன் பள்ளிக்குச் செல்லவில்லை. அவனால் ஏன் பள்ளிக்கு செல்ல முடியவில்லை? இருவரிடையேயுள்ள இவ்வேறுபாட்டின் காரணம் யாது?
- அவன் பள்ளிக்குச் செல்ல விரும்பியிருந்தால், வேறு எவ்வகை பிரச்சனைகளை எதிர்கொண்டிருப்பான்?

## இந்தியாவில் வேற்றுமைகள்

பல்வேறு திறன்கள், மொழிகள், கலாச்சாரங்கள், மதங்கள் உடைய நம் நாட்டில், மக்கள் அனைவரும் ஒன்றாய் வாழ்கின்றோம். இவ்வேறுபாடுகள் நம்மில் பணக்காரராகவும் பலதரப்பட்ட மக்களாகவும் உள்ளது. இந்தியாவில் 29 மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்தில் வாழும் மக்களும் பல மொழிகள், கலாச்சாரங்கள், மதங்கள், உணவு பழக்க வழக்கங்களுடன் வாழ்கின்றனர். ஒரே மாநிலத்தில் உள்ள மக்கள் பல மொழிகளையும், பல மதங்களையும், வேறுபட்ட உணவுகளையும் நாம் காணலாம். இதில் மக்கள் காலம் செல்லச்செல்ல பிற மாநிலத்தவரின் உடைகளை அணிகின்றனர். பல வகை பண்டிகைகளை கொண்டாடி பல உடைகளை அணிந்து மகிழ்கின்றோம்.

இவ்வேறுபாடுகளில் முக்கியமானது மக்கள் பிறருடைய உடை, உணவு, பண்டிகைகள், மொழிகள், மத கருத்துக்களையும் ஏற்று வாழ்வதாகும். இவ்வகையில் பிறருடன் வாழ்வது மகிழ்ச்சியானது இவ்வாறு வாழும் மக்களை உன் பகுதியில் நீ காணலாம்.

- உனது மூதாதையர் உண்ணாத, தற்போது நீ உண்ணும் உணவு வகைகளையும் மற்றவைகளையும் பட்டியலிடு.

| வகைகள் | மூதாதையர் | தற்போதையது |
|---|---|---|
| உணவு | | |
| உடை | | |
| விளையாட்டு | | |
| பண்டிகைகள் | | |

SCERT TELANGANA

இவ்வகை வேறுபாடுகள் ஏன் ஏற்பட்டது என்பதை பிற மாநிலங்களின் உதாரணத்தோடு நாம் தற்போது படிக்க இருக்கிறோம்.

**நம்முடைய சொந்த மாநிலமான தெலுங்கானாவில், மக்களிடையே பெருமளவில் வேறுபாடுகளை நாம் காண முடிகிறது. இப்பாட புத்தகமும் கூட, நம் மாநிலத்தில் பேசப்படும் ஏழு மொழிகளில் வெளியிடப்படுகிறது. இவற்றுடன் பல்வேறு தனித்துவங்கள் கொண்ட வாழ்க்கை முறையுடன் வாழும் பழங்குடி மக்கள் பேசும் மொழிகளும் உள்ளன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், லம்பாடிகள் மற்றும் பஞ்சாராக்கள் போன்ற பல நாடோடி மக்களும் வாழ்கின்றனர். கோல்கொண்டா சுல்தான்கள் மற்றும் நிஜாம்களின் ஆட்சி காலத்தில், தொலைதூரத்தில் அமைந்துள்ள சாமர்கண்ட், பொகாரா, ஈரான் மற்றும் துருக்கி நாடுகளில் இருந்து மக்கள் ஐதராபாத், செகந்திராபாத் மற்றும் பிற பகுதிகளில் குடியேறி வாழ்ந்தனர். ஆப்பிரிக்க பூர்வீகத்தை கொண்ட அடிமைகள், பெருமளவில் ஐதராபாத்திற்கு கொண்டுவரப்பட்டனர். ஐதராபாத்தில் உள்ள ஹப்சிகூடா போன்ற சில காலனிகள் அவர்களின் பெயர்களால் அழைக்கப்பட்டன. இவ்வாறான மாறுபட்ட இன மக்கள், இங்கு வாழ்ந்து வந்த பிற மக்களுடன் பிற மக்களுடன் கலந்து வாழ்ந்து, ஒரு தனித்தன்மை மற்றும் மாறுபட்ட தெலங்கானா கலாச்சாரத்தை உருவாக்கினர். இவ்வாறாக, தெலங்கானா தனக்கே உரிய வகையான தெலுங்கு, இந்தி மற்றும் உருது (தாஹ்னி என்று அழைக்கப்பட்ட) மொழிகளை கொண்டுள்ளது. இவை நாட்டின் பிற பகுதிகளில் பேசப்படும் இதர மொழிகளி-ருந்து மாறுபட்டு காணப்படுகிறது. தெலுங்கு மற்றும் உருது கவிதைகளின் பெரும் மையமாக உருவானது. இவ்வாறான வேறுபட்ட மக்களின் கலவையால், பல்வேறு மதங்கள், வேறுபட்ட பண்டிகைகள் மரபுகள், ஆடை வடிவங்கள், வேறுபட்ட உணவு பழக்கங்கள், பல வகையான கட்டிட கலைகள், கட்டிட பாணிகள் முத-யவற்றை கொண்ட செழிப்பான கலாச்சார மரபை விளைவித்துள்ளது.**

**வேற்றுமைகள் ஏன் ஏற்படுகின்றன?**

பலகாலங்களாக மக்கள் புதிய நிலப்பகுதியை தேடினர். புதிய பகுதியில் குடியேறினர். பலர் புதிய பகுதியுடன் வியாபாரம், போர் செய்தனர். புதிய பகுதியின் மொழி, கலாச்சாரம், மதம் சில காலங்களில் வறட்சி, வெள்ளப்பெருக்கு, இயற்கை சீற்றங்கள், போர்கள் மற்றும் சண்டைகளால் அப்பகுதியைவிட்டு சென்றனர். ஆகியவற்றை புதிய பகுதியில் புகுத்தினர். காலங்கள் செல்லச்செல்ல இவர்கள் புதிய பகுதியில் உள்ள மக்களின் பழக்கங்களை ஏற்றுக் கொள்ளல், அவர்கள் இவர்களின் பழக்கங்களை ஏற்றுக்கொள்ளல் நடைபெற்றது. இவ்வாறு புகுத்தப்பட்ட புதிய முறையால், மக்களின் வாழ்க்கை புதிய பகுதிகளில் எவ்வாறு வேறுபாடுகளை ஏற்படுத்தியது என்பதை காணலாம்.

12ஆம் பாடத்தில் உள்ள இந்திய வரைபடத்தை பார்த்து தெலங்கானா, ராஜஸ்தான் மற்றும் சிக்கிம் மாநிலத்தை குறிப்பிடு.

## தார்ப் பாலைவனம்

தார்ப் பாலைவனம் இந்தியா, மற்றும் பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது. இதனுடைய அதிகப் பகுதி ராஜஸ்தானின் மார்வார் பகுதியில் உள்ளது. இங்கு மழைக் குறைவு. நதிகள் பாய்ந்து செல்வது கிடையாது ஆகையால், சில செடிகளும் மரங்களும் மட்டுமே வளர்கின்றன. புற்கள் வளர்கின்றன. ஆடு, செம்மறி ஆடு மற்றும் ஒட்டகம் வளர்ப்பத்தில் மக்கள் ஈடுபடுகின்றனர். இப்பகுதிமக்கள் விவசாயத்திற்காகவும், பிராணிகளுக்காகவும், தங்களுக்காகவும் மழை நீரை மிகவும் கவனமுடன் சேமிப்பர். ஆடு, மாடு மேய்ப்பவர்கள் தங்களின் மந்தைகளுடன் பல மாநிலங்களுக்கு (ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராதி சென்று மழைக் காலத்திற்கு முன்பு தார்ப் பாலைவனப் பகுதிக்கு வந்துவிடுவர். இவர்கள் ஆடுகளையும் கம்பளியையும் விற்று வாழ்கிறார்கள்.



*படம் 15.2 தார்ப் பாலைவனம்*

SCERT TELANGANA

ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்து வரும் மற்றும் செல்லும் வியாபாரிகள் இப்பாலைவனம் வழியே பயணிக்கின்றனர். பயணத்தின் போது, வசதியான இடங்களில் ஓய்வெடுக்க தங்குகின்றனர். இங்குள்ள பகுதிகள் ஜெய்சல்மீர், பிகனேர், ஜோத்பூர் போன்றவை வளர்ந்து வருகின்றன. குஜராத்தில் உள்ள துவாரகா, அரேபிய நாட்டில் உள்ள மெக்கா மற்றும் மெதினா நகரங்களுக்கு யாத்திரீகர்கள் பயணிக்கின்றனர். ஆகையால், பொஹரா முஸ்லீம்கள், சன்னிமுஸ்லீம்கள், ஷியா முஸ்லீம்கள் ஜைனர்கள், சைவர்கள், வைணவர்கள் மற்றும் சீக்கியர்கள் இப்பகுதிகளில் தங்கியுள்ளனர். அவ்வாறே பல மார்வாடி வியாபாரிகளும் இந்தியா முழுவதும் வியாபாரம் செய்து தங்களுக்கு வசதியான மையங்களில் வாழ்கிறார்கள்.

படம் 15.3 ஜெய்சல்மீர் கோட்டை



துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மன்னர்கள் இங்கு ஆட்சியை நிறுவினர். இம்மக்கள் அனைவரும் ஒன்றாக செயல்பட்டு மழைநீரை அறுவடை செய்தல் மற்றும் பாலைவன மண்ணில் விவசாயம் செய்தல் கொண்ட பல பிரிவுகளை உருவாக்கினர். இவ்வாறாக, தார் பாலைவனப் பகுதி உலகின் மிக அதிக மக்களடர்த்தி கொண்ட பாலைவனமாக உருவெடுத்துள்ளது.

முன்பு இப்பகுதி மக்கள் கம்புமாவுக்கொண்டு செய்யப்பட்ட ரொட்டியையும், பச்சைப்பயறு, உளுந்து மற்றும் பல புதர்தாவரங்களில் வளரும் காய்கறிகளையும் உட்கொண்டனர்.

இவைகள் வெயிலில் காயவைக்கப்பட்டு வருடம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. தற்போது இட்லி, சாம்பார், பிஜ்ஜா மற்றும் ஐஸ்கிரீம்களை மக்கள் விரும்பி உண்கின்றனர்.

இங்குள்ள கால்நடைகள் அதிக பாலை தருகின்றன. மேற்கு வங்காளம் பகுதிகளுக்கு சென்று திரும்பும் மார்வாடிகள், இப்பாலைக் கொண்டு மிகவும் ருசியான இனிப்பு வகை பலகாரங்களை செய்கின்றனர். இங்குள்ள பிகனேர் பகுதி இனிப்பு மற்றும் கார வகைகளுக்கு புகழ்பெற்றது.

தார்ப்பாலைவனப் பகுதிகளில் குடியேறிய மக்கள் புதிய கைவினை பொருட்களையும், புதிய உடை வடிவங்களையும் உருவாக்கினர். தற்போது ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வந்து தார்ப் பாலைவன பகுதியின் பல்வேறு வேற்றுமைகளைக் கண்டு வியக்கின்றனர்.

### சிக்கிம்

சிக்கிம் மாநிலம் இமய மலைத்தொடரின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. இமயமலையின் உயர்ந்த சிகரங்களில் ஒன்றான கஞ்சன் ஜங்கா, இங்கு அமைந்துள்ளது. இப்பகுதி ஆண்டு முழுவதும் குளிர்ச்சியாக இருக்கும். குளிர் காலத்தில் பனியால் மூடப்பட்டிருக்கும். பருவகாற்று காலங்களில் அதிக மழை பொழியும். பள்ளத்தாக்குகள் வழியே பல நதிகள் பாய்கின்றன.



படம் 15.4 கேரல் மிடெல் ரும்டெக் மடாலயம்



SCERT TELANGANA

சிக்கிம் மாநிலம் இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் சீனாவின் திபெத் பகுதியின் எல்லையாக அமைந்துள்ளது. இந்நாட்டு மக்களும் சிக்கிமில் வாழ்கின்றனர். நேபாளியர், திபெத்தியர் மற்றும் பூடானியர் வாழ்கிறார்கள். சிக்கிம் மக்கள் ஏறக்குறைய பதினொன்று மொழிகளை பேசுகின்றனர். இப்பகுதிக்கு புத்தமதத்தை பரப்பிய திபெத் லாமாக்களுடன் அதிக தொடர்புண்டு. அவர்கள் பல புத்த மடாலயங்களை கட்டியுள்ளனர்.

சிக்கீம் ''ஜோக்கியர்கள்'' எனப்படும் அரசர்களால் 1975 வரை ஆளப்பட்ட தனிச் சுதந்திர நாடு. இவ்வாண்டு சிக்கிம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு ஜனநாயக அரசு அமைக்கப்பட்டுள்ளது.

தார்பாலைவனமும் சிக்கிமும் இந்தியாவில் உள்ளன. தார் என்பது பாலைவனப்பகுதி ஆனால் சிக்கிம் இமயமலைப் பகுதி. வேற்றுமைகள் என்பது கடந்த காலத்தின் கலாச்சார தாக்கம் மட்டுமல்ல நிகழ்காலத்தின் மக்கள் வாழ்க்கையுமாகும். நமது கலாச்சார மரபு புதிய இடத்திலும் தொடர்கிறது. நாம் வாழும் பகுதிகளில் பல இடங்களிலிருந்து இடம்பெயரும் மக்கள் வாழ்கின்றனர். பல மக்களுடன் வாழ்வதால், பல மரபு ரீதியான பழக்கங்கள் மக்களுடன் ஒன்றிணைந்துள்ளன.

### பாண்டிச்சேரி

பாண்டிச்சேரி தென் கிழக்கு கடலோர இந்தியாவில் உள்ள சிறிய மாநிலமாகும். இம்மாநிலம் ஐரோப்பிய வியாபார நிறுவனங்களான டச், போர்ச்சுகீஸ், ஆங்கிலேய மற்றும் பிரஞ்சு போன்றோரை கவர்ந்திழுத்தது. அவர்கள் இங்கு வணிக மையங்களையும், மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளையும் அமைத்தனர். காலப்போக்கில், பிரஞ்சுகாரர்கள் இப்பகுதியின் மீது தங்கள் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தினர். இப்பகுதி மக்கள் இந்திய யூனியனுடன் இணைய 1954ஆம் ஆண்டில் வாக்களித்தது வரை பிரஞ்சுகாரர்களின் கட்டுப்பாடு இருந்தது. பாண்டிச்சேரி அதிக எண்ணிக்கையில் பிரஞ்சு மொழி பேசுவோரையும், தமிழ் மற்றும் பிறமொழி பேசுவோரையும் கொண்டுள்ளது. தமிழ் நாட்டின் சிறந்த தேசிய புலவரான சுப்பிரமணிய பாரதி மற்றும் வங்காளத்தின் தேசியவாத புரட்சியாளராக துவக்கத்தில் இருந்து, பின்பு ஆன்மீக குருவாக மாறிய அரபிந்தோ கோஷ் போன்றோருக்கு சுதந்திர போராட்ட காலத்தில் அடைக்கலம் தந்தது. இந்தியாவின் எல்லா பகுதிகளில் இருந்தும், அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் இப்பகுதியில் வந்து குடியேறினர். அரபிந்தோகோஷ் இவருடைய பிரஞ்சு சிஷ்யை அம்மா அரபிந்தோ ஆசிரமத்தை நிறுவினர். அதன்பிறகு, ஐக்கிய நாடுகள் சபை ஆதரவுடன், ஆரோவில்லா எனப்படும் சர்வதேச கிராமம், அமைதி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை பரப்பும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது. இவ்வாறாக, பாண்டிச்சேரி பல்வேறு கலாச்சாரங்களின் இணைத்த இடமாகவும், மனித நேயத்தின் ஒருமை தத்துவத்தை கொண்டாட ஒன்று சேரும் இடமாகவும் விளங்குகிறது.

### வேற்றுமையில் ஒற்றுமை

கடந்த நூற்றாண்டுகளில், இந்தியா பகிர்ந்தளிக்கப்பட்ட கலாச்சாரங்கள், மதங்கள், அரசியல் அமைப்புகள் மற்றும் வேற்றுமைகளுடன் கூடிய நாடாக எழுச்சியடைந்துள்ளது. இவ்வேற்றுமைகளுடன் கண்ட வரலாறு, இந்திய மக்களை ஒரு தேச மக்களாக இணைந்து, ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக போராட உதவியது. இப்பொதுவான போராட்டமே தேசிய இயக்கம் என்று அழைக்கப்பட்டது.



*படம் 15.5 அபினவ் கஞ்சன் ஜங்கா சிகரம்*



*படம் 15.6 ஆரோவில்லா மாதிரி மந்திர்*



SCERT TELANGANA

இரத்தம் சிந்திய நாட்களை மறந்து விடாதே நண்பா.
உன்னுடைய மகிழ்ச்சியான தருணங்களில், எங்களை நினைவு கூர்ந்து கண்ணீர் விடு.
வேட்டைக்காரன் ஒவ்வொரு மலரையும் கிழித்து எறிந்துவிட்டான்.
வெறிச்சோடி உள்ள தோட்டத்தில் மலர் செடியை நட்டு வளர்த்திடு.
குண்டடிகள் பட்டு வீழ்ந்த நாங்கள் ஜா-யன் வாலாபாக்கில் கண்களை மூடினோம்.
இந்த தனிமையான மயானத்தின் ஒரு விளக்கை ஏற்றிவிடு நண்பா.
இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் குருதி இணைந்து இன்று வெள்ளமாக ஓடியது.
இக்குருதி ஆற்றில், உன் ஆடையை நனைத்திடு நண்பா.
சிலர் சிறைச் சாலைகளில் துவண்டனர் வேறு பலர் மயானத்தில் கிடக்கின்றனர்.
அவர்களுக்கு சில துளிகள் கண்ணீரை சிந்திடு நண்பா.

**இந்திய மக்களின் நாடக கலையரங்கு சபை (IPTA)**

அமிர்தசர் என்னுமிடத்தில் ஜா-யன் வாலாபாக் படுகொலை நடந்த பிறகு, இப்பாடல் பாடப்பட்டது. பிரிட்டீஷ் ஜெனரல் கட்டளையின்படி, ஆயுதமின்றி அமைதியான முறையில் குழுமியிருந்த பெரும் மக்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் பலர் உயிரை இழந்தனர், அதற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆண்கள்-பெண்கள், இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் முஸ்லீம்கள், பணக்காரர்கள், ஏழைகள் அனைவரும் ஒன்றுதிரண்டு, ஆங்கிலேயரின் இப்படுகொலைச் செயலை எதிர்த்தனர். இப்பாடல் ஜா-யன் வாலாபாக் படுகொலையில் உயிரிழந்த வீரம் மிக்க அம்மக்களுக்கு மரியாதை செலுத்த இயற்றப்பட்டது.



*படம் 15.7 இந்தியாவின் முதலாவது பிரதமமந்திரி ஜவஹர்லால் நேரு, சுதந்திர தினத்தின் போது, செங்கோட்டையில் இருந்து நாட்டிற்கு உரையாற்றுகிறார்.*

இந்திய சுதந்திர போராட்டத்தின்போது, உருவான பாடல்களும், சின்னங்களும், நம் நாட்டின் வேற்றுமைகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ளும் வளமான மரபினை, நிலையாக தொடர்ந்து நினைவூட்டுகின்றன. நம் தேசியக்கொடி உருவான விதம் குறித்து உங்களுக்கு தெரியுமா? இக்கொடி, நாடெங்கும் ஆங்கிலேயரை எதிர்த்து போராடிய மக்களால் எதிர்ப்பை காட்டும் சின்னமாக பயன்படுத்தப்பட்டது.

ஜவஹர்லால் நேரு தன்னுடைய 'த டிஸ்கவரி ஆப் இந்தியா' என்னும் புத்தகத்தில், இந்தியரின் ஒற்றுமை உணர்வு, வெளியுலகில் இருந்து திணிக்கப்பட்டதல்ல. அது இந்தியரின் மனதில் ஆழ்ந்து பரந்துள்ள பண்பினுள் உள்ளடங்கி உள்ளது. பலதரப்பட்ட நம்பிக்கைகள், வழக்கங்களை பின்பற்றியும் பரந்த சகிப்பு தன்மையுடன் அவற்றை ஊக்குவித்தும் வாழும் குணத்தை பெற்றிருப்பதின் வெளிப்பாடே தேசிய ஒற்றுமை, என்று எழுதி உள்ளார். வேற்றுமையில் ஒற்றுமை என்னும் சொற்றொடரை உருவாக்கி, நம் நாட்டின் சிறப்பை விவரித்தவர் நேரு.

**இரவீந்திரநாத் தாகூரால் இயற்றப்பட்ட இந்திய தேசிய கீதமும் இந்தயாவின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் மற்றொரு பாடலாகும். தேசிய கீதம் தேச ஒற்றுமையை எவ்வாறு விளக்குகிறது என்பதை விவரி.**

**முக்கிய வார்த்தைகள்**

1. வேற்றுமைகள்
2. கலாச்சாரம்
3. தேசப்பற்று
4. குடியேற்றம்
5. லாமா

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. உன்னுடைய பகுதியில் உள்ள வேற்றுமைகள் இரண்டை குறிப்பிடுக.(AS1)
2. பல்வேறு மதங்களின் ஒரே மாதிரியான பழக்கங்களை பட்டிய-டுக.(AS3)
3. தேசிய விளையாட்டுகள் வேற்றுமையில் ஒற்றுமையை எவ்வாறு ஊக்குவிக்கின்றன?(AS6)
4. உன்னுடைய பகுதியில் கொண்டாடப்படும் பண்டிகைகளை பட்டிய-டுக.(AS1)

   எந்த பண்டிகைகள் அனைத்து பகுதி மற்றும் மத மக்களால் கொண்டாடப்படுகிறது?(AS6)
5. இந்தியாவின் பல்வேறு வேற்றுமைகள் மற்றும் கலாச்சாரங்கள் உன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு உயர்த்துகிறது?(AS6)
6. சுதந்திரப்போராட்ட வீரர்களின் படங்களை ஒட்டி ஒரு புத்தகத்தை தயாரிக்கவும். அவர்களின் வாழக்கை வரலாற்றை எழுதவும்.(AS3)
7. இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமையை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளை துண்டு பிரசுரங்களில் எழுதி வகுப்பறையில் தொங்கவிடவும்.(AS6)
8. பின்வரும் அட்டவணையை நிரப்புக. உன்னுடைய பழக்கங்களை உன் நண்பர்களுடன் ஒப்பிடுக.(AS3)

| வ. எண் | வகைகள் | என்னுடையது | முதல் நண்பன் | இரண்டாவது நண்பன் |
|---|---|---|---|---|
| 1 | உணவு | | | |
| 2. | உடை | | | |
| 3. | வீடு | | | |
| 4. | தாய் மொழி | | | |
| 5. | மதம் | | | |
| 6. | பண்டிகைகள் | | | |
| 7. | மற்றவைகள் | | | |

மேலுள்ள அம்சங்கள் உன் நட்பை தொடர தடைகளாக உள்ளதா? நிரூபி.

9. இந்திய புறவரிப்படத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.(AS5)
   (அ) தார் பாலைவனம் (ஆ) சிக்கிம் (இ) பீகார் (ஈ) மத்தியபிரதேசம்
   (உ) ஆந்திரபிரதேசம் (ஊ) தெலங்கானா (எ) பஞ்சாப்
10. வேற்றுமைகள் எவ்வாறு வந்தன? தார் பாலைவனம், சிக்கிம், பாண்டிச்சேரி தலைப்புகளிலுள்ள விவரங்களை படித்து, இந்த வினாவிற்கான விடை எழுதுக.

SCERT TELANGANA

அத்தியாயம்

# 16 ஆண் - பெண் சமத்துவம்

**தெலங்கானாவில் பெண்கள் இந்நாட்களில் வீட்டிற்கு வெளியிலும் வேலைவாய்ப்பை பெற்றுவருகிறார்கள். தேர்தலில் போட்டியிடுதல், குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுத்தல் போன்ற முக்கிய பணிகளில் தற்போதைய பெண்கள் அதிகம் ஈடுபடுகிறார்கள். 1980 மற்றும் 1990 களில் முந்தைய அரசுகளின் திட்டங்களால் பெண்கள் பொதுப்பணிகளில் அதிகம் ஈடுபடுகின்றனர். இருப்பினும் தெலங்கானாவில் பெண்களின் நிலை ஆண்களுக்கு இணையாக நோக்கத்தை அடையும் அளவிற்கு இல்லை. இப்பாடத்தில் ஆண்-பெண் சமத்துவத்தைப் பற்றி கற்கலாம்.**

- வயலிலும், தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் பணிபுரியும் பெண்களைப்பற்றி உனக்குத் தெரியுமா? அவர்களுடைய பணிகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை கண்டறி.

- ஆண்களும் பெண்களும் தனித்தனியாக செய்யும் வேலைகளை பட்டியலிடுக.

ஆண்கள் வயல்கள், தொழிற்சாலைகள் மற்றும் கடைகளில் பணியாற்றும் போது பெண்கள் வீட்டை சுத்தப்படுத்துதல், சமையல் செய்தல், குழந்தைகளை பராமரித்தல் போன்ற வேலைகளை வீட்டில் செய்கின்றார்கள். பெண்கள் வெளி வேலைகளுக்கு சென்றாலும் வீட்டு வேலைகளை செய்த பிறகே செல்கின்றனர். சில குடும்பங்களில் ஆண்கள் குடித்துவிட்டு வீட்டில் பெண்களை அடித்து துன்புறுத்துகிறார்கள். பெண்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டு வாழ்கிறார்கள்.

## பெண்கள் இயற்கையாகவே பலவீனமானவர்களா?

இயற்கையாகவே பெண்கள் ஆண்களை விட உடல்ரீதியாக பலவீனமானவர்கள் என்று சிலர் கருதுகின்றனர். பெண்கள் அதிக அக்கறையும், பாசமும் உள்ளவர்கள். சண்டையிடும் குணம் இல்லாதவர்கள். சமைத்தல், சுத்தம் செய்தல், தைத்தல் போன்றவற்றை செய்யும் ஆர்வத்தை பிறப்பிலேயே கொண்டிருப்பர். பெண்கள் மிகவும் பலவீனமானவர்களாக இருப்பதால் ஆண்களின் பாதுகாப்பு தேவைப்படுகிறது. பெண்கள் மட்டும் தான் அன்பும், அக்கறையும் கொண்டிருப்பதால் குழந்தைகளை கவனித்து கொள்கின்றனர். இயற்கையாகவே வீட்டு வேலைகள் செய்திட பெண்கள் பொருத்தமானவர்களாக இருப்பதால் அவற்றை செய்கின்றனர். இதனை நீங்கள் ஏற்கிறீர்களா?

- அடுத்த பக்கத்தில் மக்களைப் பற்றிய இயற்கையான கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டும், பெண்கள் மட்டும் மற்றும் ஆண் பெண் இருபாலரும் செய்யும் பணிகள் எவை? வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்யவேண்டும்.

SCERT TELANGANA

| குணங்கள் | சிறுமிகள் பெண்கள் | சிறுவர்கள் ஆண்கள் | இரு பாலரும் |
|---|---|---|---|
| தைரியம் – சண்டையிடுவதில் ஆர்வம் | | | |
| விவேகம் – கணிதம், அறிவியலில் நல்ல திறமை | | | |
| கலை – வண்ணம் தீட்டுதல், நடனம், இசையில் நல்ல திறமை | | | |
| கல்வி கற்றல் – படிப்பில் நல்ல திறன் | | | |
| வலிமை – கடினமான வேலைகளை செய்யும் குணம் | | | |
| பலவீனம் – லேசான வேலைகளை செய்தல். | | | |
| மன எழுச்சி – அழுகின்ற சுபாவம், விவேகமில்லா கோபம் | | | |
| வெட்கப்படுதல் – வெளியே வர விருப்பமில்லாத குணம் | | | |
| அதிகம் பேசுதல் – எப்போதும் அரட்டையடித்தல் | | | |
| அடக்க சுபாவம் – குறைவாக பேசுதல், அமைதியாக இருத்தல் | | | |
| அன்பு காட்டல் – நோயுற்றோரை கவனித்துக் கொள்ளுதல், | | | |
| குழந்தைகளை அக்கறையுடன் பார்த்துக்கொள்ளுதல் | | | |
| உயர்வாக உடல் வலிமையுடன் இருத்தல் – விளையாட்டிற்கு ஏற்ற உடல்வாகு. | | | |
| ஆடை அலங்காரம் செய்து கொள்வதில் விருப்பம். | | | |

- வகுப்பிலுள்ள அனைவரும் மேற்கண்ட அட்டவணையை நிரப்பியவுடன் ஆசிரியர். மாணவர்களின் பெரும்பான்மை அபிப்ராயங்களை கரும்பலகை மீது எழுதிக்காட்ட வேண்டும்.
- ஒவ்வொரு குணத்தைப் பற்றியும், வகுப்பறையில் கலந்துரையாடி, பெரும்பான்மை மாணவர்களின் கருத்து எந்த அளவிற்கு உண்மையானது என்பதை ஆராய்ந்து அறியுங்கள், எடுத்துக்காட்டுகள் உதவியுடன் கலந்துரையாடுகள்.

நீங்கள் இக்குணங்கள் குறித்து ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள். இவை அனைத்தும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமாக பொருத்தமுடையவைகளாக இருப்பதை நீங்கள் காண முடியும். எடுத்துக்காட்டாக தைரியமும், கோழைத்தனமும் ஆண்கள் மற்றும் பெண்களிடத்திலும் நீங்கள் காணலாம். அன்பும், மிகுந்த அக்கறையும் கொண்ட ஆண்களையும், அவ்வாறு இல்லாத பெண்களையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் நாம் சில குணங்களை ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரியவைகளாக வகைப்படுத்தி கூற முற்படுகின்றோம். ஆண்களின் உடலமைப்பும், பெண்கள் உடலமைப்பும் வேறுபாடு உடையவை. இதனால் தான் பெண்கள் குழந்தைகளை பெற்றெடுத்து, ஆரம்ப மாதங்களில் பாலூட்ட முடிகிறது. குழந்தைகளை குளிப்பாட்டுதல், துணிகளை துவைத்தல், உணவு தயாரித்தல், முதலியவை பெண்களால் மட்டும் செய்ய முடியும் என்று அர்த்தமாகாது. இவ்வேலைகளை ஆண்களும் செய்ய முடியும். பல இடங்களில் இவ்வகையான வேலைகளை மிகவும் திறமையுடன் செய்து வருகின்றனர்.

SCERT TELANGANA

பெண்களின் குணங்களும், அவர்கள் ஆற்றும் பங்கும் அவர்களுக்கு இயல்பாக உள்ள இயற்கைப் பண்புகள் அல்ல. பல நூற்றாண்டுகளாக சமுதாயம் அவர்களுக்கு என்று கொடுத்தவை ஆகும். நீண்ட காலமாக இப்பங்கை பெண்கள் ஆற்றும்படி நிர்பந்தப்படுத்தப்பட்டு வருவதால், இவற்றை இயற்கையான குணங்களாக கருதுகிறோம்.

பல நூற்றாண்டுகளாக ஆண்களுக்கு சாதகமான சமுதாயத்தில் வாழ்ந்து வருகிறோம். ஆண்கள் எல்லா வளங்கள் மீது கட்டுப்பாடும், விதிமுறைகளை இயற்றும் உரிமையும், பெற்றுள்ளனர். வரலாற்றை பரிசீலித்துப் பார்த்தால் பெரும்பாலான ஆட்சியாளர்கள், மதத்தலைவர்கள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் இயற்றுவோர் ஆண்களாகவே இருந்துள்ளனர். அவர்கள் விதிமுறைகள் இயற்றும் போது பெண்கள் ஆண்களுக்கு அடிபணிந்து தங்கள் பணிகளை செய்யும்படி உருவாக்கினர். ஆண்கள் தங்களுக்கு உரிய நிலம் மற்றும் கால்நடைகளைப் போன்று பெண்களையும் கட்டுப்படுத்தி வந்துள்ளனர்.

இவ்வாறாக, ஆண்கள், பெண்கள் இரு வகையான வேறுபாடுகள் உள்ளன. முதலாவது இயற்கையான உடல்ரீதியான வேறுபாடுகள் ஆகும். ஆனால்,

இவை பெண்களுக்கு எதிரான தாழ்வுகளை ஏற்படுத்தாது. இரண்டாவது வகை வேற்றுமை சமுதாயத்தால் உருவாக்கப்பட்டவை. இதில் ஆண்களுக்கு பெண்கள் கட்டுபட்டவர்கள்.

ஆண்கள் பெண்களை சமமாக நடத்துவது இல்லை. இவ்வாறாக சமத்துவமின்மை ஏற்பட வழிவகுக்கும் வேற்றுமைகளை சமுதாயத்தால் உருவான வேறுபாடுகள் (அ) ஆண்-பெண் இன வேறுபாடுகள் என்பர்.

### சிறுவர், சிறுமிகளாய் வளர்தல்

சிறுமிகளும், சிறுவர்களும் அவர்கள் பிறப்பு முதல் ஏற்றத்தாழ்வு எண்ணங்களுடன் வளர்க்கப்படுகின்றனர். சிறுவர்களும், சிறுமிகளும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர். என்பதை குறித்து சில வாக்கியங்கள் இங்கே தரப்பட்டுள்ளது. அவற்றை குறித்து உன் வகுப்பறையில் கலந்துரையாடு. அவை எந்தளவு உண்மையானவை என்பதை கண்டறியவும்.

- ஆண் குழந்தைகளின் பிறப்பு வீட்டில் உள்ளோரால் வரவேற்கப்பட்டு, கொண்டாடப்படுகிறது. பெண் குழந்தைகள் பிறந்தால் குடும்பத்திற்கு சுமையாக கருதப்படுகிறது.
- சிறுவர்கள் நோய்வாய்பட்டால் துவக்கத்திலேயே மருத்துவ சிகிச்சை பெறுகின்றனர். ஆனால் சிறுமிகளுக்கு நோய் ஏற்பட்டால் உரிய மருத்துவ சிகிச்சை பெறுவது இல்லை.
- சிறுவர்கள் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய தொழில் பற்றி திட்டமிடப்படுகிறது. ஆனால் சிறுமிகளுக்கு திருமணம் செய்துக் கொள்ளவும், குடும்ப தலைவியாக நிலைத்திட அறிவுறுத்து கின்றனர்.
- சிறுவர்கள் வெளியே செல்லவும், நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளவும், சுதந்திரமாக விளையாடவும் ஊக்குவிக்கப் படுகின்றனர். சிறுமிகளை வீட்டிலேயே இருந்தபடி வீட்டு வேலைகளை செய்யும்படி செய்கின்றனர்.
- சிறுவர்கள் துப்பாக்கி, கார், ட்ராக்குகள் போன்ற பொம்மைகளோடு விளையாட செய்கின்றனர். சிறுமிகளை வீடு, சமையலறை, வீட்டுச்சாமான்கள் போன்ற பொம்மைகளை கொண்டு விளையாடச் செய்கின்றனர்.
- சிறுவர்கள் எளிதாகநடந்து செல்ல, ஓட, மேலே ஏற ஏற்ற வகையான ஆடைகள் அணிகின்றனர். ஆனால் பெண்கள் அணியும் ஆடைகள் அவர்கள் உடல் முழுவதையும் மூடும்படியாக இருப்பதால் அவர்களின் நடமாட்டத்தை தடுக்கும் வகையில் உள்ளன.
- சிறுவர்களுக்கு முதலில் உணவு அளிக்கப்படுகிறது. சிறுமிகளுக்கு இறுதியில் எஞ்சியுள்ள உணவு அளிக்கப்படுகிறது.
- சிறுவர்கள் பள்ளிகளுக்குச் செல்லவும், படிக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆனால் சிறுமிகள் படித்திட பள்ளிகளுக்கு அனுப்பப்படுவது இல்லை (அ) படித்திட போதுமான நேரம் தரப்படுவது இல்லை.
- உயர் கல்வி படித்திட குறைந்த அளவு சிறுமிகளே அனுமதிக்கப்படுகின்றனர்.

SCERT TELANGANA

## குறைவான எண்ணிக்கையில் சிறுமிகள் மற்றும் பெண்கள்

இவ்வகையான எல்லா வேற்றுமைகளால் மிகவும் வருந்ததக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, நம் மக்கள் தொகையில் பெண்கள் விகிதம் நிலையாக குறைந்து வருகிறது. 1951 ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஆயிரம் ஆண்களுக்கும் 946 பெண்கள் இருந்தனர். 1981 ஆம் ஆண்டில் 934 ஆக குறைந்தது. அதன் பிறகு 2011ல் 940 ஆக உயர்ந்தது.

நம் மாநிலத்தில் உள்ள சூழ்நிலையை காண்போம். 1991 ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஆயிரம் ஆண்களுக்கு 969 பெண்கள் இருந்தனர். இந்நிலை 2011ல் 988 ஆக உயர்ந்தது. இதனால் நம் நாட்டில் ஆண்-பெண் விகிதத்தில் சிறந்த மாநிலங்களில் ஒன்றாக நம் மாநிலம் விளங்குகிறது. இருப்பினும் நம் மாநிலத்தில் எல்லா சூழ்நிலைகளும் நன்றாக உள்ளது என்பதல்ல பொருள். குழந்தைகள் எண்ணிக்கையில் ஆறு வயதுக்குள் உள்ளவர்களில் ஒவ்வொரு ஆயிரம் சிறுவர்களுக்கு இருக்க வேண்டிய சிறுமிகளின் எண்ணிக்கை விரைவாக குறைந்து வருகிறது. கீழ்காணும் அட்டவணை மூலம் இதை அறியலாம்.

| ஆண்டு | சிறுவர்கள் | சிறுமிகள் |
|---|---|---|
| 1991 | 1000 | 978 |
| 2001 | 1000 | 963 |
| 2011 | 1000 | 933 |

இதன் பொருள் என்னவென்றால், சிறுமிகளின் எண்ணிக்கை நிலை மேம்படவில்லை, மாறாக, குறைந்துக் கொண்டே வருகிறது. வேறுபாட்டு எண்ணம், உதாசீனம் போன்றவற்றில் இருந்து மிகக் குறைவான சிறுமிகள் விடுபட்டு உயிர் பிழைத்து வருகின்றனர்.

மருத்துவர்கள் கருத்துபடி சாதாரணமாக ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரம் பெண்கள் நம் மக்கள் தொகையில் உள்ளனர்.

ஆண்-பெண் விகிதாச்சாரத்தில் குறைவாக உள்ளது என்றால், சிறுமிகளும், பெண்களும் நம் நாட்டில் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியவில்லை என்றும், ஆண்களை விட பெண்கள் முன்னதாகவே இறந்து விடுகின்றனர் என்றும் அர்த்தமாகிறது. ஆனால் பெண்களின் விகிதம் ஏன் நிலையாக குறைந்து கொண்டே வருகிறது?

ஒரு காரணம் என்னவென்றால் பெண் குழந்தைகளை பிறக்க விடுவதில்லை, தாயின் கருவிலேயே கொல்லப்படுகின்றனர். தனியார் மருத்துவமனைகள் சட்டத்திற்கு புறம்பாக, தாய் கருவில் உள்ள குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை நிர்ணயிக்கும் பரிசோதனை செய்து வெளிப்படுத்துவதால் இது சாத்தியமாகிறது. இரண்டாவதாக, பெண் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் ஒரு மாத குழந்தையாக இருக்கும் போதே சரியான பராமரிப்பு இல்லாததால் இறக்கின்றனர். இதே காரணங்களால் அதிக எண்ணிக்கையில் சிறுமிகள் ஐந்து வயதிற்கு முன்பே மரணமடைகின்றனர். அவர்களுக்கு குறைவான உணவு தரப்படுவதால் பலவீனமாக வளர்ந்து, பல நோய்களுக்கு ஆளாகின்றனர். அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை கிடைக்காததால், இறக்க நேரிடுகிறது.

- உங்கள் பகுதியில் இவ்வாறான பழக்கங்கள் குறித்து பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை கேட்டறிந்துக்கொள். அது குறித்து அறிக்கை ஒன்றை தயாரித்து வகுப்பறையில் உள்ள சுவர் பத்திரிகையில் **(Wall Magazine)** பொருத்தி பார்வைக்கு வைத்திடுங்கள்.

### கல்வியறிவு நிலைகளில் உள்ள வேறுபாடுகள்

பள்ளிக்குச் சென்று எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்வதே நமது வாழ்வின் முக்கியமானதாகும். படம்16.2 படத்தை பார்க்கவும். இரண்டு நிறங்களில் கற்றோருடைய விகிதாச்சாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏழு வயது நிமப்பி எழுதப்படிக்க தெரிந்தோருடைய எண்ணிக்கையை இந்நிறங்கள் காட்டுகின்றன. பெண்களில் கற்றோருடன் ஒப்பிடும்போது ஆண்களில் கற்றோரின் எண்ணிக்கை தெலங்கானாவில் அதிகம். தெலங்கானாவில் 100 பெண்களில் 1991-ல் 28 பேர் மட்டும் கற்றோர் ஆகும். இது 2011-ல் 58ஆக

SCERT TELANGANA

உயர்ந்துள்ளது. இக்காலகட்டத்தில் ஆண்களின் கற்றோர் விகிதம் 52லிருந்து 75வரை உயர்ந்தது. ஆண்-பெண் கற்றோர் இடைவெளி குறைவதை நாம் காணலாம்.

இந்திய கல்வித் திட்டத்தில் ஆந்திர, தெலங்கானா மாணவர்கள் சுமார் 1.50 கோடி பேர் ஒரு லட்சம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கின்றனர். பள்ளியில் இடைநிற்றல் என்பது ஒரு பெரிய பிரச்சனையாகும். 30 ஆண்டுகளுக்கு முன்பு பள்ளியில் சேரும் 100 மாணவிகளில் 65 மாணவிகள் ஐந்தாம் வகுப்பை கூட முடிக்கமாட்டார்கள். 15 மாணவிகள் கூட மேல்நிலைக்கு கல்வியை முடிப்பது கிடையாது.




படம் 16.1 தெலங்கானாவின் எழுத்தறிவு நிலை (%)

பெண் கல்வி நிலை தாழ்ந்து இருப்பதும், மற்றொரு பாகுபாடு அம்சமாகும். பெண் குழந்தைகளை, கல்வி கற்றிட ஊக்கமளிப்பதில்லை. வீட்டிலேயே இருக்கசெய்செய்து, வீட்டு வேலைகள் செய்யவும், வயல்களிலும், கடைகளிலும் வேலை செய்ய வைக்கின்றனர். பள்ளிக்கு செல்லும் பெண்குழந்தகள் பள்ளியில் இருந்து திரும்பியவுடன் வீட்டு வேலைகள், செய்ய வேண்டி இருப்பதால் படித்திட மிக குறைந்த நேரம்தான் கிடைக்கின்றது. இவற்றையும் சமாளித்துக்கொண்டு கல்வி கற்றாலும், மேற்படிப்புகளில் அவர்கள் விரும்பும், அறிவியல், கணித பாடங்களை படித்திட ஊக்கமளிப்பதில்லை. அவை ஆண்கள் மட்டும் படிப்பதற்கு ஏற்றது என கருதப்படுகிறது.

இலக்கியம், வீட்டு பராமரிப்பு அறிவியல் (Home Science) படித்திட மட்டுமே அனுமதிக்கின்றனர், பள்ளிக்கூடங்களிலும் ஆண்-பெண் இனவேறபாடு காட்டப்படுகிறது. வீட்டு பராமரிப்பு அறிவியலை படிக்க ஆண்களை அனுமதிப்பதில்லை.

தற்போது நிலை மேம்பட்டுள்ளது. ஆனால், இன்னமும் 6ல் 1 பகுதி குழந்தைகள் 5ஆம் வகுப்பிற்கு பிறகு பள்ளிக்கு செல்வதை நிறுத்திக்கொள்கின்றனர். இவ்விசயத்தில் பையன்கள், சிறுமிகள் இடையே வேறுபாட்டை காணமுடியவில்லை.

- சிறுவர்களும், சிறுமிகளும் சேர்ந்து படித்திடும் பள்ளியில் படிப்பவர்களாக நீங்கள் இருந்தால், ஆண்-பெண் பாகுபாடு குறித்து ஒரு பட்டியல் தயாரிக்க முடியுமா?
- ஒவ்வொரு மாணவரும் பள்ளியைவிட்டு இடையில் நின்ற இருவரிடம் பேசி காரணத்தை வகுப்பறையில் கலந்துரையாடவும்.
- உனது ஊரில் கடந்தாண்டு பள்ளியை விட்டு இடையில் நின்ற மாணவியை கண்டறிந்து காரணத்தை கேட்டு, மீண்டும் பள்ளியில் சேர்க்க முயற்சி செய்யவும்.

**சொத்துரிமை :**

நம் நாட்டில் நிலம், தொழிற்சாலைகள் போன்ற பெரும்பாலான வளங்கள் ஆண்களின் பெயர்களிலேயே உள்ளன. பெற்றோரின் சொத்துக்கள் எல்லா குழந்தைகளுக்கும் (மகன்கள் மற்றும் மகள்கள்) சமமாக பங்கிடப்படவேண்டும். என்று சட்டம் எடுத்துரைக்கிறது.

மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் தெலங்கானா முன்னேற்றம் அடைந்துள்ளது. இதற்கு காரணம் 1980-ல் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். இதன்படி ஆண் பெண் இருவருக்கும் தந்தையின் சொத்தில் பங்குண்டு. ஆண் பெண் வேறுபாட்டை குறைக்க சட்டமியற்றிய முதல் மாநிலம் தெலங்கானாவாகும்.

**வேலை வாய்ப்பு**

வீட்டிற்கு வெளியே சென்றும் பணியாற்றுவதால் பெண்கள் சுயமாக வாழ வழிவகுக்கும். விவசாயம், சிறு வேலைகள் சிறுகடைகள் நடத்துதல் பண்ணைகளில் பணியாற்றுதல் போன்ற வேலைகளை தெலங்கானா பெண் தொழிலாளர்கள் செய்கின்றனர். இவ்வேலைகளை செய்தால் பெண்கள் மற்றவர்கள் மீது அவர்கள் ஆதாரப்பட வேண்டியதில்லை.

பெண் குழந்தைகள் குறைவான சத்துணவும், குறைவான கல்வியும் உடையவர்களாக வளர்க்கப்படுகின்றனர் என்பதை இதுவரை படித்து அறிந்துக் கொண்டோம். எனவே, அவர்கள் உரிய வேலை வாய்ப்புகள் மற்றும் ஊதியங்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு, நல்லபடிப்பறிவுக் கொண்ட பெண்களை அவர்களின் குடும்பத்தார் தொழில் ரீதியான வேலைகளை செய்திட அனுமதிப்பது இல்லை. ஏனெனில் அவர்கள் வீடுகளை விட்டு வெளியே செல்ல வேண்டி இருப்பது தான் காரணம். அவர்கள் பகுதி நேர வேலை (அ) குறைவான தேவை உள்ள வேலைகளை செய்திட அனுமதிக்கப்படுகின்றனர். தகுந்த கல்வித்



SCERT TELANGANA

தகுதியில்லாத பெரும்பாலான பெண்கள் வயல்களில் உடலுழைப்பு (அ) சுரங்கவேலை செய்திட வற்பு றுத்தப் படுகின்றனர். செல்வந்தரின் வீடுகளில் வீட்டு வேலைகள் செய்திட பயன்படுத்தப்படுகின்றனர்.

இவ்வகையான வேலைகள் முதுகெலும்பு உடையும் படியாகவும், மிகுந்த இளைப்பை உண்டாக்கும்படியாகவும் இருக்கிறன. ஆயினும் பெண்கள் கௌரவம், மதிப்பு மற்றும் பாதுகாப்பு குறைபாடாக இருந்தாலும் அனைத்தையும், எதிர்கொண்டு வாழ்கின்றனர். எல்லா நேரங்களிலும் அவமதிப்புகளை எதிர்கொள்கின்றனர். நமது நாட்டின் தலைநகரான டில்லியில் வீட்டு வேலை செய்திடும் தொழிலாளியான மாலினி என்ன சொல்கிறார் என்பதை படியுங்கள்

நான் முதன் முதலில் மூன்று அடுக்குமாடி வீட்டில் குடியிருந்த பணக்கார குடும்பத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அந்த வீட்டு எஜமானி எந்த ஒரு வேலையையும் உரக்க கத்தி வேலை செய்விப்பார். வீட்டை சுத்தம் செய்திட இரண்டு சிறுமிகள் இருந்தனர். என்னுடைய வேலை சமையலறையில் சமைப்பது. எங்களுடைய வேலை தினமும் அதிகாலை 5 மணிக்கு துவங்கும். காலை சிற்றுண்டியாக எங்களுக்கு இரண்டு பழைய சப்பாத்தியும், ஒரு கோப்பை தேநீரும் கிடைக்கும். அதிகப்படியாக மூன்றாவது சப்பாத்தி ஒரு நாளும் பெறவில்லை.

மாலையில் நான் உணவு சமைக்கும் போது வீட்டை சுத்தம் செய்யும் அவ்விரண்டு சிறுமிகள் மூன்றாவது சப்பாத்திக்காக கெஞ்சி கேட்பார்கள். நானும் அவர்களுக்கு ரகசியமாக செய்து கொடுப்பேன். எனக்கும் செய்து சாப்பிடுவேன். அவ்வீட்டு எஜமானியை கண்டு எனக்கு பயம் உண்டாகும். அத்துடன் கோபமும், அவமானமும் என்னுள் எற்படும். நாங்கள் நாள் முழுவதும் வேலை செய்வதில்லையா? சிறிதளவு மரியாதையுடன் நடத்தப்பட எங்களுக்கு தகுதி இல்லையா? என்றாள்.



*படம் 16.2 இந்தியாவின் ரயில் இஞ்சின் முதல் பெண் ஓட்டுநர் - சுரேகா யாதவ்.*

- இப்படிப்பட்டவர்கள் குறித்து உனக்கு தெரிந்தால் அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர்? என்னென்ன பிரச்சனைகளை அவர்கள் எதிர் கொள்கின்றனர்? அவர்கள் எவ்வளவு சம்பாதிக்கின்றனர்? என்பது குறித்து கலந்துரையாடு.
- மாலினி போன்றோர் ஒரு நாளைக்கு நூறு ரூபாயை விட குறைவாக சம்பாதிக்கின்றனர், ஆனால் பல மணி நேரங்கள் கடினமாக உழைக்கின்றனர். என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?
- பெண்களால் பொதுவாக மேற்கொள்ளப் படும் இதர வேலைகள் யாவை? அவர்களின் நிலைமை குறித்து உன் வகுப்பறையில் கலந்துரையாடு.

கடந்த சில பத்தாண்டுகளாக பெண்களுக்கான வேலைவாய்ப்பின் போக்கு படிப்படியாக மாறி வருகிறது. முன்பு ஆண்கள் மட்டுமே செய்து வந்த வேலைகளிலும் பல பெண்கள் உயர் கல்வி கற்று சேர்ந்து பணியாற்றி வருகின்றனர். தெலங்கானாவின் 1980-ன் ஒதுக்கீட்டு கொள்கையால் பல பெண்கள் கல்வி மற்றும் வேலைகளில் திறம்பட செயல்படுகின்றனர்.

தற்போது முன்னிலை வகிக்கும் விஞ்ஞானிகள், கணித மேதைகள், இராஜ தந்திரிகள் பொறியாளர்கள் பட்டியலில் பெண்களும் உள்ளனர். தற்போது காவல்துறை, ராணுவம், கப்பற்படை, விமானப்படை, போன்ற துறைகளிலும் பெண்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். பல பெண்கள் விமான ஓட்டுநர்களாகவும் பணிபுரிகின்றனர். இரயில் இஞ்சின் ஓட்டுநர்களும் தற்போது உள்ளனர். பெண்கள் போராடி உயர் கல்வி கற்று, ஆண்-பெண் இன பாகுபாடு என்ற ஒரு தலைபட்ச போக்கை உடைத்தெறிந்து முன்னேறியதால் இது சாத்தியமாயிற்று.

SCERT TELANGANA

**அங்கீகாரம் பெறாத பெண்களின் பணி**

பெண்களின் அன்றாட வாழ்க்கையை கவனித்தால், அவர்கள் எல்லா நேரமும் வேலை செய்து கொண்டிருப்பதை நாம் காண முடியும். ஆனால் அவர்கள் செய்யும் பெரும்பான்மையான வேலைகள் பிறரால் அங்கீகரிக்கப்படுவதில்லை. அவர்களின் வேலைகளுக்கு பணமும் செலுத்தப்படுவதில்லை. அவர்கள் கடினமாக உழைத்தாலும் யாருடைய கவனத்திற்கும் வராமல் மறைந்துள்ளன.

- கீழேதரப்பட்டுள்ள கட்டத்தில் வயலில் வேலை செய்யும் விவசாயிகளின் படத்தை வரைய முடியுமா? வரைந்த பிறகு அதை உன் ஆசிரியரிடம் காட்டுக.

- உங்களில் எத்தனை பேர் ஆண் விவசாயி படத்தை வரைந்தீர்கள்? பெண் விவசாயி படத்தை எத்தனை பேர் வரைந்தீர்கள்? ஆண் மற்றும் பெண் விவசாயி படத்தை வரைந்துள்ளீர்கள்?

விவசாயிகள் என்று கூறும் போது நாம் ஆண்களை மட்டும் நினைக்கிறோம். பெண்களை நினைப்பதில்லை. உண்மை நிலவரப்படி இந்தியாவில் வேலை செய்யும், பத்து பெண்களில், எட்டு நபர்கள் வயல்வெளிகளில் வேலை செய்கின்றனர். பெரும்பாலான விவசாய வேலைகள் பெண்களுக்கு முன்பதிவு செய்யப்படுகின்றன. நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல், வேர்க்கடலை பிடுங்குதல், பிரித்தெடுத்தல் போன்றவற்றை அவர்களே செய்கின்றனர். பெண்கள் இவ்வேலைகளோடு விவசாயத்தில் உள்ள பிற வேலைகளையும் செய்கின்றனர். பெரும்பாலான



*படம் 16.3 பலதரப்பட்ட பணிகள். ஆனால் நாம் இவற்றை செய்வதில் பெண்களின் பங்கு அதிகம் இருப்பதை எண்ணி இவை அவர்களின் இயற்கையான குணங்கள் என்று கருதுகிறோம்.*

விவசாய பண்ணைகள் பெண்களால் நிர்வகிக்கப் படுகின்றன. ஆண்கள் வேலைகளுக்காக தொழிற்சாலைகள் உள்ள நகரங்களுக்கு சென்று விடுகின்றனர்.

பல பெண்கள் தங்களின் சொந்தமான பண்ணைகளில் வேலை செய்கின்றனர். அதற்கு அவர்கள் ஊதியம் பெறுவதில்லை. பிறருடைய பண்ணைகளில் வேலை - செய்யும் பெண்கள் ஊதியம் பெறுகின்றனர் அவ்வூதியம் ஆண்கள் பெறுவதை விட குறைவாக உள்ளது.

- உனது வீட்டில் உனது தாய், சகோதரிகள் மற்றும் அண்ணி ஆகியோர் செய்யும் வேலைகளை பட்டியலிட முடியுமா? அவர்கள் எப்பொழுது எழுகிறார்கள்? எப்பொழுது உண்கிறார்கள்? எப்பொழுது ஓய்வெடுக்கிறார்கள்? தூங்குகிறார்கள்?

SCERT TELANGANA

**சமூகத்தில் தற்போது மாற்றங்கள் நிகழ்ந்து வருகிறது :**

உங்கள் வீட்டில் பெண்கள் செய்யும் வேலைகள் குறித்து நீங்கள் ஆராய்ந்து கவனித்தால் வீட்டை நிர்வகித்து செல்ல கடினமான வேலைகள் அடங்கியுள்ளது என்பதை உணர்வீர்கள். பெண்கள் செய்திடும் வேலைகளுக்கு பணம் செலுத்த வேண்டி இருந்தால் என்ன நடக்கும் என்பதை கற்பனை செய்துப்பாருங்கள்.

சுத்தம் செய்தல், உணவு சமைத்தல், ஊறுகாய் தயாரித்தல், குழந்தைகளை கவனித்து கொள்ளுதல், குழந்தைகளுக்கு கற்பித்தல், நோயாளிகளுக்கு சேவை செய்தல், ஆடைகள் தைத்தல், நீர் நிரப்புதல், மளிகை சாமான்கள் கொள்முதல் செய்தல் போன்றவை) ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டி இருக்கும்?

உண்மை என்னவென்றால், இவ்வேலை களுக்காக அவர்களுக்கு பணம் செலுத்தப்படுவது இல்லை. அதற்கு மாறாக, வீட்டு வேலைகளை உரிய நேரத்தில் செய்வதில்லை என்றும், பிறரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு சமைப்பதில்லை என்றும் திட்டப்படுகின்றனர். மற்றொரு பக்கம் பார்த்தால், ஆண்கள் செய்யும் எல்லா வேலைகளுக்கும் பணம் செலுத்தப்படுகிறது. பணத்தின் மீது அவர்களுக்கு முழு கட்டுப்பாடு உள்ளது. ஆண்கள் தங்கள் விருப்பப்படி பணத்தை செலவு செய்கின்றனர். பெண்கள் தங்கள் வீட்டில் செய்யும் வேலைகளை கொண்டு அவர்களை பொருளாதார ரீதியாக சுயசார்பு பெற்று தர எவ்வாறு முடியும் என்பதை குறித்து உன் வகுப்பறையில் கலந்துரையாடு.

**முக்கியச் சொற்கள் (Key Words)**

வேலைவாய்ப்பு
சொத்து உரிமை
கல்வி அறிவு
ஆண் - பெண் விகிதம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. இயற்கையாகவே சிறுவர்களை விட சிறுமிகள் பலவீனமானவர்கள் என்ற கருத்து சரியானதா? உன் காரணத்தைக் கூறுக.(AS1)
2. நீயும், உன் சகோதரன் (அ) சகோதரிகளும் செய்திடும் வீட்டு வேலைகளை பட்டியலிடுக.(AS3)
3. உனக்கு தெரிந்த, வேலை செய்யும் பெண்கள் பத்து பேர்களின் பட்டியலை தயார் செய்திடு, அவர்கள் என்ன வேலை செய்கின்றனர்? எவ்வளவு பணம் சம்பாதிக்கின்றனர் என்ற விவரங்களை கண்டறியவும்.(AS3)
4. இருபது ஆண்டுகளுக்கு முன் பள்ளிக்கு சென்று படித்த வயதான பெண் உன் வீட்டில் இருந்தால், அவர்களின் பள்ளிப் படிப்பு குறித்த அனுபவங்களை கேட்டுத் தெரிந்துக்கொள். அவற்றை உன்னுடைய சொந்த அனுபவத்தோடு ஒப்பிடுக.(AS4)
5. பெற்றோரின் சொத்துக்களில் மகள்களுக்கு சமமான பங்கு தரப்படுவது இல்லை, இதன் காரணம் எதுவாக இருக்கும் என்று நீ கருதுகிறாய்?(AS4)
6. உங்கள் பகுதியின் சுய உதவி குழுக்கள் பெண்கள் சுய சார்பையும், மதிப்பையும் பெற எவ்வாறு உதவுகின்றன என்பதை கண்டறியவும்.(AS6)
7. பக்கம் 136ல் முதல் பத்தியை படித்து கீழ்காணும் வினாவிற்கு விடையளி.(AS2)
மாணவர்களை விட மாணவியர் பலவீனமாணவர்கள் என்று கூறுவது ஏற்புடையதா? இது குறித்து உங்களுடைய கருத்துக்களை எழுதவும்.

**செயல்திட்டம் (Project work) :**

1. உங்கள் பள்ளி பதிவேடுகளில் இருந்து 1,5,8,10 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் சேர்ந்து படித்த மாணவிகள் எத்தனை பேர் என்பதை விவரம் சேகரி. சிறுமிகளை விட சிறுவர்கள் தான் அதிக எண்ணிக்கையில் பள்ளிப்படிப்பை முடிக்கின்றனர் என்ற கருத்துக்கு ஆதரவாக உள்ளதா?

2, பிரபலமான பத்திரிக்கை மூலம் முன்பு ஆண்கள் மட்டும் செய்ய கூடிய வேலைகள் என்று கருதப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களின் பெயர்களை கண்டறியவும், அவர்களின் வாழ்க்கை மற்றும் போராட்டங்கள் குறித்து விவரிக்கும் படத் தொகுப்பை தயார் செய்திடு.

3. உங்கள் கிராம பகுதியில் உள்ள பெற்றோர்களிடம் கலந்தாலோசித்து பள்ளியிலிருந்து இடைநின்றவர்களின் தகவலை சேகரி.

| வ.எண் | மாணவனின் பெயர் | சமூக பிரிவு SC/ST/BC/OC/ Minority | இடைநின்ற வகுப்பு | இடைநின்றதன் காரணம் |
|---|---|---|---|---|
| | | | | |

SCERT TELANGANA

அத்தியாயம் 17

# பண்டைக் காலங்களில் மதம் மற்றும் சமுதாயம்

**இந்தியா பல்வேறு மதங்களை கொண்ட நாடு, இந்திய மக்கள் ஆண் மற்றும் பெண் தெய்வங்களை பல வழிகளில் வழிபடுகின்றனர். மக்களில் சிலர் தெய்வச் சிலைக்கு மலர்கள் அணிவித்து வழிபடுகின்றனர். வேறு சிலர் யாகங்கள் செய்கின்றனர். சிலர் புனித மந்திரங்களை அமைதியாக மனதில் உச்சரிக்கின்றனர். சிலர் சிலை வழிபாட்டை செய்வதில்லை. சிலர் கடவுளை வழிபடுவதே இல்லை. இந்த அத்தியாயத்தில் பண்டையக் காலத்தில் இந்திய மக்களின் மத பழக்கங்களையும், மத நம்பிக்கைளையும் குறித்து தெரிந்து கொள்வோம்.**

SCERT TELANGANA

## வேட்டையாடுவோர் - உணவு சேகரிப்போர் :

துவக்க கால வேட்டையாடுவோர் உணவு சேகரிப்போர் குறித்து ஏற்கனவே படித்திருப்பீர்கள். அவர்கள் மத நம்பிக்கை குறித்து அவர்களது ஓவியங்கள் மற்றும் கல்லறைகளின் வாயிலாக சிறிதளவு நாம் தெரிந்து கொண்டுள்ளோம். தற்காலத்தில் வாழ்ந்து வரும் செஞ்சுக்கள் போன்ற வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனத்தவரின் மதவழிபாட்டை ஆராய்ந்து அறிவதன் மூலம், துவக்ககால வேட்டையாடுவோர், உணவு சேகரிப்போர் மத நம்பிக்கைகளை கற்பனை செய்து அறிய முயற்சிக்கவும்.

- அம்மக்கள் எதற்காக இறைவனை வணங்கி இருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? அவர்கள் யாரை வணங்கியிருப்பார்கள் என நீ நினைக்கின்றாய்?

வேட்டையாடி – உணவு சேகரிப்போரின் சமய வழிபாட்டில் ஓவியம் வரைதல் மற்றும் நடனமாடுதல் முக்கிய பாகங்களாக இருந்துள்ளன என தோன்றுகிறது. நல்ல வேட்டையை தரும் என்ற நம்பிக்கையில் அவர்கள் வேட்டையாடும் காட்சியை ஓவியம் வரைதல் (அ) வேட்டையாடுதலை நடனமாடி காட்டுதல் போன்றவற்றை செய்திருக்கலாம். என்று தோன்றுகிறது.

சில சமயங்களில் அவர்கள் விலங்குகளை போன்று ஆடை அணிந்தும், முகமூடிகள் அணிந்தும் நடனமாடியிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் கைக்கோர்த்தும் கைக் கோர்த்தும் நடனமாடியுள்ளனர். காடுகளும், காட்டு விலங்குகளும் புனிதமானவை எனவும், அவற்றை வழிபாடு செய்ய வேண்டும் எனவும், வேட்டையாடி – உணவு சேகரிக்கும் அக்கால இனத்தவர்கள் நம்பினர். தேவைபடும் நேரங்கள் தவிர மற்றைய சமயங்களில் விலங்குகளை கொல்லக்கூடாது என்ற கட்டுப்பாட்டை கொண்டிருந்தனர். அம்மக்கள் பல்வேறு விலங்குகளின் சித்திரங்களைச் சுவர்களின் மீது வரைந்து வழிபட்டனர்.



*படம் 17.1 முகமூடி நடனம்*

படத்தில் காணும் இந்நடனக்காரரின் தலைப்பாகை, தோள்கள் மீதுள்ள அலங்காரம், கையில் உள்ள நீண்ட கோல் முதலியவற்றை பாருங்கள்.



*படம் 17.1 பிம்பிகா குகை சுவரில் வரையபட்டுள்ள காட்டுப்பன்றியின் சித்திரம்*

துவக்கக் கால வேட்டையாடிகள் இறந்தவர்கள் உடலோடு, சிலபொருட்களையும் சேர்த்து புதைத்திருக்கின்றனர் என்பதை தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் நமக்கு காட்டுகின்றன. மரணத்திற்கு பிறகும் வாழ்க்கை இருக்கிறது என்று அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே அவர்கள் இறந்த நபர்களின் மரணத்திற்கு பின்பு உள்ள வாழ்க்கைக்கு தேவையான ஏற்பாடுகள் செய்தனர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரியபுராணம் என்ற தமிழ் நூல் வேட்டையாடி உணவு சேகரிப்போரின் மத வழிபாட்டு வழக்கங்களை வர்ணிக்கிறது. பிரபலமான கதையான பக்த கண்ணப்பன் கதையை விவரிக்கும் போது, ஸ்ரீகாளஹஸ்தி அருகே வாழ்ந்து வந்த வேட்டையாடி - உணவு சேகரிப்போர் குறித்து வர்ணிக்கிறது. கண்ணப்பர் பூசாரியாக செயல்பட்டு சிவபெருமானுக்கு நைவேத்தியமாக மாமிசம், தேன், பழங்கள் மற்றும் மலர்களை படைத்தார் என தெரிவிக்கிறது.

நல்லமலை பகுதியின் சென்சுக்கள் இனத்தை சேர்ந்த பழங்குடியினர் இப்போதும் வன தெய்வமான காரெல மைசம்மா (அ) கங்கம்மாவுக்கு நிவேதனங்கள் படைத்தும், நடனமாடியும் வழிபாட்டு வாழ்கின்றனர். ஸ்ரீ சைலத்தில் உள்ள மல்லய்யாவையும், அஹோபிலத்தில் உள்ள நரசிம்மனையும், வழிபாடு செய்கின்றனர். சென்சு இனத்தைச் சேர்ந்த பெண்களை இக்கடவுள்கள் மணந்து கொண்டதாகவும், எனவே அவர்கள் தங்களுடைய மருமகன்கள் என்று இம்மக்கள் நம்புகின்றனர்.



*படம் : 17.2 சென்சு பழங்குடி இன மக்களின் நடனம்*

- துவக்க கால விவசாயிகள் மற்றும் மேய்ப்பர்களின் சமய வழிபாட்டில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்று நீ நினைக்கின்றாய்?

**துவக்கக்கால விவசாயிகள் மற்றும் மேய்ப்பர்கள் :**

தொல்பொருள் ஆராய்ச்சிகள் பண்டைய காலத்தில் அம்மனை வழிபட்டனர் என்பதை காட்டுகிறது. அந்த தெய்வத்தின் ஆசியாலேயே பயிர்களும், வளர்ப்பு விலங்குகளும் நல்லவகையில் பயன் தருகின்றன என நம்புகின்றனர். அம்மனை சிறு உருவங்களாக கல்-லும், மரத்திலும், செடிகளிலும் உருவாக்கி வழிபடுகின்றனர்.



*17.3 மெஹர்கார் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட சுட்ட களிமண்ணால் ஆன பெண் தெய்வத்தின் உருவம் ( 5000 ஆண்டுகள் பழமையானது)*

துவக்ககாலத்தை சேர்ந்த, தக்காண பகுதியில் வாழ்ந்த மேய்ப்பர்கள் சாம்பல் குன்றுகளை விட்டுச் சென்றுள்ளனர். சில தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் இவை அக்காலத்து மக்கள் பருவகாலங்களில் போது நடத்திய தீபோற்சவ சடங்குகளின் எஞ்சியவை என நம்புகின்றனர். இந்த உற்சவங்கள் தற்போது மக்கள் கொண்டாடிடும் ஹோலி, தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகள் போன்றவை ஆகும்.

SCERT TELANGANA



*படம் 17.4 பாறைகள் மீது செதுக்கப்பட்ட விலங்குகளின் உருவங்கள்-மஸ்கி. (4000 ஆண்டுகள் பழமையானது)*

இந்தியாவில் ஆடு மேய்ப்பவர்கள் பல்வேறு பகுதிகளில் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மஹாராஷ்டிராவில் தங்கர் என்றும், கர்நாடகா குருபர்கள் எனவும், தெலங்கானாவில் குருமாக்கள், கொல்லர்கள், யாதவர்கள் எனவும் அழைக்கப் படுகின்றனர், இவர்கள் சிறப்பு தெய்வங்கள் சிலவற்றை வழிபாடு செய்கின்றனர். மஹாராஷ்டிராவில் விதோபா என்னும் தெய்வத்தையும், ஆந்திரபிரதேசம், தெலங்கானா மற்றும் கர்நாடகாவில் ரேணுகா, எல்லம்மா, மைசம்மா, போச்சம்மா போன்ற தெய்வங்களையும் வணங்குகின்றனர். விவசாயிகள் விலங்குகளை வளர்க்கின்றனர். இவர்களுக்கு ஆடு மேய்ப்பவர்களுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது. எனவே, இவ்விரு பிரிவினரும் ஒரே மாதிரியான கடவுள்களை வணங்குகின்றனர் இவர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு கிராமத்தின் குறிப்பிட்ட மூலை பகுதியில் சிறு கோவில்கள் கட்டி வழிபடும் முறை பொதுவாக காணப்படுகிறது. சிறப்பு சந்தர்பங்களில் திருவிழாக்கள் நிர்வகிக்கப்படுகிறது. அவற்றில் எருமைகள், ஆடுகள், சேவல்கள் போன்றவற்றை பலியிடுவர். சமைத்த சாதத்தை நைவேத்தியமாக படைக்கின்றனர் இச்சமுதாயத்தை சேர்ந்த மக்கள் அனைவரும் இவ்வழிபாட்டை செய்கின்றனர். இவர்கள் வழக்கமாக நல்ல அறுவடை பெற, நோய்கள் **ஏற்படாமல் காத்திட, குழந்தைகளின் நலம் குறித்தும், தெய்வங்களை பிரார்த்தனை செய்கின்றனர்.**

**நம் இந்திய மக்கள் அரசமரம், வேப்பமரம், ஆலமரம், துளசி செடி போன்றவற்றை வழிபட்டு வருகின்றனர். பண்டைக் காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் மீது அரசமர இலைகளின் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. மக்கள் மரங்களுக்கு சிறந்த மதிப்பு கொடுத்து வழிபட்டுள்ளனர் என்பதை குறிக்கும் வகையில் உள்ளன.**



*படம் 17.5 ஆப்கானிஸ்தானில் முண்டிகாக் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட வண்ணம் தீட்டப்பட்ட மண்பாண்டங்கள் 5000 ஆண்டுகள் பழமையானது.*

பல்வேறு விவசாய சமூகத்தினர் யானைகள், புலிகள், பாம்புகள், குரங்குகள், போன்ற விலங்குகளையும் வழிபடுகின்றனர். இவ்வகை வழிபாட்டின் துவக்கம் மிகவும் பண்டைக்காலம் தொட்டே இருந்தது என நம்பப்படுகிறது.

## சிந்து சமவெளி நாகரீக காலத்தில் மதம்

4600 ஆண்டுகளுக்கு முன்பு, நம் துணைக் கண்டத்தின் வட மேற்கு பகுதியில், சிந்து நதியின் சமவெளிப் பகுதியில், பல நகரங்கள் தோன்றின. இந்நகரங்கள் 900 ஆண்டுகள் நீடித்திருந்து பின்பு மறைந்தன. இதை ஹரப்பா நாகரீகம் என்றும் அழைப்பர். (தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் முதலில் அகழ்வு செய்தஇடம் ஹரப்பா) இந்த நகரங்கள் குயவர்கள், தச்சர்கள், கருமணிகள் தயாரிப்போர், தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் தயாரிப்போர், நெசவாளிகள், செம்பு பாத்திரங்கள் செய்வோர், வீடு கட்டுவோர் போன்ற கைவினைப் பொருட்கள் தயாரிப்போர் வணிகர்கள், நிர்வாகம் செய்வோர், ஆட்சியாளர், போன்றோரை கொண்டிருந்தது. அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டவற்றில் குளிக்கும் குளங்கள், நெற்களஞ்சியங்கள், பொது கட்டிடங்கள், சாலைகள், கழிவுநீர் கால்வாய்கள், கிடங்குகள் மற்றும் பொதுமக்கள் வாழ்விடங்கள் இருந்தன. இருப்பினும் இதுவரை பெரிய கோவில் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை. அம்மனை கொண்ட வரைபடங்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்நாகரீக மக்கள் அரசமரம் உள்பட பலமரங்களை புனிதமாக கருதி வழிபட்டனர் எனவும் சில விலங்குகளையும் வழிபட்டனர் எனவும் தெரிகிறது. ஆண் கடவுள்களின் சித்திரங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



SCERT TELANGANA

- **கீழ்காணும் படத்தை கவனமாக பாருங்கள் அது குறித்து விவரி. இது உனக்குத் தெரிந்த கடவுளை ஒத்திருக்கிறதா?**



*படம் 17.6 ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட ஆண் கடவுளின் படம்*



*படம் 17.7 ஹரப்பா நாகரீக காலத்து பெண் தெய்வம்*

சிலர் இது பிற்காலத்தில் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் வணங்கப்பட்ட சிவன் கடவுளாக இருக்கும் என்று நம்புகின்றனர். இதர சித்திரங்களில் இருந்து தெரிவது என்னவென்றால், சிந்து சமவெளி மக்கள் விழாக்காலங்களில் தங்கள் கடவுள்களுக்கு கௌரவம் செலுத்தும் வகையில் கொடிகளுடன் ஊர்வலங்கள் நடத்தி உள்ளது தெரிகிறது.

## வேதங்களின் மதம்

இந்திய துணைக் கண்டத்தின் துவக்க காலத்தைச் சேர்ந்த அழியாது நீடித்துள்ள இலக்கிய படைப்புகள் வேதங்கள் ஆகும். வேதங்கள் நான்கு வகைப்படும். அவை ரிக்வேதம், சாமவேதம், யஜுர்வேதம், மற்றும் அதர்வண வேதம் முதலியவை ஆகும். இவற்றில் மிகப்பழமையானது ரிக்வேதம் இது 3500 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது. வேதங்கள் ரிஷிகளால் எழுதப்பட்டன. இதில் மந்திரங்கள் மற்றும் நல்வாழ்விற்காக பிரார்த்தனைகள் இடம் பெற்றுள்ளன.

இம்மந்திரங்கள் பல்வேறு ஆண்-பெண் கடவுள்களை புகழ்ந்து பாடுகின்றன. மூன்று தெய்வங்கள் முக்கியமானவை ஆகும். நெருப்புக் கடவுளை அக்னி தேவன், வீரர்களின் கடவுளை இந்திரன் மற்றும் சோமா என்னும் தாவரம். இதிலிருந்து சிறப்பு பானம் தயாரிக்கப்படுகிறது. மதகுருக்கள் மாணவர்களுக்கு வேதங்களை மனப்பாடம் செய்வித்தனர். ஒவ்வொரு எழுத்தையும், சொல்லையும், வாக்கியத்தையும், சிறிது சிறிதாக மிகுந்த கவனத்துடன் மனப்பாடம் செய்வித்தனர். பெரும்பாலான துதிப்பாடல்களை ஆண்கள் தொகுத்தும் கற்பித்தும் மற்றும் பயின்றும் வந்துள்ளனர். சிலவற்றை பெண்கள் தொகுத்துள்ளனர்.

வேதமந்திரங்கள் யாகங்கள் செய்யப்பட்ட போதும், அக்னிக்கு காணிக்கைகள் தரப்படும் போதும் ஓதப்பட்டன. நாம் ஒரு வேத துதிப்பாடலை பாடி அது எதற்காக பாடப்பட்டது என்பதை அறிய முயற்சிப்போம்.

### இந்திரனுக்கு பிரார்த்தனை

இந்திரனே, அருள் கூர்ந்து வந்து எங்களது காணிக்கைகளை ஏற்று கொள்ளுங்கள், வேடன் தனக்கு தேவையான இரையைத் தேடி நகர்ந்து முன்னேறிச் செல்வதைப் போல் நாங்களும் செல்வத்தை தேடி போருக்குச் சென்று கொண்டிருக்கிறோம்.

இந்திரனே, தயவு செய்து போரில் வெற்றி பெற எங்களுக்கு உதவுங்கள், ஓ, இந்திரனே, அளவில்லாத செல்வத்தை எங்களுக்கு கொடுத்திடுங்கள், நூற்றுக்கணக்கான பசுக்களை நாங்கள் பெறுமாறு அருள்பாலித்து எங்கள் விருப்பங்களை நிறைவேற்றுங்கள்.

### விசுவாமித்தரும் நதிகளும் :

விசுவாமித்திரர் : நதிகளே, மலைகள் மீதிருந்து, வேகமாக பாய்ந்தோடும் இருகுதிரைகளைப் போல்,

SCERT TELANGANA

மின்னுகின்ற இரு பசுக்கள் அன்புடன் நாவினால் கன்றுகளை தடவுவதைப் போல், கீழ் நோக்கி இறங்குங்கள்.

இந்திரனின் சக்தியால் நீங்கள் ரதங்கள் போல் கடலை நோக்கி பாய்ந்தோடுங்கள். நீங்கள் நீரால் நிறைந்துள்ளீர்கள் மற்றும் ஒன்றோடு ஒன்று ஐக்கியமாக விரும்புகிறீர்கள்.

***நதிகள் :*** நீரால் நிறைந்துள்ள நாங்கள் தெய்வங்கள் எங்களுக்காக ஏற்படுத்திய பாதையில் நகர்ந்து சென்று கொண்டே இருப்போம். ஒரு முறை நாங்கள் பாய்ந்தோட துவங்கிவிட்டால், எங்களை நிறுத்த முடியாது. ஓ, முனிவரே! நீங்கள் ஏன் எங்களை வணங்குகிறீர்கள்.

***விசுவாமித்திரர் :*** சகோதரிகளே! தயவு செய்து நான் சொல்வதை கேளுங்கள், வெகுதொலைவில் இருந்து பாடகர்தன் ரதங்கள் மற்றும் வண்டிகளுடன் வந்துள்ளார். உங்களின் நீரோட்டம் வண்டிகளின் அச்சாணிகளை தாண்டாமல் செய்தால் நாங்கள் பாதுகாப்பாக கடந்து செல்ல முடியும்.

***நதிகள் :*** நாங்கள் உங்களுடைய பிரார்த்தனை ஏற்று கொண்டோம். நீங்கள் அனைவரும் பாதுகாப்பாக எங்களை கடந்து செல்லலாம்.

- மேற்கண்ட இரண்டு துதிப்பாடல்கள் எவர்களை நோக்கி பாடப்பட்டது?
- முனிவர்கள் கடவுள்களுக்கு காணிக்கையாக எதை சமர்ப்பித்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- அவர்கள் எதற்காக பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர்?
- இவர்கள் வேட்டையாடி – சேகரிப்போர் (அ) கால்நடை மேய்ப்பவர் (அ) கிராமங்கள் மற்றும் நகரங்களில் வாழ்பவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ரிக்வேதத்தில் கால்நடைகளுக்காகவும் குழந்தைகளுக்காகவும் (குறிப்பாக ஆண் குழந்தைக்காக) குதிரைகளுக்காகவும், பல்வேறு பிரார்த்தனைகள் காணப்படுகின்றன. வேதங்கள் குறித்து ஆராய்ச்சி செய்யும் வரலாற்று ஆசிரியர்கள் இவ்வர்ணனைகளை கொண்டு, வேதகால மக்கள் பசுக்கள் மற்றும் குதிரைகளை முக்கியமாக வளர்த்துள்ளனர் என்றும், அவர்கள் இந்தியாவின் வட மேற்கு பகுதியில் இந்துகுஷ் மலைகளுக்கும், யமுனை நதிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் வாழ்ந்தனர்.

வேதகால மக்கள் சிறு கிராமங்களிலும், மலைவாழ் மக்களிடையேயும் ஒரு தலைவனைக் கொண்டு வசித்தனர். இவர்கள் பிராமணர்கள் எனும் பூசாரி இன மக்களை மந்திரங்கள் ஓதவும், ப-யிடவும் வைத்திருந்தனர். மத குருக்களுக்கு பழங்குடி இன தலைவன் மற்றும் பொது மக்கள் அன்பளிப்புகளை வழங்கினர். இப்பழங்குடி இனத்தவர்கள் பசுக்கள் மற்றும் புல்வெளிகள் மற்றும் நீர் வளங்கள் மீது தங்கள் கட்டுப்பாட்டை நிலைநிறுத்த ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். கால்நடைகளை கைப்பற்ற நடத்தப்பட்ட யுத்தங்களில் சண்டையிட குதிரைகள் பூட்டப்பட்ட ரதங்கள் பயன்படுத்தப்பட்டன.

சில நூறு ஆண்டுகள் கழித்து இப்பழங்குடி இன மக்கள் கங்கை மற்றும் யமுனை நதிக்கரைகளில் கிராமங்கள் அமைத்து குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். நெல் மற்றும் கோதுமையை பயிர் செய்ய துவங்கினர். இக்காலகட்டத்தில் ஜனபதங்கள் நிறுவப்பட்டன. பழங்குடி இன தலைவர்கள் மன்னர்களாக அதிகாரத்தை கைப்பற்ற முயற்சித்தனர். யஜுர்வேதம் மற்றும் அதர்வண வேதங்களில் வேத சுலோகங்கள், மந்திரங்கள் கோர்த்து அமைக்கப்பட்டன. அவை மிகவும் விவரமான மத சடங்குகளை வர்ணிக்கின்றன. குறிப்பாக தீ யாகங்கள் பல வாரங்கள் மாதங்கள் நீடித்தன. அதிக அளவு செல்வமும், விலங்குகளும், செலவழிக்கப்பட்டன. இந்த வேத மந்திர துதிப்பாடல்களின் போது மன்னர்கள் தங்கள் இனத்தைச் சேர்ந்த மக்கள் மீது உறுதியான கட்டுபடுத்தும் அதிகாரம் பெறவும், நல்ல பயிர் விளைச்சல் மற்றும் போர்களில் வெற்றி பெறவும், கடவுள்களை பிரார்த்தனை செய்த வதை விவரிக்கிறது.

இக்காலத்தில் சமுதாயத்தில் பல்வேறு பணிகளை செய்வதற்கான தேவை இருந்ததால் அதை வர்ணங்களாக பிரிக்கும் எண்ணம் எழுந்ததை நாம் காண்கிறோம்.

பிராமணர்கள் உயர்ந்த சாதியாக கருதப்பட்டனர். இவர்கள் யாகங்களை நடத்திடவும், வேதங்களை பாராயணம் செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இவர்களுக்கு அடுத்ததாக சத்திரியர்கள் இருந்தனர். அவர்கள் ஆட்சி செய்யவும் மக்களை பாதுகாக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. அடுத்த நிலையிலிருந்த வைசியர்கள் கால்நடைகளை வளர்த்தனர். வயல்களை உழுது வந்தனர். அவர்கள் பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் பரிசுகளையும் காணிக்கைகளையும் அளித்தனர். இறுதியாக பின்வேத காலத்திற்குள் சூத்திரர்கள் ஒரு தனிப்பட்ட பிரிவாக (வர்ணம்) உருவெடுத்தனர். அவர்கள் நான்காம் வர்ணத்தினராவர். அவர்கள் விவசாயம், தச்சு வேலை, பானை புனைதல் மற்றும் பல தொழில்கள் செய்தனர். அதே நேரத்தில்

SCERT TELANGANA

படம் 17.8 வேதகால நாகரீக மக்களின் குடியேற்றங்களை காட்டும் இந்திய வரைபடம்



ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே உழைப்பு பிரிவினையும் ஏற்பட்டது. இந்த எண்ணங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

### இறந்த முன்னோரை வழிபடுதல் – தக்காணப் பகுதியின் மெகாலித்கள்

இறந்தோரை அடக்கம் செய்த இடத்தைச் சுற்று வட்ட வடிவில் அடுக்கி வைக்கப்பட்ட கற்பாறைகள் மெகாலித்கள் எனப்படுகின்றன. மெகாலித்கள் என்றால் பெரிய கற்கள் என்ற அர்த்தமும் உள்ளது. இவை அக்கால மக்களால் மிக கவனமாக அமர்த்தப்பட்டுள்ளன. இடுகாடு என்பதை குறித்துக் காட்டும் வகையில் இவை அமைத்திடும் பழக்கம் 3000 ஆண்டுகளுக்கு முன் துவங்கியது. தக்காண பகுதி, தென் இந்தியா, வட கிழக்கு பகுதி மற்றும் காஷ்மீர் போன்ற பகுதிகளில் நடைமுறையில் இருந்தன.

சில மெகாலித்கள் பூமியின் மேற்பகுதியிலும், பல மெகாலித்கள் பூமிக்கு அடிப்பகுதியிலும் காணப்படுகின்றன. வட்ட வடிவில் அடுக்கப்பட்ட கற்பாறைகள் (அ) நிலத்தின் மீது நிற்க வைக்கப்பட்ட ஒரு பெரிய கல் அமைப்புகளை சில இடங்களில் தொல் பொருள் அகழ்வு ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர். இவை நமக்கு உடல் புதைக்கப்பட்ட இடங்கள் என்பதை காட்டும் அடையாள சின்னங்கள் ஆகும் சில சமயங்களில் மெகாலித்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட எலும்பு கூடுகள் காணப்படுகின்றன. இவை ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடம் என்பதை காட்டுகின்றன. ஒரே சமயத்தில் என்றில்லாமல், அவ்வப்போது குடும்ப உறுப்பினர்கள் இறந்த சமயங்களில் அதே இடத்தில், அதே கல்லறையில் அடக்கம் செய்துள்ளனர்.

இவ்வகையான புதை குழிகள் அனைத்தும் சில பொதுவான அம்சங்களை கொண்டுள்ளன. பொதுவாக இறந்தவர்களின் உடல்கள் கறுப்பு மற்றும் சிவப்பு வண்ணத்தாலான தனி வேலைப்பாடுகளுடன் கூடிய பானைகளோடு சேர்த்து அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இவற்றில் இரும்பாலான கருவிகளும், ஆயுதங்களும்,

SCERT TELANGANA

சிலவற்றில் குதிரைகளின் எலும்புக்கூடுகள், குதிரை தொடர்பான உபகரணங்கள் கற்கள் மற்றும் தங்கத்தாலான ஆபரணங்கள் போன்றவையும் காணப்பட்டன.

இத்துணைக் கண்டத்தில் அதிக அளவில் இரும்புக் கருவிகளை பயன்படுத்திய மக்களில் இவர்கள் முதலிடம் வகிக்கின்றனர். ஏரி, நீர்பாசனம் மூலம் விவசாயம் செய்து நெற்பயிரை விளைத்தனர். தங்கள் இனத்தின் இறந்த முன்னோரை வணங்குதல் முக்கியமாக கருதினர். அந்நோக்கத்திற்காக இம்மெகாலித் நினைவிடங்கள் (அ) கல்லறைகள் கட்டினர்.

- உங்கள் குடும்பம் இறந்த முன்னோரை வழிபட்டு (அ) நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துகிறதா? அவ்வாறு வழிபடும் முன்னோர்களின் பெயர்களை கண்டறியவும். (ஆண் மற்றும் பெண் அது குறித்து உன் வகுப்பில் எடுத்துரைத்து பகிர்ந்து கொள்



(a) எலேஸ்வரம், நல்கொண்டா



படம் 17.9(c) மெகாலித் (புதைக்கப்படும்) இடம்

**தெலங்கானாவில் மெகாலித்கள் :**

மலைகள், வயல்கள் மற்றும் நீர்பாசன ஏரிகள் அருகில் நிறைய அடக்கம் செய்யும் இடங்கள் கண்டெடுக்கப்பட்டது. தெலங்கானா மாவட்டங்களில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் எல்லா வகை மெகா-த் நினைவு சின்னங்கள் பெரும்பாறைகள், உருண்டையான கற்கள், கல்மேடைகள் உருவங்களில் இருந்தன. கீழுள்ள படங்களை பாருங்கள்.

மெகா-த் அடக்கம் செய்யப்பட்டவைகள் பெரிய வகையிலான கருப்பு, சிவப்பு பானைகள், கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட மற்றும் இரும்புப் பொருட்களை கொண்டிருந்தன. சில அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் இறந்த உட-ன் இதர பாகங்கள் மற்றும் அஸ்தி நிரப்பப்பட்ட பானைகள், கையில் செய்யப்பட்ட களிமண் அல்லது கல்லாலான சவப்பெட்டி கண்டெடுக்கப்பட்டன.



படம் 17.9(b) தேவுனிகுட்டா, வரங்கல்



வட்ட கற்கள், ரேபுனி கிராமம், வரங்கல் (d)

SCERT TELANGANA

### ஜனபதங்கள் மற்றும் நகரங்களில் காலத்தில் தோன்றிய புதிய வினாக்கள்

நீங்கள் கங்கை பள்ளதாக்குப் பகுதியில் விளங்கிய ஜனபதங்கள், மஹா ஜனபதங்கள் மற்றும் நகரங்கள் குறித்து படித்தீர்கள். இப்பகுதிகளில் மாறுபட்ட வாழ்க்கை முறை கொண்ட வேட்டையாடி சேகரிப்போர், மேய்ப்பர்கள், கைவினை தொழிலாளிகள், வேதகால மக்கள் மற்றும் இதர மக்கள் தங்களுக்குள் பரிவர்த்தனை செய்து கொண்டு, கூட்டாக இருப்பிடங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். ஒரு மதத்தை சேர்ந்தவர் மற்றைய மத கருத்துக்களையும், கற்று பின்பற்றினர். இவ்வாறாக, கலப்பு மத நாகரீகம் வளர்ச்சி அடைந்தது.

இக்கலாச்சார மக்கள் வேதங்களின் படியான பலியிடுதலை கடைபிடித்தனர். அக்னி, சூரியன், நதிகள், பெண் தெய்வம், மரங்கள், குரங்குகள்,யானைகள், பாம்புகள் போன்ற விலங்குகளை வழிபட்டனர். இம்மக்கள் அவர்களின் இறந்த முன்னோரையும் வழிபட்டனர். மனிதனின் உடல் இறந்தாலும், ஆத்மா தொடர்ந்து உயிர் வாழும் மறுபிறவி எடுக்கும் என்று நம்பினர், மக்கள் மத சடங்குகளை பின்பற்றியதால் மட்டும் திருப்தி அடையவில்லை. அவர்கள் பகுத்தறிவு சார்ந்த புது வினாக்களை எழுப்பி, அவற்றிக்கான விடை காணமுயன்றனர்.

புதுப்புது கருத்துக்களை குறித்து தங்களுக்குள் எண்ணங்களை பரிமாற்றம் செய்து கொள்வதில் அதிக நாட்டம் கொண்டிருந்தனர். பலர் எல்லா வேலைகளையும் விடுத்து, தங்கள் கேள்விகளுக்கு விடை காண பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்தனர். அவற்றைக் குறித்து அறிந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா?

### மரணத்திற்கு பின் என்ன நிகழ்கிறது?

நசிகேதா என்ற இளைஞனை குறித்து ஒரு பிரபலமான கதை உள்ளது. நீங்களும் இக்கதையை இதற்கு முன்பே கேட்டிருப்பீர்கள். நசிகேதாவின் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. மரணத்திற்கு பின் என்ன நிகழ்கிறது. மரணத்திற்கு பின் என்ன நிகழ்கிறது. மரணத்தின் கடவுளாக எமன் இருப்பதால், அவரைக் கேட்டு விடை பெற வேண்டும் என முடிவு செய்தான். நசிகேதா நேரடியாகச் சென்று எமனை சந்தித்தான். அறிவைப் பெறும் நாட்டத்தில் மரண தேவனை குறித்து அச்சம் நசிகேதாவுக்கு ஏற்படவில்லை, எமனிடம் மரணத்திற்கு பிறகு என்ன நிகழ்கிறது? அது பற்றி கூறுங்கள் என வினவினான்.

இந்த சிக்கலான கேள்விக்கு விடையளிப்பதை தவிர்க்க விரும்பினான் எமன். இக்கேள்வியை வற்புறுத்தி கேட்காமல் இருந்தால், நசிகேதாவுக்கு நிறைய தங்கம் மற்றும் வெள்ளியையும், பசுக்களையும் பரிசாக தருவதாக கூறினான். கடவுள்களுக்கும் கூட இந்த கேள்விக்கான விடை தெரியவில்லை. ஆனால், நசிகேதா தன் கேள்விக்கான விடை அறிய வேண்டும் என்ற நோக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. தன் கேள்விக்கான பதிலை கூறுமாறு எமனை வற்புறுத்தினான். எமனோ நசிகேதாவின் ஆவல் மற்றும் பிடிவாதத்தைக்கண்டு ஆனந்தப்பட்டார். மனிதர் கண்மூடித்தனமாக நம்புபவர்கள் அவர்கள் பொருட்கள் மீது ஆசைக்கொண்டு எல்லா வகையும் பின்நோக்கியுள்ளனர். அவர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றவோ, வேரறுக்கவோ மாட்டார்கள். ஆகையால் அவர்கள் உலகில் மறுபிறவி எடுக்கின்றனர்.

உண்மையிலேயே ஆன்மா ஒன்றுதான் உலகில் நிலையானது. இதுபோன்று அலைபாய்ந்தால் அவற்றை எவ்வாறு அடைய முடியும்? ஆத-ன் எமதர்மராஜா ஆன்மாவின் முக்கியத்துவத்தை நசிகேதனுக்கு விளக்கினார். நசிகேதனும் எமனின் பதிலால் திருப்தியடைந்து வீடு திரும்பினான். இக்கதை கதோஉபநிஷத் என்னும் நூலில் காணப்படுகிறது.

மரணத்திற்கு பின்பு நமக்கு என்ன எற்படுகிறது என்று நீ கருதுகிறாய்? இது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடு.

### எப்போதும் அழியாதது எது?

அக்காலத்தில், பலர் காடுகளுக்குள் சென்று ஆசிரமங்களில் வாழ்ந்தனர். இவ்வாசிரமங்களில் பல்வேறு அறிவுபூர்வமான கேள்விகள் குறித்து விடைகாண கலந்துரையாடி, அவை குறித்து ஆழ்ந்து சிந்தித்தனர். ஆராய்ச்சி செய்தனர்.

ஆசிரமங்களில் வாழ்ந்து வந்த சான்றோரே ரிஷிகள் மற்றும் முனிவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவ்வகையான அறிவுபூர்வமான



SCERT TELANGANA

ஆய்வில் பல மன்னர்களும் முன்னிலை வகித்தனர். ரிஷிகள் மற்றும் மன்னர்களின் கருத்துக்கள் உபநிஷத்துகள் எனப்படும். யக்ஞவல்க்யா, உத்தாலகா மற்றும் அருணி போன்றவர்கள் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய ரிஷிகள் ஆவர்.

ரிஷிகள் மரணம் அடையாததும், துன்பத்தால் பாதிக்கப்படாததுமான ஒன்றை கண்டறிவதில் தொடர்ந்து முயன்று வந்தனர். அவர்கள் அதை அழிவடையாத ஆத்மா (அ) பிரம்மம் என்று அழைத்தனர். ஆத்மா (அ) பிரம்ம நிலையை புரிந்து கொள்வதன் மூலம் அமரத்துவம் அடைய முடியும் என்று நம்பினர். ஆத்மாவை அறிந்து கொள்ள மனிதன் தவம் (அ) தியானம் செய்ய வேண்டும்.

ஆத்மா மற்றும் தவம் குறித்து நீ கேட்டறிந்தவற்றை தொடர்புபடுத்தி பார்த்திடுக.

### பரிவ்ராஜாக்கள்

எந்த ஓரிடத்திலும் நிரந்தரமாக வாழாமல் சத்தியத்தை தேடி அலைந்தவர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேறி, ஒரு கிராமத்தில் இருந்து மற்றொரு கிராமத்திற்கும், ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கும், சுற்றித் திரிந்தனர். எனவே, அவர்கள் பரிவ்ராஜாக்கள் (நாடோடி என்றும், அழைக்கப்பட்டனர். இவ்வகையான பரிவ்ராஜாக்களில் வர்த்தமான மஹாவீரர், கௌதமபுத்தர், மக்கலி கோஷலா, அஜித கேஷ்கம்பாலின் புகழ் பெற்றவர்களாக விளங்கினர்.

- பிறப்பு – இறப்பு சுழற்சியில் இருந்து எவ்வாறு மனிதன் விடுபட்டு மோட்சம் அடைய முடியும்?

### வர்த்தமான மஹாவீரர் :

வர்த்தமான மஹாவீரர் ஒரு கனசங்கத்தில் பிறந்தார். இவர் தனது முப்பதாவது வயதில் குடும்பத்தையும், இல்லத்தையும் துறந்தார். பரிவ்ராஜகாமுறையில் வாழ்க்கை வாழ்ந்தார். உலகில் மனிதன் பிறப்பு இறப்பு சுழற்ச்சியில் இருந்து எவ்வாறு விடுபட முடியும்? என்பதற்கு விடை காண விரும்பி அலைந்தார். 12 $\frac{1}{2}$ ஆண்டுகள் தியானம் மற்றும் கடும் தவம் புரிந்தார். இறுதியில் மஹாவீரர் தனது கேள்விக்கான விடையை கண்டு கொண்டார்.

பிற உயிரினங்களை துன்பப்படுத்துவதால் நாம் நம்முடைய பாவச் சுமையை சேர்த்துக்கொள்கிறோம் என்று மஹாவீரர் மக்களுக்கு போதித்தார். எனவே, நாம் முடிந்தவரை எந்த ஒரு உயிரினத்திற்கும் துன்பம் விளைவிக்காமல் வாழ வேண்டும். நம்முடைய முற்பிறவியில் செய்த பாவச்சுமையில் இருந்து விடுபட வேண்டுமானால், நாம் எளிமையாக வாழ வேண்டும். நம் உடலை வருத்தி தவம் செய்ய வேண்டும். இவ்வாறாக நாம் நம்முடைய பாவங்களில் இருந்து விடுபட்டு மோட்சத்தை பெறமுடியும் என்று போதித்தார்.

மஹாவீரர் தன் கொள்கைகளை மக்களுக்கு போதனை செய்து பரப்ப தொடர்ந்து எல்லா இடங்களுக்கும் பயணம் செய்தார். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இவருடைய போதனைகளை பின்பற்றத் தொடங்கினர். இவ்வாறு ஜைனமதம் ஆரம்பமானது.

### இவ்வுலகத்தில் துக்கம் இருப்பதன் காரணம் என்ன? துக்கத்தில் இருந்து ஒருவர் விடுதலை பெறுவது எவ்வாறு? - கௌதம புத்தர்

மஹாவீரரை போல, கௌதம புத்தரும் ஒரு கனசங்கத்தில் பிறந்தார். எல்லா இடங்களிலும் மக்கள் துன்பகரமான வாழ்க்கை வாழ்வதை கண்டார். மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு கொண்டு விரோத மனப்பான்மையுடன் இருந்ததை கண்டார். இத்துன்பங்களிலிருந்து நாம் எவ்வாறு விடுபட முடியும்? என்று யோசிக்கத் தொடங்கினார்.

கௌதம புத்தரும் தன் குடும்பத்தையும், இல்லத்தையும் துறந்து, துன்பத்தில் இருந்து விடுபடும் வழியை கண்டறிய முயன்றார். பரிவ்ராஜகா வாழ்க்கை வாழ்ந்தார்.

பல ஆண்டுகள் தியானமும், கடும் தவத்திற்கு பின்பு ஞானோதயம் பெற்றார்.

கௌதமபுத்தரின் கருத்துப்படி, அளவு கடந்த அடங்காத விருப்பங்களே (ஆசைகளே) மனித துன்பங்களுக்கு காரணமாகும். நமது விருப்பங்களை



*படம் 17.11 சாரநாத்தில் உள்ள கௌதம புத்தர் நிலை*

கட்டுபடுத்தினால் துக்கங்களில் இருந்து விடுதலை பெறலாம். நம்முடைய விருப்பங்கள் மீது கட்டுப்பாட்டை பெற வேண்டுமானால், நாம் நடுநிலையான கட்டுப்பாடான வாழ்க்கை வாழ வேண்டும். எந்த ஒரு உயிரினத்திற்கும் துன்பம் உண்டாக்கக் கூடாது. புத்தர் கடும் எண்ணங்கள், கடும் தவம், பெரும் ஆசையை தவிர்க்க வேண்டும் என போதித்தார். ஆனால் அதற்குப்பதலாக ஒரு நடுநிலை மார்க்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார். எனவே தான் புத்தமதம் ஒரு சிறந்த நடுநிலை மார்க்கம் என அழைக்கப்படுகிறது. புத்தரின் போதனைகள் பின்னர் புத்தமதமாக மாறியது.

புத்தர் மற்றும் அவருடைய சீடர்களின் போதனைகள் தொகுக்கப்பட்ட நூல்கள் திரிப்பீடிகங்கள் (Thripitikas) எனப்பட்டன. அவை பிடிகாக்கள் (Pitikas) வினயா (Vinaya) சுத்தா மற்றும் அபிதாமா (Sutta and Abhidama)

இந்நூல் புத்தமதத்தை பின்பற்றுவோருக்கு புனித நூல்களாகும்.

- நசிகேதா எந்த கேள்விக்கு விடை காண தேடினார்?
- ரிஷிக்கள் எதை கண்டறிய தேடினர்?
- பிற உயிர்களுக்கு நாம் துன்பம் தரக் கூடாது என்று மஹாவீரர் கூறியது ஏன்?
- துன்பங்களில் இருந்து விடுபட புத்தர் அறிவுறுத்தும் வழி எது?
- இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்று வாழும் சாதுக்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் என்ன செய்கின்றனர். அவர்கள் எதைப் பற்றி உபதேசம் செய்கின்றனர்? அதை குறித்து உன் வகுப்பறையில் கலந்துரையாடு.

## முக்கியச் சொற்கள்

1. சாம்பல் குன்றுகள்
2. பெண் தெய்வம்
3. பானைத்துண்டுகள்
4. துதிப் பாடல்கள்
5. பலியிடுதல்
6. மெகாலித்கள்
7. தவம் செய்தல்
8. பரிவ்ராஜா
9. திரிபீடிகங்கள்
1. கனசங்கம்
11. மாபெரும் மத்திய மார்க்கம்.

## உனது கற்றலை மேம்படுத்துக

**1. மக்கள் பின்பற்றும் மதம் சார்ந்த பழக்க வழக்கங்கள் சிலவற்றை பட்டியலிடுக.**(AS1)

| வேட்டையாடுவோர் உணவு சேகரிப்போர் | இன்றைய சமுதாயம். |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

2. **புத்த மதம் மற்றும் ஜைன மதங்களின் பொதுவான குணாதிசயங்கள் (அ) போதனைகளை எழுதுக.**(AS1)

SCERT TELANGANA

**கலந்துரையாடி எழுதிக்காட்டுக :**

3. நாம் நம்முடைய நன்றியுணர்வை மரங்கள், பாம்புகள் போன்ற விலங்குகளிடம் வெளிப்படுத்துதல் எவ்வாறு சிறந்தது என நீ கருதுகிறாய்?(AS6)

4. சிலர் விலங்குகளுக்கு துன்பம் ஏற்படுத்துவதையும், பயமுறுத்துவதையும் காண்கிறோம். இது குறித்து நீ என்ன கருதுகிறாய்? பிற உயிரினங்களுக்கு துன்பம் செய்யும் உரிமை நமக்கு உள்ளதா?(AS6)

5. அக்கால மக்கள் மறைந்த தங்களுடைய மூதாதையர்களை ஏன் வணங்கினார்? புதைத்த இடங்களின் மீது ஏன் பெரும் பாறைகளை வைத்தனர்?(AS1)

6. இந்திய வரைபடத்தில் மெகாலித்கள் உள்ள பகுதிகளை கண்டறிந்து வண்ணமிடவும்.(AS5)

7. உங்களுடைய பகுதியில் பல்வேறு மத சடங்குகள் எவ்வாறு கடைபிடிக்கப்படுகின்றன என்பதை தெரிவிக்கவும்.(AS4)

8. பக்கம் 151ல் உள்ள எப்போதும் அழியாதது எது, என்னும் பகுதியை படித்து கலந்துரையாடவும்.(AS2)

## V. செயல் திட்டம் :

1. பல்வேறு வழிபாட்டு முறைகளின் படங்கள் வரைக. அவை குறித்து ஒரு புத்தகம் தயாரித்து உன் பள்ளி நூலகத்தில் சேர்த்திடு.

2. உங்கள் பகுதியில் உள்ள பல்வேறு வழிபாட்டுத் தலங்களை சென்று கவனி. அங்குள்ள தலைமை பூசாரி (அ) மத தலைவருடன் பேசி, கீழ்காணும் கேள்விகளை கேட்டு, பதில்களை பெற்றிடு, அது குறித்த பதிவேடு தயார் செய்திடு.

   (1) மக்கள் இவ்வழிபாட்டு தலத்திற்கு ஏன் வருகின்றனர்?

   (2) மக்கள் தெய்வ வழிபாட்டை எவ்வாறு நடத்துகின்றனர்?

   (3) மோட்சம் (அ) முக்தி அடைதல் குறித்து உங்கள் கருத்து என்ன?

   (4) இவ்வகை வழிபாடு மனித இனத்திற்கு தவிர்க்க முடியாதது (அ)

   அத்தியாவசியமானது என நீங்கள் கருதுகிறீர்களா? எவ்வாறு?

SCERT TELANGANA

அத்தியாயம் 18

# இறைவன் மீது பக்தி மற்றும் அன்பு

**நமது துணைக்கண்டத்தில் பண்டைய காலத்தின் மக்களின் நம்பிக்கைகள், மரபுகள், சடங்குகள் ஆகியவற்றை கடந்த பாடத்தில் கண்டோம். மௌரியர் காலத்தின்போதும், பின்பும் நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல வேறுபாடுகள் நிகழ்ந்தன. இந்நேரத்தில் வியாபாரிகள் சிறுசிறு மக்கள் குழுக்களுடனும், வேட்டையர்களுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். அந்நேரத்தில் பிராமணர்கள் வேதங்களை பின்பற்றினர். பௌத்தர்களும், ஜைன ஸ்ரமனர்களும் தம் மதக்கொள்கைகளை நாடெங்கும் பரப்பினர்.**

பிராமணர்கள் பலபகுதிகளில் ஆசிரமங்களை நிறுவி யாகங்களையும் மதக் கூட்டங்களையும் நடத்தினர். மதபோதகர்கள் ஸ்தூபம் மற்றும் விகாரங்களை நிறுவி புத்த மற்றும் ஜைன மத போதனைகளை மக்களுக்கு போதித்தனர். அதே நேரத்தில் பிராமணர்களும் சமணர்களும் தாங்கள் சார்ந்த மதப் பண்புகளை அதிகம் பின்பற்றினர். அவ்வாறு அம்மன், பாம்பு, விலங்குகள், மரங்கள் மற்றும் இறந்தோரை வழிபடும் முறையை பிராமணர்களும், பௌத்தர்களும் மற்றும் ஜைனர்களும், பின்பற்றினர். தெய்வ ஓவியங்களையும் சிலைகளையும் வழிபட்டனர். அகிம்சை முறையில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களும் விலங்குகளை பலியிட்டனர். நாளடைவில் மக்கள் கலப்பு மத சடங்குகளை பின்பற்றினர்.

- பல்வேறு மத மற்றும் மரபு பழக்க வழக்கங்களை உனது வீட்டில் காணமுடியுமா? உனது நண்பர்களுடன் வகுப்பறையில் விவாதி.

## இந்து மதம் :

தற்போது உலகிலுள்ள பெரும் மதங்களில் இந்து மதமும் ஒன்று. மக்கள் அனைவரிடத்தும் அமைதியான சக வாழ்க்கை மற்றும் நம்மைச் சுற்றி உள்ள இயற்கையான உலகத்துடன் சுமூகமான வாழ்க்கை என்னும் கொள்கைகளை வ-யுறுத்துகிறது. இந்து மதத்தை சேர்ந்த மக்கள், "சர்வேஜனா சுகினோ பவன்து" மற்றும் "லோகா சமஸ்தா சுகினோ பவன்து" என்னும் கொள்கைகள் மீது நம்பிக்கை கொண்டவர்கள். இந்து மதம் ஒரு வாழ்க்கை வழிமுறையாக கடைபிடிக்கப்படுகிறது. கடினமான நம்பிக்கைகள் அல்லது கட்டுப்பாட்டு நியமங்கள் இதில் கிடையாது. இருப்பினும் பெரும்பாலான இந்துக்கள் வேதங்களின் மேலாண்மையை ஏற்று நடந்து கொள்கின்றனர். இந்து மதம் பல்லாயிரம் ஆண்டுகள் முன் வேதகாலம் தொட்டு தோன்றி தற்போதுள்ள நம் காலம் வரை வளர்ந்துள்ள தொன்மையான மதமாகும். இத்தனை ஆண்டுகளாக பல்வேறு துறவிகள் மற்றும் சிந்தனையாளர்களின் போதனைகளை தன்னுள் அடக்கி வைத்துள்ளது. 'இந்து' என்னும் சொல் 1000 CE ஆண்டி-ருந்து பயன்பாட்டுக்கு வந்துள்ளது. அதற்கு முன்பு வரை, இந்துக்கள் வேதங்கள் மற்றும் வைதீகத்தை பின்பற்றுபவர்களாக கருதப்பட்டனர்.



SCERT TELANGANA

இருப்பினும் இந்து மதத்தின் சில முக்கிய கருத்துகள் கி.பி.500ல் நன்றாக வடிவமைக்கப்பட்டது. இதில் வேத யாகங்கள், சிவன், விஷ்ணு, மற்றும் துர்கா போன்ற தெய்வங்களை வணங்குதல், கோயில்களைக் கட்டுதல், தவத்தின் மூலம் மோட்சத்தை நாடுதல் போன்றவை அடங்கும். வேதங்கள், உபநிடதங்கள், இராமாயணம், மகாபாரதம் (இதில் பகவத்கீதையும் ஒரு பகுதியாகும்) புராணங்கள் போன்றவை புனித நூல்களாகக் கருதப்படுகின்றன.



படம் 18.1 விடிசா (ம.பி) என்னுமிடத்தில் காணப்படும் 400 CE காலத்தைச் சேர்ந்த சிவ-ங்கம்

## பாகவதமும், சைவமும்

பாகவதர்கள் விஷ்ணு அல்லது நாராயணனை வணங்கினர் அவர் சர்வவல்லமை படைத்தவர் என நம்பினர். விஷ்ணு இவ்வுலகை காக்க பல அவதாரங்களை எடுத்தார் என நம்பினர். இதில் முக்கியமானவைகள் இராமர் மற்றும் கிருஷ்ணா அவதாரங்களாகும். இவைகள் 2000 ஆண்டுகளுக்கு முன்பே மிகவும் புகழ்பெற்று விளங்கியது.

பௌத்தர்கள், ஜைனர்கள், உப நிடதங்கள் கடவுளின் வழிபாட்டை வலியுறுத்தவில்லை. மோட்சத்தை அடைய தியானம் நற்குணம் அவசியம் என வலியுறுத்தியது.

ஆனால் பாகவதர்கள் விஷ்ணுவை வழிபட்டு வந்தால் நமது பிரச்சனைகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு உன்னத நிலையை அடைவோம் என்றனர். பிராமணர்களுக்கு காணிக்கை வழங்குவதோ அல்லது வேதங்கள் ஒப்புவித்தலோ முக்கியம் அல்ல என்றனர். அவர்கள் கிருஷ்ணருக்கு கோயில்கள் கட்டி வழிபட்டனர்.

மத்திய பிரதேசத்தின் விதிசாவிலும் ராஜஸ்தானிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோயில்களின் சிதிலங்களை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

அதேகால கட்டத்தில் மக்கள் சிலர் சிவபெருமானையும் வழிபட துவங்கினர். இவர்களும் சிறிய கோயில்களைக் கட்டி சிவன் சிலையையும் லிங்கத்தையும் வழிபட்டனர். மக்கள் சிலர் துர்கா தேவியையும் வழிபட்டனர்.

விஷ்ணு, சிவன் மற்றும் துர்கா தேவி ஆகியோர் வல்லமையுள்ள கடவுள்களாக கருதப்பட்ட நேரத்தில், பௌத்தர்களும் ஜைனர்களும் புத்தர் தீர்த்தங்கர்களையும் (மிகவும் பழமையான ஜைன குருக்கள்) கடவுள்களாக வழிபட்டனர். அவர்கள் புத்தர் மற்றும் தீர்த்தங்கரர்களுக்கு சிலைவடித்து வழிபட்டனர். இவை தெலங்கானாவிலுள்ள பணிகிரி மற்றும் நேலகொண்டபள்ளி போன்ற இடங்களிலும், ஆந்திராவிலுள்ள அமராவதி, நாகார்ஜுனகொண்டா, ஜக்கய்ய பேட்டா, பட்டிபுரோலுவில் காணப்படுகின்றன.



படம் 18.2: பலராமர் மற்றும் கிருஷ்ணரின் உருவங்கள் கொண்ட பழங்கால நாணயங்கள் (2200 ஆண்டுகளுக்கு முந்தையது.) பலராமர் உலக்கையையும், கலப்பையையும் பிடித்துள்ளார். கிருஷ்ணன் சக்கரம், சங்கு மற்றும் வாள் ஏந்தியுள்ளார்.

புத்தரும் மகாவீரரும் வல்லமையுடைய கடவுள்களாகவும், அவரின் பிரதிநிதிகளாகவும் இப்பொழுதும் கருதப்படுகிறார்கள்.

- பாகவதர்களை சைவர்கள் மற்றும் பௌத்தர்களுடன் ஒப்பிட முடியுமா?
- கோயில்களில் இறைவனை வழிபடுவதை கவனித்தீர்களா? கோயிலில் வழிபடும் முறைகளை விளக்குக. உனது வகுப்பறையில் மற்ற மாணவர்களுடன் வழிபாட்டு முறைகளை கலந்துரையாடு.

SCERT TELANGANA

## கதை கூறுவோர்

நீங்கள் பெரியோரிடமிருந்தும், மத போதகர்களிடமிருந்தும் பொம்மலாட்டம் நடத்துபவர்களிடமிருந்தும் கதை கேட்க விரும்புகிறீர்கள்.

- உங்களால் வகுப்பறையில் இவ்வாறு நடத்த முடியுமா?
- மசூதிகளில் கதைகளை கேட்டிருக்கிறாயா அதை விவரி.

பண்டைய மக்கள் கதைகளை கேட்க விரும்பினர். அக்காலத்தில் புலவர்கள், மத போதர்கள் விஷ்ணு, சிவன், துர்கா தேவி ஆகியோரைப் பற்றியும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச கதைகளையும் கூறினர்.

புத்தரை பற்றிய கதைகளும் கூறப்பட்டன. இக்கதைகளை கேட்க மக்கள் அதிகம் கூடினர். கதை கூறுவோர் பெரியோர்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் கதைகளை கேட்டு அனைவருக்கும் கூறினர். பாம்பையும் பாம்பு கடவுளையும் வணங்குவோரிடமிருந்து பாம்பு தொடர்புடைய கதைகளையும் கதை கூறுவோர் சேகரித்தனர். இவ்வகையில் கதை கூறுவோர் மத போதனைகளையும் கடவுள் மற்றும் பெண் தெய்வங்களைப் பற்றியும் வழிபாட்டு முறைகளையும் இணைத்துக் கூறினர். நாளடைவில் இவைகளை எழுதியும் வைத்தனர். புத்தமத கதைகளை ஜாதகா எனும் பெயரிலும் விஷ்ணு மற்றும் சிவ பெருமான் கதைகளை புராணம் என்னும் பெயரிலும் எழுதினர்.

இப்புராணங்கள் பல மதங்களுடன் இணைந்து கடவுள் என்பவர் வல்லமை உடையவராகவும் அனைத்தும் அறிந்தவர் எனவும் கூறுகின்றன. இறைவனை வழிபட்டால் ஒருவருடைய பிரச்சனைகள் எளிதில் தீர்க்கப்படும் என புராணங்கள் கூறுகின்றன.

## சர்வ வல்லமை படைத்த இறைவன் மீது அன்பு - பக்தி இயக்கம்

தமிழ்நாட்டில் ஏறத்தாழ கி.பி. 550 ஆண்டுகளுக்கு முன்பு மக்களிடையே பக்தி மார்க்கத்தை அதிகரிக்க ஒரு புதிய இயக்கம் துவக்கப்பட்டது. அவர்கள் விஷ்ணு மற்றும் சிவபெருமானின் பக்தர்கள் ஆவர். இவர்களுக்கு யாகங்களிலும் பிராணிகளை பலியிடுதலிலும் நம்பிக்கையில்லை. இவர்கள் புத்த மற்றும் ஜைன மதத்திற்கு எதிரானவர்கள். விஷ்ணு மற்றும் சிவ பெருமான் மீது அளவு கடந்த அன்பு காட்டுபவர்கள் மோட்சத்தை அடையலாம் என்றனர். அவர்கள் தங்களுடைய பிரச்சனைகளை தீர்க்கவோ தேவையான பணத்தையோ, அதிகாரத்தையோ அடைய விரும்பாமல், இறைவனுடன் ஒன்றிணைவதையே விரும்பினர். ஜாதி, இன வேறுபாடின்றி அனைவரும் இறைவனை அன்பு செய்ய வேண்டும் என்றனர். அனைத்து பக்தர்களும் இணைந்து இறைவனை புகழ்ந்து நடனமாடி மகிழ்வர்.

சில பக்தர்கள் பல கோயில்களுக்கு சென்று அங்குள்ள சிலைகளை பற்றி உள்ளூர் மொழியில் பாடல்களை இயற்றி மக்களுக்கு புரியவைத்தனர்.

இப்பாடல்கள் 1100 (கி,பி, 1100) பொது சகாப்த ஆண்டுக்குள் இறுதியாக்கப்பட்டு பல தலைமுறையாக பக்தர்களால் பாடப்பட்டது. இவ்வியக்கத்தின் மக்களால் பல கோயில்கள் புதிப்பிக்கப்பட்டு முக்கியத்துவம் பெற்றது. ஸ்ரீ காளாஸ்திரி மற்றும் திருப்பதி திருமலை கோயிலும் அவ்வாறானவை. பக்தி இயக்கத்தினரின் முயற்சியால் மக்கள் விஷ்ணுவையும் சிவ பெருமானையும் அதிகம் வழிபட்டனர்.

SCERT TELANGANA

- உன்னால் வேட்டையாடும் காலத்திய மதப் பழக்கத்தையும் பக்தி இயக்க மதப் பழக்கத்தையும் ஒப்பிட முடியுமா?
- உன்னால் வேத கால மதத்தையும் பக்தி இயக்கத்தையும் ஒப்பிடமுடியுமா?

## ஆழ்வார்களும் நாயன்மார்களும்

விஷ்ணுவின் பன்னிரண்டு பக்தர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவர்களில் முக்கியமானவர்கள் பெரியாழ்வார் மற்றும் நம்மாழ்வார். இவர்களில் பெரியாழ்வாரின் மகள் ஆண்டாளும் ஒருவர். இவர்கள் பல கோயில்களுக்குச் சென்று பாடல்களை பாடினர். இங்கு நாங்கள் நம்மாழ்வாரின் பாடல்களில் சிலவற்றை நினைத்து பார்க்கவும், புரிந்துகொள்ளவும் உங்களுக்காக வழங்கியிருக்கிறோம்.

**படைப்பு**

நமது இறைவனும் தந்தையுமாகிய விஷ்ணு இப்பூமி நீர், நெருப்பு, காற்று வானம் மற்றும் மலைகளையும் படைத்தார் இருபெரும் ஒளி விளக்குகளான சூரியன், சந்திரனையும் மற்ற ஒளிரும் பொருளையும் படைத்தார். பிறகு மழையையும், மழையால் உருவாகும் உயிரையும் மழை கடவுளையும் படைத்தார்.

மேற்கூறிய கவிதையில் நம்மாழ்வார் விஷ்ணுவை ஒரு படைப்பாளியாகவும். தன்னுடைய தந்தையாகவும் இறைவனாகவும் குறிப்பிடுகின்றார். அவ்வாறு வல்லமைப் படைத்த இறைவன் தந்தை மகன் போன்று இணைக்கப்படுகிறார். இந்நடையில் நம்மாழ்வார் விஷ்ணுவை இந்த உலக படைப்பாளியாகவும், அதே சமயம் எங்கும் நிறைந்தவர் எனவும் மற்றும் கண்ணுக்கு புலப்படாதவர் எனவும் காட்டுகிறார்.

நாயன்மார்கள் என்போர் 63 சிவனடியார்களாவர். இவர்கள் பல ஜாதிகளைச் சார்ந்தோர். இதில் கண்ணப்பர் வேட்டையர் இனத்தையும், நந்தனர் என்பவர் புலையர் எனும் இனத்தையும் சார்ந்தோர். அப்பர், சம்மந்தர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் பல கோயில்களுக்குச் சென்று சிவபெருமானை புகழ்ந்து பாடல்களை இயற்றினர். இதில் காரைக்கால் அம்மையார் என்பவர் பெண் ஆவார். இவர்கள் இயற்றிய தேவாரம் மற்றும் திருவாசகத்தை பின்வரும் பாடல்களில் காணலாம்.

நாம் அரசுகளின் மக்கள் அல்ல
நாம் மரணக்கடவுகளைக் கண்டு அஞ்சவில்லை
நாம் நரகத்தில் தண்டிக்கப்படமாட்டோம்
நாம் தற்போதைய வாழ்வில் பாதிப்படைய மாட்டோம்.
நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்போம்.
நாம் நோய்களை அறிந்ததில்லை.
நாம் எவரிடமும் முறையிடமாட்டோம்.
நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்போம்
நாம் கவலையடைவதே கிடையாது.
**(அப்பர்)**

இக்கவிதையில் சிவ பெருமானுடைய பக்தர்கள் அரசரையோ, மரணத்தையோ, நோயையோ அல்லது நரகத்தையோ கண்டு அஞ்சுவதில்லை, அவர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர் என அப்பர் கூறுகிறார்.

மற்றொரு கவிதையில் தனக்கு உள்ள செல்வத்தை காணிக்கையாக அளிப்பவர்களை விட, என் மீது அன்பை காட்டுவோர் ஏழையோ, நோயாளியோ, தாழ்த்தப்பட்டாரோ அவர்களே மேலானோர் என சிவபெருமான் கூறுவதாக அப்பர் கூறுகிறார்.

SCERT TELANGANA

நான் வழிதவறி செல்வதைக் கண்டு சிவபெருமான் என்னை பிடித்துக்கொண்டார். நான் வணங்கி, அழுது, நடனமாடி, சப்தமாக கூக்குரலிட்டேன். பாடினேன், அவரை புகழ்ந்தேன். பசுமரத்தாணிபோல் என் அன்பு கடல் மீது அளவாடியது. சிவனை புகழ்ந்து போற்றியது.

இவ்வுலகம் என்னை பைத்தியம் எனக்கூறி நகைத்தது, எனது இதயம் வெடித்தது, உடல் நடுங்கியது. நான் அவமானப்பட்டேன். உள்ளூர் மக்கள் என்னை ஏளனம் செய்தனர். ஆனால் இறைவனின் மீதுள்ள அன்பு என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

**(மாணிக்கவாசகர்)**

சிவபெருமானைப் பற்றி புரிந்து கொள்பவர்கள் மட்டுமே அம்மகிழ்ச்சியை அறிவர். மற்றவர்களுக்கு விளங்காது என மாணிக்கவாசகர் கூறுகிறார்.

## கிறிஸ்துவம்

இந்திய துணைக்கண்டத்தில் அன்பால் வல்லமையான இறைவனை காணலாம் என நம்பினர் இந்திய மக்கள். இதே கருத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கு மத்திய ஆசிய நாடான இஸ்ரேலில் பரப்பிய மதம்தான் கிறிஸ்துவ மதம்.

கிறிஸ்துவ மதத்தை தோற்றுவித்தவர் ஏசு கிறிஸ்து. இவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் நாட்டில் உள்ள ஜெருசலேம் நகர் அருகேயுள்ள 'பெத்லஹேம்' என்னும் ஊரில் பிறந்தார். மக்கள் அனைவரும் சமம் என போதித்தார்.

ஏசு கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய கிறிஸ்தவ மதத்தின் புனிதநூல் 'பைபிள்' ஆகும். குன்றின் மீது அமர்ந்து ஏசு போதித்தது பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.



*படம் 18.3 புனித தாமஸ் தேவாலயம்*

ஏழைகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், மோட்ச ராஜ்ஜியம் அவர்களுடையதே...........

சாந்தமுள்ளோர் பேறுபெற்றார்,

ஏனெனில், மண்ணுலகு அவர்களுடையதே......

நீதியின்பால் பசி, தாகமுள்ளோர் பேறுபெற்றோர்

ஏனெனில், அவர்கள் நினைவு பெறுவர்

இரக்கமுடையோர் பேறுபெற்றோர்,

ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர்

தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்,

ஏனெனில், அவர்கள் கடவுளை காண்பர்

சமாதானம் விரும்புவோர் பேறு பெற்றோர்,

ஏனெனில், அவர்கள் கடவுளை காண்பர்

சமாதானம் விரும்புவோர் பேறு பெற்றோர்

ஏனெனில் அவர்கள் இறைவனின் பிள்ளைகள்

நீதியின்பால் துன்பப்படுத்தப்படுவோர் பேறுபெற்றோர்,

ஏனெனில் விண்ணரசு அவர்களுடையது.

உன்னுடைய எதிரியை நேசி, உன்னை துன்புறுத்துவர்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இறைவன் உலக மக்கள் அனைவரும் சமமாக இருப்பதற்காகவே சூரியனை உதயமடையச் செய்கிறார், பூமியின் மீது மழை பொழியச் செய்கிறார்.

SCERT TELANGANA

அவர் காலத்தில் இருந்த அரசரால் கைது செய்யப்பட்டு சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.

ஏசு கிறிஸ்துவின் சீடரான புனித தாமஸ், ரோமானிய வணிகர்களுடன் இந்தியாவிற்கு வந்ததாக நம்பபடுகிறது. புனித தாமஸ் தென் இந்தியாவில் கிருத்துவத்தை பரப்பினார்.

- கிறிஸ்துவ தேவாலயங்களில் கடவுளை வணங்கும் முறையை நீங்கள் பார்த்தீர்களா? பார்த்திருந்தால், அதை குறித்து விவரி.

## இஸ்லாம் மதம்

இந்தியாவில் அப்பர் வாழ்ந்த காலத்தில் சவுதி அரேபியா நாட்டில் ஒரே கடவுள் என்னும் கொள்கையுடன் ஒரு மதம் தோன்றியது. இம்மதத்தின் பெயர் இஸ்லாம். இதை தோற்றுவித்தவர் முகமது நபி.



படம் 18.4

*கேரளாவில் உள்ள சேரமான் மசூதி இந்தியாவில் கட்டப்பட்ட முதலாவது மசூதி என்று நம்பபடுகிறது. இதன் கட்டிடகலை குறித்து விவரி. இங்கிருந்து வணிக தொடர்புகள் மூலம் இஸ்லாம் மதம் பரவியது.*

முகமது நபி அரேபியாவில் உள்ள மெக்கா நகரில் கி.பி. 570ல் பிறந்தார். கடவுள் ஒருவரே. மக்கள் கடவுளால் படைக்கப்பட்டார்கள். மக்கள் அனைவரும் சமம். கடவுளுக்கு உருவமில்லை. சிலை வழிபாடு கூடாது. மனிதனுக்கு அன்பு அவசியம் என போதித்தார். முகமது நபி இறைவனின் தூதர் எனப்படுகிறார். இறைவனின் போதனைகள் அடங்கிய நூலே இஸ்லாம் மதத்தின் புனிதநூலான குரான் ஆகும். குரானில் உள்ள போதனைகள் சிலவற்றை காண்போம்.

இந்திய துறைமுகங்களுக்கு வருகை தந்த அரேபிய வணிகர்களால் இஸ்லாம் மதம் இந்தியாவிற்கு அறிமுகமானது. இஸ்லாம் மதத்தினரான அரேபிய மற்றும் துருக்கி படையெடுப்பாளர்களாலும் இம்மதம் பரவியது. இஸ்லாமிய கல்வியாளர்கள் மற்றும் துறவிகளும், வணிகர்கள் மற்றும் மன்னர்களுடன் வந்து, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் குடியேறினர். அவர்கள் ஒரு கடவுள் வழிபாட்டை போதித்தனர். சர்வ வல்லமை படைத்த கடவுள் ஒருவரே. கடவுளின் முன் எல்லா மனிதர்களும் சமம் என்று போதித்தனர்.

### இறை நம்பிக்கை

**அல்லா சர்வ வல்லமை படைத்தவர், மிகுந்த இரக்க குணம் படைத்தவர். எல்லா புகழும் அல்லாவினால் கிடைக்கிறது. எல்லா உலகங்களின் இறைவன் அவரே. தீர்ப்பளிக்கும் நாளின் கடவுள் அவரே. நாம் அவரை மட்டுமே நாம் வணங்குவோம். அவரிடம் மட்டுமே நாம் உதவியை கோருவோம், நம்மை நல்வழியில் நடத்தி செல்கிறார். அவர் வழி நடப்போருக்கு நன்மைகளை வழங்குவார். வழி தவறி நடப்போர் சபிக்கப்படுவர்.**

- மசூதியில் முஸ்லீம்கள் தொழுகை நடத்துவதை பார்த்துள்ளீர்களா? அவர்கள் வணங்கும் முறையை விளக்கு.

### வல்லமையுடைய கடவுள் மீது நம்பிக்கை

**இந்து, கிறிஸ்துவ மற்றும் இஸ்லாம் மக்களிடையேயான பொதுவான கருத்துக்களை கவனித்தாயா? வல்லமையுடைய கடவுள் இருக்கிறார் என அனைவரும் நம்புகின்றோம். செல்வம், கல்வி,**

SCERT TELANGANA

சமூக வேறுபாடின்றி அனைவரும் அன்பு செலுத்த வேண்டும். இக்கருத்தை மக்களும் ஏற்று நடக்கின்றனர்.

முன்பு ஆட்சிசெய்த அரசர்களும் மக்களை மத வழிகளில் நடக்க ஊக்குவித்தனர். மக்கள் வழிபட கோயில்கள், தேவாலயங்கள், மற்றும் மசூதிகளை கட்டினர்.

வரலாற்று ஆசிரியர்கள், இம்மதங்கள் ஏன் தோன்றின, அக்கருத்துக்களை ஏன் மக்கள் அதிகம் பின்பற்றினர் என ஆய்வு செய்தனர். மலை ஜாதி மக்களும், சிற்றரசுகளும் பெரிய அரசுகளுடன் இணைந்தபோது, அங்குள்ள மத கருத்துக்களை மக்களை கடவுளின் பிரநிதிநிதியாக அறிவித்துக் கொண்டு மக்களை மத வழியில் நடக்க ஊக்குவித்தனர். இவ்வாறு அரசர்கள் மக்களின் நம்பிக்கையை பெற்றனர்.

ஏழை பணக்காரர் அதிகாரமிக்கோர் அதிகாரமற்றோர் போன்ற வேறுபாடுகள் அதிகரித்துள்ளது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இறைவனின் பார்வையில் அனைவரும் சமம் என போதிக்கப்படுகிறது.

மக்கள் அதிகம் இறைவன் மீது பக்தி கொண்டு தங்கள் பிரச்சனைகளை தீர்க்க முயலுவதாலும், தியானத்தை மட்டும் போதித்த புத்தமதமும் ஜைன மதமும் தங்கள் சிறப்புகளையும் மக்கள் நம்பிக்கைகளையும் இந்தியாவில் இழந்தன.

அதிகமான மக்கள் இவ்வகை மதங்களின் மீது நம்பிக்கை, நம்பிக்கையின்றி உள்ளனர். சிலர் கடவுள் நம்பிக்கை இன்றி வாழ்கின்றார்கள்.

## முக்கிய சொற்கள்

சிற்பங்கள் அவதாரங்கள் மோட்சம் ஜாதக கதைகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஒரு புத்த துறவி மற்றும் ஒரு வேட்டையாடி சேகரிப்பவர் இடையே நடக்கும் உரையாடல் ஒன்றை கற்பனை செய்திடு. அவர்கள் தங்களுக்கிடையே எவ்வாறு கற்று கொண்டனர் என்பதை கூறும் சிறு உரையாடலை எழுதுக.($AS_6$)

2. பண்டைய மதங்கள் மற்றும் வேத கால மதங்கள் இடையே ஏதேனும் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை நீ காண முடிகிறதா?($AS_1$)

SCERT TELANGANA

3. துவக்க கால பாகவத மற்றும் சைவ சிந்தனைகள் எவ்வகைகளில் புத்த மற்றும் ஜைன சிந்தனைகளில் இருந்து வேறுபட்டவை?($AS_1$)

4. நம் நாட்டில் இருந்த பல்வேறு மதங்களின் நடைமுறைகளை ஒருங்கிணைக்க புராணங்கள் எவ்வாறு உதவின என்பதை குறித்து விவாதித்திடு. ($AS_1$)

5. பண்டைய மத நம்பிக்கைகளுக்கும், தமிழ்நாட்டின் பக்தர்களின் நம்பிக்கைகளுக்கும் இடையே காணப்படும் முக்கியமான வேறுபாடுகளை உன்னால் குறிப்பிட்டு காட்ட முடியுமா?($AS_1$)

6. "மக்கள் அனைவரிடத்தும் உள்ள சமத்துவத்தை" தீர்க்கதரிசி முகம்மது நபி எவ்வாறு விளக்கினார்?($AS_1$)

7. பக்கம் 160ல் "வல்லன்மையுடைய கடவுள் மீது நம்பிக்கை" என்னும் தலைப்பின் கீழ் உள்ள பத்தியை படித்து, உன் கருத்தை எழுதுக. ($AS_2$)

8. அன்மை காலத்தில், உங்கள் பகுதியில் நடந்த மதம் சார்ந்த நிகழ்ச்சியை குறித்து உன் கருத்தை எழுதுக. ($AS_4$)

9. கீழ்கண்டவற்றை உலக வரைபடத்தில் குறித்து காட்டுக. ($AS_5$)

   (a) ஜெருசலேம் (b) மெக்கா (c) கேரளம் மாநிலம் (d) சென்னை (e) அமராவதி

SCERT TELANGANA

அத்தியாயம் 19

# 19. மொழி மற்றும் சிறந்த நூல்களை எழுதுதல்

**தீபிகா எனும் பெண் தன்னுடைய கிராமத்திற்கு செல்ல சாத்நகர் ரயில் நிலையத்திற்கு சென்றாள். ரயில் நிலையத்தில் பல மொழிகளில் அறிவிப்புகள் எழுதப்பட்டதை கண்டு தீபிகா ஆச்சரியப்பட்டாள். சாத்நகர் எனும் வார்த்தை மட்டும் மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்ததை கண்டாள். ஏன் இவ்வளவு மொழிகள் என அவள் ஆச்சரியப்பட்டாள்.**




*படம் 19.1 ஷாட் நகர் ரயில் நிலைய அறிவிப்புப் பலகை*

## மொழி என்றால் என்ன?

நாய்கள் குரைப்பதையும், பறவைகள் ஒலி எழுப்புவதையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால் பூமியில் வாழும் பிராணிகளில் மனிதன் மட்டுமே மொழியை பயன்படுத்தி பேசுகிறான். மனிதனால் மட்டுமே தன் வாயால் பல ஒலிகளை எழுப்ப முடியும் விலங்குகள் மற்றும் பறவைகளால் முடியாது. மனிதனின் இவ்வொலி மொழியை பேச உதவுகிறது.

- பல விலங்குகள், பறவைகள், வாகனங்கள் மழைப்பொழிவு போன்று குரல் எழுப்பி காட்டுங்கள். பல ஒலிகளை கேளுங்கள். வகுப்பறையில் பாசாங்கு (Mimicry) செய்யுங்கள்

நமது வாழ்வின் மிக முக்கியமான அங்கமாக இருப்பது மொழியாகும். நாம் எப்பொழுதும் மறுக்க முடியாத மொழியாகும். நாம் நினைப்பது புரிந்து கொள்வது மொழியின் உதவியால்தான். பிறருடன் உரையாடவும் மொழியே மிகவும் அவசியமாகும். கற்கவும் மற்றும் விளையாடவும் மொழியே உதவுகிறது. நாம் செய்யும் பணிகளுக்கும் மொழியே முக்கியமாகும்.

முதன்மையாக, தம்முடைய பணிகளை சிறப்பாக செய்ய திட்டமிட, நிர்வகிக்க மொழி அவசியம். உன் பணிகளை செய்யும்போது நீ பேசாமல் இருக்க முடியுமா?

அடுத்து, மற்றவர்களை அதிகம் கவருவதற்கு மொழித்திறன் மிக அவசியம். 'ஓ அப்பறவையை பார்' 'அம்மா, எனக்கு அந்த பொம்மையை வாங்கிக் கொடு'', ''நில், நகராதே!'' எனக் கூறவும் மொழி மிக அவசியம்.

புதிய கருத்துக்களை உருவாக்கவும், நகைச்சுவையை உருவாக்கவும் மொழி அவசியம், நகைச்சுவை வாக்கியம், சொற்கள், கவிதைகள் ஆகியவற்றைக் கொண்டு நாமும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைக்க மொழியே முக்கியம்.

அதற்கும் மேலாக, உலகச் செய்திகளை அறிந்துக் கொள்ளவும், நம்மைச் சுற்றியுள்ள விவரங்களை அறியவும் மொழி மிகவும் அவசியமானது. நம்மை சுற்றி இல்லாதவற்றை அறியவும் மொழி உதவிபுரிகிறது.

SCERT TELANGANA

**மொழி தெரியாவிடில் நம்மால் யோசிக்க முடியுமா? மொழி தெரியாவிடில் பண்டையக்கால கதைகள், இருப்பிடத்தைப் பற்றி அறிய முடியுமா? புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல், புதிய கண்டுபிடிப்புகள் செய்தல் போன்றவற்றிற்கு மொழி அவசியம்.**

**நம்முடைய அனுபவங்கள், எண்ணங்கள் ஆகியவற்றை பிறருக்கு தெரிவிக்க மொழி அவசியம். ஒரு மரத்தில் பழங்கள் இருப்பதை கண்ட வேட்டைக்காரன் மற்றவர்களுக்கு அவ்விஷயத்தை எவ்வாறு கூறுவான்? மொழி தெரிந்தால் தான் கூறமுடியும். உனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டு அதிக வலியெடுத்தால், உன் பெற்றோருக்கு அதை எவ்வாறு கூறுவாய்? மொழி தெரிந்தால் தானே கூறுமுடியும்.**

**இவ்வாறு, நம்முடைய மொழியின் அவசியத்தையும், பயனையும் கூற, பல உதாரணங்களை கூறலாம். மனிதன் காடுகளில் வேட்டையாட சென்ற பொழுதே மொழியை உருவாக்கி பயன்படுத்தியுள்ளான். தான் பார்த்ததை, கற்றதை மற்றும் உணர்ந்ததை, தன்னுடைய பிள்ளைகளுக்கு பெற்றோர் கற்றுக்கொடுத்தது மொழி வாயிலாகத்தான். புதிய தலைமுறை மக்கள் முந்தைய தலைமுறையின் மொழியை வளரச்செய்தனர். உலகின் மற்ற மக்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும் நாம் கற்றதை பிறருக்கு கூறவும் மொழி அவசியம். வெகு தூரத்தில் உள்ள மக்களையும் ஒன்றிணைத்து கருத்துக்களை பரிமாறிக்கொள்ள மொழி அவசியம். மொழியின் பயன்கள் விந்தையானதன்றோ? ஏன் பல மொழிகள் பயன்பாட்டில் உள்ளன?**

**அதிகமான மொழிகளின் அவசியம் :**

ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு குழுவாய் வாழ்ந்த மக்களால் "மொழி" ஏற்படுத்தப்பட்டது. தங்களுடைய தாகத்தை தீர்ப்பதை தண்ணீர் என்றனர். அவ்வாறே வேறு, பகுதியில் வாழ்ந்த மக்கள் அதை "நீலு" என்றனர். மற்றொரு பகுதியில் "வாட்டர்" என்றனர்.

பொருள் ஒன்றே. மொழி மட்டுமே வேறாகும். இவ்வாறு பல பகுதிகளில் குழுவாய் வாழ்ந்த மக்களால் மொழி உண்டாயிற்று. தற்போது ஆங்கிலம், சமஸ்கிருதம், பெர்ஷியன், சைனீஸ், இந்தி, தெலுங்கு, தமிழ் போன்ற மொழிகள் பேசப்படுகின்றன.

சில நேரங்களில் ஒரு மொழியை பேசிய மக்களிடையே ஏற்பட்ட பிரிவினையின் காரணமாக அவர்கள் தனியாக குடியேறி முதலில் பேசிவந்த மொழியில் சில மாற்றங்களை செய்ததால் புதிய மொழி உருவாயிற்று. இம்மொழிகள் அனைத்தும் ஒரு குடும்பத்தை சார்ந்தது. இவ்வாறு பல மக்கள் குழுக்களால் பேசப்பட்ட மொழியை இன்றைக்கு "திராவிட மொழி" என்கிறோம். இம்மொழியை பேசி சிலர் வெகு தூரத்தில் புதிய இடத்தில் குடிபெயர்ந்த பொழுது அங்கு பேசப்படும் மொழியுடன் இணைந்து விடுகிறார்கள். அல்லது புதிய மொழியை உருவாக்குகிறார்கள். திராவிட மொழிகள் எனப்படுவதுதான் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், கோன்டி ஆகும். இம்மொழிகள் தென்னிந்தியாவின் பேசப்படுகின்றன. இந்தோ-ஆரியன் எனப்படும். மொழிக் குடும்பம் ஒன்று இந்தியாவில் உள்ளது. இக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் சமஸ்கிருதம், இந்தி, பெங்காளி, மராட்டி மற்றவைகள். இந்தியாவில் மேலும் சில மொழிக் குடும்பங்கள் உள்ளன. இவைகளைப் பற்றி மேல் வகுப்புகளில் கற்கலாம்.

மக்கள் பலப் பகுதிகளுக்கு சென்று குடியேறுவதால் அப்பகுதியில் பேசும் மொழியுடன் ஒன்று கலந்து புதிய மொழியை உருவாக்குகிறார்கள். அல்லது புதிய வார்த்தைகளை அறிகிறார்கள். தற்போதைய தெலுங்கு மொழியில் சமஸ்கிருதம், மராட்டி, அரபிக் பெர்ஷியன் மற்றும் ஆங்கில மொழிகளின் வார்த்தைகள் சேர்ந்துள்ளன.

**எழுதுதல் மற்றும் எழுத்து வடிவம்**

எழுத்து வடிவத்தின் உதவியால் ஒரு மொழியை நாம் எழுதுகிறோம் மற்றும் படிக்கிறோம். நாம் பல எழுத்து வடிவங்களை பயன்படுத்துகிறோம். நாம் பயன்படுத்துவது ரோம எழுத்து **(ABCDEF)**, தேவநாகரி எழுத்து அரபிக் எழுத்து, தெலுங்கு எழுத்து மற்றும் தமிழ் எழுத்து ஆகும். நாம் எந்த மொழியையும் பயன்படுத்தி எந்த வார்த்தைகளையும்

SCERT TELANGANA

எழுதலாம் எடுத்துக்காட்டாக, ஐதராபாத் என்னும் வார்த்தையை எல்லா மொழியிலும் எழுதலாம்.

உண்மையிலேயே, நம்மால் கூட புதிய எழுத்து வடிவங்களை உருவாக்க முடியும். நீங்கள் ரகசியமான புதிய எழுத்தை உருவாக்க விரும்புகிறீர்களா? முயற்சி செய்யுங்கள் மகிழுங்கள்.

இவ்வெழுத்துக்களை காணும்போது, நமக்கு எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. ஆனால், உண்மையில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தற்போது நாம் பயன்படுத்தும் மொழியை உருவாக்க மனிதன் கடுமையாக உழைத்துள்ளான்.

பண்டைய காலத்தில், மனிதன் எழுத்துக்கு பதிலாக ஓவியங்கள் மூலம் எழுதினான். ஆடு ஓடுகிறது என்பதை ஓவியம் மூலம் ஆடு கால்களுடன் முன்னேறுவதைப் போன்று வரையப்படும். நிதானமாக, எழுத்து உருவாக்கப்பட்டது. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிந்து சமவெளி நாகரிக மக்கள் எழுத்துக்களை பயன்படுத்தினர். ஆனால், அவைகளை படித்தல் கடினமாகும்.

| | |
|---|---|
| मेरा नाम रघु | Hindi |
| నా పేరు రఘు | Telugu |
| מײן נאמען איז ראגהו | Yiddish |
| میرا نام رگھو | Urdu |
| jina langu ni raghu | Swahili |
| Mi Nombre es Raghu | Spanish |

படம் 19.2 பல்வேறு எழுத்து வடிவங்கள்



படம் 19.3 சிந்து சமவெளி நாகரிக எழுத்து வடிவம்

இந்தியாவில் தற்போது நாம் பயன்படுத்தும் எழுத்துக்கள் தேவநாகரி, தெலுங்கு, தமிழ் போன்றவைகள் உண்மையில் அசோகரால் உருவாக்கப்பட்ட பிராமி எழுத்துக்களாகும். ஆந்திராவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் கிருஷ்ணா மாவட்டத்தில் பட்டிப்ரோலு கிராம ஸ்தூபமும் ஒன்றாகும். இது கி.மு.200 ஆண்டில் செதுக்கப்பட்டது.



படம் 19.4 பட்டிபுரோலு கல்வெட்டு

- உன்னுடைய பெயரை பல மொழி எழுத்து வடிவங்களில் எழுதி வகுப்பறையில் மாட்டவும்
- ஏதேனும் மூன்று தெலுங்கு சொற்களை மூன்று மொழிகளில் எழுதவும்.
- பின்வரும்படி அச்சொற்களை எழுதலாம்

  தெலுங்கு - அம்மா, தமிழ் - தாய்

  ஆங்கிலம் - மதர் சமஸ்கிருதம் - மத்ரு

  பெர்ஷியன் - மடர் மராத்தி - ஆய்

  இந்தி - மா
- பின்வருபவர்கள் மொழியை எவ்வாறு பயன்படுத்தினர் என கவனி. நீ மொழியை மேலும் எவ்வகைகளில் அதிகம் பயன்படுத்துவாய்?

  அரசர், பேரரசர், வணிகர், விவசாயி, பெண் விவசாயி, பிராம்மண சாமியார், புத்தமத சாமியார், கவிஞர், பெண் தொழிலாளிகள், படை வீரர்கள்

SCERT TELANGANA

## மக்கள் எதன் மீது எழுத்துக்களை எழுதினர்?

பண்டைய மக்கள் இலைகள், மரப்பட்டைகள் ஆகியவைகளின் மீதும், துணிகள் மீதும் எழுதினர். ஆனால் அவைகள் அழிந்தன. சிலர்மண் பாண்டங்களின் மீதும் எழுதினர். இவைகள் பல ஆண்டுகளுக்கு பயன்பட்டன. இவைகளைவிட பல காலத்திற்கு அழியாமல் இருந்தவைகள், அசோகர் காலத்திய பாறை, கல் மீது செதுக்கப்பட்ட கல்வெட்டுகளாகும்.

தென்னிந்திய மக்கள் பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதினர். அவர்கள் கூர்மையான எழுத்தானியால் காய்ந்த பணை ஓலைகள் மீது அழுத்தி எழுதி கருமை நிற வண்ணத்தால் எழுதினர். வட இந்தியர்கள் இமயமலை அடிவாரங்களில் வளரும் போஜா எனும் மரப்பட்டைகளை பயன்படுத்தி எழுதினர். இம்மர பட்டைகளை காகிதம் போல் உரித்து அதன் மேல் எழுதினர். அக்காலத்தில் காகிதம் பயன்பாட்டில் இல்லை.

### கவிதைகள், பாடல்கள் மற்றும் கதைகள்

நீங்கள் பல கவிதைகள், பாடல்கள் மற்றும் கதைகளை உங்களுடைய பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டியிடமிருந்து கேட்டிருப்பீர்கள். இவைகள் எழுதப்பட்டதல்ல, ஆனால், ஒருதலைமுறை மக்களிடமிருந்து மற்றொரு தலைமுறை மக்களுக்கு வாய் மொழியாக கூறப்பட்டதாகும். இவைகள் வாய்மொழியாக கூறப்பட்டதால் இதை "வாய்மொழி இலக்கியம்" என்பர். இதுவே பண்டைய இலக்கியமாகும். பண்டைய மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கவிதை, பாடல்கள் மற்றும் கதைகளைக் கூறினர். அப்பிள்ளைகளும் அவர்களின் பிள்ளைகளுக்கு கூறினர். இவ்வாறு புரிந்துகொண்ட பண்டைய மக்கள், பழமொழி களையும் வழக்குச் சொற்களையும் கூட அவ்வாறே மற்றவர்களுக்குக் கூறினர்.

- மூன்று கதைகள், மூன்று பாடல்கள் மற்றும் பத்து பழமொழிகள் ஆகியவற்றை உனது பெற்றோரிடம் கேட்டு, அவற்றை பெரிய தாளில் எழுதி உனது வகுப்பறையில் மாட்டவும்.
- கதைகளை ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதி வரவும்.

## வேதங்கள்

வேதங்கள் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டு வாய்மொழியாக கூறப்பட்டதாகும். ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகள் வாய்மொழியாக இருந்து பிறகு எழுதப்பட்டதாகும்.

அண்டம் உருவானதைப் பற்றி ரிக்வேதம் கூறும் கவிதைகள் காணலாம்.

> உலகின் படைப்பு எவ்வாறு உருவானது, எங்கிருந்து பிறந்தது என யார் அறிவர்? உலகின் படைப்புக்குப் பிறகு, இறைவன் தோன்றினான். இது எவ்வாறான படைப்பு என யார் அறிவர்?
>
> உலகின் படைப்பு எவ்வாறு ஏற்பட்டது? இது உருவாக்கப்பட்டதா? இல்லையா? உலகின் உயர்ந்தவர் யார்? என்பது சொர்க்கத்தின் அதிபதி மட்டுமே அறிவார் அல்லது அவரும் அறியாமல் இருப்பார்.
>
> (ரிக் வேதத்தின் நசதியா சுக்தா விதை)

உலகம் எவ்வாறு தோன்றியது என நீ நினைத்து ஆச்சரியமடைந்தாயா? மேலே உள்ள ரிக் வேத கவிதை, உலகம் எவ்வாறு தோன்றியது என கற்பனை செய்கிறது. உலகம் எவ்வாறு உருவானது? இப்பிரச்சனையை பற்றி நீ என்ன நினைக்கிறாய் என எழுத முடியுமா?

## புகழ்பெற்ற இதிகாசங்கள் இராமாயணம் மற்றும் மகாபாரதம்

இதிகாசங்கள் என்பது புகழ்பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் உண்மை வாழ்க்கையின் படைப்பாகும். இவைகள் உண்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போரைப் பற்றி விவரிக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் இதிகாசங்கள் உண்டு. இந்தியாவில் இராமாயணம் மற்றும் மகாபாரதம் என இரண்டு இதிகாசங்கள் உள்ளன. இராமாயணம் இராமர் மற்றும் சீதையை பற்றிய கதையாகும். இராமர் மற்றும் சீதையின் வரலாறும் இராமர் மற்றும் இராவணனுக்குமிடையே ஏற்பட்ட போரைப்பற்றிய கதையே இராமாயணம் ஆகும். இராமாயணம் ஒரு சிறந்த வகை மனித இனத்தை, ஒரு சிறந்த மகன், ஒரு சிறந்த மனைவி, சிறந்த சகோதரர், சிறந்த மன்னன் முதலியனவற்றை படம் பிடித்துக்காட்ட முயற்சிக்கிறது.

SCERT TELANGANA

இந்நூல் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட முதல் நூலாகும். இதை இயற்றியவர் வால்மீகி என்பவராகுவார். இது முதலில் வாய்மொழியான சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்டு பிறகு எழுதப்பட்டதாகும்.

மகாபாரதம் என்பது ஒரு நாட்டை ஆட்சி செய்ய ஒன்று விட்ட சகோதரர்களுக்கிடையேயான (கௌரவர்கள் மற்றும் பாண்டவர்கள்) போரை பற்றி விவரிக்கிறது. இறுதிப்போரில் கிருஷ்ணருடைய உதவியால் பாண்டவர்கள் வெற்றி பெற்று நாட்டை ஆட்சி செய்கிறார்கள். இது ஒரு மிகப் பரந்த மனித இனத்தையும், அவர்கள் எதிர்கொண்ட நீதிப்பிரச்சனைகளையும், அப்பிரச்சனைகளிலிருந்து அவர்கள் எவ்வாறு விடுபட முயன்றனர் என்பனவற்றையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்நூல் நூற்றுக்கணக்கான சிறு கதைகளுடைய உலகின் மிகப்பெரிய இதிகாசமாகும். இந்நூல் வியாசரால் கூறப்பட்டு முதலில் வாய் மொழியாக கேட்கப்பட்டு பிறகு எழுதப்பட்டதாகும்.

இவ்விதிகாசங்கள் பழமையை கூறினாலும் 1600 வருடங்களுக்கு முன்பு இறுதி வடிவம் பெற்றன.

முந்தைய பாடத்தில் புத்தரைப் பற்றியும் அவர் பல பிறப்புகளை அடைந்து தர்மத்தை போதித்தார் எனவும், படித்தீர்கள். அவருடைய வாழ்க்கை "ஜாதகா" எனும் கதைகளாக கூறப்படுகின்றன. இவைகள் நாம் அதிகம் விரும்பும் கதைகளாகும். இவைகளும் 1600 முதல் 1800 வரையிலான ஆண்டில் சேகரிக்கப்பட்டு எழுதப்பட்ட நூல்களாகும்.

**ஜாதக கதைகள் ;**

பாடத்தின் முற்பகுதியில் கௌதம புத்தரை பற்றி படித்திருப்பாய். அவர் தர்மத்தை மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் போதிக்க பல முறை பிறந்ததாக அவருடைய சீடர்கள் நம்புகின்றனர். அவருடைய பிறப்புகளை பற்றி இவர்கள் நிறைய கதைகளை ஜாதக கதைகள் வடிவில் எழுதியுள்ளனர். இக்கதைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. படிக்க படிக்க சந்தோஷமாக இருக்கும். இவை 1600-1800 ஆண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டு சேகரிக்கப்பட்டன.

### கிசொக்கோதமியின் கதை

இது புத்தரைப் பற்றிய புகழ்பெற்ற கதையாகும். ஒரு ஊரில் கிசோகோதமி என்னும் பெண் வசித்து வந்தார். அவளுடைய ஆண் குழந்தை ஒரு நாள் இறந்து விட்டது. இக்குழந்தைக்கு உயிர்பிச்சை கொடுங்கள் என வீதி வீதியாக அழுது திரிந்தாள். அதைக்கண்டு மனமுடைந்த ஒரு பெரியவர், அவளை புத்தரிடம் அழைத்து வந்தார்.

அக்குழந்தையை கண்ட புத்தர், அத்தாயிடம், கை நிறைய கடுகு விதையை கொண்டுவா, உன் குழந்தையின் உயிரை தருகிறேன். என்றார்.

அத்தாய் மகிழ்ச்சியில் குதித்தார். ஆனால் புத்தர், எந்த வீட்டில் இதுவரை யாரும் மரணமடையவில்லையோ, அந்த வீட்டிலிருந்துதான் கடுகு விதையை கொண்டு வரவேண்டும் என்றார். அத்தாயும், வீடு வீடாக ஓடினாள் ஆனால் அனைத்து வீட்டிலும் தாத்தா, பாட்டி, தாய், தந்தை, சகோதரன், சகோதரி மனைவி, கணவன், குழந்தை, மாமி, மாமா என எவரேனும் ஒருவர் இறந்திருந்தார்கள். மரணமில்லா வீட்டை அவளால் காணமுடியவில்லை.

மணமுடைந்துள்ள தாய்க்கு இக்கதை மூலம் புத்தர் என்ன கூற முயலுகிறார்?

## தமிழில் சங்க இலக்கியம்

தென்னிந்தியாவின் பலபகுதிகளில் தமிழ்மொழி பேசப்படுகின்றது. சங்க இலக்கியம் என்பது பல கவிஞர்கள் மற்றும் பெண் கவிஞர்களின் இலக்கிய தொகுப்பாகும். தைரியம் மிக்க தமிழர்கள் போரில் வென்றது, வீரர்கள் அழகிய பெண்கள், இயற்கை அழகு, பருவகாலங்கள், இவைகளின் மனிதன் மீதான தாக்கம் ஆகியவற்றை பற்றி இக்கவிஞர்கள் எழுதியுள்ளனர்.

SCERT TELANGANA

ஒரு சிற்றரசரைப்பற்றி சங்க இலக்கியம் கூறும் கவிதை தொகுப்பை காணலாம்.

உமது நிலப்பகுதி அடர்ந்த காட்டில் எங்கும் யானைக் கூட்டத்துடன் உள்ளது. அவைகள் பசுக்களாகவோ, கருமை நிற எருமையாகவோ தெரிந்தால், நீங்கள் ஒரு வளரும் குழந்தையைப் போல் கவனமுடன் இருக்க வேண்டும் என உமக்கு கூறிக்கொள்கின்றேன். நீ அவ்வாறு இல்லாமல், நரகத்திற்கு செல்பவர்கள் போலே அன்பும் இரக்கமும் இன்றி வாழாமல் இருக்கலாகாது.

## மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைப் பற்றிய நூல்கள்

பண்டைய காலத்தில் ஒரு சிலர், மக்கள் ஏன் நோயாளியாகிறார்கள், அவர்களை எவ்வாறு குணப்படுத்துவது? போரில் காயப்பட்ட வீரர்களை எவ்வாறு குணப்படுத்துவது? என சிந்தித்தனர். அவர்கள் சில மூலிகைகளைச் சேகரித்து நோயாளிகளை குணப்படுத்தி அம்மூலிகைகளைப் பற்றி எழுதியும் வைத்ததுள்ளனர். அவ்வாறான நூல்களில் ஒன்று 'சரக்க சம்ஹிதா' என்பதாகும். அறுவை சிகிச்சையைப் பற்றி வலியுறுத்தும் நூல் "சுஸ்ருத சம்ஹிதர்" என்பதாகும். இந்நூல்கள் இந்திய கலாச்சாரத்தையும் மருத்துவத்தையும் உடல் நலத்தையும் பிரதிபலிக்கின்றன. மக்கள் எவ்வாறு நல்ல உடல் நலத்திற்கு சரிவிகித உணவை உட்கொண்டு உடல் நலத்தை பேணவேண்டும் என அவர்கள் கூறுகின்றனர்.

- உனது ஊரில் மற்றும் உனது சுற்றுப்புறத்தில் காணப்படும் மூலிகைகளை பட்டியலிட்டு அதனுடைய பயன்களையும் தெரிந்துகொள் மூலிகை பட்டியலை வகுப்பறையில் மாட்டவும்.
- உடல் நலம் மற்றும் மருத்துவத்தை பற்றி பழமொழிகளை உனது பெற்றோரிடம் கேட்டு அறிந்துகொள். அவற்றை ஒரு காகிதத்தில் எழுதி வகுப்பறையில் மாட்டவும்.

## வானசாஸ்திரம் மற்றும் கணிதத்தைப் பற்றிய நூல்கள்

நமது முன்னோர்கள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களைக் கண்டு கவரப்பட்டார்கள். வானத்தில் நடக்கும் மாற்றங்களை தினமும் குறித்து வைத்தனர். வானத்தில் சில மாற்றங்கள் நிமிடங்களிலும், நாட்களிலும், வாரங்களிலும், மாதங்களிலும், வருடங்களிலும் நிகழ்கின்றன. வானசாஸ்திர அறிஞர்கள் வானத்தில் நிகழும் அற்புதங்களை விவரிக்கின்றனர். சூரியன் தினமும் உதித்து மறைகின்றது. இது வெப்பத்தை தருகிறது. நிலவு சிறியதிலிருந்து பெரியதாகிறது. பிறகு சிறியதாக தேய்கிறது. இது குளிர்ச்சியைத் தருகிறது.

ஒளி எழுப்பும் நட்சத்திரங்களிடையே கிரகங்கள் சுழல்கின்றன. வானத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களின் இயக்கங்களை மக்கள் நிதானமாகவும் கவனமாகவும் குறித்து இப்பிரபஞ்சத்தைப் பற்றி அதிகம் எழுதினர்.

இவ்வாறு எழுதியவர்களில் ஒருவர் ஆர்யபட்டர். இவர் தன்னுடைய "ஆர்ய பட்டியம்," எனும் நூலில் பூமி சுழல்வதால் இரவு பகல் ஏற்படுகிறது என்றும் சூரியன் பூமியை சுற்றுவது கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார். இவருடைய கருத்தை மக்கள் ஏற்கவில்லை.

ஆர்யபட்டரும் கணித மேதைகளும் தசம எண் முறையை அறிமுகப்படுத்தினர். இன்றும் அம்முறையை நாம் பின்பற்றுகிறோம்.

ரோம நாட்டினர் ரோமன் எண் முறையை அறிமுகப்படுத்தினர். **CII** என்பது 102யும் **CXXVII** என்பது 127யும் குறிக்கும்.

1. அவர்களுக்கு பூஜ்ஜியம் தெரியாது. அதனால் பல பிரச்சனைகள் ஏற்பட்டன.

தசம முறையில் இட மதிப்பையும் 102, 127-யும் எழுதுவது எளிதாகும்.

இன்று உலகம் முழுவதும் இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

SCERT TELANGANA

**சமஸ்கிருத இலக்கியம் :**

இவற்றில் மிக முக்கியமானது என்னவென்றால் பழங்காலத்தில் உருவான மொழி இதனை பாணினி என்பவர் சமஸ்கிருத இலக்கணம் எழுத இந்த புத்தகத்தை இயற்றினார். இந்த புத்தகம் அஸ்தாத்யாயி என்று கூறப்பட்டது. இது எளிய முறையில் கற்க உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் பதஞ்ச- என்பவர் விரிவாக எழுதினார்.

குஷாணர்கள் காலத்தில் வாழ்ந்த அசுவகோஷர் என்பவர் புத்த சரிதா எனும் சமஸ்கிருத காவியத்தை புத்தரின் வாழ்க்கை வரலாற்றை ஆதாரமாக கொண்டு எழுதினார்.

குப்தர்கள் காலத்தில் பல சமஸ்கிருத நூல்கள் எழுதப்பட்டன. அமரசிம்மா, இரண்டாம் சந்திரகுப்தரின் அவையில் இருந்த அவர் அமரகோசா எனும் சமஸ்கிருத அகராதியை உருவாக்கினார்.

அந்த காலத்தில் நாடகம் இலக்கிய வடிவில் வளர்ந்தது. பாஷா எனும் நாடக ஆசிரியர் 13 நாடகங்களை இராமாயணம், மகாபாரத கதைகளை கொண்டு இயற்றினார். காளிதாசர் எழுதிய அபிஞான சகுண்தலம் மிகவும் பிரபலமானது.

காளிதாசர் அபிஞான சகுந்தலம் என்ற மகாபாரதத்தை தழுவிய துஷ்யந்த் மற்றும் சகுந்தலையின் காதல் கதையை எழுதினார். சூத்ரகர் எழுதிய மிருச்சகடிகர் எனும் நூல் நகர வாழ்க்கை முறைப்பற்றி விளக்குகிறது. மேலும் இவர் பல பாடல்களை எழுதியுள்ளார். அவையாவும் உலக பிரசித்தி பெற்றவை.

- காளிதாசரின் ஏதேனும் ஒரு நூலை கண்டெடுத்து அதன் கதையை வகுப்பறையில் பகிரவும். அது ஆவலாக உள்ளதா? காரணங்களை கூறு.

## முக்கியச் சொற்கள்

காவியம்

புராண கல்வெட்டு

சங்க இலக்கியம்

தசம முறை

ஆயுர்வேதம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மொழியின் முக்கியத்துவத்தை சுருக்கி எழுதுக.(AS1)
2. வானசாஸ்திரத்தின் தந்தை என ஆர்யபட்டாவை உன்னால் கூற முடியுமா?(AS1)
3. சரக சம்ஹிதாவிற்கும், சுஸ்ருத சம்கிதாவிற்கும் உள்ள வேறுபாடு யாது?(AS1)
4. கணித கண்டுபிடிப்புகள் சிலவற்றை எழுதுக.(AS4)
5. ரூபாய் நோட்டில் உள்ள பல்வேறு எழுத்து வடிவங்களை எழுதுக.(AS3)
   எந்தெந்த மொழிகளில் எழுதப்பட்டுள்ளது என குறிக்கவும்.
   அனைத்தும் மொழிகளுக்கும் ஒரே எழுத்து வடிவம் உள்ளதா?
   எவற்றிற்கு அவ்வாறு உள்ளது என குறிப்பிடுக.
6. ஏதேனும் ஒரு பொது அறிவு புத்தகத்தை ஆராய்ந்து ஐந்து தமிழ்மொழி நூல்களின் பெயர்களையும், ஐந்து பிற மொழி நூல்களையும் காட்டும் பட்டியலைத் தயாரிக்கவும்.(AS3)
7. பண்டைய இந்திய விஞ்ஞானிகள் பல்வேறு துறைகளில் ஆந்நியபணியானது, இன்றைய விஞ்ஞானிகளுக்கு எவ்வாறு ஊக்கத்தை தந்தது?(AS6)
8. இந்திய புறவரிப்படத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.(AS5)
   (அ) பீகார் (ஆ) தமிழ்நாடு (இ) உத்திரபிரதேசம் (ஈ) மகாராஷ்டிரம் (உ) மேற்கு வங்காளம்
9. பக்கம் 165ல் உள்ள புகழ் பெற்ற இதிகாசங்கள் என்னும் பகுதியை படித்து கலந்துரையாடவும்.(AS2)

SCERT TELANGANA

அத்தியாயம் 20

# சிற்பங்களும், கட்டிடங்களும்

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சிந்து நதிப் பள்ளத்தாக்கின் சமவெளிப்பகுதியில் நகரங்களை அகழ்வு செய்து மிகவும் நுட்பமான கற்கள் மற்றும் வெண்கலத்தாலான சிலைகளைக் கண்டறிந்தனர். இது மட்டுமின்றி கற்களில் செதுக்கப்பட்ட முத்திரைகளையும், வேகவைக்கப்பட்ட களிமண் உருவங்களையும் கண்டறிடிந்தனர். இவை சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டவை. அவற்றில் சிலவற்றை நீங்கள் கீழே காணலாம். அனைத்தும் இயற்கையான முறையில் அமைக்கப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம். அவர்கள் அவற்றை எதற்கு பயன்படுத்தினர் என்பது தெரியாது.



படம் 20.1 முக்கியத்துவம் வாய்ந்த ஆணின் சிறு உருவச் சிலை - இவர் ஒரு அரசரா?. அல்லது மதகுருவா?



20.3 நிற்கும் பெண்ணின் வெண்கல உருவச்சிலை



படம் 20.2 அழகான எருதினை சித்தரிக்கும் ஹரப்பா முத்திரை



படம் 20.4 மங்கலான செம்மண்ணால் தயாரிக்கப்பட்ட அம்மண் உருவம், குரங்கு உருவம் கொண்ட சிலை.

SCERT TELANGANA

## ஹரப்பாவின் நகரங்கள் துணைக் கண்டத்தின் முதலில் தோன்றிய நகரங்கள்

6-ஆம் பாடத்தில் மனிதர்கள் நீண்ட காலமாக வேட்டையாடி உணவு சேகரிக்கும் குடியேற்ற அல்லது நாடோடி வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதைப் படித்தீர்கள். 1000 ஆண்டுகளுக்கு முன்னர் தான் மக்கள் நவீன சிரியாவிலும் பாலஸ்தீனத்திலும் விவசாயம் செய்யவும், கால்நடைகளை மேய்க்கவும் தொடங்கினர். இந்திய துணைக்கண்டத்தில் வடமேற்கில் உள்ள பலுசிஸ்தானில் ஏழு முதல் எட்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சில கிராமங்கள் முதலில் தோன்றின. பல்வேறு பகுதிகளில் மக்கள் விவசாயத்தையும் கிராம வாழ்க்கையும் மிக மெதுவாகவே மேற்கொண்டனர். மேலும் பெரும்பாலான மக்கள் வேட்டையாடுவதையும் உணவு சேகரிப்பதையும் இன்னும் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நகரங்கள் எப்போது முதலில் தோன்றின? இந்திய துணைக்கண்டத்தில் இது 5000 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. வடமேற்குப் பகுதிகளான பலுசிஸ்தான், சிந்து, பஞ்சாப் மற்றும் குஜராத் பகுதிகளில் அகழ்வாராய்ச்சியினர் பெரிய நகரங்களின் எஞ்சிய பகுதிகளை தோண்டி எடுத்தனர். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எபரும் நகரங்களை அகழ்வாராய்ச்சி மூலம் கண்டறிந்தனர். அவற்றின் உண்மையான பெயரை நாம் அறியாவிட்டாலும் நாம் அவற்றை புதிய கிராமங்களின் பெயர்கொண்டு அழைக்கிறோம். ஹரப்பா, மொகஞ்சதாரோ காளிபங்கள் மற்றும் லோதால் நகரங்களின் பெயர்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவை நம் துணைக்கண்டத்தின் மிகப்பழமையான நகரங்களில் சில இந்த நகரங்கள் வடக்கில் ஆப்கானிஸ்தானிலிருந்து தெற்கில் குஜராத் வரையிலும் கிழக்கில பஞ்சாத் மற்றும் ஹரியானாவிலும் மேற்கில் பலுசிஸ்தானிலும் பரவி இருந்தன. அவை பல பொதுவான கூறுகளைப் பெற்றிருந்தன.

தொல்பொருள் ஆய்வாளர்கள் நம் வரலாற்றின் இக்கால கூட்டத்தைக் குறிப்பிட ஹரப்பா நாகரீகம் என்னும் பொதுப்பெயரைப் பயன்படுத்துகின்றனர். சில நேரங்களில் இக்கலாச்சாரத்தின் முக்கிய பகுதிகள் சிந்து நதி மற்றும் அதன் கிளை நதிகளால் அதன் சமவெளிகள் பாசனம் பெற்றதால் அதை சிந்து சமவெளி நாகரீகம் எனவும் அழைப்பர்.

- இப்பகுதிகளில் பாயும் நதிகளின் பெயர்களைக் கண்டறியும் வபைடத்தில் அப்பகுதிகளைக் குறிப்பிடவும். அவை ஐதராபாதிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளன என்பதைப் பார்க்கவும்.
- தெலங்காணா ஹரப்பா கலாச்சாரத்தின் பகுதியாக இருந்தது என நீ கருதுகிறாயா? ஹரப்பா மக்களைப் பற்றி தெலங்கானா வில் வாழ்ந்த மக்கள் அறிந்திருந்தார்களா? எவ்வாறு?
- நீர் ஓர் இடத்திற்குச் சென்றால் அது ஒரு கிராமம் அல்லது நகரம் என எவ்வாறு முடிவு செய்வாய்?
- கிராமத்திலிருநது வேறுபடும் நகரங்களில் எவ்வகையான செயற்பாடுகள் நடக்கின்றன?
- தொல்பொருள் ஆய்வாளர்கள் பண்டைய கால எஞ்சிய பொருட்களைக்கொண்டு அது ஒரு கிராமம் அல்லது நகரம் என எவ்வாறு கணக்கிடுகின்றனர்?
- ஒரு கிராமத்தின் எஞ்சிய பகுதிகளில் இல்லாத நகரத்தின் எஞ்சிய பகுதிகளில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் எவை?




SCERT TELANGANA

**நகரங்கள் என்றால் என்ன?**

நகரங்கள் என்பது அதிக அளவிலான மக்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தின் மீதோ அல்லது வேட்டையாடி உணவை சேகரித்தல் மீதோ ஆதாரப்படாமல் வாழும் ஓர் இடம் ஆகும். நகரங்களில் முக்கியமாக மூன்று அல்லது நான்கு வகையான தொழில்களை செய்பவர்கள் உள்ளனர். கலைஞர்களான குயவர்கள், உலோக உருக்கிகள், தச்சர்கள் வீடு கட்டுபவர்கள், கல் உடைப்பவர்கள் போன்றோர். நகரத்திலும் நகரங்களுக்கு வெளியிலும் பிறரால் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்கி விற்கும் வணிர்கள், அரசர்கள், ஜமின்தார்கள், பூசாரிகள் மற்றும் நிர்வகிப்போர் எனும் ஆட்சியாளர்கள் மேலும் இறுதியாக பிறருக்கு சேவை செய்யும் ஏழை உழைப்பாளர்கள் அல்லது இராணுவ வீரர்கள், இவர்களில் பெரும்பாலானோர் நிலங்களை சாகுபடி செய்ய மாட்டார்கள் அல்லது பயிர் விளைவிக்க மாட்டார்கள். எனவே விவாசயிகளால் விளைவிக்கப்படும் தானியங்கள் அல்லது மேய்ப்பர்களால் உற்பத்தி செய்யப்படும் பால், இறைச்சி ஆகிவற்றின் மீது ஆதாரப்பட்டிருப்பர். நகரங்கள் விவசாயிகள் மீது வரி விதித்து அவர்களிடமிருந்து தானியங்களை கொள்முதல் செய்தன அல்லது கலைநுட்பம் வாய்ந்த பொருட்களுக்காக பரிமாற்றம் செய்து கொண்டன. இவ்வாறு இன்றுபோல், அன்றும் பெரும்பாலான மக்கள் கிராமங்கள் அல்லது காடுகளில் வாழ்ந்தனர்.

- ஆட்சியாளர்களின் வீடுகள் மற்றும் கலைஞர்களின் வீடுகளின் எஞ்சிய பகுதிகள் ஒரே மாதிரியாக காணப்பட்டன அல்லது வேறாகக் காணப்பட்டன அல்லது வேறாகக் காணப்பட்டன என நீ கருதுகிறாயா? எவ்வாறு?
- ஒரு நகரத்தில் வணிகர்கள் இருந்திருதால் அவர்கள் எங்கு வாழ்ந்திருப்பர் என்பதை அந்த நகரத்தின் எஞ்சிய பகுதிகளைக் கொண்டு மட்டும் கண்டறிந்து விடலாம் என நீ கருதுகிறாயோ?
- நகரத்தில் வாழ்ந்தவர்களுக்கு தங்களுடைய உறபத்திப்பொருட்களை வழங்க விவசாயிகள் ஏன் ஒப்புக்கொண்டனர் என்று நீ கருதுகிறாய்?

**நகரங்களின் பண்புகள் :**

ஹரப்பா நகரங்கள் சுமார் 4600 ஆண்டுகளுக்கு முன் வேகமாக தோன்றி சுமார் 700 ஆண்டுகள் வரை செழிப்புற்று விளங்கின சுமார் 3900 ஆண்டுகளுக்கு முன் படிப்படியாக மறைந்துவிட்டன. ஹரப்பா நகரங்களின் கட்டிடங்கள் தரமான அளவு மற்றும் வடிவங்களைக் கொண்ட சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டன. இது இந்த நகரங்களின் குறிப்பிடத்தக்க பண்பாகும். பெரும்பாலான முக்கிய நகரங்கள் ஒரு சதுரங்கப் பலகையில் உள்ளதைப் போன்று நேரான சாலைகள் ஒன்றுடன் ஒன்று குறுக்கே வெட்டிக்கொள்வதைப் போல் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகர வளர்ச்சியைக் காட்டுகின்றன. சாலைகளில் வீட்டிலிருந்து கழிவு நீரையும் மழை நீரையும் எடுத்துச்செல்ல சாக்கடைகள் அமைக்கப் பட்டிருந்தன. பெரும்பாலான நகரங்கள் இரண்டு தெளிவான பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. ஒன்று நகரத்தின் அரண் இதில் முக்கிய பொதுக் கட்டிடங்களான நெற்களஞ்சியங்கள், வளாகங்கள், மற்றும் பெரிய கட்டிடங்கள் இருந்தன இரண்டு கைவினைக் கலைஞர்கள், வணிகர் மற்றும் பிற மக்களுக்கான தாழ்வான பகுதியாக காணப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் ஆட்சியாளர்கள் நகர் அரணில் வாழ்ந்து அல்லது பணியாற்றி தங்களை பொது மக்களிடமிருந்து வேறுபடுத்திக்கொள்ள விரும்பியதாகத் தெரிகிறது.

- அதிகாரத்திலிருந்த மக்கள் பணியாற்றிய தனிக்குடியிருப்பு பகுதிகளுக்கும் தற்கால பொதுமக்கள் வாழும் பகுதிகளுக்கும் ஏதேனும் வேறுபாடுஉண்டா? வேறுபாடு ஏன் உள்ளது?

ஹரப்பா நகரங்களில் எவ்வகையான கைவினைக் கலைஞர்கள் வாழ்ந்தனர்? செங்கற்கள் மற்றும் கட்டிடங்களைக் கொண்டு குயவர்கள் மற்றம் மேஸ்திரிகளை நீங்கள் ஊகிக்கலாம். ஹரப்பா நகரத்துக் குழவர்கள் இந்திய வரலாற்றிலேயே அழகான பானைகளைத் தயாரித்தனர். அவர்கள் அதிக அளவில் பலதரப்பட்ட களிமண் பானைகளையும் பொம்மை களையும் தயாரித்தனர். ஹரப்பா நகரத்து மக்கள்



20.5 லோதல் துறைமுகம்

செம்பு, வெள்ளி, தகரம் போன்ற பலவகை உலோகங்களால் செய்யப்பட்ட பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தினர். உலோகக் கலவையான வெண்கலத்தையும் பயன்படுத்தினர். எனினும், இந்தியாவின் நீண்ட காலத்திற்குப் பின் பயன்பாட்டிற்கு வந்த இரும்பை பயன்படுத்தவில்லை அரிய உலோகமானது செம்பு அளவாக பயன்படுத்தப்பட்டது. ஹரப்பா மக்கள் அவர்களின் பெரும்பாலான அன்றாட தேவைகளுக்கு கற்களையும் கட்டைகளையும் தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர். அவர்கள் வெட்டுவதற்கு மிகக்கூர்மையான கல் பிளேடுகளை பயன்படுத்தினர். அழகாக புனையப்பட்ட கல் முத்திரைகளை வணிகத்திற்காக பயன்படுத்தினர். அழகான மற்றும் பளபளப்பாக்கப்பட்ட வண்ணக்கல் மணிகளை நகைகளாக பயன்படுத்தினர். கல்தாராசுகளையும் கல் எடைகளையும் வாணிகத்தில் பன்படுத்தினர். அவர்கள் பருத்தி மற்றும் பட்டுத்துணிகளை நெய்தனர். அவற்றின் சிறு துண்டுகள் கிடைத்தன. அகப்பை, கரண்டி, மற்றும் வளையல்கள் போன்ற அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை கிளிஞ்சல்களைக் கொண்டு அவர்கள் உருவாக்கினர். முத்திரைகள் மற்றும் எடைகள் பெருமளவில் ஹரப்பா மக்கள் ஒரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்று வணிகம் செய்ததை நமக்குக்காட்டுகின்றன. அவர்கள் கப்பலில் சென்று தொலைதூரப் பகுதிளான ஈராக் போன்ற பல நகரங்கள் வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கும் சென்று வணிகத்தில் ஈடுபட்டனர். அவர்கள் தங்களின் பொருட்களை ஏற்றிச் செல்ல காளை வண்டிகளையும் படகுகளையும் பயன்படுத்தியிருப்பர்.

- இந்த பொருட்கள் அனைத்தையும் ஒரே விதமான கலைஞர்கள் செய்தனரா? அல்லது பல்வகைப் பொருட்களைத் தயாரிக்க வேறுபட்ட கலைஞர்கள் தேவைப்பட்டனரா? ஏன் நீ அவ்வாறு நினைக்கிறாய்?

**மொழி:**

ஹரப்பா மக்கள் எழுதிய நூல் எதுவும் நமக்கு கிடைக்கவில்லை. முத்திரைகளின் மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன ஆனால் அவற்றை எவ்வாறு படிப்பது என்பது நமக்குத் தெரியவில்லை. எனவே அவர்கள் என்ன



20.6 மொகஞ்சதாரோவில் கோட்டை நகரம்

SCERT TELANGANA



*20.7 மொகஞ்சதாரோவின் பெரியகுளியல்*

மொழி பேசினர் என்பதும் நமக்குத் தெரியாது. அவர்கள் ஏதேனும் பொதுவான ஒரு மொழியைப் பேசினார்களா என்பதும் தெரியாது. அவர்கள் தங்களை என்ன பெயரிட்டு அழைத்துக் கொண்டனர் என்பதும் தெரியாது. அவர்கள் தங்களை என்ன பெயரிட்டு அழைத்துக் கொண்டனர் என்பதும் நமக்குத் தெரியவில்லை. அல்லது அவர்கள் ஆட்சியாளர்கள், கடவுள்கள் மற்றும் அவர்களின் நகரங்களைக் குறித்தும் நமக்கு முழுமையாகத் தெரியவில்லை அவர்களின் மத நம்பிக்கையைப்பற்றி பின் வரும் பாடங்களில் நீங்கள் படிப்பீர்கள். ஆட்சியாளர்கள்.

**அரசர்கள் :**

இந்த நகரங்களை யார் ஆண்டனர் என்பதும் நமக்குத் தெரியாது. பெரும்பான்மையான நகரங்கள் அதிக பரப்பில் பரவியிருப்ப தாலும் பொதுவான பல அம்சங்களை கொண்டிருப்பதாலும் இவ்வனைத்தையும் ஒருங்கிணைக்க ஒரு மைய அதிகாரி இருந்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். எனினும் அது அரசரா அல்லது மதகுருவா அல்லது தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்களின் குழுவா என்பது தெரியவில்லை. அவர்கள் நகர அரண்களில் வாழ்ந்து நகரங்களில் வாழும் மக்கள் அனைவருடைய வாழ்க்கையையும் அங்கிருந்து ஒருங்கிணைத்திருக்க வேண்டும்.

**வாழ்வாதாரத்தில் மாற்றம் :**

ஹரப்பாவின் பெரிய நகரங்கள் வளர்ச்சியடைந்து ஏழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அவை வீழ்ச்சியடைந்ததாகத் தோன்றுகிறது. வாணிகமும் கைவினைப் பொருட்களின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. மக்கள் இந்த நகரங்களை விட்டு கிராமங்களுக்கு குடிபெயர்ந்தனர். இப்பகுதியில் பாய்ந்த பல ஆறுகள் வறண்டு விட்டதாகவும் கங்கை நதியை நோக்கி மேலும் கிழக்கு முகமாக மக்கள் குடிபெயர்ந்து விட்டனர் என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அவர்கள் விவசாயமும் கால்நடை மேய்க்கும் மக்களோடும் கலந்து விட்டதாகவும் கூறுகின்றனர். எனினும் ஹரப்பா நாகரீகத்தின் பெரிய நகரங்கள் படிப்படியாக முழுவதும் மறைந்து மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டன. தொல்பொருள் ஆய்வாளர்கள் இந்த மறைந்து விட்ட நாகரீகத்தைப் பற்றி முறையான ஆய்வு மேற்கொள்ளும்போது இருபதாம் நூற்றாண்டில் இது அவர்களால் கண்டறியப்பட்டது.

- விவசாயிகளாக இருந்து தொழிற்சாலை ஊழியர்களாக அல்லது அலுவலக ஊழியர்களாக அல்லது கடைக்காரர்களாக தங்களின் வாழ்வாதாரத்தை மாற்றிக்கொண்ட மக்களைப் பற்றி உனக்குத் தெரியுமா? அல்லது தொழிற்சாலை ஊழியர்கள் சந்தைகளில் பல வேலைகளில் பணியாற்றத் தொடங்கியவர்கள் யாரேனும் உள்ளனரா? வேலையைத் தேடி வாழ்விடங்களை விட்டு புது இடங்களுக்குச் சென்றுள்ளனரா? அவர்களின் வாழ்க்கை பிரச்சனைகள், சவால்கள் பற்றி விவரி.

*படம் - 20.8 மொகஞ்சதாரோவில் ஒரு தெருவில் காணப்பட்ட கழிவு நீர் அமைப்பு*



SCERT TELANGANA

**சிந்து சமவெளி நாகரீகத்திற்கு பின் சிற்பக்கலை:**

சிறிது காலத்திற்குப் பின் உலோக உருவங்கள் செய்யும் கலை மகாராஷ்ரத்திற்குப் பரவியது. அகழ்வு செய்யும்போது சில வியக்கத்தக்க வெண்கல உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்டவை. அவை பொம்மைகளாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?



*படம் 20.9 தைமாபாத் வெண்கல சிலைகள்*

அடுத்து சிற்பக்கலையில் மிக முக்கியமான கட்டம் 2200 ஆண்டுகளுக்கு முன் இருந்த மௌரியர்கள் காலத்தைச் சேர்ந்தது. அசோகப் பேரரசர் பல இடங்களில் உயரமான, மென்மையாக மெருகூட்டப்பட்ட கற்தூண்களை நிறுவினார். அவை சாதாரணமாக ஒரே கல்லில் செய்யப்பட்டவை. அவற்றின் மீது அசோகரின் போதனைகள் பொறிக்கப்பட்டன. அத்தூண்களின் மேல் பகுதியில் சில விலங்குகளின் உருவங்களைக் கொண்டிருந்தன, அவற்றை தலைநகரம் என்றனர். இவற்றில் மிகவும் புகழ்பெற்றது, புத்தர் தன் சீடர்களுக்கு முதன்முதலில் போதித்த சாரநாத் என்னுமிடத்தில் அமைக்கப்பட்ட சிங்கத்தின் உருவம் பதித்த சின்னம் ஆகும். இதில் நான்கு திசைகளை நோக்கும் நான்கு சிங்கங்களும் அவற்றின் கீழ் தர்மச் சக்கரமும் உள்ளது.

- சிங்கங்கள் இயற்கையானதாக உள்ளதா அல்லது செயற்கையாகக் காணப்படுகிறதா?
- இவற்றை நீங்கள் அடிக்கடி பார்க்கிறீர்கள் எங்கு இந்த சிங்கங்ளின் படங்களைப் பார்க்கிறீர்கள்?

இந்த கற்தூண்களும் சிங்க உருவங்களும் மௌரியப் பேரரசின் அதிகாரத்தையும் பேராண்மையையும் குறிப்பிடுகின்றன. இந்த கற்பீடத்தை ராம்பூர்வாவில் உள்ள எருது கல்பீடத்துடன் ஒப்பிடு. இங்கு எருது மிகவும் இயற்கையாகவும் ஹரப்பா முத்திரைகளில் உள்ள எருதினை ஒத்ததாகவும் காணப்படுகிறது.



*படம் 20.10 சாரநாத் சிங்க கற்பீடம்*



*படம் 20.11 ராம்பூர்வா எருது சிலை*

SCERT TELANGANA

## புத்தமத நினைவுச்சின்னங்களும், விகாரங்களும் :

கீழே தரப்பட்டுள்ள இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற ஸ்தூபங்களில் (நினைவுச் சின்னங்களில்) ஒன்றான சாஞ்சி கற்தூண் புகைப்படத்தைப்பார்.

புகைப்படத்தைப்பார். இது ஒரு அரைவட்டம்போல் உள்ளதைக் காணலாம். நீ வானத்தை மேல் நோக்கிப் பார்க்கும்போது வானம் காணப்படுவதைப்போல் உள்ளது.

ஒரு மேடை மீது ஸ்தூபம் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்தூபத்தின் மையப்பகுதியில் புத்தர் அல்லது புத்தமதத்தின் முக்கிய துறவிகளின் உடலில் உள்ள பகுதிகளின் எச்சங்கள் புதைக்கப்படும். (எச்சங்கள்– உடலில் உள்ள பல், எலும்பு, முடி, போன்றவை) இந்த அரைவட்டம் முழுவதுமாக அடைக்கப்பட்டுள்ளது. நாம் கோயிலுக்குள் நுழைவதைப் போல் இதில் நுழைய முடியாது. இதன் மேற்புரத்தில் குடை போல் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்தூபம் சாதாரணமாக ஒரு நன்கு அலங்கரிக்கப்பட்ட கல்வேலியால் சூழப்பட்டுள்ளது. ஆரம்பத்தில், அசோகர் காலத்தில் இவை மண், செங்கல் மற்றும் கட்டையால் கட்டப்பட்டன. பிறகு கற்களால் கட்டப்பட்டன.

ஸ்தூபம் பல பொருள்கள் கொண்டுள்ளது – இது புத்தரைக் குறிப்பிடுவதாக கருதப்படுகிறது. ஸ்தூபத்தின் குவிமாடம் அண்டத்தையும் மையத்தில் உள்ள தூண் அனைத்தும் சூழலும் பூமியையும் சொர்க்கத்தையும் இணைக்கும் அச்சாகவும் கருதப்படுகிறது. யாத்திரிகர்கள் ஸ்தூபத்திற்கு மலர்கள் தூவியும் வலம் வந்தும் அதன் முன்பாக தியானம் செய்தும் வழிபடுவர்.

> ஒரு ஸ்தூபத்திற்கும் கோயிலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை? மக்கள் அவற்றை எவ்வாறு வழிபடுகின்றனர்?

தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் ஸ்தூபத்தின் எஞ்சிய பாகங்களை ஆந்திர பிரதேசத்தின் அமராவதி, பட்டிப்ரோலு, ராம தீர்த்தம், சாலிகுண்டம் போன்ற பல இடங்களில் கண்டறிந்தனர். புத்தரின் நினைவுச்சின்னங்கள் கொண்ட படிக கலசம் ஒன்று பட்டிப்ரோலு ஸ்தூபத்திலிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



*படம் 20.12 மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாஞ்சி ஸ்தூபம் புகைப்படத்தைப் பார். இது அசோகரால் கட்டப்பட்ட மிக முக்கியமான தூண்களில் ஒன்று அரைக்கோள வடிவம், மேடை, குடை மற்றும் வேலி ஆகியவற்றை உன்னால் அடையாளம் காண முடிகிறதா?*

SCERT TELANGANA



படம் 20.13 நேலகொண்டபள்ளியில் உள்ள புத்த மத ஸ்தூபம், கம்மம் மாவட்டம்



கடம் 20.14 அமராவதி ஸ்தூபம்

குண்டூர் மாவட்டத்திலுள்ள அமராவதி ஸ்தூபம் ஆந்திரப்பிரதேசத்தில் மிகவும் புகழ்பெற்ற ஒன்றாகும். இது சாதவாகனர்களின் ஆட்சிகாலத்தில் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்கட்டப்பட்டது.

இந்நினைவு சின்னத்தை ஒரு சிற்பக்கலைக் குழு வடிவமைத்தது. மேல் பாகத்தில் பறக்கும் உருவங்களை உங்களால் காண முடிகிறதா? அவை சொர்க்கத்திலிருந்து புத்தரை வழிபட வந்த தெய்வங்கள். கீழ்பாகத்தில் சில ஆண்களும் பெண்களும் தலைகுனிந்து புத்தரை வழிபடுகின்றனர். நுழைவாயிலில் நான்கு சிங்கங்கள் இருப்பதையும் நீங்கள் காணலாம். அவை எதை உணர்த்துகின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?

தற்போது அமராவதி ஸ்தூபம் எஞ்சிய பாகங்களின் மேடாக உள்ளது. இந்த குழுவால் 1900 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட போது இது எவ்வாறு இருந்திருக்கும் என்று நாம் கற்பனை செய்து பார்க்க வேண்டும். ஸ்தூபத்தில் புத்தரும் அவருடைய போதனைகளையும் விளக்கும் பல சிற்பங்களால் சூழப்பட்டிருப்பதைக் காணலாம் இச்சிற்பங்களின் குழுவை ஆங்கிலேயர் கண்டறிந்து அவற்றை இலண்டனுக்கு எடுத்துச் சென்றனர். எடுத்துச் செல்ல முடியாத சில சிற்பங்களை அவர்கள் சென்னை அருங்காட்சியகத்தில் விட்டுச் சென்றனர்.

இச்சிற்பக் குழுவை ஆதாரமாகக் கொண்டு இந்த ஸ்தூபம் முதலில் எவ்வாறு இருந்திருக்கும் என்று மக்கள் கற்பனை செய்ய முயற்சிக்கின்றனர் புனரமைப்புப் படத்தைப் பார்த்து அதை சிற்பக் குழுவுடன் ஒப்பிட்டுப்பார்.




a

படம் 20.15 அமராவதி ஸ்தூபத்தின் புனரமைப்பு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பகுதிகளையும், காலியாக விடப்பட்ட பகுதிகளையும் மற்றும் சிற்பக் குழுவால் சூழப்பட்ட பகுதிகளையும் உங்களால் காண முடிகிறதா? சாஞ்சி மற்றும் அமராவதி ஸ்தூபங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

SCERT TELANGANA

மற்றொரு முக்கியமான ஸ்தூபம் நாகார்ஜுன கொண்டா ஸ்தூபம் ஆகும். இது இக்ஷ்வாகு அரசர்களின் தலைநகரமாகிய விஜயபுரியின் ஒரு பகுதியாகும். இது கிருஷ்ணா நதிக்கரையில் உள்ளது. விஜயபுரியில் எண்ணற்ற ஸ்தூபங்களும், விகாரங்களும் அரண் மனைகளும் இருந்தன. இங்கு அழகாக அலங்கரிக்கப்பட்ட நாடகக் கொட்டகை, நதிகளுக்கு அழைத்துச்செல்லும் மலைத்தொடர்களும் இருந்தன. துரதிஷ்டவசமாக இன்றைக்கு இந்நகரம் முழுதும் நாகார்ஜுன அணைக்கட்டு பகுதியில் மூழ்கியுள்ளது. எண்ணற்ற சிற்பங்களும் பிற எஞ்சிய பகுதிகளும் விலக்கப்பட்டு அருகிலிருந்த அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டன.

நாகார்ஜுன கொண்டா மற்றும் அமராவதியின் சில சிற்பங்களை பார். இந்த சிற்பங்கள் தென் இந்தியாவின் பண்டைய சிற்பக் கலை செயற்பாடுகளைக் குறிப்பிடுகின்றன. அவற்றிலிருந்து அக்கால மக்கள் எவ்வாறு இருந்தனர் என்பதையும் நீங்கள் காணலாம்.



*படம் 20.17 நாகார்ஜுன கொண்டாவின் சில சிற்பங்கள், புத்த சங்கத்தில் ஆறு இளவரசர்களும் சவரத்தொழிலாளியான உபாலியும் சேர்வதைக் காட்டுகிறது. அடக்கத்தை இளவரசர்களுக்கு போதிப்பாகதற்காக புத்தர் முதலில் உபாலியை பிறகு ஆறு இளவரசர்களையும் சேர்த்துக் கொள்கிறார். புத்தருக்கு அருகில் ஒரு தாழ்ந்த இருக்கையில் உபாலி அமர்ந்திருப்பதைக் காணலாம் இளவரசர்களின் அதிர்ச்சி மற்றும் ஆச்சரியத்தையும் உபாலியின் அடக்கத்தையும் உங்களால் காண முடிகிறதா? அடுத்த பக்கத்தில் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணின் உருவத்தைக் காட்டும் மற்றொரு சிற்பம் உள்ளது.*



*படம் 20.18,,,,,,, கிராமங்களில் தினசரி வாழ்க்கையை காட்டும் சாஞ்சி சிற்பம் இது புத்தர் கிராமத்திற்கு வருகை புரியும் ஓர் அழகான சிற்பம். இதில் மக்களால் செய்யப்படும் செயல்களை பட்டியலிடு. இன்றைய கிராமங்களில் இதுபோன்ற காட்சிகளை நீங்கள் பார்க்கிறீர்களா?*



*படம் 20.16 அமராவதியிலிருக்கு சில ஒரு சிற்பங்கள் புத்தரால் அமைதிபடுத்தப்படும் நலகிரி என்னும் யானையை காட்டுகிறது. பட்டத்து யானை கட்டுக்கடங்காமல் போனதால் தெருவிலுள்ள மக்கள் பீதியடைகின்றனர். இருப்பினும் புத்தரைக் கண்டதும் அது அமைதியடைகிறது. மேலும் அவரை வணங்குகிறது. இந்த சிற்பங்கள் ஒரு கதையை எவ்வாறு தெரிவிக்கிறது பார்த்தீர்களா? இந்த கதையின் நீதி என்ன?*

காலப்போக்கில் சிற்பிகள், மேலே காட்டப்பட்ட பகுதிகளைப் போல் அல்லாமல் பெரிய மற்றும் முழு உருவங்களை கொண்டு அமைத்தனர். புத்தரின் மிகப்பெரிய கற்சிலைகள் புத்தரின் அமைதியான, அடக்கமான புனித ஆளுமையை மக்களுக்கு வெளிப்படுத்த வடிவமைக்கப்பட்டன. புத்தரின் புகழ்பெற்ற சிற்பங்கள் வடமேற்கில் காந்தாரத்திலிருந்தும் உத்திரப்பிரதேசத்தில் மதுரா மற்றும் சாரநாத்திலிருந்தும் வந்தன. படம் 17.11 இச்சிற்பங்களில் சிலவற்றை நாகார்ஜுன கொண்டாவிலும் நாம் பார்க்கலாம்.

விகாரங்கள் என்பவை மடங்கள் அல்லது புத்தமதத் துறவிகள் வாழும் இடங்களாகும். இங்கு மதபோதனைகள் வழங்கப்பட்டன. விகாரம் என்பது ஒரு சிறந்த முற்றத்தைச் சுற்றிலும் சிறிய அறைகளைக் கொண்ட ஒரு ஸ்தூபம் அல்லது ஒரு முனையில் புத்தரின் உருவச்சிலை கொண்ட சிறய கோயிலும் அடங்கியது. இந்த கோயிலை சைத்தியம் என்பர். இது துறவிகளின் வழிபாட்டுத் தலம் ஆகும்.

நாசிக் மற்றும் கார்லே போன்ற மலைப் பகுதிகளில் குகை விகாரங்கள் அகழ்ந்தெடுக்கப் பட்டன. இவை இரண்டிலும் சில அழகான சித்திரங்கள் செதுக்கப்பட்டடுள்ளன. கீழே அவற்றைப் பற்றி நீங்கள் படிக்கலாம்.

பிற விஹாரங்கள் பல்கலைக் கழகங்களாக விளங்கிய தட்சீலம், நாகார்ஜுன கொண்டா மற்றும் நாளந்தா ஆகியவற்றை போன்று செங்கற்கள் அல்லது கற்களால் கட்டப்பட்டன. விஹாரங்களில் புத்தத்துறவிகள் தங்கள் சீடர்களுக்கு புத்தமத புனித நூல்களை போதித்தனர். விஹாரங்களில். கல்வியை போதிப்பது மட்டுமின்றி புத்தத்துறவிகள் மக்களின் உடல்நோய்களையும் குணப்படுத்தினர். சாதாரண ஆண்களும் பெண்களும்-விவசாயிகள், வியாபாரிகள் இராணுவ வீரர்கள், கைவினைஞர்கள், இந்த விஹாரங்கள் கட்டவும், கைவினைஞர்கள் இந்த விஹாரங்கள் கட்டவும், இதனை பராமரிப்பதற்கும் தாராளமான நன்கொடைகளை வழங்கினர் என்று இந்த விகாரங்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

புத்தமத கல்வி நிலையங்கள் வெளி நாட்டு யாத்திரிகர்களையும் கவர்ந்தது. புத்தரது வாழ்க்கையில் தொடர்புடைய இடங்களையும் புகழ்மிக்க மடாலாயங்களையும் காண சீன யாத்திரிகர்களான பாஹியான், இட்சிங், யுவான் சுவாங் போன்றோர் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர்.

யாத்திரிகர்கள் என்பவர்கள் புனிதமான இடங்களுக்கு வழிபாட்டிற்காக பயணங்கள் மேற்கொண்டு வரும் மக்களாகும்.

யுவான் சுவாங்கும் மற்றவர்களும் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற மடாலயமாக விளங்கிய நலாந்தாவில் (பீஹார்) கல்வி கற்பதற்காக சிலகாலம் தங்கினர். அவர் இதைக் குறித்து பின்வருமாறு விளக்குகிறார்.

ஆசிரியர்கள் அதிகமான திறமையையும் மதிநுட்பத்தையும் கொண்டவர்கள். அவர்கள் சிரத்தையுடன் புத்தரின் போதனைகளை கைபிடிப்பர். மடாதிபதிகள் கண்டிப்பானவர்களாக இருப்பர். ஒவ்வொருவரும் அவற்றை பின்பற்றுவர். நாள் முழுவதும் விவாதங்கள் நடைபெறும். முதியோர்களும் இளைஞர்களும் ஒருவருக்கொருவர் உதவி செய்துக்கொள்வர். பல்வேறு நகரங்களிலிருந்து கற்றவர்கள் தங்கள் சந்தேகங்களை போக்கிக் கொள்ள இங்கு வருவர். வாயிற்காவலன் புதியதாக வருபவர்களிடம் சில கடினமாக கேள்விகள் கேட்பார். இக்கேள்விகளுக்கு விடையளித்த பின்னரே அவர்கள் உள்ளே நுழைய அனுமதிக்கப்படுவர். பத்துபேர்களில் ஏழு அல்லது எட்டுபேரால் விடையளிக்க இயலாது.

## பாறைவெட்டு சைத்தியங்களும் முற்கால கோயில்களும்.

மகாராஷ்ரத்தில் கார்லே, பாஜா, கன்னேரி, மற்றும் நாசிக் போன்ற இடங்களில் சைத்தியங்களையும் விஹாரங்களையும் கட்ட சாதவாகனர் காலத்தில் வியாபாரிகளும் கைவினைஞர்களும், அரசர்களும் தாராளமாக நன்கொடை வழங்கினர். இவை மலைகளின் மேல் குகைகளைப்போல் கட்டப்பட்டன. சிற்பிகள் உளியையும் சுத்தியையும் கொண்டு உயிரோட்டமாக பாறைகளை செதுக்கினர். தச்சர்களும் மரம் வெட்டுபவர்களும் உருவாக்கிய படங்களை பாறைகளில் உருவாக்கினர். அவர்கள் வழிபாட்டுக்கூடம், ஸ்தூபங்கள், சிறு அறைகள் – அனைத்தையும் பாறைகளாலேயே துறவிகளுக்காக அமைத்தனர். அவர்கள் மக்கள், விலங்குகள், சில நேரங்களில் புத்தரின் உருவத்தையும் அழகுடன் செதுக்கினர். 2100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கார்லே சைத்தியத்தின் படங்களைப்பார்.

- சிற்பங்களில் காட்டப்பட்ட ஆண்களும் பெண்களும் சமமான தகுதியைப் பெற்றிருந்தனரா? காரணங்களைக் கூறு.
- சைத்தியத்தின் எந்தப் பகுதி முதலிலும் எந்த பகுதி கடைசியிலும் செதுக்கப்பட்டன?

SCERT TELANGANA



படம் 20.19 கார்லே குகைச் சைத்தியத்தின் வெளிப்புற வாயில்.



படம் 20.20 சைத்தியத்தின் உட்பகுதி



படம் 20.21 & 20.22 கார்லேவின் சிற்பங்கள்

இக்காலங்களிலும் தச்சர்களும், கட்டிட வல்லுநர்களும் கோயில்களையும் சைத்தியங்களையும் மண், கட்டை மற்றும் கற்களால் உருவாக்கிக் கொண்டிருந்தனர். இக்கோயில்களில் சில கிருஷ்ணருக்காகவும் மேலும் சில புத்தருக்காவும் அமைக்கப்பட்டன. ஆனால் இவை நீடிக்கவில்லை மத்தியப் பிரதேசத்தின் சாஞ்சியில் பழைய கோயில்களுள் ஒன்று இன்றும் காணப்படுகிறது. இது எளிய அமைப்பினை உடையது. புத்தரின் உருவச்சிலை வைக்க ஒரு சிறு அறையும் (கர்ப்ப கிருகம்) சுவர்கள் இல்லாத தூண்களை மட்டும் கொண்ட சிறு மண்டபமும் காணப்படுகிறது. கதவும் தூண்களும் அழகாக செதுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இக்கோயிலில் எந்த கோபுரம் (அ) சிகரமும் இல்லாத தட்டையான கூரையை கொண்டுள்ளது. இது சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. கீழே படத்தைப்பார்.



படம் 20.23 சாஞ்சியின் பழைய புத்தர்கோயில்

**முக்கியச் சொற்கள்**

| | |
|---|---|
| சைத்தியம் | சின்னங்கள் |
| விகாரம் | துறவிகள் |
| சிற்பம் | ஸ்தூபம் |
| பிராமி எழுத்து | மடாலயம் |
| எழுத்து வடிவம் | |

SCERT TELANGANA

## உனது கற்றலை மேம்படுத்துக

1. அசோகர் தன் கற்தூண்களில் செதுக்க சிங்கங்களையும் எருதுகளையும் ஏன் தேர்ந்தெடுத்தார்? பசுக்கள் அல்லது கிளிகளை ஏன் தேர்ந்தெடுக்கவில்லை? அவரிடத்தில் நீ இருந்தால் எந்த விலங்கினை தேர்ந்தெடுப்பாய்? உன்னுடைய தேர்வின் காரணங்களை எழுது. (AS1)

   நீங்கள் அவரது நிலையில் இருந்திருந்தால் எந்த விலங்கினைத் தேர்ந்தெடுத்திருப்பீர்? உன் தேர்ந்தெடுப்பிற்கான காரணங்களைக் கூறு?

2. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பல ஸ்தூபங்கள் நதிக்கரைகளிலேயே உள்ளன. (AS1)

   (சாலிகுண்டம், நாகார்ஜுன கொண்டா, அமராவதி போன்றவை) இந்த ஸ்தூபங்களை அமைக்க புத்தத்துறவிகள் ஏன் இந்த இடங்களைத் தேர்ந்தெடுத்தனர்.

3. யானையை அடக்குவதைக் காட்டும் படத்தைப் பார். ஒரு உயரமான பகுதியில் இருந்த சில மக்கள் இந்த நிகழ்ச்சியை கவனிப்பதைப் பார்க்கலாம். இந்த மக்கள் யார் என்று நீ நினைக்கிறாய்?(AS1)

4. பாறை வெட்டு சைத்தியங்களும், விகாரங்களும் இன்று வரை நல்ல நிலையில் இருப்பதன் காரணம் என்னவென்று நினைக்கிறாய்?(AS1)

5. சைத்தியத்திற்கும் கோயிலுக்கும் இடையே உள்ள பொதுவான அம்சங்களை ஒப்பிடு. சைத்தியத்தின் வழிபாட்டு முறைக்கும் கோயிலின் வழிபாட்டு முறைக்கும் வேறுபாடு ஏதேனும் உள்ளதா?(AS1)

6. புத்தமத ஸ்தூபங்களும், சைத்தியங்களும் ஏன் புனிதம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன?(AS6)

7. விகாரங்களையும், சைத்தியங்களையும் புத்தமதத் துறவிகள் எவ்வாறு பயன்படுத்தினர்?(AS1)

8. இந்திய வரைபடத்தில் புத்த, ஜைன மத புனித இடங்களை குறிக்கவும்.(AS5)

9. பக்கம் 178ல் உள்ள முதலாம் பத்தியை படித்து கலந்துரையாடவும்.(AS2)

**செயல் திட்டம் :**

உங்கள் கிராமம் அல்லது நகரத்திலுள்ள வழிபாட்டுத் தலத்திற்குச் சென்று அதனுடைய அமைப்பின் வரைபடத்தை வரை. அந்த அமைப்பின் ஒவ்வொரு பகுதியின் பெயரையும் தெரிந்துகொள், அதன் பயன்பாடு மற்றும் பொருள்களை அறிந்துக்கொள். இந்த வழிபாட்டுத் தலத்தினைப் பற்றி ஒரு அறிக்கை தயாரித்து உன் வகுப்பின் ஒரு கண்காட்சியை நடத்து.

SCERT TELANGANA

அத்தியாயம்

# 21

# தெலங்கானாவில் பசுமை

கீழே உள்ள படங்களை உற்று நோக்கி இரண்டையும் ஒப்பிடுக.



படம் - 1



படம் - 2

- முதல் படத்தில் உள்ள நிலைகளுக்கு காரணங்கள் என்ன என்று நீ கருதுகிறாய்?
- மேலே உள்ள படங்களில் காணப்படும் நிலைகளை உங்கள் பகுதியுடன் ஒப்பிடுக.
- இரண்டாம் படத்தில் உள்ள நிலை போன்று நம் பகுதிகளை உருவாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

தெலங்கானா $15^{0}46'$ மற்றும் $19^{0}47'$ வடக்கு அட்சரேகைகளுக்கிடையிலும் $77^{0}16'$ மற்றும் $81^{0}43'$ கிழக்கு தீர்க்க ரேகைகளுக் கிடையிலும் அமைந்துள்ளது. அது தக்காணப் பீடபூமியின் மித வறட்சி பகுதியில் அமைந்துள்ளது. வானிலை, பெரும்பாலும் வெப்பமாகவும், வறண்டும் காணப்படும். மழையானது சொற்ப அளவிலேயே பெய்வதாலும், தவறுவ தாலும் இலையுதிர்க்காடுகளாகவும் புதர் நிலங்களாகவும் இப்பகுதி காணப்படுகிறது.

இந்திய தேசிய வனக்கொள்கை (1988)யின்படி சுற்றுப்புறத்தின் நிலைப் பாட்டினையும் சூழ்நிலையியல் சமநிலையை நிர்வகிக்கவும் மொத்த புவியியல் பரப்பில் மரங்களின் அடத்தி குறைந்தபட்சம் 33% இருக்க வேண்டும்.

இது அனைத்து உயிர் வடிவங்களான மனிதர்கள், விலங்குகள் போன்றவற்றின் நிலைப்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது. ஆனால் தெலங்கானாவில் தற்போதைய மரங்களால் சூழப்பட்ட பரப்பின் அளவு 24% மட்டுமே. மரங்களை வெட்டுவதால் குறைவான மழைபொழிவும் அது தொடர்பான நீர் பிரச்சனைகளுக்கும் காரணமாக உள்ளது. தொடர்ச்சியான காடுகள் அழிப்பினாலும், அழிக்கப்பட்ட காடுகளாலும் அதிக அளவு மண் அரிப்பினாலும், காட்டு விலங்குகளான குரங்குகள், கரடிகள், சிறுத்தைகள் போன்றவை கிராமங்களுக்குள் புகுந்து குடும்பங்களை தொந்தரவு செய்கின்றன.

தெலங்கானா மாநில அரசு 33% காடுகள் பரப்பினை அடைய பரவலான மரம்நடும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது அது இரண்டு வகைகளில் திட்டமிட்டுள்ளது.

i) குறிப்பிடப்பட்ட காட்டுப் பகுதிகளில் தொடங்குதல்

ii) குறிப்பிடப்பட்ட காட்டுப் பகுதிகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் தொடங்குதல்.

SCERT TELANGANA

பரவலான மரம் நடும் செயற்பாடுகள் சாலையோர வழிகளிலும் நதி மற்றும் கால்வாய்க்கரைகள், தாவரங்களற்ற மலைக்குன்றுகள், ஏரிக்கரைகள் மற்றும் கடல் அலை பகுதிகள், பள்ளிகள், மற்றும் கல்லூரிகள் மதம் சார்ந்த இடங்கள், குடியிருப்பு பகுதிகள், சமூக நிலங்கள், நகராட்சிப் பகுதிகள், தொழில் பூங்காக்கள், பண்ணை நிலங்கள் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.



படம்-3 மரம் நடுத-ல் பங்குபெற்றுள்ள மாணவர்கள்

- உங்கள் பள்ளியில் வன மகோற்சவம் எவ்வாறு நடந்தது?
- உங்கள் பள்ளியில் நடப்பட்ட பல்வேறு மரக்கன்றுகளின் பட்டியலைத் தயாரிக்கவும்.

இதனை அடைய மாநிலத்தில் 230 கோடி மரக்கன்றுகளை நடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. 4000க்கும் மேலான தாவர வளர்ப்பகங்கள் வன மற்றும் பிற அரசுத் துறைகள் மூலம் நிறுவப்பட்டுள்ளன. வளர்ப்பகங்களி-ருந்து மரக்கன்றுகள் பசுமை திட்டத்தில் பங்குபெறும் யாவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. வாழ்க்கையின் பல நிலைகளிலும் உள்ள மக்கள், அரசு நிறுவனங்கள், மாவட்ட ஆட்சியர் உட்பட்ட அதிகாரிகள், முக்கியமான குடிமக்கள் பிரதிநிதிகள், நீதிபதிகள், காவலர்கள், பிரபலங்கள் போன்றோர் இதை வெற்றிபெறச் செய்ய இதில் பங்கு பெறுகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மருத்துவத் தாவரங்களான வேம்பு, துளசி போன்றவையும், கனி மற்றும் கொட்டைகளைக் கொண்ட தாவரங்களான பாதாம், மா, சப்போட்டா, கொய்யா, சீதாப்பழம் போன்றவையும் பூக்களைத் தரும் தாவரங்களான மல்-, சாமந்தி, ரோஜா, செம்ம-ற்கொன்றை போன்றவையும் மேலும் பல பிற தாவரங்களான வெள்ளி ஓக் அரசமரம், ஆலமரம், நாவல் மரம் போன்றவையும் நடப்படுகின்றன.

நாம் தாவரங்களையும் மரங்களையும் அதிக அளவில் வளர்த்தால் அது மழைபொழிவிற்கும் புற மற்றும் நிலத்தடிநீர் மட்டங்களை மேம்படுத்தவும் பயன்படும். ஏரிகளும் கிணறுகளும் நீரால் நிரம்பியிருப்பதால் வேளாண்மைக்கு சிறந்த முறையில் நீர்ப்பாசனத்தை வழங்கும். செம்மறி, வெள்ளாடுகள், பசுக்கள் போன்ற விலங்குகளுக்கு அதிக அளவில் தீவனம் கிடைக்கும், புல்வெளிகளும், பசுமையான சமவெளிகளும் இந்த விலங்குகளை மேய்ப்பதற்கு பயன்படும். தொழிற்சாலைகளி-ருந்தும், வாகனங்களி-ருந்தும் படிம எரிபொருள் எரிப்பதாலும் வெளியாகும் புகைகளால் ஏற்படும் மாசுகளும் குறைக்கப்படும். காட்டு விளைபொருள்களான கட்டைகள் மூங்கில், மருத்துவ மூ-கைகள், பீடி இலைகள், விறகு, தேன், கனிகள், கொட்டைகள் போன்றவை இக்காடுகளி-ருந்து கிடைக்கும். பறவைகளுக்கும் வன விலங்குகளுக்கும் போதிய புக-டங்கள் கிடைப்பதால் அவை மனித குடியிருப்பு களுக்குள் நுழையாது.

காட்டுப்பரப்பு அதிகரித்தால் மழை பொழிவு அதிகரிக்க துணைபுரியும் என்று நீ எவ்வாறு கூறுவாய்?

உங்கள் கிராமம்/நகரம் அல்லது உங்களுடைய பகுதிகள் முழுவதும் மரங்களாலும் பசுமையினாலும் நிரம்பியிருப்பதைப் போன்று நிலைகளை கற்பனை செய்யவும்.

மரக்கன்றுகளை நடுதல் நம்மில் பலருக்கு மிகவும் ஆர்வமானதாக இருந்தாலும் தாவரங்களையும் பாதுகாப் பதிலேயே பிரச்சனை உள்ளது. பொதுவாக அதிகமான மரக்கன்றுகள் நடப்பட்டாலும் நம்முடைய அலட்சியப் போக்கால் அவற்றில் பெரும்பாலானவை வளர்வ தில்லை.

SCERT TELANGANA



படம் – மரக்காவலர்களைக் கொண்டு மரம் நடுதல்.

**இந்தியாவின் வன மனிதன்**

யாதவ் மோலய் பாயங் என்பவர் அசாமின் ஜோராட் மாவட்ட வனப்பணியாளராவார் அவர் தன் 16ஆம் வயதில் 1979ல் தொடங்கப் பட்ட சமூகக்காடு வளர்ப்பு திட்டத்தில் 5 ஆண்டுகள் தொடர்ந்த செயல் திட்டத்தில் பணியாளராக பங்குபெற்றார். செயல்திட்டம் முடிந்த பின்னர் அனைத்து பணியாளர்களும் சென்று விட்டனர். ஆனால் இவர் மட்டும் சுயமாக அதிகமான மரங்களை தொடர்ந்து நட்டு வந்தார். அவர் பிரம்மபுத்திரா நதியின் மணற்பகுதியில் 20 ஆண்டுகளாக சுமார் 1360 ஏக்கர் நிலப்பரப்பில் பல மரங்களை நட்டு அவற்றை பாதுகாத்தார். அவருடைய பணியால் அந்த முழு பகுதியும் மோலாய்க்காடு என்னும் ஒரு நாடாக மாறி அவருடைய பெயரில் அழைக்கப்பட்டது. அவர் இந்தியாவின் வன மனிதன் என்று அழைக்கப்பட்டார். அவருக்கு நம் நாட்டின் நான்காம் உயரிய விருதான 'பத்மஸ்ரீ' வழங்கப்பட்டது.

மாநில அரசு இத்தாவரங்களைப் பற்றி ஊடகத்தில்/இணையத்தில் பயன்படுத்தி அனைத்து தாவரங்களும் பாதுகாக்கப்படு கின்றனவா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்ளும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. தேவை எங்கு உள்ளதோ அங்கு மர பாதுகாப்பு வலைகள் அலுவலர்களால் பள்ளிகளுக்கும் அலுவலகங்களுக்கும் மற்றும் பிற இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இந்த தாவரங்களைப் பாதுகாப்பது நம் அனைவருடைய முதன்மையான கடமையாகும். பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் சமூகத்தினரின் ஈடுபாட்டுடன் தாவரங்கள் நடுதல் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் சில தாவரங்களை எடுத்துக் கொண்டு வகுப்பு வாரியாகவும் அல்லது குழுவாரியாகவும் அவற்றைப் பாதுகாப்பர். அவர்களுடைய ஓய்வு நேரத்தில் பள்ளி நேரத்திற்கு முன்பாக அல்லது பின்னர் அவர்கள் தாவரங்களுக்கு நீர் ஊற்றுவர். அவற்றின் பாதுகாப்பிற்கு மரப்பாதுகாப்பு அல்லது வே-களை ஏற்படுத்தி செல்வர். பள்ளிகளில் இவ்வகையான பசுமை திட்டத்தை அரசாங்கம் அவர்களுக்கு பரிசு வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது.

சில பள்ளிகளில் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் தரப்பட்டு அவற்றை தங்களுடைய வாழ்விடங்களில் நடச்செய்கின்றனர். இவ்வாறு பெற்றோர் களும் சமூகமும் மறைமுகமாக இதில் பங்குபெறுகின்றனர்.

மரம் நடுத-ன் பரவலான திட்டத்தில் 230 கோடி மரங்கன்றுகளை நடுதல் சமூகத்தின் அனைத்து மக்களும் ஆவலுடனும் விருப்பத்தோடும் பங்கு பெற்றால் தான் அடைய முடியும். மற்ற சில பள்ளிகளில் ஒருவருக்கு ஒரு செடி நடுதல் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- உங்கள் பகுதியில் மரம் நடுதல் எவ்வாறு நடந்தது என்பதை வகுப்பறையில் கலந்துரையாடவும்.
- உங்கள் கிராமம்/நகரம் அல்லது பகுதியில் உள்ள மரங்கள், தோட்டங்கள் பூங்காக்கள் பற்றி கலந்துரையாடவும்.

மரங்களை காப்பாற்றுங்கள்



அவை உங்களைப் பாதுகாக்கும்

SCERT TELANGANA

## வனஜீவி இராமையா

70 வயதான தரிபள்ளி இராமைய்யா "வனஜீவி இராமையா" என்று அனைவராலும் அழைக்கப்படுவர். இவர் தெலங்கானா மாநிலத்தின் கம்மம் (கிராம்) மண்டலத்தின் ரெட்டிபள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் புகழ்பெற்ற முழக்கமான "ஒருசெடியை நடு ஒரு உயிரைக் காப்பாற்று" என்பதை மரம் நடுத-ன் பயன்களைப் பற்றி விரிவுரையாற்றுவதற்குப் பதிலாக அதற்கு செயல் வடிவம் கொடுத்தார். உள்ளூர் வாசிகளுக்கு அவர் தன் பாக்கெட்டில் விதைகளையும் சைக்கிளில் மரக்கன்றுகளையும் அதிக அளவுச் சுமைகளையும் ஏற்றி பல மைல்களுக்குச் செல்பவராகத் தெரியும். அவர் நம் சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க மரம் நடுவதன் தேவையை உண்மையிலேயே உணர்ந்தவர். அவர் செல்லும் ஒவ்வொரு தாவரங்களற்ற பகுதிகளிலும் தயங்காமல் மரக்கன்றுகளை நடுவார். அவர் மரக்கன்றுகளை நடுவதோடு மட்டுமின்றி அவற்றை வளர்த்து தனிநபர்களுக்கும் மரம் நடும் பணியை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து அதை ஒரு சமூக இயக்கமாக மாற்றினார். சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் அவருடைய விடாமுயற்சியும் பசுமை பரப்பினை விரிவாக்க அவருடைய புகழ்மிக்க தொண்டும் அவருக்கு நாட்டின் பெருமைக்குரிய விருதான 'பத்மஶ்ரீ' யை அவருக்குப் பெற்றுத் தந்தது.

## முக்கிய சொற்கள்

சூழ்நிலையியல் சமநிலை　　மாசடைதல்　　நிலத்தடி நீர் மட்டம்　　பசுமை

## உனது கற்றலை மேம்படுத்து

1. தெலங்கானாவில் பசுமையை அதிகரிப்பது அவசியம் ஏன்? ($AS_1$)
2. காடுகளின் பயன்கள் யாவை? ($AS_1$)
3. தாவரங்களை பாதுகாக்க சில நடவடிக்கைகளைக் கூறுக ($AS_1$)
4. சாலைகளின் இருபுறங்களிலும் மரம் நடுவதால் அவை நமக்கு எவ்வாறு பயன்படுகிறது? ($AS_1$)
5. மரக்கன்றுகள் குறித்த செய்தித்துண்டுகள் சேகரித்து, மரக்கன்றுகளை நடுவது தொடர்பான செய்திகளைக் காட்டும் ஒரு ஆல்பம் தயாரிக்கவும். ($AS_3$)
6. உங்கள் பகுதியில் அண்மையில் வனமகோற்வசம் எவ்வாறு நடைபெற்றது? ($AS_4$)
7. காடு வளர்ப்பு பற்றி சில முழக்கங்களை உருவாக்கவும். ($AS_6$)



SCERT TELANGANA

## எதிர்பார்க்கப்படும் கல்வி தரங்கள்

**வகுப்பறை முறைகள் :** புத்தகத்தில் தரப்பட்டுள்ள விஷயங்களை மாணவ மாணவிகள் புரிந்து கொள்ள போதுமான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அவ்வப்போது கேட்கப்படும் கேள்விகள், இதற்கு பயன்படும் இக்கேள்விகள் கலந்துரையாடல், விவாதித்தல், காரணங்களை கண்டறிதல், வரைபட பரிசீலனை, ஆராய்தல், தனியார் ஆய்வு, கற்பனை செய்தல், நடை முறைபடுத்தி பார்த்தல் போன்றவற்றிற்கு சம்பந்தப்பட்டவைகளாக இருத்தல் வேண்டும்.

1) **பாடக்கருத்தை புரிந்து கொள்ளுதல் :** தகவல் சேகரித்தல், கலந்துரையாடல், விவாதித்தல், தனியார் ஆய்வு, ஆராய்ந்து அறிதல் மூலமாக அடிப்படை கருத்துக்களை கற்றிடுவதை மேம்படுத்த வேண்டும்.

2) **படித்தவற்றை புரிந்து கொண்டு சொல்லும் திறன் :** விவசாயிகள், தொழிற்சாலை தொழிலாளிகள் படங்கள் குறித்த தனியாள் ஆய்வு பாடப்புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை நேரடியாக பாடக்கருத்தை வெளிப்படுத்தாது. எனவே, குழந்தைகள் அவற்றை குறித்து கருத்துக்களை புரிந்து கெள்ள போதிய கால அவசாகம் தரப்படவேண்டும்.

3) **தகவல் சேகரிப்பு திறன்கள் :** சமூக அறிவியல் போதனை முறையில் பாடப் புத்தகம் மட்டும் எல்லா விதமான தகவல்களை பெற்றிருக்காது. நகர் புறங்களின் வாழும் மாணவர்களும், அவர்கள் பகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தகவல்களை சேகரிக்க முடியும். ஆனால் அத் தகவல்களில் பாடநூலில் இடம் பெறாது. இவ்வாறான தகவல்களை செயல்திட்டங்கள் மூலம் சேகரிக்கலாம். தான் வாழும் பகுதியின் நீர் ஆதாரங்கள் பற்றி தகவல்களை சேகரித்து, நீரை பயன்படுத்தி சேமிக்கவும் வேண்டும். தன்னுடைய பகுதியின் அனைத்து துறைகளை சேர்ந்த தகவல்களையும் சேகரிக்க வேண்டும்.

4) **காரணத்தை விளக்குதல் :** பல்வேறு மக்களின் வாழ்க்கை மற்றும் வட்டாரப் பகுதிகளைப் பற்றி ஒப்பிட மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இவைகளுக்கு பலக் காரணங்களை உருவாக்க முடியும்.

5) **வரைபடம் மற்றும் படம் வரையும் திறன்கள் :** பாடநூலில் பல வரைபடங்களும் படங்களும் உள்ளன. இருப்பிடங்களை குறிக்கும் திறனை வளர்த்தல், வகுப்பறையின் அகலம், நீளம் ஆகியவற்றை வரையும் திறனை வளர்த்தல், கிராம வரைபடத்தை வளர்த்தல் ஆகியவையாகும். இப்பாடநூலில் பலவகையான செய்திப்படங்களும், படங்களும் வழங்கப்பட்டுள்ளன. கட்டிட படங்களும் உள்ளன.

6) **பாராட்டுதல் :** நமது நாட்டில் மொழி, கலாச்சாரம், சாதி, மதம் என பல வேற்றுமைகள் உள்ளன. சமூக அறிவியல் பாடங்கள் இவ்வேறுபாடுகளைப் பற்றி புரிந்து கொண்டு சமூகத்தில் வாழ்ந்திட உதவுகிறது.

SCERT TELANGANA

# Appendix

This additional maps are to be used wherever necessary.

World Political Map




SCERT TELANGANA

# India Physical Map




SCERT TELANGANA




Transport Network System in Telangana State




SCERT TELANGANA

# Telangana Political Map



SCERT TELANGANA

# Telangana State Symbols

| Sl. No. | State Symbol | Common Name | Telugu Name |
|---|---|---|---|
| 1. | State Animal | Spotted Deer | Jinka |
| 2. | State Bird | Indian Roller | Pala Pitta |
| 3. | State Tree | Jammi Chettu | Jammi |
| 4. | State Flower | Tangedu | Tangedu |


State Animal


State Bird


State Tree


State Flower

State Logo

## National Symbols of India

**National Flag :** Designed by Sri Pingali Venkaiah



**National Symbol :** Lion Capital - Adopted from the Emperor Asoka's dharma stupa established at Saranath.





**National Tree :** Banyan tree

**National Flower :** Lotus



**National Language :** Hindi






**National Fruit :** Mango



**National River :** Ganges

**National Animal :** Royal Bengal Tiger



**National Anthem :** Written by Sri Ravindranath Tagore.

Jana gana mana...





**National Bird :** Peacock




**National Song :** Vande Mataram Written by Sri Bamkim Chandra Chaterji

**National Aquatic Animal :** Dolphin



**National Calendar :** Based on Shaka Samvatsara ( Chaitra masam to Phalguna masam). We follow the Gregorian Calendar officially.

Indian National Calendar (Saka calendar)

| S. No. | Month | Length | Start date (Gregorian calendar) | Ritu | Season |
|---|---|---|---|---|---|
| 1 | Chaitra | 30/31 | March 22 | Vasanta | Spring |
| 2 | Vaishākh | 31 | April 21 | | |
| 3 | Jyaishtha | 31 | May 22 | Grishma | Summer |
| 4 | Āshādha | 31 | June 22 | | |
| 5 | Shrāvana | 31 | July 23 | Varsha | Monsoon |
| 6 | Bhādrapad | 31 | August 23 | | |
| 7 | Āshwin | 30 | September 23 | Sharat | Autumn |
| 8 | Kārtik | 30 | October 23 | | |
| 9 | Agrahayana | 30 | November 22 | Hemant | Winter |
| 10 | Paush | 30 | December 22 | | |
| 11 | Māgh | 30 | January 21 | Sishira | Cold & dewy season |
| 12 | Phālgun | 30 | February 20 | | |



**National Heritage Animal :** Elephant

**Indian Standard Time (IST) :** Based on 82 1/2 degrees East Longitude. Our local time is 5hrs.30min. ahead of Greenwich mean time(GMT).



SCERT TELANGANA

## LEARNING OUTCOMES

**SOCIAL STUDIES**

**CLASS 6**

# The learner....

- Reaches a place using scale and symbols recognises the actual distance and the directions.
- Demonstrates for day & night reasons.
- Locates continents and oceans on the world map.
- Identifies latitudes and longitudes including poles, equator, tropics, etc. on the globe and map.
- Locates States/ UTs of India and neighbouring countries on the map.
- Describes different types of sources (manuscripts, inscripts, religious texts, archaeological materials etc) of ancient Indian history
- Uses archaeological sources - uses in reconstruction of history
- Explains extensive developments during ancient period e.g. hunting gathering stage, the beginning of agriculture.
- Outlines India's significant contribution in the field of culture, astronomy, medicine, Mathematics and Knowledge of metals etc.
- Analyses basic ideas and values of various religions and systems of thought during ancient period.
- Analyses various forms of human diversity and discrimination existing around her/him.
- Differntiates between equality and inequality in various forms to treat them in a healthy way.
- Describes the role of government.
- Analyses the functioning of rural and urban local bodies in sectors like health and education.
- Describes various occupations available in rural and urban areas.
- Explains about panch and patla of Gonds from the tribals.
- Locates Mahajanapadas, important, modern towns in India map.
- Describes the great Maurayan emperor Ashoka and explains the special features.
- Compares and explains the basic characteristics of various religions.

SCERT TELANGANA

# எதிர்பார்க்கப்படும் கல்வி தரங்கள்

1) **வகுப்பறை முறைகள் :** புத்தகத்தில் தரப்பட்டுள்ள விஷயங்களை மாணவ மாணவிகள் புரிந்து கொள்ள போதுமான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அவ்வப்போது கேட்கப்படும் கேள்விகள், இதற்கு பயன்படும் இக்கேள்விகள் கலந்துரையாடல், விவாதித்தல், காரணங்களை கண்டறிதல், வரைபட பரிசீலனை, ஆராய்தல், தனியார் ஆய்வு, கற்பனை செய்தல், நடை முறைபடுத்தி பார்த்தல் போன்றவற்றிற்கு சம்பந்தப்பட்டவைகளாக இருத்தல் வேண்டும்.

2) **பாடக்கருத்தை புரிந்து கொள்ளுதல் :** தகவல் சேகரித்தல், கலந்துரையாடல், விவாதித்தல், தனியார் ஆய்வு, ஆராய்ந்து அறிதல் மூலமாக அடிப்படை கருத்துக்களை கற்றிடுவதை மேம்படுத்த வேண்டும்.

3) **படித்தவற்றை புரிந்து கொண்டு சொல்லும் திறன் :** விவசாயிகள், தொழிற்சாலை தொழிலாளிகள் படங்கள் குறித்த தனியாள் ஆய்வு பாடப்புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை நேரடியாக பாடக்கருத்தை வெளிப்படுத்தாது. எனவே, குழந்தைகள் அவற்றை குறித்து கருத்துக்களை புரிந்து கெள்ள போதிய கால அவசாகம் தரப்படவேண்டும்.

4) **தகவல் சேகரிப்பு திறன்கள் :** சமூக அறிவியல் போதனை முறையில் பாடப் புத்தகம் மட்டும் எல்லா விதமான தகவல்களை பெற்றிருக்காது. நகர் புறங்களில் வாழும் மாணவர்களும், அவர்கள் பகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தகவல்களை சேகரிக்க முடியும். ஆனால் அத் தகவல்களில் பாடநூலில் இடம் பெறாது. இவ்வாறான தகவல்களை செயல்திட்டங்கள் மூலம் சேகரிக்கலாம். தான் வாழும் பகுதியின் நீர் ஆதாரங்கள் பற்றி தகவல்களை சேகரித்து, நீரை பயன்படுத்தி சேமிக்கவும் வேண்டும். தன்னுடைய பகுதியின் அனைத்து துறைகளை சேர்ந்த தகவல்களையும் சேகரிக்க வேண்டும்.

5) **காரணத்தை விளக்குதல் :** பல்வேறு மக்களின் வாழ்க்கை மற்றும் வட்டாரப் பகுதிகளைப் பற்றி ஒப்பிட மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இவைகளுக்கு பலக் காரணங்களை உருவாக்க முடியும்.

6) **வரைபடம் மற்றும் படம் வரையும் திறன்கள் :** பாடநூலில் பல வரைபடங்களும் படங்களும் உள்ளன. இருப்பிடங்களை குறிக்கும் திறனை வளர்த்தல், வகுப்பறையின் அகலம், நீளம் ஆகியவற்றை வரையும் திறனை வளர்த்தல், கிராம வரைபடத்தை வளர்த்தல் ஆகியவையாகும். இப்பாடநூலில் பலவகையான செய்திப்படங்களும், படங்களும் வழங்கப்பட்டுள்ளன. கட்டிட படங்களும் உள்ளன.

7) **பாராட்டுதல் :** நமது நாட்டில் மொழி, கலாச்சாரம், சாதி, மதம் என பல வேற்றுமைகள் உள்ளன. சமூக அறிவியல் பாடங்கள் இவ்வேறுபாடுகளைப் பற்றி புரிந்து கொண்டு சமூகத்தில் வாழ்ந்திட உதவுகிறது.

SCERT TELANGANA

Q. விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு புகைப்படங்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன. முதல் படத்திற்கு "நீல கோளம்" எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளதை நீ ஒப்புக்கொள்கின்றாயா? இரண்டாவது படம் இரவில் எடுக்கப்பட்டதாகும். பல கண்டங்களில் உள்ள உயிர்களைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?



SCERT TELANGANA



## நன்றி அறிவிப்பு

பின்வரும் கல்வியாளர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் இதன் கீழ் நன்றி உரைக்கப்படுகிறது. Dr.K.N. ஆனந்தன், மொழியியல் வல்லுநர், கேரளா. Dr.P. தட்சணமூர்த்தி, துணை இயக்குநர், ஓய்வு, தெலுங்கு அகாடமி, திரு. A.R.K. மூர்த்தி, துணை இயக்குனர், ஓய்வு, தெலுங்கு அகாடமி, திருமதி. தீபா சீனிவாசன், திருமதி. கீர்த்திகா விஸ்வநாத், தொல்லியல் அருங்காட்சியகத் துறை, ஆந்திர பிரதேச அரசு.

பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள புகைப்படங்கள் இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

பக்கம்-30 : கிருஷ்ணா, கோதாவரி டெல்டா, நாசா இணையதளம்.

பக்கம் -131 : ஜெய்சல்மீரில் உள்ள மணற்குன்று படம், ஜில்வினாஸ்

பக்கம்-132 : ஜெய்சல்மீரில் கோட்டை, ரபின்

பக்கம்-133 : ரும்பெட் மடாலயம், காரோல் மிச்செல்

பக்கம்-133 : கஞ்சன்கங்கா, அபினெள பிளிக்கர்.

பக்கம்-159 : சாந்தோம் தேவாலயம், விக்கிப்பீடியா.

இப்புகைப்படங்கள் 2012-ஆம் ஆண்டு பிப்ரவரி 28 முன்பு எடுக்கப்பட்டவை ஆகும்.

SCERT TELANGANA

# VI ஆம் வகுப்பு, சமூக அறிவியல் பாடநூல் திட்டம்

| வஎண் | பாட அம்சங்கள் | துணை அம்சங்கள் | முக்கிய கருத்துகள் |
|---|---|---|---|
| 1. | **கருத்து- பூமியின் மாறுபட்ட புவியியல் அம்சங்கள்** | 1. வரைபடம் தயாரித்தல் மற்றும் கற்றல் | -வரைபடம் வரைதல்<br>-அளவு கோல்<br>-வரைபடத்தின் திசைகள்<br>-சின்னங்கள் |
| | | 2. உலக உருண்டை பூமியின் மாதிரி வடிவம் | - பூமி ஒரு கோளம்<br>- திசைகள்<br>- அட்சரேகைகள், தீர்க்க ரேகைகள் (பூமத்திய ரேகை, துருவங்கள்)<br>-கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள் |
| | | 3. உணவு சேகரிப்புமுதல் விளைவித்தல் வரை பண்டையக் கால மனிதர்கள் | -சேகரித்தல், வேட்டையாடுதல் கற்கருவிகள்<br>-விலங்கு வளர்ப்பு மற்றும் பயிர் வளர்ப்பு<br>-வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்க்கை மற்றும் ஆரம்ப கால விவசாய முறைகள் |
| | | 4. நிலவடிவங்கள் மற்றும் சமவெளி கிராமம் | -நில வடிவங்கள் அறிமுகம்<br>-சமவெளி மற்றும் டெல்டா (பெனுமகூரு கிராமம் குறித்து ஆராய்ந்து அறிதல்) |
| | | 5. நிலவடிவங்கள் மற்றும் பீடபூமி கிராமம் | -பீட பூமி (சலகம் செருபு பீடபூமி கிராமம் குறித்து ஆராய்ந்து அறிதல்) |
| | | 6. நில வடிவங்கள் மற்றும் மலைப் பிரதேச கிராமம் | - மலைப் பிரதேசம் (குணவரம் கிராமம் குறித்து ஆராய்ந்து அறிதல்) |
| 2. | **உற்பத்தி - பரிவர்த்தனை மற்றும் மனித வாழ்க்கை** | 7. நமது காலத்தில் விவசாயம் | -விவசாயிகளின் வகைகள் (செல்வந்த, நடுத்தர, சிறு, மிகச்சிறு) விவசாயத் தொழிலாளிகள்.<br>-உலர்ந்த, ஈரமான மற்றும் தோட்ட விவசாய முறைகள்.<br>- கிராமக்கடன் மற்றும் வாணியம்<br>- நீடித்திருக்கும் விவசாயம் |
| | | 8. விவசாய உற்பத்திகளின் வாணிபம் (பிரிவு அ& பிரிவு ஆ) | - சந்தையிடங்களின் வகைகள்.<br>- சில்லறை விற்பனை கடைகள். கிராமங்களல் உள்ள சில்லறை விற்பனை கடைகள், வாரச் சந்தைகள், உழவர் சந்தைகள், மண்டிகள், நெல்லுக்கான மொத்த விற்பனை சந்தைகள்.<br>-விவசாயிகளின் சேமித்து வைக்கும் திறன். போக்குவரத்து வசதிகள், கிடங்குகள். |

SCERT TELANGANA

| வ.எண் | பாட அம்சங்கள் | துணை அம்சங்கள் | முக்கிய கருத்துகள் |
|---|---|---|---|
| 3. | அரசியல் முறைகள் மற்றும் நிர்வாகம் | 9. பழங்குடி இனத்தில் சமூக தீர்மானங்கள் இயற்றுதல் | - பழங்குடி சமுதாயங்களின் எண்ணங்கள்.<br>- மக்கள் அனைவரும் சமமாக உள்ள பழங்குடி சமுதாயங்கள் (மிக குறைந்த ஆண்-பெண் வேறுபாடு, வயது, பொருளாதார வேறுபாடுகள்)<br>-வளங்கள் மீது அனைவருக்கும் சம உரிமை.<br>- கூட்டு முடிவுகள் செய்தல் & பழங்குடி மதம். |
| | | 10. சாம்ராஜ்ஜியங்கள் மற்றும் குடியரசுகளின் தோற்றம் | -ஜனபதங்கள், மஹாஜனபதங்கள்.<br>-ராஜ்ஜியங்கள், கனாக்கள். |
| | | 11. முதல் சாம்ராஜ்ஜியங்கள் | -மௌரியப் பேரரசு, தக்காண ராஜ்ஜியங்கள் மற்றும் சாம்ராஜ்ஜியங்கள். |
| | | 12. ஜனநாயக அரசாங்கம் | - மன்னராட்சி & சர்வாதிகார ஆட்சி<br>- குடியுரிமை<br>- பங்கேற்று முடிவு செய்தல் (தீர்மானங்கள் இயற்றுதல்)<br>- பிரதிநிதித்துவம்<br>- பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினரின் பங்கு<br>- சமத்துவமின்மையும், ஜனநாயகமும்<br>-ஜாதி வகுப்புவாதம் மற்றும் ஜனநாகயம். |
| | | 13. கிராம பஞ்சாயத்துக்கள் | - தீர்மானங்கள் இயற்றுதல், நடைமுறைபடுத்துதலில் அதிகார பகிர்வு.<br>-செயல்திட்டங்களை நடைமுறை படுத்துதல்.<br>- வார்டு தேர்தல் முறை என்றால் என்ன?<br>- வாக்காளர்பட்டியல், கிராமம், சபை, சர்பஞ்ச், இடஒதுக்கீடு.<br>- கிராம பஞ்சாயத்தின் பணிகள்<br>- கிராம செயலாளர் மற்றும் VRO |
| | | 14. நகர்புறங்களில் உள்ளாட்சி துறை நிறுவனங்கள் | - நகர்புற உள்ளாட்சித் துறை அரசு |
| 4. | சமூக நிறுவனம் மற்றும் அநீதிகள் | 15. நமது சமூகத்தில் வேற்றுமைகள் | - நமது நாட்டில் வேறுபாடுகள்.<br>- வேற்றுமையில் ஒற்றுமை<br>- வேற்றுமைகளும், வெறுப்பும்<br>- சமத்துவமின்மை<br>- பாலினம், ஜாதி, வட்டாரம் போன்றவற்றில் வேற்றுமைகள். |

SCERT TELANGANA

| வ.எண் | பாட அம்சங்கள் | துணை அம்சங்கள் | முக்கிய கருத்துகள் |
|---|---|---|---|
| | | 16. ஆண் பெண் சமத்துவம் | - பாலினம்<br>- மக்கள் தொகையில் ஆண், பெண் விகிதம்<br>- வீட்டு வேலைகள்.<br>- பெண்களின் வேலை வாய்ப்புகள்<br>- பெண்களும், பள்ளியும்<br>- பெண் கொடுமை |
| 5. | மதமும், சமூகமும் | 17. பண்டைக் காலங்களில் மதம் மற்றும் சமுதாயம் | - வரலாற்றுக்கு முன்பு மதம்.<br>- நாட்டுப்புற பாடல், மரங்கள் மற்றும் விலங்குகளை வழிபடுதல்<br>- வேதகால மதம்<br>- உபநிடதங்கள். ஜைன மதம், புத்தமதம். |
| | | 18. இறைவன் மீது பக்தி மற்றும் அன்பு | - பக்தி இயக்கம்<br>- ஆழ்வார்கள், நாயன்மார்கள்<br>- ஒரே கடவுள்<br>- சிலை வழிபாடு<br>- கிருத்துவம் மற்றும் இஸ்லாம் மத தோற்றம். |
| 6. | உற்பத்தி - பரிவர்த்தனை மற்றும் மனித வாழ்க்கை | 19. மொழி மற்றும் சிறந்த நூல்கள் எழுதுதல் | - கதை எழுதுதல்<br>- இதிகாசங்கள்<br>- சங்க இலக்கியங்கள்<br>- அறிவியல், கணித, மருத்துவ நூல்கள். |
| | | 20. சிற்பங்கள் மற்றும் கட்டிடங்கள் | - புத்தமத கட்டிடகலை<br>- ஸ்தூபங்கள்<br>- விகாரங்கள்<br>- கோயில்களின் கட்டிடக்கலை<br>- கற்சிலைகள் மற்றும் கோயில் அமைப்புகள். |

SCERT TELANGANA